395
2000

வெளியீடு 11-02-2000

Issued 11-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 31, 1999 - தொகுதி 68 - எண் 2

Wednesday, 31st March, 1999—Volume 68 - No. 2

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

ssembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

D
221799

395/
2000

# 31-3-1999

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 39-41, 43-73 |
| 2. | **உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைக் கவசம் அணிந்து பேரவைக்குள் வருகை-பேரவைத் தலைவர் தீர்ப்பு** | 42-43 |
| 3. | **தகவல் கோரல்—** | |
| | (அ) சென்னை, அட்கின்சன் சாலை பெயர் மாற்றம் | 73-74 |
| | (ஆ) புழல் ஏரியில் ஏற்பட்ட உடைப்பைச் சரி செய்ய முதலமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கை | 74-77 |
| 4. | **அறிவிப்பு—** | |
| | மானியக் கோரிக்கைகள், 1999-2000, பேரவையில் முன்மொழிவது குறித்த ஆளுநரின் செய்தி | 77 |
| 5. | **மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்** | 78-111, 112-168 |
| | கோரிக்கை எண் 17-கல்வி | |
| | மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 78, 84 87-89, 91-92, 96, 98-99, 100-102, 105, 109-110, 119, 120-123, 128-129, 131, 132-133, 154-155, 163, 164 |

221799



பக்கங்கள

5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

கோரிக்கை எண் 17-கல்வி-தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. மு. அப்பாவு | 84-87, 88, 89, 90-91, 92 |
| திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் | 92-95, 96-97 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 97-98, 99-100, 102-105, 106 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 101-102 |
| டாக்டர் பத்மா | 106-109, 110-111 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 110 |
| திரு. ஆர். சிவானந்தம் | 112-117 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 117-119, 120, 121, 123-124 |
| திரு. ஜி. பழனிசாமி | 122 |
| * திருமதி ஆன் டி' மான்டி | 124-127 |
| திரு. சி. வேலாயுதன் | 127-128, 129, 130-132, 133 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 130 |
| * திரு. டி. மணி | 133-140 |
| * டாக்டர் வை. இராமசாமி | 140-144, |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 144-152, 165-166 |
| * திரு. லா. சந்தானம் | 152-154, 155-157, 158 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 158-159, 160-163, 164, 165, 166, 167 |

6. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை—

கிராமிய விவசாய மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கும் நேரம் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை. 111-112

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 168-170

Y2 11, 2, 1999
105, 682

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 17, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 மார்ச் 31, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்கூ"*

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 201, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**201—**

**அரக்கோணம் தொகுதியை திருவள்ளூர் மாவட்டத்தில் இணைத்தல்**

***14940—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை திருவள்ளூர் மாவட்டத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரக்கோணம் தொகுதி மாவட்டத் தலைநகரான வேலூரிலிருந்து 80 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அங்கு போய் வருவதற்கு 6 மணி நேரமாகிறது. இதனால் நிர்வாகத்திலே கூட சில பணிகளைச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. ஆனால், திருவள்ளூர் என்னுடைய அரக்கோணம் பகுதியிலிருந்து 29 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் அங்கு போய் வருவதற்கு ஒரு மணி நேரம்தான் ஆகிறது. ஆகவே பணிகளையும் சிறப்பாகச் செயல்படுத்திட முடியும். இப்போது மாவட்டம் பிரிக்கப்பட்டு திருவள்ளூர் தலைநகரமாக அறிவிக்கப்பட்ட பிறகு என்னுடைய அரக்கோணம் பகுதி வெகு அருகில் இருக்கின்ற காரணத்தால் தயவுகூர்ந்து பொது மக்கள் மற்றும் வணிகர்களுடைய கோரிக்கையினை ஏற்று அரக்கோணத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் திருவள்ளூர் மாவட்டத்திலே இணைப்பதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். எனினும் சில கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகிறேன். அரக்கோணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வட்டப் பகுதிகள் வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளன. அரக்கோணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை திருவள்ளூர் மாவட்டத்திலே இணைத்தால் வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்தக் காரணத்தால் அரக்கோணம் தொகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை திருவள்ளூர் மாவட்டத்திலே இணைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்று இரவு புழல் ஏரியிலே உடைப்பு ஏற்பட்ட காரணத்தால், சென்னைக்கு



[1999 மார்ச் 31]

பெரும் ஆபத்து ஏற்படலாம் என்ற சூழ்நிலையில், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார். முதலமைச்சர் அவர்களும் காலையிலே அங்கே போய் இருக்கின்றார்கள். அதைப்போலவே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் வீட்டிலே இறப்பு ஏற்பட்டுவிட்ட காரணத்தால், அவர்கள் என்னுடைய அனுமதியோடு அவைக்கு வரவில்லை. எனவே, வினாக்கள் 202 முதல் 205 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 206, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

206—

### பேருந்து இயக்குதல்

***9403—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலிருந்து பழையாறு செல்லும் அரசு போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் 6 சரிவர இயங்காததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது தவறாமல் இயக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழியிலிருந்து பழையாறு செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து, தற்போதைய தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தடம் எண் 6-ன் நடைகளில் மக்கள் பயன்பாடு குறைவாக இருந்த காரணத்தினால் 1-10-1994 முதல் நிறுத்தப்பட்டது. ஆனால் தடம் எண் 1-ன் மூலம் சீர்காழி-மடவாமேடு 4 நடைகளும், தடம் எண் 3-ன் மூலம் சீர்காழி—பழையாறு 10 நடைகளும், புறநகர்ப் பேருந்து சிதம்பரம்-பழையாறு 24 நடைகளும் இயக்கப்படுகின்றன.

## 2. உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைக் கவசம் அணிந்து பேரவைக்குள் வருகை—பேரவைத் தலைவர் தீர்ப்பு

*(உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம், கிரிக்கெட் வீரர்கள் தலையில் அணியும் கவசத்தைப்போன்று, சிவப்பு நிறத்தில் தலைக் கவசம் ஒன்றை அணிந்துகொண்டு அவரது இருக்கையில் வந்து அமர்ந்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம். தலையிலே எதுவும் போட்டுக்கொள்ளக்கூடாது. மருத்துவரின் ஆலோசனையின் பேரிலே ஏதாவது இருந்தால்தான் அதனைப் போட்டுக்கொள்ளலாம். இப்படி, தலைக் கவசத்தைப் போட்டுக் கொண்டு அவைக்கு வரக்கூடாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தற்காப்புக்காகப் போட்டிருக்கிறேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தற்காப்பு நான் கொடுப்பேன். அதை எடுத்து விடுங்கள். (குறுக்கீடுகள்) இங்கு அதை, தலையிலே போட்டுக் கொண்டிருப்பதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்லிவிட்டேன். எனவே, நீங்கள் அதைப் போடக்கூடாது. அதை எடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்) நான் இதற்குமேல் பேசத் தயாராக இல்லை; உங்களோடு விவகாரம் செய்யத் தயாராக இல்லை. இப்படி வந்து நீங்கள் உட்காருவது முறையல்ல, அதை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வெளியேறுங்கள். வெளியேறவில்லை என்றால் வெளியேற்றுவேன். வேறு வழியே இல்லை. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9-35*

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காப்புக்கான அல்லது தாக்குவதற்கான ஆயுதமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உறுப்பினர்கள் யாரையும் பேச அனுமதிக்கமாட்டேன். உட்காருங்கள். திரு. சுந்தரம், நீங்கள் தலையிலிருந்து அதை எடுங்கள், இல்லாவிட்டால் வெளியேறுங்கள். இல்லாவிட்டால் நான் வெளியேற்றுவேன். இந்த மூன்றும் ஒன்றுதான்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** *1989*-லே இதே அவையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களை, பேச அனுமதிக்க வில்லை. எனக்கு அந்த முன் உதாரணம் எல்லாம் வேண்டியதில்லை. நான் உத்தரவிடுகிறேன். இதுதான் என்னுடைய ruling. இதிலே நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது. அதை எடுங்கள். உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

*(உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைக் கவசத்தை எடுத்துத் தன் பக்கத்திலே வைத்துக்கொண்டார்)*

### வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *206*—தொடர்ச்சி. திரு. மு. பன்னீர்செல்வம்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழியிலிருந்து பழையாறுக்குச் செல்லக்கூடிய தடம் எண் *6*, மக்கள் பயன்பாட்டுக்கு அதிகமாகப் பயன்படக்கூடிய பேருந்து. பழையாற்றிலே மீன்பிடித் துறைமுகம் இருக்கிறது. மீனவர் சமுதாயத்தைத் தவிர மற்ற சமுதாயத்தினரும் அந்த மீன்பிடித் தொழிலைச் செய்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல *1994*-லிருந்து அந்த தடம் எண் *6* நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், புத்தூரிலிருந்து மாதானம் வரைக்கும் இடையிலே இருக்கக்கூடிய *15,20* கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லாததால் பயணம் செய்வதற்குச் சிரமம் ஏற்படுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய புதுப்பட்டினத்திலிருந்து கிட்டத்தட்ட *8* வேன்கள் மடவாமேட்டிற்கும், புதுப்பட்டினத்திலிருந்து *10* வேன்கள் பழையாறுக்கும் தொடர்ந்து செல்கின்றன. எனவே, மக்கள் பயன்படுத்துகிற நிலை இருக்கிற காரணத்தினால், மீண்டும் அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்தத் தடம் எண் *6*-ஐ இயக்குவதற்கு முன்வருவார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1-10-1994*-ல் பழைய ஆட்சிக் காலத்திலே, நிறுத்தப்பட்ட அந்தப் பேருந்து, மீண்டும் அங்கே பயன்பாடு அதிகமாகியிருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம். அதைவிட, சிற்றுந்துகளை இயக்குவதற்கு

வாய்ப்புகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் யாரையேனும் ஆதரித்து அந்த வழித்தடங்களிலே அவற்றை இயக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு இருக்கக்கூடிய எல்லையை மாற்றியமைத்து 40 கிலோ மீட்டர் வரை நீட்டித்துத்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற பரிசீலனை எதுவும் இப்போது அரசின் செயற் குறிப்பில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீர்காழிலிருந்து புத்தூர் வழியாக திருமயிலாடி, கூற்றுவன்பேட்டை வழியாக மடவாமேடு செல்கின்ற அந்தத் தடத்தை நீக்கிவிட்டார்கள் எனத் தெரிவித்தார்கள். ஆனால், சிறு பேருந்து விடலாம் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால், அது தனியாருக்குப் போய்ச் சேருகின்ற வாய்ப்புகள் ஏற்படும். எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகவே இயக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய நிலைமை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாத இந்தச் சூழ்நிலையில், குறைவான பயணிகள் எண்ணிக்கை உள்ள அந்த வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவது மிகுந்த நட்டத்தை உருவாக்கும் என்ற காரணத்தினால்தான், சிற்றுந்துத் திட்டமே கொண்டுவரப்பட்டது. ஆகவே, சிற்றுந்துகளை, அதுவும் உச்சநீதிமன்றத்திலே இருக்கிற வழக்கில் தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான், இயக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறு இயலாத சூழ்நிலையில் மக்கள் தொகை அதிகமாகியிருந்து, அங்கே போக்குவரத்து நெரிசல் இருக்குமானால் அதை மீண்டும் கணக்கெடுத்து அதற்கான வாய்ப்புகளைப் பரிசீலிக்கலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கும் கடலூருக்கும் இடையே கடற்கரைச் சாலை போடும் பணி வெற்றிகரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. Ferry service, கடல் வழியாக போக்குவரத்து சென்னைக்கும் கடலூருக்கும் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சென்ற கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த அளவிலே இருக்கிறது? அப்படி Ferry service அறிமுகப்படுத்தும்போது அதன்மூலம் பயன்படுகின்ற பகுதிகள் எவை, எவை என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர்-சென்னை படகுப் போக்குவரத்திற்கு நாம் tender கேட்டு இருந்தோம். 3 பேர் போட்டிருந்தார்கள். அதில் இரண்டு பேர் வரவில்லை. ஒருவர் மட்டும் வந்தார். அவரிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அவர் தனக்கு ஒரு jettyயை அமைத்துக் கொடுப்பதற்கு இடம் வேண்டுமென்று கேட்டார். அதையும் கூவம் ஆறு கலக்கின்ற இடத்திலே ஒதுக்கித் தருவதற்கு நாம் ஒப்புதல் தந்தோம். அதற்குப் பிறகு அவரும் வரவில்லை. அதுமட்டுமல்ல. சாலைப் போக்குவரத்தில் ஏற்படுகிற செலவைவிட, இரயில் போக்குவரத்திலே ஏற்படுகிற செலவைவிட இது அதிகமாக இருக்குமென்று கருதப்படுகிறது. அதற்கு அரசாங்கத்திலிருந்து மானியம் வழங்கப்படுமா என்று கேட்கப்பட்டது. மானியம் தர இயலாது என்று அரசு தெரிவித்திருக்கிறது. இதுதான் இப்போதுள்ள சூழ்நிலை.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கடலூருக்கு கடல் மார்க்கமாகச் செல்கின்ற Ferry Service-க்கு, 1989-லிருந்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிகளை எடுத்தும், தற்போதுள்ள சூழ்நிலையின் காரணமாக பரிசீலனையில் இருப்பதாக அறிவித்தார்கள். கடலூருக்குச் செல்கின்ற அந்த Ferry Service மூலமாக சரக்குகளையும் (cargo) ஏற்றிக்கொண்டு, பயணிகளையும் ஏற்றிக்கொண்டு போகின்ற ஒரு நிலையை வகுப்போமேயானால், அது மாமல்லபுரம், புதுச்சேரி, கடலூர் என்கின்ற அளவிற்குச் செல்லக்கூடிய ஒரு நிலையில் போக்குவரத்துக் கட்டணம்கூட குறைவதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை என்ற கேள்வி எழவில்லை காரணம், ஏற்கெனவே நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். யாராவது தனியார் அப்படிப்பட்ட படகுப் போக்குவரத்தோ அல்லது கப்பல் போக்குவரத்தோ நடத்துவதற்கு முன்வருவார்களேயானால், அரசு அவர்களுக்கு அனுமதி தருவதற்குத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரே கூட முன்வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் இதை முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. மூல வினாவிற்கும், இந்தத் துணை வினாவிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. பல அமைச்சர் பெருமக்கள் இங்கு இல்லாத காரணத்தினால் சற்று அதிக நேரம் எடுத்துக்கொள்ளலாம் என்று அனுமதித்தேன். இனிமேல் அப்படிப்பட்ட வினாக்களை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*அடுத்து, வினா எண் 207, திரு. மு. அப்பாவு மற்றும் திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**207—**

**போக்குவரத்துப் பணிமனை அமைத்தல்**

***22516—திரு. மு. அப்பாவு:**

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளத்தில் அரசு போக்குவரத்துப் பணிமனை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் ஒரு தாலுகா தலைநகரம். அங்கே



தூத்துக்குடி-நாகர்கோவில், கன்னியாகுமரி-தூத்துக்குடி, அதுபோல திருச்செந்தூர்-சாத்தான்குளம், திருநெல்வேலி-சாத்தான்குளம் ஆகிய வழிகளில் அதிகமான வண்டிகளின் போக்குவரத்து இருக்கின்ற காரணத்தால் அங்கே சில நேரங்களில் வண்டிகள் பழுதாகி, டிரைவர்கள், கண்டக்டர்கள் மிகவும் அவஸ்தைப்படுகின்றார்கள். எனவே, நிச்சயமாக நீங்கள் அங்கே ஒரு பணிமனை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, தூத்துக்குடி, கோயில்பட்டி, திருநெல்வேலி, திருச்செந்தூர் ஆகிய பணிமனைகளில் ஏறத்தாழ 200 வண்டிகள் நின்றுகொண்டிருக்கின்றன. அவை spring sets உடைந்து நிற்கின்றன என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்களுக்கு இந்தச் செய்தி தெரியுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு பணிமனை அமைப்பது என்று சொன்னால், இரண்டு பணிமனைகளுக்குமிடையே உள்ள தூரம் குறைந்த பட்சம் 40 கிலோ மீட்டராவது இருக்க வேண்டுமென்று அரசாணை இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே, சாத்தான்குளத்திலிருந்து 17.5 கிலோ மீட்டர் தூரத்தில் திசையன்விளையில் பணிமனை ஒன்று இருக்கிறது. 27.5 கிலோ மீட்டர் தூரத்தில் திருச்செந்தூரில் பணிமனை ஒன்று இயங்கி வருகிறது. ஆகவே அருகருகே இரண்டு பணிமனைகள் இயங்கிக்கொண்டிருக்கிற காரணத்தினால் இங்கே பணிமனை அமைப்பதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை. அங்கே சில பேருந்துகள் பழுதுபட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டதுபோல் 200 வண்டிகள் அங்கே நிற்கவில்லை. எனக்கு அந்தத் துறையிலேயிருந்து அனுப்பியிருக்கின்ற கூற்றின்படி சுமார் 29 வண்டிகள், அதுவும் 'spare' வண்டிகள் அங்கே நின்றுகொண்டிருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்க்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்து வருகின்ற துறைகளில் போக்குவரத்துத் துறை முன்னணியில் இருப்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. சாத்தான்குளத்தில் பணிமனை புதிதாக அமைக்க வேண்டுமென்ற கேள்வியோடு, ஏற்கெனவே ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற திசையன்விளை பணிமனையானது எந்த வசதி வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. அங்கேயுள்ள பணிமனையில் பேருந்துகளைப் பழுது பார்க்கவேண்டுமென்றால், அங்கு தரையில், கான்கிரீட் தளம்கூட அமைத்துக் கொடுக்கவில்லை. ஏற்கெனவே இருக்கின்ற பணிமனைகளுக்கு நல்ல கூரை வசதியும், நல்ல தளமும் அமைத்துக் கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், திசையன்விளையில் இருப்பதற்கு நீங்கள்

முன்னுரிமை கொடுத்து இந்த ஆண்டு சரிசெய்து தருவீர்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களின் நிதிநிலைமைக்கேற்ப அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. நான் நெல்லை சட்டமன்ற உறுப்பினர் என்றாலும், சாத்தான்குளம அருகிலே ஒரு சிற்றூரிலே பிறந்தவன். அதனாலே இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். சாத்தான்குளத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு வட்டத் தலைநகரம். Munsif Court வரவிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், முன்பு அங்கு ஸ்ரீராம், பாப்புலர், சுகுமார் போன்ற தனியார் பேருந்துகள், 30, 40 ஓடிக்கொண்டிருந்தன. அவர்கள் தலைமையிடமாக, பணிமனையாக சாத்தான்குளத்தை வைத்திருந்தார்கள். அங்கே அந்தத் தனியார் பேருந்துகள் நல்ல முறையிலே இயங்கி வந்தன. இப்பொழுது அதை மாற்றிவிட்டு அரசுப் பேருந்துகளைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, அந்த அடிப்படையிலாவது, சாத்தான்குளத்தில் பணிமனை அமைக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே இதற்கான விடையைச் சொல்லியிருக்கிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் பார்க்கிறபோது, ஒரு பணிமனை அமைக்க வேண்டும் என்று சொன்னால் குறைந்தபட்சம் 50 இலட்சம் ரூபாய் செலவாகும்; 2½ ஏக்கர் நிலம் வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டதைப்போல, இன்றைய போக்குவரத்துக் கழகங்களின்மூலம் இப்போது வசூலிக்கப்படுகிற பயணக் கட்டணத்திலேயிருந்து இவற்றையெல்லாம் உருவாக்குவது மிகவும் கடினமான காரியம்தான். பயணக் கட்டணத்தை உயர்த்துகிற காலகட்டம் வருமென்று சொன்னால், நிதிநிலை உயருகிறபோது அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



**208—**

### பாலம் கட்டுதல்

***1155—திரு. எஸ்.கே. வேதரத்தினம் :**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில் 1972 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்ட செம்போடை-புட்பவனம் உப்பனாற்றுப் பாலத்தைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் தொகுதியில், செம்போடை-புட்பவனம் உப்பனாற்றுப் பாலம் கட்டும் பணி ரூபாய் 132 இலட்சம் செலவில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் கடன் நிதியுடன் செயலாக்கப்படுவதற்கு அரசு ஆணை நிலை எண் 446, நெடுஞ்சாலைத் துறை நாள் 29-10-1997-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, செம்போடை-புட்பவனம் உப்பனாற்றுப் பாலத்திற்கு அனுமதியளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பாலம் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும், எப்போது முடிவடையும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2-1-1999 அன்று 106 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டியபோது இந்தப் பாலத்திற்கும் அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பட்டிருக்கிறது. பணி தொடக்க விழாவும் விரைவிலே தொடங்கவிருக்கின்றது. இதற்கு இரண்டு முறை tender அழைப்புகள் அனுப்பப்பட்டன. அந்த 2 முறையும் யாரும் இதை tender எடுப்பதற்கு வராத காரணத்தினால் 3-வது அழைப்பாக 13-4-1999 அன்று வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறைந்த மதிப்பீட்டில் கட்டுவதற்கு முன்வருகிறவர்களுக்கு இது வழங்கப்படும். பணி விரைவிலே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 மார்ச் 31

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நாகப்பட்டினத்தைப் பற்றியதா? இல்லையென்றால் உட்காருங்கள்.

வினா எண் 209, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**209—**

**இரயில்வே மேம்பாலம் கட்டுதல்**

***18250—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர்-பச்சக்குப்பம் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆம்பூருக்கும் பச்சக்குப்பத்திற்கும் இடையே தேசிய நெடுஞ்சாலை எண் 46-ல் கி.மீ. 73/6-ல் குறுக்கிடும் இரயில் பாதையின் மீது மேம்பாலம் கட்டுவதற்கான நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த மேம்பாலத்தைக் கட்டுவதற்காக அரசின் புதிய திட்டமான மதிப்பீடு தயாரித்துக் கட்டி, பராமரித்து ஒப்படைத்தல் (Built, Operate and Transfer Scheme) என்ற திட்டத்தின்கீழ் தகுந்த தனியாருக்கு இப்பணியை ஒப்படைக்க சென்னை-25 நெடுஞ்சாலை ஆராய்ச்சி மையத்தில் உள்ள திட்ட இயக்குநர் அவர்களால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி முடிவடைந்ததும் பச்சக்குப்பம் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி விரைவில் தொடங்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. தளபதி:** தலைவர் அவர்களே, இரயில்வே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆம்பூர் பற்றித்தான் கேள்வி. உங்களுக்கு தனி நீதி கிடையாது. உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.



1999 மார்ச் 31]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலேயிருந்து வாணியம்பாடி செல்லக்கூடிய அந்த தேசிய நெடுஞ்சாலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வதில் ஆம்பூர் வரவில்லை. வேலூர், சத்துவாச்சாரி பற்றி எல்லாம் கேட்க அனுமதிக்க முடியாது. ஆம்பூரைப்பற்றிக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள், இல்லாவிட்டால் உட்காருங்கள்.

முற்பகல் 9-50

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த ஆம்பூர்-பச்சக்குப்பம் இரயில்வே கேட்தான், நீண்டநாட்களாக எங்களுடைய மாவட்ட மக்கள் வைத்திருக்கக்கூடிய ஒரு கோரிக்கை. பலமுறை மத்திய அரசு அதற்காக நிதியொதுக்கம் செய்தும் மாநில அரசினுடைய அந்த matching grant கொடுக்காத காரணத்தினால் தள்ளிவைக்கப்பட்டதாகப் பலமுறை புகார்கள் வந்துகொண்டிருந்த நிலையில் இப்போது B.O.T. Scheme-லே தனியார் துறைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசே இதை ஏற்று நடத்துவதற்காகப் பலமுறை திட்டங்கள் போடப்பட்டன. ஏன் தனியாருக்கு விடப்படுகிறது? தனியாருக்கு விடப்பட்டால், பிறகு அந்த இடத்திலே பணம் வசூலிக்கக்கூடிய நிலையெல்லாம் வரும். பிறகு அதெல்லாம் வருகிறபோது—இப்போதே கோயம்புத்தூரிலே பல பிரச்சினைகள் வந்துகொண்டிருக்கிற காரணத்தாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை, மத்திய அரசு, மாநில அரசின் பங்கோடு சேர்த்து அரசே கட்டுவதற்கு முழு முயற்சி எடுப்பார்களா, திட்டம் எப்போது முடிவடையும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை. எனவே, இதிலே மேம்பாலம் கட்டுவதோ, அந்தச் சாலையை உறுதிப்படுத்துவதோ, அகலப்படுத்துவதோ, எதுவாயினும் மத்திய சர்க்காருடைய நிதி உதவியின் மூலமாகத்தான் செய்ய முடியும். இந்த மேம்பாலத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசு தன்னுடைய பங்கைத் தரவில்லை என்பதற்கு இடமில்லை. காரணம், அந்தப் பங்கையும் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறைதான் தர வேண்டும். மாநில அரசு தர வேண்டிய அவசியம் இல்லை. காரணம், இது தேசிய நெடுஞ்சாலை. ஆகையினாலே அந்தப் பிரச்சினை எழவில்லை. அந்தக் குற்றச்சாட்டும் தவறான குற்றச்சாட்டு. இந்த மேம்பாலத்தை அரசின் செலவிலேயே கட்டுவதா, தனியார் துறையிலே

விடுவதா என்ற கொள்கை முடிவையும் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறைதான் எடுக்கிறது. ஆகவே, மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை இதை B.O.T. (கட்டுதல், இயக்குதல், மாற்றுதல்) என்ற திட்டத்திலே எடுக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டார்கள். அதை நாமும் ஏற்றுச் செயல்படுத்தத் தயாராகிவிட்டோம். இரண்டு முறை Tender விடப்பட்டது. ஆனால், மத்திய சர்க்கார் B.O.T. (கட்டுதல், இயக்குதல், மாற்றுதல்) திட்டத்தில் கட்டிய பிறகு அதிலே Toll வசூலிப்பதற்காக ஒரு agreement தயாரிக்க வேண்டும். அந்த agreement form, அதாவது ஒப்பந்த ஷரத்துக்களை அவர்கள் இன்னும் முடிவு செய்யாமல், மத்திய சர்க்கார் அதைக் கிடப்பிலே போட்டிருப்பது போலவும் இருக்கிறது; காலம் கடத்துவதைப் போலவும் இருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்புகூட நான் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு இதுகுறித்து கடிதம் எழுதியிருக்கிறேன். இது உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும். B.O.T. திட்டத்திலே எடுத்திருந்தாலும், அதை நாங்கள் ஏற்றுச் செயல்படுத்தத் தயாராக இருக்கிறோம், அனுமதிக்க வேண்டும் என்று நான் கடிதம்கூட எழுதியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *210*, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**210—**

### களவுபோன சிலைகளை மீட்க புதிய திட்டம்

***93—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்களில் களவுபோன சிலைகளை மீட்க அரசு புதிய திட்டம் ஏதும் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.





(ஆ) விலை மதிப்பற்ற சிலைகளைப் பாதுகாப்பதற்கும், குற்றம் நடக்காமல் தடுப்பதற்கும் திருக்கோயில் பாதுகாப்புப் படை ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரின்கீழ் அமைக்கப்பட்டு, அவ்வமைப்பில் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் 3,000 நபர்கள் மற்றும் காவல் துறைக் காவலர்கள் 1,000 நபர்கள் சேர்க்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றனர். பாதுகாப்புப் படையினரின் பணிகளைக் கண்காணிக்கவும், உரிய காலத்தில் கோயில்களை மேற்பார்வையிடவும் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் மூன்று ஆய்வாளர்கள் அடங்கிய ஒரு தனிப் பிரிவு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அலுவலகத்திலே ஏற்படுத்தப்பட்டு, களவு போன சிலைகளை மீட்பதற்கான முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை நம்முடைய அரசு ஏற்படுத்தியதற்குப் பிறகு எத்தனை வழக்குகள் பிடிபட்டிருக்கின்றன? ஏற்கெனவே, பழைய காலங்களில் இப்படிப்பட்ட சிலைகள் களவுபோன வழக்குகள் எத்தனை பாக்கி இருக்கின்றன என்பதை அரசு அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது ஆட்சி ஏற்பட்ட பிறகு சிலைகளினுடைய திருட்டு வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை. புள்ளிவிவரங்கள் அடிப்படையில் சொன்னால், 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரைக்கும் 1,676 களவுகள் நிகழ்ந்து, வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 1,026 வழக்குகள் மாவட்டக் காவல் துறையினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில், 650 வழக்குகளில் 487 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட இயலாது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளன. 150 வழக்குகள் தற்போது புலன் விசாரணையில் உள்ளன. ஆனால், 1996 ஆம் ஆண்டிற்குப் பின்னால், 1998 வரை சிலை திருட்டுத் தடுப்புப் பிரிவினரால் 11 வழக்குகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனவே, இந்தக் காலத்தில் இதற்குச் சரியான கண்காணிப்பு இருக்கிற காரணத்தால் இந்தச் சிலைத் திருட்டு குறைந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, நிறைய அளவிலே கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டிருக்கின்றன. பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சிலைகள் மீட்கப்பட்டிருக்கின்றன என்பது நடைமுறை உண்மை. அதுமட்டுமல்லாமல், நம்முடைய ஆட்சிக் காலத்தில், சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவினரால், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு வழக்கில்

ஒரு சிலையும், திருவாரூர் மாவட்டத்தில் இரு வழக்குகளில் இரு சிலைகளும், நாகை மாவட்டத்தில் ஒரு வழக்கில் 3 சிலைகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு வழக்கில் 2 சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளன. இந்த அளவிற்கு இந்தத் துறை கண்காணிப்போடு நடந்து வருகிறது.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இயங்கியல் தத்துவத்தை எடுத்துக்காட்டுகின்ற சிதம்பரம் நடராஜர் சிலை போன்றவையெல்லாம் ஏற்கெனவே பலமுறை களவு போனதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல, கோயில்களில் உள்ள சிலைகள், ஐம்பொன்னால் செய்யப்பட்டவை, விலை உயர்ந்த உலோகத்தினால் செய்யப்பட்டவை எல்லாம் இன்றைக்கு அதே நரத்திலே உள்ளனவா என்பதை ஆய்வு செய்து பாதுகாக்க அரசு ஏதேனும் நடவடிக்கையெடுக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நடராஜர் கோயிலில் அதுபோன்று களவு போனது என்பது தவறான தகவல். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் நடராஜர் கோயில் என்று சொல்லவில்லை. நடராஜர் சிலை போன்றவை பல முறை காணாமல் போய் இருக்கின்றன என்றுதான் சொல்கிறார்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** அதுதான், நடராஜர் சிலை களவு போனது என்பது தவறான தகவல். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது நம்முடைய அரசில் ஏற்கெனவே நகைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான நகை ஆய்வாளர்கள் உருவாக்கப்பட்டு அவர்கள் அனைவரும் எல்லாக் கோயில்களிலும் இருக்கிற முழுமையான நகைகளை ஆய்வு செய்து கணக்கில் வைத்திருக்கிறார்கள். அதிலே போலிகள் இருக்கின்றனவா என்பது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் அதற்கு முன்னால் இருந்த அறங்காவலர்கள் மீது எடுக்கப்படுகின்றன. அதுபோக சிலைகள் முற்றிலும் ஏற்கெனவே இருந்த அந்த முழுத் தரத்தில் இருககின்றனவா என்பதைக் கண்காணித்து அவர்கள் அதற்கான பதிவேடுகளையும் வைத்திருக்கிறார்கள் என்பது உண்மை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுக்க எத்தனை ஆலயங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? ஒவ்வொரு ஆலயத்திலும் இருக்கக்கூடிய சிலைகளினுடைய மதிப்பு, என்னென்ன சிலைகள் இருக்கினறன என்பன போன்ற பட்டியல்கள் அரசின் கைவசம் உள்ளதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்த மதிப்பையெல்லாம் சொன்னால் சிலைத் திருட்டு இன்னும் அதிகமாக ஆகக்கூடும். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே கன்னியாகுமரி மாவட்டம் சிதறாலிலே இருக்கக்கூடிய ஒரு பழைய கோயிலிலே சிலை திருட்டுப் போனது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்துள்ளதா? திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலே சிலையைத் திருடவில்லை, ஆனால் அந்தச் சிலைக்கு மேலே பொதிந்து இருந்த முழுத் தங்கத்தையும் உரித்தே எடுத்துவிட்டார்கள். அதுசம்பந்தமான முழு விவரங்களையும், அது திரும்ப மீட்கப்பட்டதா என்ற விவரத்தையும், அதுபோன்று, குழித்துறையிலே இருக்கக்கூடிய சிவன் கோயிலிலே இருந்த இரண்டு யானைத் தந்தங்களைத் திருடி விட்டார்கள் அவை மீட்கப்பட்டுள்ளனவா என்ற தகவல்கள் அரசுக்கு ஏதாவது வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** குறிப்பாக இதுபோன்ற வினாக்களைக் கேட்கிறபொழுது முன்கூட்டியே தனிக் கேள்வி போட்டால்தான் முழுமையான விடையைத் துறையிலிருந்து பெற்றுத்தர முடியும் எனினும், திருவட்டாறு கோயில் தொடர்பாக ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலே ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் கிடந்த கோலத்தில் இருந்த ஆதிகேவப்பெருமாள்மீது போர்த்தப்பட்டிருந்த தங்க முலாம் ஒட்டுமொத்தமாக உரிக்கப்பட்டு கடைசியில் ஆதிகேவப்பெருமாள் மீது இருந்த அந்தத் துணி விலக்கப்பட்டவுடன் அவர் ஆதி நிலையில் காட்சி அளித்தார் என்பதுதான் உண்மை. எனவே, அப்படிப்பட்ட நிலையில் அது கண்டுபிடிக்கப்பட்டு அனைவரும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கு நடைபெற்றிருக்கிறது. அது மீட்கப்பட முடியாவிட்டாலும்கூட

[1999 மார்ச் 31

அவர்கள் அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது திருவட்டாறு கோயிலைப் பொறுத்தவரையில் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிலைத் திருட்டு விவகாரங்களில் வெளிநாட்டுச் சக்திகள் அவர்களுடைய ஆர்வத்தின் காரணமாக அல்லது ஆய்வு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாக இந்தியர்கள் சிலரை ஊக்குவிக்கிறார்கள். இந்தியர்களிலே சிலர் இதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அப்படி வழக்கமாக எந்த வெளிநாட்டு சக்திகள் இந்தியர்களை ஊக்குவிக்கிறார்கள்? இதுவரையில் கண்டுபிடித்த, கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகளின் வாயிலாக வழக்கமாக இதைத் திருடி விற்க வேண்டுமென்று இருக்கக்கூடிய இந்தியர்கள் யார்? அவர்களுக்கு எந்தக் குழு வேலை செய்கிறது? அந்த விவரங்களை அரசு அறியுமா? மேலும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே தலைவராக இருந்து பணியாற்றிய 1974-லே மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக அறநிலையத் துறை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு எல்லாக் கோயில்களிலும் இருக்கக்கூடிய சிலைகள், அன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய மூர்த்தங்கள், அணிகலன்கள், இவற்றையெல்லாம் ஆய்வு செய்து அன்றைக்கு ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்டது. இன்றைக்கு அந்தப் பட்டியலையும், இன்றைக்கு அதிலே இருக்கிறவற்றின் நிலையிலேயும் ஒப்பீடு செய்து பார்க்க அரசு ஏதாவது முடிவெடுத்திருக்கிறதா? மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் கொடுத்த அந்தப் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டிருக் கின்றனவா? ஒப்பீடு செய்யப்பட்டதனுடைய முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கோயில்களுக்குமே முழுமையாக நகை ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. சிலநேரம், ஒவ்வொரு ஆண்டும் புதிது புதிதாக சில நன்கொடையாளர்கள் புதிய ஆபரணங்களை அல்லது வேறு நகைகளை நேரடியாகக் கோயில்களுக்கு அணிவிக்கவும், அதேநேரத்தில் உண்டியலில் போடுவதுமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எனவே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் புதிய நகைகள் இரண்டாவது முறையாக மதிப்பீடு செய்யப்பட்டு இந்தக் கணக்கில் கொண்டுவரப்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்



1999 மார்ச் 31]

இருக்கின்ற 36,253 கோயில்களில் பெரிய அளவில் நகைகள் என்று இருக்கின்ற அனைத்திற்குமே பதிவேடுகள் இருக்கின்றன. முழுமையான கணக்குகள் இருக்கின்றன. அவை பேணப்படுகின்றன. எனவே, 1974-ல் நீங்கள் மதிப்பீட்டுக் குழுவில் குறிப்பிட்டிருந்தாலும் அவையெல்லாம் இப்போது தற்காலிகமாக முழு அளவிலே அமைக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. இரண்டாவதாக, இந்தக் கால கட்டத்தில் சிலைகளை யார் யாரெல்லாம் கொண்டுபோகிறார்கள் என்பதெல்லாம் நீண்ட ஆய்வுக்குரியது. அதெல்லாம் மிகவும் ஆழ்ந்த செய்திக்குரியது. அது குறித்து ஒரு தனிக் கேள்வி போட்டால் அப்போது முழு விடை சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில் சிலைகள் களவுபோய், கண்டுபிடிக்கப்பட்டது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த மாவட்டத்தில், குறிப்பாக மன்னார்குடி நகரில் பிரசித்தி பெற்ற இராஜகோபாலசுவாமி தேவாலயத்தில் களவாடப்பட்ட நகைகள், பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் கண்டுபிடிக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டிருக்கிறன்றனவா என்பதை அறிய விரும்புவதோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய சட்டமன்றப் பேரவையில் பல்வேறு சிறப்புகளுக்குரிய முடிவுகளை நாம் விவாதித்து தீர்க்கமான முடிவுகளை எடுக்கிற நேரத்தில் இந்த சட்டமன்றப் பேரவை கிரிக்கெட் விளையாட்டு மைதானமாக மாறிவிடக்கூடாது. அதற்குரிய பாதுகாப்பைப் பேரவைத் தலைவர் அவர்கள் அளிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயில் தொடர்பாக ஏற்கெனவே அது புலனாய்வில் இருந்து, பல பணியாளர்கள் நடவடிக்கைக்கு ஆளாகியிருக்கின்றனர். அதில் ஏற்கெனவே அங்கேயிருந்த கோயில் அலுவலர் பல தவறுகளைச் செய்திருக்கின்றார் என்ற அடிப்படையிலும், நான் அதை நேரடியாக ஆய்வுசெய்தபோதுகூட, அங்கேயிருக்கிற திருமண மண்டபத்தினுடைய வரவு எந்தக் கணக்கிலும் காட்டப்படவில்லை என்பதைக் கண்டறிந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எனவே, தொடர்ந்து அதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

[1999 மார்ச் 31

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை பெரிய தேரில் அற்புதமான சிற்பங்கள் ஏராளமான அளவில் பத்தாண்டுகளுக்கு முன்பாக களவு போனது. அவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா, அது சம்பந்தமான வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு தனிக்கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குழந்தைகளைத் திருடர்கள் கடத்திக்கொண்டு சென்றுவிடுவதைப் போல, கடவுள்களைக் கடத்திக்கொண்டு செல்கின்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. அவர்களின் இயல்பான வாகனங்களை எல்லாம் நிராகரித்துவிட்டு, மயிலேறுகிற முருகனையும், காளை ஏறுகிற ஈஸ்வரனையும் விமானத்தில் ஏறவைத்து வெளிநாட்டில் விற்றுவிடுகிற செயலைத் தடுக்க மாநில அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலவிடையிலேயே இதற்கான விடை இருக்கிறது. ஏற்கெனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற மாவட்டக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் 3000 இராணுவ வீரர்களும் 1000 காவல் துறையினரும் அதிலே ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கண்காணிக்க இங்கேயே தலைமையகத்தில் ஒரு மாவட்டக் கண்காணிப்பாளர் இருக்கிறார். அங்கே மூன்று ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான கேள்வி இது. பொதுவாக, சிலைகளை வெளிநாட்டிலே உள்ளவர்கள், தமிழகத்திலிருந்து அல்லது இந்தியாவிலிருந்து கொண்டு செல்வதற்கு முக்கியமான காரணமே, தொன்மைவாய்ந்த சிலைகளுக்கு அங்கே விலை மதிப்பு மிக அதிகம் என்பதுதான். புதிய சிலைகளை அவர்கள் களவாடுவதில்லை. தொன்மைவாய்ந்த சிலைகளுக்கு அல்லது சிற்பங்களுக்குத்தான்



1999 மார்ச் 31]

வெளிநாடுகளிலே மதிப்பு அதிகம். அதுமாத்திரமல்ல, திருடப்படுகின்ற சிலைகளில், குறிப்பாக நடராஜர் போன்ற சிலைகள், திருடப்படுவதற்குக் காரணம், அந்தச் சிலைகளிலேதான் அதிகமான வளைவுகள் உண்டு. அது ஆடுகின்ற பாவனையில் இருக்கின்ற காரணத்தால்—கை விரல்கள், கால்கள் இவை எல்லாம் அதிக வளைவுகள் கொண்டவை. அதிக வளைவுகள் கொண்ட சிலைகளைச் செய்வதற்கு அந்தக் காலத்தில் தங்கத்தை அதிகமாகப் பயன்படுத்தினார்கள். இப்போது வளர்ந்துவிட்ட காலத்தில் தங்கம் அதிகம் இல்லாமலேயே அத்தகைய சிலைகள் செய்யப்படுகின்றன. அந்தக் காலத்திலே அந்தச் சிலைகளுக்கு அதிக அளவில் தங்கம் பயன்படுத்தப்பட்டன. இந்தக் காரணங்களால்—அந்தச் சிலைகள் திருடப்பட்டன. அப்படித்தான் சிவபுரம் நடராஜருடைய சிலை திருடப்பட்டது. முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தச் சிலையைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது—Interpol என்கின்ற உலக அளவிலேயான அமைப்பு இருக்கிறது. அன்றைக்கு இங்கே I.G.-யாக இருந்தவர் அதிலே அங்கம் வகித்தார். அவர் மூலமாக—அந்தச் சிலை மீட்கப்பட்டது. எல்லோருக்கும் தெரியும். அந்த Interpol போன்ற அமைப்புகளிலே முறையிட்டு அந்தச் சிலைகளை மீண்டும் இங்கே கொண்டுவருவதற்கான முயற்சிகளிலே தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றோம்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கின்றபோது என்னென்ன நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன? அதிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை, உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம் திருக்காரவாசல், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் சென்ற ஆட்சிக் காலத்திலே விலை மதிப்பற்ற மரகதலிங்கம் களவு போனது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா? கண்டுபிடிக்கப்பட்டு, இதுவரையிலே அரசாங்கத்தாலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் குறிப்பிட்டபடி, நாகப்பட்டினத்திலே களவுபோன மரகதலிங்கம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனென்றால், கடந்த காலத்தில் வெறுமனே சிலைத் திருடர்கள் மட்டுமே அதைத் திருடினார்கள் என்று சொல்ல முடியாது. பல்வேறு வகையான உறவுகள், தொடர்புகள் அடிப்படையில் அவை செய்யப்பட்டிருக்கின்றன. இப்போது நான் தந்த புள்ளி விவரங்களின்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற களவுகள் மிகவும் குறைவு என்பதையும், அவையும் பெரும்பாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தாங்கள் அறிவீர்கள். அதுமாத்திரமல்ல, குடந்தை சாரங்கபாணி கோயிலிலே களவாடப்பட்ட நகைகள்கூட— அந்தக் குறிப்பிட்ட களவாளி கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றில் பெரும்பகுதி மீட்கப்பட்டு—அந்தக் கோயிலுக்கே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற பல நிலைகளில் இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சீரிய திட்டத்தை அரசு செயல்படுத்தி, சிலைத் திருட்டைக் குறைப்பதற்கு, நடவடிக்கை எடுத்ததற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. இந்தமாதிரி திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு, வழக்குகள் நீதிமன்றத்திற்குப் போகும்போது, நீதிமன்றங்களிலே பல்வேறு வழக்குகள் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த வழக்குகள் காலதாமதமாக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதைப்போக்க, இந்த வழக்குகளில் குற்றவாளிகளுக்கு விரைவாக தண்டனை வாங்கித் தருவதற்கு, தனி நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, நிலங்கள் தொடர்பான வழக்குகள்தான் நீண்டகாலம் எடுத்துக்கொள்கின்றன. இதுபோன்ற குற்றவியல் வழக்குகள் வெகுவிரைவிலே தீர்வு காணப்பட்டு—அதுவும் குறிப்பாக சிலைகள் என்பதாலே, அதிகமான வழக்குகள் நீதிமன்றத்திலே தேங்கி இருக்கவில்லை. அவற்றுக்கு விரைவாகத் தீர்வு காணப்பட்டு— அவை மீட்கப்படுகின்றன. அப்படி மீட்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அதுபோன்ற மீட்கப்பட்ட சிலைகளைப் பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு முழுவதும் ஒன்பதிற்கும் மேற்பட்ட இடங்களிலே உலோகத் திருமேனி மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும், திருவாரூரில் இருக்கின்ற



உலோகத் திருமேனி மையத்தில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சிவபுரம் நடராஜர் சிலையும், வேறு சில இடங்களில் இருந்து மீட்கப்பட்ட சிலைகளும் தனியாகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், வழக்குகளைப் பொறுத்தவரையில், குற்றவியல் வழக்குகளுக்கு உடனடித் தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும், அதுபோல சிலைகளை மீட்டு உரிய இடங்களிலே கொண்டு சேர்ப்பதற்கு வாய்ப்பாகவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 211, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**211—**

### அருள்மிகு திம்மராயசுவாமி திருக்கோயில் திருப்பணி

**•15945—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், சூலகிரியிலுள்ள அருள்மிகு திம்மராயசுவாமி திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்யவும், தினசரி பூஜை செய்யவும், ஓய்வுபெற்ற அர்ச்சகருக்கு ஓய்வூதியம் வழங்கவும், திருக்கோயிலின் அறங்காவலரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டதா?

(ஆ) அவ்வாறாயின், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், சூலகிரியில் உள்ள அருள்மிகு திம்மராயசுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் கொண்டுவரப்படாத திருக்கோயில். எனவே, இதிலே ஒரு கால பூஜைக்கு நிதியுதவி வழங்குவதற்கு வழியில்லை. மேலும், திருக்கோயிலின் திருப்பணி, ஒருகால பூஜை மற்றும் ஓய்வுபெற்ற

[1999 மார்ச் 31

அர்ச்சகருக்கு ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை.

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திம்மராயசுவாமி திருக்கோயிலுக்கு நிறையச் சொத்துகள் இருக்கின்றனவென்று தெரிய வருகிறது. அந்தச் சொத்துகளை எல்லாம் விற்றுவிட்டதாகத் தெரிய வருகிறது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதன்மேல் நடவடிக்கை எடுத்து, கோயில் நிலங்களை எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அமைச்சர் பதிலைப் புரிந்து கொண்டுவிட்டீர்களா? இது அறநிலையத் துறையில் வரவில்லை. ஆகையால் தனியாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. பி. வெங்கடசாமி:** நிலங்கள் நிறைய இருந்ததை விற்று விட்டார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஆலயமே அறநிலையத் துறையின் கீழ் வரவில்லை என்று சொல்கிறார்.

**திரு. பி. வெங்கடசாமி:** அந்த நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அறநிலையத் துறையின் சார்பில் 36,253 கோயில்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, புதிதாகக் கட்டப்படுகின்ற கோயில்கள், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள கோயில்கள் இருக்கின்றன. அதுவும் சில குறிப்பிட்ட சமூகத்தாரால் நடத்தப்படுகின்ற தனிக் கோயில்கள் ஏராளமாக இருக்கின்றன. இதுபோன்று பெரிய அளவிலே புகார்கள் வருமானால், நிலங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன, பூஜைகள் சிதையுறுகின்றன, என்பன போன்ற குற்றச்சாட்டுகள் வருமானால், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அதை எழுதிக் கொடுப்பாரேயானால், கண்டிப்பாக அறநிலையத் துறை இந்தக் கோயிலைத் தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டு மேல் நடவடிக்கைகளைத் தொடரும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 31]

**212—**

**பெண்கள் தொழிற் பயிற்சி மையம்**

***19386—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் நகரில் பெண்கள் தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகரம் வளர்ந்து வரக்கூடிய பெரிய நகரமாகும். எங்கள் பகுதியில் பெண்களுக்கென்று தனியாக கல்லூரியோ, தொழிற்சாலையோ அல்லது தொழிற் பயிற்சி மையமோ எதுவும் கிடையாது. படித்த பெண்கள் தொழிற் பயிற்சி பெறுவதற்குச் செல்ல வேண்டுமென்றால் 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கோவைக்கோ அல்லது ஈரோட்டிற்கோ செல்ல வேண்டியிருக்கிறது. பெண்களுக்கு சொத்தில் சம பங்கு, உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் என்று பெண்கள் நலனில் அதிக அக்கறை உள்ள நம்முடைய மாண்புமிகு கலைஞர் அரசிலாவது பெண்களுக்குத் தனியாக தொழிற் பயிற்சி மையம் அமைத்துத் தரப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் தனியார் I.T.I. 545 இருக்கின்றன. அரசின் சார்பாக நடத்தப்படுகின்ற I.T.I. 53 இருக்கின்றன. இதிலே மகளிருக்கென்று மட்டுமே 10 நிலையங்கள் செயல்படுகின்றன. குறிப்பாக, தாராபுரத்தைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே ஒரு அரசினர் I.T.I. இருக்கிறது. இதிலே 30 சதவிகிதம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்ற கட்டாய நிலை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், அன்னை பாத்திமா தொழிற் பயிற்சி மையம், அன்னபாக்கியம் ஜெயராஜ் தொழிற் பயிற்சி நிலையம், லட்சுமி தொழிற் பயிற்சி நிலையம் என்ற மூன்று தனியார் நடத்துகின்ற தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவற்றிலும் பெண்கள் சேர்க்கப்படுகின்றார்கள். ஆகையினால், அரசின்

சார்பாக பெண்களுக்காகத் தனியாகத் தனிப் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எதுவும் இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *213*, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**213—**

### திருத்தணியில் தொழிற் பயிற்சி நிலையம்

***21220—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு தொழில்லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருததணி நகரில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தை உள்ளடங்கிய திருத்தணி, திருவள்ளூர், பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை போன்ற வட்டங்களில் தொழிற் பயிற்சி நிலையமே இதுவரை தொடங்கப்படாத நிலையிலே சுமார் *70* கிலோ மீட்டர் தூரம் வந்து அந்த கிராமப்புற மாணவர்கள் எல்லாம் படிக்க வேண்டிய நிலை உள்ளது. அதை மாற்றுகின்ற வகையில் வருங்காலத்திலாவது திருத்தணி தொகுதியிலே தொழிற் பயிற்சி நிலையம் தொடங்கிட அரசு ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, தேர்தல் அறிக்கையின் அடிப்படையிலே எந்த ஒன்றியங்களில் தொழிற் பயிற்சி நிலையம் இல்லையோ அங்கெல்லாம் தொழிற் பயிற்சி நிலையம்



தொடங்குவதற்கு அனுமதி கொடுத்து, மூன்று கட்டமாக நிறைவேற்றுகின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக திருத்தணியைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே தனியார் I.T.I. உள்ளது. அதுமட்டுமல்லாமல் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை உள்ளடக்கிய பகுதியிலே 19 தொழில் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அரசின் சார்பாக இரண்டும் தனியார் சார்பாக பதினேழும் இருக்கின்றன. திருத்தணியில் சரவணா தொழிற் பயிற்சி நிலையம் இருக்கிறது. ஆகவே தொடங்குவதற்கான அவசியம் இப்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *214*, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**214—**

### கோ-ஆப்டெக்ஸ் கைத்தறிக் கடையை செங்கத்திற்கு மாற்றுதல்

***18205—திரு. கொ.வீ. நன்னன்:**

*மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலையில் இயங்கி வரும் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறிக் கடையை மீண்டும் செங்கத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

*(அ) மற்றும் (ஆ)* தற்பொழுது திருவண்ணாமலையில் இயங்கி வரும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் நல்லமுறையில் இயங்கி வருவதால், அதை செங்கத்திற்கு மாற்றும் எண்ணம் இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் நகரில் ஏற்கெனவே நடந்து வந்த கோ-ஆப்டெக்ஸை திடீரென்று மூடிவிட்டார்கள். அதை ஏன் மூடினார்கள், எதற்கு மூடினார்கள், என்ன காரணம் என்பது புரியவில்லை. எங்கள் பகுதி, மிகவும ஏழைகள், எளியவர்கள் வசிக்கின்ற பகுதி. எனவே அந்த ஏழைகளுக்கும் எளியவர்களுக்கும் பயன்படும்படி மீண்டும் செங்கம் நகரில் கோ-ஆப்டெக்ஸை திறக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 31

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் கோ-ஆப்டெக்ஸ் 1-10-1995 ஆம் தேதியில் மூடப்பட்டது. அதற்குக் காரணம் வியாபாரம் தொடர்ந்து 1993-ல் ரூ. 4.60 இலட்சம், 1994-ல் ரூ. 7.20 இலட்சம், 1995-ல் ரூ. 5.74 இலட்சம் என்ற அளவிலே இருந்த காரணத்தால், அடுத்து, 20 இலட்சத்திற்குக் குறைவாக ஆண்டு வியாபாரம் இருந்தால் அது இலாபகரமாக இயங்காது என்ற அடிப்படையிலே 1995 ஆம் ஆண்டு அது மூடப்பட்டு விட்டது. எதிர்காலத்தில் புதிதாகத் திறக்கக்கூடிய விற்பனை நிலையங்களும் குறைந்தது 20 இலட்ச ரூபாய் அளவிற்கு ஆண்டு வியாபாரம் இருந்தால்தான் அது இலாப-நட்டம் இன்றிச் செயல்படும் என்ற அடிப்படையிலே திறக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 215, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**215—**

### செக்கானூரணியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி

***20601—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருமங்கலம் தொகுதி, செக்கானூரணியில் கள்ளர் சீரமைப்புத் துறை மூலம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, செக்கானூரணியில் கள்ளர் சீரமைப்புத் துறையின் சார்பில் ஆண்கள், பெண்கள் இரண்டு பேரும் சேர்ந்து படிக்கின்ற



1999 மார்ச் 31]

மேல்நிலைப் பள்ளி நடைபெற்று வருகிறது. இதில் ஏராளமான காலியிடங்கள் இருந்தும் அங்கு வகுப்பறை இல்லாத நிலையில் பெண்களுக்குக்கூடத் தனியாகக் கழிப்பிடங்கள் இல்லாத ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை மனதில்கொண்டு, பெண்களுக்கு என்று அந்த வளாகத்தில் தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை உருவாக்கித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை விதிமுறைக்குட்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக பெண்களுக்கு என்று தனியாக எத்தனை பள்ளிகள் நடத்தப்படுகின்றன, மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை நடத்தப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாக அறிவதோடு, கடந்த காலத்திலே பெண்களுக்கு என்று செக்கானூரணியில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்தப்பட்டது. அதை மீண்டும் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் கள்ளர் சீர்மரபினர் நலனுக்காக 15 மேல்நிலைப் பள்ளிகள், 23 உயர்நிலைப் பள்ளிகள், 19 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 208 தொடக்கப் பள்ளிகள் ஆக மொத்தம் 265 பள்ளிகள் இயங்கி வருகின்றன. 265 கள்ளர் சீர்மரபினர் பள்ளிகளில் 55,346 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 216, திரு. டி. மணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**216—**

### கழிவு நீரால் சுகாதாரக் கேடு

***13971—திரு. டி. மணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

[1999 மார்ச் 31

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம் மெதுகும்மல் பேரூராட்சி, படந்தாலுமூட்டில் ஓசியானிக் மீன் பதப்படுத்தும் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் அருகிலுள்ள கிராம மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் படந்தாலுமூட்டில் உள்ள ஓசியானிக் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை உரிய சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து இயங்கி வருகிறது. 6-3-1998 அன்று இத்தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் மாதிரி ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த அளவுக்கு அதிகமாக, கரைந்துள்ள திடப் பொருட்களின் அளவும் குளோரின் அளவும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, வாரியத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை மாதம் வரை இத்தொழிற்சாலையில் மீன் பதப்படுத்தும் வேலைகள் நடைபெறவில்லை. தற்போது இவ்வாலை, முதல் கட்ட கழுவுதல், இரண்டாவது நிலையான உரித்தல் ஆகிய செயல்முறைகளை முற்றிலுமாகத் தவிர்த்து இறுதிக் கட்ட கழுவுதல் மற்றும் உறைய வைத்தல், முடிவாக அடைத்தல் ஆகிய பணிகளை மட்டுமே செய்து வருகிறது. இத்தொழிற்சாலையை வாரியம் முனைப்போடு கண்காணித்து வருகிறது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, ஓர் ஆண்டுக்கு முன்னாலே நான் போட்ட கேள்வி. தற்போது மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற பதிலில் ஒரு சிறிய திருத்தத்தை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஏனென்றால், 6 மாதங்களுக்கு முன்பு அந்தத் தொழிற்சாலையை அங்கிருந்து வள்ளவிளை என்ற கிராமத்திற்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். இப்போது அந்தப் பிரச்சினைக்கே அங்கு இடமில்லை. இந்தக் கேள்விகள் ஒரு வருடத்திற்கு முன்னால் தரப்பட்டன. குறிப்பாக இந்த மாநில மையப் பகுதிகளில் வருகின்ற கேள்விகளுக்குக் கூட அந்தத் துறையின் மூலமாக தகுந்த நேரத்தில் எங்களுக்கு பதில் தருவது என்பது இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதையும்கூட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 217, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.



1999 மார்ச் 31]

**217—**

### கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

***8563—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் திருமலாபுரம் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 218, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**218—**

### கால்நடை கிளை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***20025—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தான் கால்நடை கிளை மருத்துவமனையைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 மார்ச் 31

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகவாழ்ந்தான் கிராமம் சென்ற ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டு, பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்ற கிராமம் ஆகும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, கிளை மருத்துவமனையை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என அறிய விரும்புவதோடு, நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கின்ற அடிப்படையிலே மன்னார்குடி நகரில், மிகப் பழமையாகச் செயல்பட்டு வருகிற கால்நடை மருத்துவமனையை பெருமருத்துவமனை யாக இந்த ஆண்டு தரம் உயர்த்தித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களா? அப்படி உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை நமது அரசினுடைய மதிப்பீட்டுக் குழுவின் மூலம் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, அவர்கள் மூலமாகவும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, அதையும் தரம் உயர்த்துவதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் கோட்டூர், பெருகவாழ்ந்தான் ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கெனவே இரண்டு கால்நடை மருந்தகங்களும், இடைமேலையூர் என்ற இடத்தில் கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. இருந்தாலும், பெருகவாழ்ந்தான் கிராமத்திற்குப் பக்கத்தில் 10 கிலோ மீட்டரில் முத்துப்பேட்டையில் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. மேலும், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் மழவராயநல்லூர், திருநெல்லிக்காவல், விக்கிரபாண்டியன், திருமகக்கோட்டை என்ற இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும், மேலும் இவற்றிற்கு முறையே பள்ளிவத்தி, செருவாமணி, புழுதிக்குடி வடக்கு, தென்மறை ஆகிய இடங்களிலே கால்நடை பார்வை கிளை மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. அதைப்போல, கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனையாக நிலை உயர்த்தப்படுவது பகுதி 2 திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும்



1999 மார்ச் 31]

வழங்கப்படுகிறது. அதைப்போல, அவர்கள் மன்னார்குடியைப் பற்றிச் சொன்னார்கள். அரசின் நிதிநிலையைக் கருதி எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *219*, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**219—**

**பார்வையற்றோர் தொழில் மையம் அமைத்தல்**

***21018—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, காந்தி அருங்காட்சியகம் அருகிலுள்ள தமிழ்நாடு பார்வையற்றோர் புனர்வாழ்வு நிலையத்தில் பார்வையற்றோர்களுக்கான பல்வேறு தொழில்களை உள்ளடக்கிய தொழில் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை காந்தி அருங்காட்சியகம் அருகில் உள்ள தமிழ்நாடு பார்வையற்றோர் புனர்வாழ்வு நிலையத்தில் பார்வையற்றோருக்கான பல்வேறு தொழில்களை உள்ளடக்கிய தொழில் மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *220*, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**220—**

**பயணியர் விடுதி கட்டுதல்**

***9816—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 31

(அ) திண்டுக்கல் நகரில் சுற்றுலாத் துறையின் மூலம் பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகரில் சுற்றுலாத் துறையின் மூலம் பயணிகள் தங்க தங்கும் வசதியுடன்கூடிய உணவு விடுதி கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் ஒரு மாவட்டத்தினுடைய தலைநகரம். திண்டுக்கல் நகரை மையப்படுத்தி, நான்கு தேசிய நெடுஞ்சாலைகளும், மூன்று நெடுஞ்சாலைகளும் இணைகின்ற ஒரு பெரிய நகரம். பழனி திருக்கோவில், கொடைக்கானல், மதுரை மீனாட்சியம்மன் கோவில் போன்ற பல்வேறு ஸ்தலங்களை உள்ளடக்கியிருக்கக்கூடிய ஒரு மைய நகரம். அந்த நகரத்திலே ஒரு சுற்றுலாப் பயணியர் விடுதி இருக்க வேண்டியது என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. எனவே, அதை மறுபரிசீலனை செய்து அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக விடுதிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகள் நிதிநிலையைப் பொறுத்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பழனி, மதுரை, ஈரோடு, கோவை, பொள்ளாச்சி போன்ற ஊர்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் தாராபுரம் மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், சுற்றுலாத் துறையின் மூலம் பயணியர் விடுதி அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் பகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பாக விடுதி கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.



1999 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, சாத்தனூர் அணையில் உணவு மற்றும் தங்கும் விடுதி கட்டப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. அதைத் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா அல்லது கூடுதலாகக் கட்டணம் கேட்பதால் ஒப்பந்தக்காரர்கள் வரவில்லை என்பதை அறிந்து குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதியைத் தனியார் மூலம் நடத்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) சென்னை, அட்கின்சன் சாலை பெயர் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, இங்கே மதுவிலக்குத் துறை அமைச்சராகவும், பிறகு மக்கள் தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதும், ஐயா பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போதும், சுகாதாரத் துறை அமைச்சராகவும் இங்கே பணியாற்றி, கடைசியாக கேரள ஆளுநராக அங்கே சிறப்பான முறையிலே, அந்த மக்கள் எல்லாம் 'லோகத்திலே அம்மைபோல் உண்டல்லோ' என்று பாராட்டக்கூடிய அளவிற்கு பணியாற்றிய அம்மா ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பங்களா இருக்கக்கூடிய அந்தச் சாலையின் பெயர் இப்போது அட்கின்சன் சாலை என்று இருக்கிறது. அந்தச் சாலையின் பெயரை மாற்றி ஜோதி வெங்கடாசலம் சாலை என்று பெயர் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். நான் ஏற்கெனவே இதுபற்றி உங்களிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

[1999 மார்ச் 31

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எனக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை. ஆனால், மாநகராட்சி மன்றத்தின் மூலம் அந்தப் பரிந்துரை வரவேண்டுமென்று கருதுகிறேன். மாநகராட்சி மன்றத்திற்கு, அதனுடைய கவனத்திற்கு இது கொண்டு செல்லப்படும்.

*முற்பகல் 10-25*

### (ஆ) புழல் ஏரியில் ஏற்பட்ட உடைப்பைச் சரி செய்ய முதலமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விடியற்காலையில் 5½ மணியளவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புழல் ஏரியில் கசிவு ஏற்பட்டு மிக ஆபத்தான நிலையில் இருப்பதாகப் பேசினார்கள். நான்கூட பதறிப் போய்விட்டேன். முதலமைச்சர் அவர்கள் அந்த நேரத்திலேயே எழுந்து, இவ்வளவு அக்கறையோடு அந்தக் காரியத்தில் இறங்கி இருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது அது என்ன நிலையில் இருக்கிறது? முதலமைச்சர் அவர்களே நேரில் சென்று பார்த்தார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அதற்கு அவர்கள் விளக்கம் அளிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலை 5, 5½ மணியளவிலே நம்முடைய தலைமைச் செயலகத்திலே இருந்தார்கள். என்னிடம்கூட தொலைபேசி மூலமாக இந்தத் தகவலைச் சொன்னார்கள். புழல் ஏரிப் பகுதியை அவர்கள் நேரிலே சென்று பார்வையிட்டதாக அறிவித்தேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன் அவர்களும் திரு. செங்கை சிவம் அவர்களும் இந்த புழல் ஏரிக் கரை உடைந்ததுபற்றி விவாதிக்க அறிவிப்புக் கொடுத்து இருக்கின்றார்கள். திரு. ப. ரங்கநாதன் ஒரு வரியிலே அந்த அறிவிப்பைப் படித்துவிட்டால் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் எடுத்துச் சொல்லிய காரணத்தால், அவர்கள்



பேசியதையே நானும் பேசியதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் சேலம் சென்று ஒரு தொழிற்சாலை திறப்பு விழாவிலே கலந்துகொள்வதற்கான எண்ணத்துடன், இரவு படுக்கைக்குச் சென்ற நான், விடியற்காலை 4½ மணியளவில் புலனாய்வுத் துறை I.G.-யால் மிகுந்த அவசரமான செய்தி என்று பரபரப்போடு எழுப்பப்பட்டு, சென்னையை அடுத்துள்ள செங்குன்றம் ஏரிக்கரை உடையும் அபாயத்திலே இருப்பதாகவும், அதன் காரணமாக, சென்னையும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம் என்றும் சொன்னவுடன் மிகவும் அதிர்ச்சி அடைந்து, உடனடியாக தலைமைச் செயலாளரோடும், காவல் துறை அதிகாரிகளோடும், பொதுப்பணித் துறை அதிகாரிகளோடும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவரோடும் தொடர்பு கொண்டு உடனடியாக எச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ளும்படியும், தாழ்வான பகுதிகளிலே உள்ள மக்களை எல்லாம் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும்படியும் கூறியதோடு ஐந்தே கால் மணியளவிலே தலைமைச் செயலகத்திற்கு வந்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவலை வழங்கி, தங்களுக்கும் தகவலை வழங்கி, அதன் பின்னர், அமைச்சர்கள் திரு. ஆற்காடு வீராசாமி, திரு. கோ.சி. மணி, சென்னை மாநகர மேயர், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் ஆகியோரோடு தலைமைச் செயலகத்திலே அவசரக் கூட்டம் நடத்தினேன். அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் திரு. சுந்தரம் அவர்கள் உடனடியாக, உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குச் சென்று, அங்கிருந்து எனக்குத் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்.

செங்குன்றம் ஏரியில் நேற்று இரவு 10 மணியளவில் புழல்-அம்பத்தூர் சாலையில் வேலம்மாள் பாலிடெக்னிக் கட்டடத்திற்கும் செங்குன்றத்திலே உள்ள சென்னை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையே 30 அடி அகலமும், 25 அடி ஆழமுமான உடைப்பு ஏரிக்கரையில் ஏற்பட்டு இருக்கிறது. உடைப்பினுடைய அளவைச் சொன்னேன்; 30 அடி அகலம், 25 அடி ஆழம். இந்த உடைப்பு ஏற்பட்டபோது ஏரியில் அதன் கொள்ளளவான 300 கோடி கன அடி தண்ணீர் முழுவதுமாக ஏரியில் நிரம்பி இருந்தது. இரவு உடனடியாக அதிகாரிகள் மட்டத்தில் நடவடிக்கை எடுத்து, பக்கத்திலே உள்ள காவாங்குளம், குளத்தூர், லட்சுமிபுரம், தணிகாசலம் நகர், கொடுங்கையூர் ஆகிய ஊர்களிலே உள்ள மக்களுக்கு

எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இரவு துவக்கத்தில் சிறு கசிவு என்ற நிலையிலே இருந்ததால், பெரிய அளவில் இது பாதிப்பு ஏற்படாது என்று அதிகாரிகள் எனக்கு எல்லாம் அப்போது தெரிவிக்காமல் இருந்துள்ளார்கள். அதன் பின்னர்தான், நள்ளிரவுக்கு மேல் உடைப்பு ஏற்பட்டவுடன் தெரிவித்தார்கள். பொதுப்பணித் துறை அதிகாரிகள், சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் எல்லாம் அனைத்து நடவடிக்கைகளையும் அந்த உடைப்பை அடைப்பதற்காக மேற்கொண்டு உள்ளார்கள். பாதிப்பு பெரிய அளவிலே நேரிட்டு இருந்தால், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்திற்குச் சொல்லப்பட்டு அவர்களும் தயார் நிலையிலே வைக்கப்பட்டார்கள்.

தலைமைச் செயலகத்தில் இருந்து காலை 7 மணியளவில் நானும் அமைச்சர்களும், தலைமைச் செயலாளரும் நேராக செங்குன்றம் சென்று உடைப்பு எடுத்த இடத்தைப் பார்வையிட்டோம். உடைப்பு எடுத்த இடத்தைப் பார்த்தபோது, சென்னைக்கு ஏற்பட இருந்த மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது என்பது நன்றாகத் தெரிந்தது. ஏரியின் கரை, ஒரு ஆறு அளவுக்கு இடையிலே உடைந்துள்ள நிலையிலே உள்ளது. ஏரியிலே உள்ள உபரித் தண்ணீரை உடனடியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடைப்பு ஏற்பட்ட, தண்ணீர் வெளியே வந்த இடத்தில், தண்ணீர் வெளியேற்றம் இப்போது பெரிதும் குறைந்துவிட்டது. சென்னை, திருவள்ளூர் மாவட்டக் காவல் துறையினர், D.G.P. சென்னை மாநகர ஆணையர் ஆகியோர் தலைமையில் அந்த இடத்திலிருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

*முற்பகல் 10-30*

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையில் குடிநீர் வாரிய அதிகாரிகளும், பொதுப்பணித் துறை அதிகாரிகளும் அந்த உடைப்பை அடைப்பதற்கான போர்க்கால நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டுள்ளார்கள். தமிழக அமைச்சர்கள் திரு. தா. கிருட்டிணன், திரு. கு. பிச்சாண்டி, திரு. ஐ. பெரியசாமி, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. புரசை ரங்கநாதன், திரு. செங்கை சிவம், திரு. திருவொற்றியூர் விஜயன், அந்தத் தொகுதியினுடைய உறுப்பினர் திரு. அருண் ஆகியோர், நான் அங்கே சென்றபோது, அங்கே இருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மற்றொன்று, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மாமனார் நேற்றையதினம் காலமாகிவிட்டார். அங்கு சென்றிருந்த அமைச்சர் அதையும் பொருட்படுத்தாமல் சென்னைக்கு வந்து கொண்டிருந்தபோது, நான் அவருடன் செல் போனிலே இராணிப்பேட்டை அருகே தொடர்பு கொண்டு, வரவேண்டாம் என்று தடுத்து, திருப்பி அனுப்பிவிட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த உடைப்பின் காரணமாக, சென்னை மாநகருக்கு ஏற்படவிருந்த பேராபத்து, அரசு மேற்கொண்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகத் தவிர்க்கப்பட்டதோடு, வருங்காலத்தில் சென்னை மாநகருக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படாத அளவிற்கும் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோடைக் காலத்தில் இப்படி ஓர் உடைப்பு ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிந்தீர்களா அல்லது வேறு ஏதாவது சதிபோன்று இருக்குமா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருடைய அந்த ஐயப்பாட்டிற்கு, உடனடியாக திடீரென்று நான் எந்த விளக்கத்தையும் அவசரப்பட்டு அளிக்க விரும்பவில்லை. அது பற்றி விசாரணை நடத்தித்தான், பிறகு தெரிவிக்க முடியும்.

## 4. அறிவிப்பு

### மானியக் கோரிக்கைகள், 1999-2000, பேரவையில் முன்மொழிவது குறித்த ஆளுநரின் செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1999-2000* ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for grants for the financial year 1999-2000".

# 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்

## கோரிக்கை எண் 17 - கல்வி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 17 - கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 41,44,00,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1375, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் ஒன்றியம், கருகம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 202, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் அரசு தொழிற்பயிற்சி பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 856, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 57, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1527, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் பொறியியல் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1651, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1051, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளையாட்டுத் துறையில் நீண்ட நாட்களாக காலியாக உள்ள மாவட்ட விளையாட்டு அலுவலர், மேலாளர், பயிற்சியாளர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 396, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், போந்தை கிராமத்தில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. க. மணிவர்மா] [1999 மார்ச் 31

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 561, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், முக்குடி கிராம தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 917, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், ஆலத்தூர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1281, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1392, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட முருகேசபுரம், மடத்தச்சம்பாடு ஆகிய கிராமங்களில் புதிதாகத் தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



1999 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2643, திரு. ப. மோகன் கந்தசாமி

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், கெத்தல்ரேவ் ஊராட்சி, திப்பநாயக்கன்பாளையம் மற்றும் சடையபாளையம் ஊராட்சி கருப்பட்டிபாளையம் ஆகிய ஊர்களில் தொடக்கப் பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1433, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பூவாளூர் மேற்கு கிராமத்தில் புதிதாக நடுநிலைப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5, திரு. சி. வேலாயுதன்

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் உள்ள இரணியல் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு பள்ளிக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 592, திரு. நா. பெரியசாமி.

[1999 மார்ச் 31

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், துடுப்பதி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2664, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் பெண்களுக்கென தனியாகத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர், கைத்தொழில் ஆசிரியர் ஆகிய பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1365, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதற்கு வேறொரு இடத்தில் இவ்வாண்டே புதிதாகக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கைகளை



1999 மார்ச் 31] [திரு. வை. சிவபுண்ணியம்]

மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1151, திரு. ந. கருப்பண்ண உடையார்.

(முற்பகல் 10-35

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்ற தொகுதி சுவாமிமலை அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 147, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் காலியாக உள்ள ஓவிய ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2706, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

[1999 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1227, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 488, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் பாண்டியன் நகர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,44,00,61,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் பள்ளிக் கல்வித் துறை என்றும், உயர் கல்வித் துறை என்றும் இரண்டு பகுதிகள் தமிழிலே உள்ள கொள்கை விளக்கங்களாக இடம் பெற்றுள்ளவற்றை (a) நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை திரு. மு. அப்பாவு அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதற்கண் என்னுடைய தொகுதியிலுள்ள கூத்தங்குடி அருகே கடற்கரை பகுதியில் மீனவர்களுக்காக தவத்திரு செபஸ்டியான் அடிகளார் கல்வி அறக்கட்டளை மூலம் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்க

(a) 171 முதல் 306 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II அச்சிடப்பட்டுள்ளன.



1999 மார்ச் 31] [திரு. மு. அப்பாவு]

வேண்டுமென்று 1997 ஆம் ஆண்டு 25 இலட்சம் ரூபாய் செலவில் அருமையான கட்டடத்தைக் கட்டி, அரசுக்கு விண்ணப்பித்தபோது, அரசு சில விளக்கங்கள் கேட்டு திருப்பி அனுப்பிவிட்டது. தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு தற்போது அரசின் கொள்கை அளவில் அனுமதி வழங்குவதில்லையென்றாலும், இதை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, தாழ்த்தப்பட்ட, மிகவும் பின்தங்கிய பகுதியில், மீனவர்களுக்காக ஆரம்பிக்கப்படுகின்ற அந்தத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் தலைமை.

புதிதாக ஆரம்பிக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளில், என்னுடைய தொகுதியைச் சார்ந்த துலுக்கப்பட்டி, பலவூர் ஆகிய இரண்டு நடுநிலைப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும், பணகுடி பேரூராட்சிக்குட்பட்ட ரோஸ்மியாபுரத்தில் ஆரம்பப் பள்ளிக்கு மேல் இல்லை. ஆகவே நடுநிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். முருகேசபுரம், மருதநார்சிவிளை ஆகிய இடங்களில் இந்த ஆண்டே ஆரம்பப்பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு புதிதாக 100 கணினி வகுப்புகள் மேல்நிலைப் பள்ளிகளில் அறிமுகம் செய்யவிருப்பதால், என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராதாபுரம், பணகுடி, செட்டிகுளம் ஆகிய அரசு மேல்நிலைப் பள்ளிகளில் நீங்கள் இந்த ஆண்டே கணினியை அறிமுகம் செய்ய வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் இருக்கின்ற, விளையாட்டு ஆணையத்திற்கு உட்பட்ட பகுதிகளில், குறிப்பாக நெல்லையை எடுத்துக் கொண்டோமானால், அங்கே கைப்பந்து பயிற்சியாளர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக இல்லாமல் இருக்கிறார்கள். அதேபோன்று, தமிழகம் முழுவதும் இதே நிலைதான் இருக்கிறது. விளையாட்டு ஆணையத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு தமிழகம் முழுவதிலும் கடந்த 10 ஆண்டுகளாக பயிற்சியாளர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, விரைவாக நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட விளையாட்டு அதிகாரிகளுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் சம்பளத்தில் மிக அதிகமாக வேறுபாடு இருப்பதாகக் கூறுகிறார்கள். அவற்றையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 5-9-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாநில தலைமைப் பயிற்சி மையமும், அலுவலகத்திற்குமான ஒரு கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். அது 173 கோடி ரூபாய்க்கான கட்டடம் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. 173 கோடி ரூபாய்க்கு இந்த 3 அடுக்கு மாடிதான் கட்டினீர்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆரம்பப் பள்ளிகளில் மிகப் பெரிய குறைபாடுகள் இருப்பதாக, நான் சொல்லவில்லை, UNICEF என்ற அமைப்பின்மூலம் செய்யப்பட்ட ஆய்வில் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் வெளிப்படையான உண்மைகள் மறைக்கப்படுகின்றன. உயர அதிகாரிகளையும், அமைச்சரையும் திருப்திப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த ஆரம்பப் பள்ளிகளில் இருக்கின்ற கீழ்மட்ட அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

குறிப்பாக, ஒன்றாம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை படிக்கின்ற மாணவர்களில் மூன்றில ஒரு பகுதியினர்தான் 8ஆம் வகுப்புக்கு மேலே செல்லுகின்றார்கள். பெண்களை எடுத்துக்கொண்டால், 100 மாணவிகளில் ஒரு மாணவிதான் 8ஆம் வகுப்புக்கு மேலே செல்கின்றாள் என்று கூறுகின்றார்கள். இதற்கெல்லாம் உண்மையான காரணம், ஆரம்பக் கல்வியின்மீது இந்த அரசு கவனம் செலுத்தவில்லை என்பதுதான் என்று UNICEF நிறுவனம் தனது குற்றச்சாட்டாகக் கூறியிருக்கிறது. நமது மாநில அளவில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரப்படிகூட 44 சதவிகித மாணவ மாணவிகள் 8-வது வகுப்புக்கு மேலே படிக்கச் செல்வதில்லை என்ற நிலை இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தரமான ஆரம்பக் கல்வியை நாம் வழங்கவில்லை என்றுதான் நான் கூறவிரும்புகிறேன்.

30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்களே தவிர, எத்தனை ஓராசிரியர் பள்ளிகள் தமிழகத்திலே இருக்கின்றன, ஈராசிரியர் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன, 3 ஆசிரியர் பள்ளிகள் எத்தனை இருக்கின்றன, வகுப்புக்கு ஓராசிரியர் இல்லாத பள்ளிகள் எத்தனை இருக்கின்றன என்ற கணக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலோ அல்லது விரிவான மானியக் கோரிக்கையிலோ ஓர் இடத்தில்கூட, எந்த விதமான தகவலும் கொடுக்கப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)





ஒவ்வோர் ஆண்டும் எத்தனை ஆசிரியர்கள் ஓய்வு பெறுகிறார்கள், எத்தனை பணியிடங்கள் உருவாக்கப்படுகின்றன என்பதுகூட வெளிப்படையாக எந்த ஓர் இடத்திலும் சொல்லப்படாமல், 35 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள், 29 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டார்கள், 1,451 பேருக்குத்தான் அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றெல்லாம் குளறுபடியான சில தகவல்கள் இந்த ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதிலே வந்து கொண்டிருக்கின்றன இவற்றில் 29,000 பேர் நியமிக்கப்பட்டார்கள் என்றால் Deployment மூலம் 6 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு பள்ளியிலிருந்து இன்னொரு பள்ளிக்கு மாற்றுப் பணிக்காகச் சென்றவர்களை நீங்கள் புதிய இடங்களாக அறிவித்திருப்பது மிகவும் தவறு என்பதை என்னுடைய கருத்தாக எடுத்து வைக்க விரும்புகிறேன். எனவே, வருங்காலங்களிலாவது எத்தனை ஆசிரியர்கள் ஓர் ஆண்டுக்கு ஓய்வு பெறுகிறார்கள் என்ற விவரங்களைக் கொடுக்க வேண்டும். நீங்கள் புதிதாக ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பிக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றீர்கள். எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் அதற்காக உருவாக்கப்பட்டுள்ளன? நீங்கள் தரமாக ஆரம்பக் கல்வியைக் கொடுக்க வேண்டுமானால், நிச்சயமாக வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற முறையைக் கொண்டுவந்தால்தான் தரமான ஆரம்பக் கல்வியைக் கொடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 1996-97ஆம் ஆண்டு இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் நிரப்புவதற்கு உரிய தகுதிபெற்ற S.T./S.C. ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று ஓர் ஆணை பிறப்பித்து அதன் அடிப்படையில் S.T./S.C. பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தீர்கள். அவர்களை நியமிக்கக்கூடாது, இந்தத் தாழ்த்தப்பட்டவர்களை முழுமையாக நியமிக்கக்கூடாது என்பதற்காகவே, அதற்குப் பின்னால Science/Maths ஆகிய இரண்டு பட்டதாரிகளைத்தான் நியமிக்க வேண்டும் என்று ஒரு புதிய சட்டத்தை உருவாக்கியதால் தாழ்த்தப்பட்ட மாணவர்களில் மற்ற பட்டதாரி ஆசிரியர்கள் நீதி மன்றத்திற்குச் சென்று..........

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களுக்கு விவரங்கள் நன்றாகத் தெரியும். தெரிந்தாலும்கூட ஏதோ அதிலே ஒரு கருத்து வேற்றுமை இருப்பதுபோலக் காட்டுவதற்காக, முதலிலே போட்ட ஆணை, அதற்குப் பின்னாலே போட்ட ஆணை என்று சொல்கிறார். அப்படியல்ல, தாழ்த்தப்பட்ட பட்டதாரிகளை இடைநிலை ஆசிரியர்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 மார்ச் 31

பணியிடங்களில் நியமிப்பதற்குப் போதுமான இடைநிலை ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்டவர்களில் இல்லாத காரணத்தால், நியமிப்பதற்கு எடுக்கின்றபோதே, பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர் இடத்தில் நியமிக்கக்கூடாது என்று ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்று இருக்கின்ற காரணத்தால்—இப்படி நியமிப்பதற்கு முக்கியக் காரணம், அறிவியலிலும், ஆங்கிலத்திலும், கணிதத்திலும் தேர்ச்சி பெற்ற அந்தப் பட்டதாரிகளைக்கொண்டு நாங்கள் நியமிக்கிறோம் என்று ஒரு காரணத்தைக் காட்டி, அதன் அடிப்படையிலேதான் முதல் ஆணை பிறப்பிக்கப்பட்டதே தவிர, தொடக்கத்திலிருந்து பட்டதாரிகள் என்று பொதுவாக எடுக்கின்ற நிலை உருவாகவில்லை. அப்படி எடுக்கத் தொடங்கியதை மறுத்து, எல்லாப் பட்டதாரிகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டபோது, அரசு அப்படி ஒரு கொள்கை முடிவு எடுக்க முடியாது என்று தெரிவித்தபோது, அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று ஒரு தடை ஆணையைப் பெற்ற காரணத்தால் இப்போது தொடர்ந்து நியமிக்க முடியாத நிலையில் தடைபட்டு நிற்கிறது.

முற்பகல் 10-45

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு அரசாணை எண் 539-ன்படி பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலைப் பணியிடத்தில் நியமிக்கலாம் என்று இருந்ததை, 1995 ஆம் ஆண்டு அரசாணை எண் 555-ன்படி இடைநிலைப் பணியிடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்று அரசாணை பிறப்பித்தார்கள். அது எனக்குத் தெரியும். நான் கேட்பதெல்லாம், மத்திய அரசு 6, 7, 8 வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்; அப்போதுதான் கல்வியினுடைய தரம் நன்றாக இருக்கும் என்று சொன்ன அறிவுரைகளின்படி, இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும் அதை ஏற்றுக்கொண்டபோது, தமிழகத்தில் மட்டும் நீங்கள் அதை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. (குறுக்கீடு) இதற்கான விளக்கத்தினை உங்களுடைய பதிலிலே சொல்லுங்கள். நான் பேசுவதற்குரிய நேரம் முடிந்துவிட்டது என்று சொல்லி என்னை உட்காரச் சொல்லிவிடுவார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அறிவுரைகளைப் பெரும்பாலும் தமிழக அரசுதான் பின்பற்றுகிறது. வேறுபல அரசுகள் அறிவுரைகளைப் பற்றிக் கவனிப்பதுகூடக் கிடையாது. இருந்தாலும்கூட, வெறும் ஆலோசனைகளைச் செயல்படுத்த முடியாது. ஆலோசனைகளோடு சேர்ந்து, இந்த அளவு நியமிப்பதற்கு நிதியொதுக்குகிறோம் என்று



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

சொன்னால் அதை. தொடர்ந்து செயலபடுத்த தமிழக அரசு தயாராக இருக்கிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலுள்ள ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய 8 கூட்டமைப்புகளைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். எதற்காக என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசாணை எண் 250-ஐ இரத்து செய்து, கடந்த கால ஆட்சியில் அரசாணை எண் 340 போடப்பட்டது. அதை நாம் 525-ஆக மாற்றியிருக்கிறோம். இதை இரத்து செய்யவேண்டும் என்பதுதான் அவர்களுடைய முதல் கோரிக்கை. அரசாணை எண் 250-ன்படி ஆரம்பப் பள்ளிகளில், மாணவர்-ஆசிரியர் விகிதம் இருக்கவேண்டும் என்பதுதான் அவர்களுடைய பிரதான கோரிக்கை. இதை, தமிழக அரசினுடைய ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய எட்டு கூட்டமைப்புகள் மட்டுமல்ல, 1995 ஜூன் மாதம் 21 ஆம் தேதி மாண்புமிகு முதலவர் அவர்களே இந்த ஆணையை இரத்து செய்ய வேண்டுமென்று, அந்த அரசுக்கு ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதல்வர் அவர்களுடைய கோரிக்கையையாவது நீங்கள் ஏற்றுக்கொண்டு, அதை இரத்து செய்து விடலாமே? முரசொலியிலே...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஆணைகளுக்கிடையிலே எத்தனை ஆணைகள் வந்திருக்கின்றன என்று திரு. அப்பாவு அவர்கள் கவனிக்க வேண்டும். வரிசையாகப் பல ஆணைகள் பிறந்து, மறுபடியும் கடைசியாகச் சொல்லப்பட்ட ஆணையும்கூட கைவிடப்பட்டிருக்கிறது. அதை அப்படியே நடைமுறைப்படுத்தவில்லை. முழு விளக்கம் சொல்ல 10 நிமிடங்கள் ஆகும். ஆகவே, அந்தப் பிரச்சினையைப்பற்றி நான் விளக்கம் சொல்லத் தயார் என்ற அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது வேறு ஒன்றும் அல்ல. முதல்வர் அவர்களுடைய ஆசையே, அந்த 340 ஆம் எண் அரசாணை இருக்கக் கூடாது என்பது. அரசாணை எண் 250 இருக்க வேண்டுமென்று முரசொலியிலே மிகவும் விளக்கமாக இரண்டு பக்கங்களிலே எழுதியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரே ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு நான் விளக்கம் சொன்னால், பின்னர் திரு. அப்பாவு அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பாமல் இருப்பார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[1999 மார்ச் 31

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயது வரம்பு தளர்த்தியிருப்பதைப்போன்று, இடைநிலை ஆசிரியர்களுக்கும் அந்த வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொழில் ஆசிரியர்களுடைய பணியிடங்கள் 1991-க்குப் பிறகு நிரப்பப்படவேயில்லை தொழில் ஆசிரியர்களுடைய பயிற்சி தொடங்கப்பட வேண்டும். பகுதிநேர ஊதியமும், தொகுப்பு ஊதியமும் பெறுபவர்களுக்கு முழுநேர ஊதியம் வழங்கவேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி ஆசிரியர்கள் 1½ இலட்சம்பேர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். தயவுசெய்து கல்வியினுடைய தரத்தை மனதில் வைத்து— Science, Maths என்று சொல்லி ஒவ்வொரு Subject-wise ஆகப் பிரிக்க வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய கல்வித் திட்டத்திலே 10 ஆம் வகுப்பிற்கு மேலேதான் பாடத் திட்டத்தினுடைய அடிப்படையே இருக்கிறது. ஆகவே, பாடத்தை மையமாக வைக்காமல்—கடந்த 1986 ஆம் ஆண்டு என்ன இருந்ததோ அதேபோன்று இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று கொள்கை அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழகம் முழுவதும் இருக்கின்ற பள்ளிகளில், ஆரம்பப் பள்ளியைவிட இங்கே ஆங்கிலம் போதனா முறையில் உள்ள பள்ளிகள், கிட்டத்தட்ட 9,522 ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்களில், நான்கில் ஒரு பகுதியினர் இந்தி கற்றுக்கொண்டிருக்கிறார்கள். நாம் இங்கே ஆட்சிக்கு வந்ததே, இந்தி எதிர்ப்பு பண்ணித்தான். ஆனால், இன்று தமிழகத்தை எடுத்துக்கொண்டால், நான்கில் ஒரு பகுதியினர் இந்தி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

ஆங்கில மழலையர் பள்ளிகளில், ஆங்கிலம் போதனா மொழி உள்ள பள்ளிகளில் Science, Maths என்று ஏதாவது ஒரு பாடத்தை தமிழிலேதான் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆங்கில போதனா மொழிக்கு நான் விரோதி என்று சொல்லவில்லை. ஆனால், ஆங்கில மொழிகளில் கல்வி கற்பிக்கும்போது அவர்கள் உங்களிடம் அனுமதி பெற வரும்போது, படித்த ஆசிரியர்களுக்கு அரசு கொடுக்கின்ற ஊதியத்தை நீங்கள் வழங்க வேண்டும்; பட்டதாரி ஆசிரியர்களை நியமித்தால் இவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) அரசைப்போன்று நீங்கள் அப்பள்ளியை நடத்த வேண்டும் என்று நீங்கள்



1999 மார்ச் 31] [திரு. மு. அப்பாவு]

அறிவுரை வழங்கி, அந்த அளவில் ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

தமிழகத்தில் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு கிட்டத்தட்ட 780 ஆரம்பப் பள்ளிகள், 412 நடுநிலைப் பள்ளிகள், 319 உயர்நிலைப் பள்ளிகள், 245 மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகம் முழுவதும் 1991-க்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட 23 நடுநிலைப் பள்ளிகள், 40 உயர்நிலைப் பள்ளிகள், 63 மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை சிறுபான்மையினர்தான் நடத்துகின்றனர். மேல்நிலைப் பள்ளி என்றால் 10-வது வரை அரசு அனுமதி கொடுத்து ஊதியமும் வழங்குகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாதி பள்ளிகளை சிறுபான்மையினர்தான் நடத்துகின்றார்கள். நீங்கள் 100 பள்ளிக்கூடங்களை ஆரம்பித்தால் 40 பள்ளிக்கூடங்களுக்காவது அவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும் இல்லையா? எங்கள் பகுதியை எடுத்துக் கொண்டால் பெரும்பாலும்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை சமூகத்தின் பெயரால் பள்ளிக்கூடங்களில் அவர்கள் ஏற்படுத்திய வளர்ச்சிகளுக்கு 1991-ஆம் ஆண்டு வரையில் அவர்களுக்குரிய இடங்கள் வழங்கப்பட்டு விட்டன. சிறுபான்மையினர் அல்லாத மற்றப் பள்ளிக்கூடங்களில்தான் 1991 வரையில் இன்னும்கூட இடங்கள் வழங்குவது பாக்கியில் இருக்கிறது. 1991-ஆம் ஆண்டுக்குப் பின்னர் 1992-லிருந்து எந்த உதவி பெறுகின்ற பள்ளிக்கூடங்களுக்கும் புதிய வளர்ச்சிக்காக ஆசிரியர்கள் வழங்குவதில்லை. அவரவர்கள் பொறுப்பிலேதான் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்கான பணிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டு 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து அந்த முறையிலே நடைபெற்று வருகிறது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்விக் கண்ணைத் திறந்தவர் பெருந்தலைவர் காமராஜர். மதிய உணவுத் திட்டத்தை முறைப்படுத்தியவரும் பெருந்தலைவர் காமராஜர். ஆகவே, சத்துணவுத் திட்டத்திற்கு பெருந்தலைவர் காமராஜருடைய பெயரையும் இணைத்து, பெருந்தலைவர் காமராஜர், எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று நீங்கள் நிச்சயமாக மாற்றி....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒன்றும் வேறுபாடு இல்லை. அது காமராஜரோடு தொடங்காது. தியாகராயர், காமராஜர், சுந்தரவடிவேல்,

எம்.ஜி.ஆர். என்று இப்படி பெயர் வரிசையாகப் போகும், அவ்வளவு நீளமாக எழுதமுடியாது என்கின்ற காரணத்தால்தான் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகி விட்டது, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். இன்று தமிழகத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, வசதி குறைந்த மாணவர்கள் தரமான உயர் படிப்புகளைப் படிக்க முடியவில்லை. ஆகவே, அரசுக் கலைக் கல்லூரிகளில் B.Sc. Computer, M.C.A., B.B.A., M.B.A., போன்ற வகுப்புகளைத் தொடங்க வேண்டும். மற்ற மாநிலங்களை எடுத்துக் கொண்டோமேயானால் 15 லிருந்து 20 கோடி ரூபாய் ஒரு பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தை எடுத்துக்கொண்டால், வெறும் 50 இலட்ச ரூபாயை நீங்கள் ஒதுக்கி இருக்கிறீர்கள். இதை வைத்துக்கொண்டு இந்த நவீன உலகத்தில் பல்கலைக்கழகத்தில் எப்படி தரமான கல்வியை தாழ்த்தப்பட்ட பின்தங்கியவர்களுக்குக் கொடுக்கமுடியும்? ஆகவே, அரசு இதை மனதில் வைத்து, கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியின் பெரும்பகுதி உயர் கல்விக்கும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் வாய்ப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், நீங்கள் நிறையப் பேசிவிட்டீர்கள், திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலேயே பேசிவிட்டீர்கள், உட்காருங்கள்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையிலே என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முதலிலே இந்தக் கல்வி மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு முன்னால், தமிழ்நாட்டிலே உயர்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற 10-வது





11-வது வகுப்பு மாணவர்களுக்கு கணினி அறிவியலை கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்த தமிழக முதல்வர் மூதறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

*முற்பகல் 10-55*

ஆரம்பக் கல்வியை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்ற தொடக்கக் கல்வி அலுவலகம் மூலமாக கடந்த 2,3 ஆண்டுகளாக கழக அரசு ஏற்பட்ட பின்னர் ஏராளமான ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம். இந்த ஆசிரியர்கள் நியமனத்தின் மூலம், பல்வேறு பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவுக்கு நிவர்த்தி செய்திருக்கிறோம்.

ஆண்டுக்காண்டு நாம் ஆசிரியர்களை நியமித்ததுபோல, தொடக்கக் கல்வி அலுவலகத்திலே, குறிப்பாக, மாவட்டத்திலே இருக்கின்ற ஒன்றிய தொடக்கக் கல்வி அலுவலகங்களிலே உள்ள பணியிடங்களில், போதுமான அலுவலர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால், ஏற்கெனவே பள்ளியில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள், பகுதி நேர வேலையாக, தொடக்கக் கல்வி அலுவலகத்தில்போய் பணியாற்றுகிற காரணத்தினால், பள்ளிக்கு அவர்கள் சரிவர செல்ல முடியாமலும், மாணவர்களுக்குப் பாடம் போதிக்க முடியாத நிலைமையிலும் இருக்கிற காரணத்தினால், ஆசிரியர்களை எந்த அளவுக்கு நியமனம் செய்கின்றோமோ அதில் ஓரளவுக்காவது தொடக்கக் கல்வி அலுவலகங்களில் அலுவலர்களையும் நியமிக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலகங்களிலேயே, தொடக்கக் கல்வி அலுவலகத்தில்தான், அதிகமாக அரசுப் பணம் புழங்குகிறது. கிட்டத்தட்ட மாதத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வரை அரசுப் பணம், தொடக்கக் கல்வி அலுவலகத்திலே புழங்குகிறது. அதற்கென்று தனிக் கண்காணிப்பாளரோ, காசாளரோ அந்தப் பணியில் நியமிக்கப்படவில்லை. அசிரியர்களுக்குப் பணம் வழங்குகிறபோது, ஆசிரியர்களுக்கு என்று தனியாக ஒரு Team Leader-ஐ அனுப்பி, சம்பளம் பட்டுவாடா பெறுகின்ற ஒரு நிலை இருந்தாலும்கூட, தொடக்கக் கல்வி அலுவலகத்திலே ஆசிரியர்களுக்குப் பல்வேறு பணம் அதாவது Provident Fund அல்லது L.I.C. போன்ற பணம் புழங்குவதால், அங்கே போதுமான அலுவலர்கள் இல்லாத காரணத்தினால், ஊழல்களாக அந்தப் பணம் பல்வேறு நிலைகளிலே கையாடல் செய்யப்பட்டுக் கொண்டிருப்பதை, பத்திரிகைகளின் வாயிலாக நாம் அறிகிறோம். ஆகவே, அந்த வேலையைக் கண்காணிப்பதற்காக, தொடக்கக் கல்வி

[திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்] [1999 மார்ச் 31

அலுவலகத்திலே ஒரு கண்காணிப்பாளர் அல்லது ஒரு காசாளரையாவது அந்தப் பணியிடத்திற்கு நியமனம் செய்தால், மேற்கொண்டு அந்த நிதியை முறைகேடாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆசிரியர்கள் L.I.C யிலோ அல்லது P.F. லோ, கடன் பெறுகிறார்கள் என்று சொன்னால், முறையான அதிகாரிகள் இல்லாத காரணத்தினால் சிலயிடங்களில், அந்தப் பணம் Misuse செய்யப்படுகிறது. அதே நேரத்திலே, அதை rolling செய்கிறார்கள். அந்தப் பணத்தை ஒரு மாதம், 2 மாதங்கள் வைத்திருந்து, 'முறையாக எங்களுக்கு ஆணை வரவில்லை; Sanction ஆகவில்லை; இன்னும் ஒரு மாதம் போகட்டும்; இன்னும் இரண்டு மாதங்கள் போகட்டும்' என்று சொல்கிறபோது, ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தொடக்கக் கல்வி அலுவலகத்திலே, போதுமான அலுவலர்களை நியமிக்க வேண்டும்,

மேலும், ஆண்டுதோறும் தொடக்கக் கல்வி அலுவலகத்திலே தணிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, மூன்றாண்டுகளுக்கு ஒருமுறைதான் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, அதில் நடைபெறுகின்ற ஊழலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகவே, அந்த அலுவலகத்தில், ஆண்டுதோறும் தணிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் தையல் பயிற்சி பெற்றவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 13 ஆண்டுகள் காத்திருந்த தையல் பயிற்சி பெற்றவர்களை, இந்த மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களிலே ஆசிரியர்களாக அரசு நியமித்திருந்தாலும்கூட, தர்மபுரி மாவட்டத்தில் மாத்திரம் இன்னும் அந்தப் பணியிடங்கள் காலியாக வைத்திருக்கின்றனர். இன்னும் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள்.

இப்போது தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஒன்றிய அளவிலே மூப்பு—Seniority—அடிப்படையிலே, தலைமை ஆசிரியர் பதவியிலே நியமிக்கப்படுகிறார்கள். சில இடங்களிலே 30 ஆண்டுகள் ஆசிரியர் பணிபுரிந்தவர்கள்கூட, தலைமை ஆசிரியர் பதவிக்கு மூப்பின் அடிப்படையிலே விரைவாக வரமுடிவதில்லை. மாவட்ட அளவிலே seniority என்று வைத்துக்கொண்டால், 1995 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி முடிந்து, 1996-97-இல் அப்பணியிடத்தை வகித்தவர், seniority ஒன்றிய அளவில் கிடைத்தால், அவருக்கு உடனடியாக தலைமையாசிரியர் பதவி



1999 மார்ச் 31] [திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்]

கிடைத்து விடுகிறது. ஆனால் 30 ஆண்டுகளாக இருக்கிற ஒரு இடைநிலை ஆசிரியர், தலைமையாசிரியர் பொறுப்பை வகிப்பதற்கு, 30 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். ஆகவே, ஒன்றிய அளவிலான seniority-யை மாற்றி, மாவட்ட அளவிலான seniority-யாக அமைத்தால், எல்லோருக்கும் பரவலாக அந்த வாய்ப்பு கிடைக்கும். 1995-96 ஆம் ஆண்டிலே, பணி நியமனம் கிடைத்திருக்கின்ற ஆசிரியர்கள் உடனடியாக தலைமையாசிரியராகி, அவருக்கு ரூ. 8 ஆயிரம் அல்லது ரூ. 10 ஆயிரம் சம்பளம் என்ற அடிப்படையில் வருகிறபோது, 30 ஆண்டுகள் அப்பதவியை வகித்த ஓர் ஆசிரியர், 6 ஆயிரம் ரூபாய்தான் பெறுகிறார் என்ற வேதனையான செய்தியைக் கேட்டிருக்கிறோம். ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, 3 மாதங்களுக்கு முன்னாலே, தர்மபுரி மாவட்டத்திலே ஆசிரியர் பணியிடங்களுக்கு நியமனம் செய்யப்பட்டது. அன்றைக்கு அந்த நியமனம் மூப்பு அடிப்படையிலே செய்யப்பட்டிருந்தாலும்கூட, பெண்ணாகரத்திலே S.C./S.T. பிரிவினர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். முறையாக சான்றிதழ்கள் எல்லாம் பெற்றும், ஆணைகள் எல்லாம் வந்த பிறகும், இன்னும் அந்த ஆசிரியர்களுக்கு முறையான நியமன ஆணைகள் வரப்பெறவில்லை. பெண்ணாகரம் பகுதியிலே S.C./S.T. மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் முறையான ஜாதிச் சான்றிதழ்கள் எல்லாம் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், தொடக்கக் கல்வி அலுவலகத்திலிருந்து அவர்களுக்குப் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். பணி நியமனமும் செய்யப்படாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியைப்பற்றி சில கோரிக்கைகளை முன்வைக்க முற்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே,, அரசம்பட்டி-பனந்தூர் பகுதியிலே, தென்பெண்ணை, ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக இருக்கிறது. கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகாலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராலும் எழுப்பப்பட்ட கோரிக்கையாகும். ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலை துறை அமைச்சர் அவர்கள் இதை கவனத்திலே கொண்டு...

[1999 மார்ச் 31

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வி மானியக் கோரிக்கை தொடர்பான பிரச்சினையைத் தவிர மற்ற பிரச்சினைகளை இந்த மானியத்தில் பேசுவது எந்த வகையிலும் அதிகப் பயனைத் தராது. அவர்கள் வேண்டுமானால் சொல்லவேண்டிய எந்தக் கருத்தையும் அந்த அமைச்சருக்கு எழுதி அனுப்பிவிடலாம். எனவே, கல்விபற்றி மட்டும் பேசிவிட்டு, உங்களுக்கு வேண்டிய கருத்துகளைச் சொல்லிவிட்டு மற்றவற்றைத் தெரிவிக்காமல் தங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** பெண்ணாகரம் பகுதியிலே குறிச்சான் என்ற ஒரு இன மககள் வாழுகின்றார்கள். அந்த இன மக்கள் கிட்டத்தட்ட 30,40 ஆண்டு காலமாக வழிவழியாக வாழ்ந்தவர்கள். அந்தக் குறிச்சான் இன மக்கள் தாசில்தார் மூலமாகவும், R.D.O. மூலமாகவும், மாவட்ட வருவாய் அலுவலர் மூலமாகவும், ஜாதிச் சான்றிதழ்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், இரண்டு மாதத்திற்கு முன்னால் பணி நியமனம் செயயபபட்டவர்களுக்கு, அதுபோல ஜாதியே இல்லை என்று சொல்லி D.E.O. அலுவலகத்திலிருந்து மறுத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் ஜாதிச் சான்றிதழை வைத்திருக்கிறார்கள். இதுகுறித்து இயக்குநர் அவர்களுக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். அவரும் இதைப் பார்த்து ஆவன செய்வதாக கூறியிருக்கின்றார். இருந்தாலும், பணி நியமனம் செய்யப்படாமல் பலர் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

கிருஷ்ணகிரியிலே ஆண்களும், பெண்களும் படிக்கக்கூடிய கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு நீண்ட நாள் கோரிக்கை ஒன்று இருக்கிறது. மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னால் பேராசிரியர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்தபோது அந்தக் கல்லூரியில் M.Sc. படிப்பில் விலங்கியல் பாடப் பிரிவை ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று அந்த மாணவர்கள் கேட்டிருக்கின்றார்கள். எனவே, அந்தப் பாடப் பிரிவைத் தொடங்கி வைத்து மாணவர்கள் பயன்பெறுகிற அளவிற்கு அந்தக் கல்லூரியிலே அதனைச் சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாக பெண்கள் கல்லூரியை அங்கே கட்டியிருக்கின்றார்கள். அந்தக் கல்லூரிக்கு போதிய இடவசதி இருந்தாலும் கட்டட வசதியில்லை இந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அந்தக் கல்லூரிக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் பெருமுயற்சிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 மார்ச் 31] [திரு பி.வி.எஸ். வெங்கடேசன்]

இறுதியாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலே எப்படி அந்தக் கல்வியைச் சார்ந்த இயக்குநர்கள் நியமனம் செய்யப்படுகிறார்களோ, அதேபோல கல்லூரிகளுக்கும் அந்தத் துறையைச் சார்ந்தவர்களே இயக்குநர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்பு கொடுத்த பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே கல்வி மானியத்திலே பல்வேறு சிறப்பு அம்சங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, 300 மக்கள் வாழுகின்ற குடியிருப்புப் பகுதிகளுக்கு ஒரு தொடக்கப் பள்ளி தொடங்கப்படும் என்கின்ற அறிவிப்பு வரவேற்கக்கூடியது.

அதுபோல மூன்று தொடக்கப் பள்ளிகளுக்கு இடையில் ஒன்று நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் என்கின்ற செய்தி சொல்லப்பட்டிருப்பதும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

இப்போது மாணவர்களுக்கு கணினி பாட முறை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நமது வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல தமிழ் மொழிக்கு உலக மொழியாக அங்கீகாரம் பெறுவதற்கான மிகப்பெரிய சாதனை Internet மூலம் ஏற்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று.

அதுபோல அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்ற தமிழக அரசை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதிலும் குறிப்பாக இந்தியாவிலேயே கேரளத்திற்கு அடுத்ததாக தமிழகத்திலே கல்வி பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்று. இப்படி பல்வேறு சலுகைகள் வழங்குவதற்குரிய முயற்சிகளாகவும், மாணவர்களின் கல்வியின் தரத்தினுடைய சிறப்பு அம்சங்களை எடுத்துச் சொல்வதற்குரிய வாய்ப்பாகவும், யஷ்பால் கல்விக் குழு அறிக்கையின்படி,

சுய சிந்தனைத் திறனை வளர்ப்பதற்கு ஏதுவாக பள்ளிக் குழந்தைகளின் பாடச் சுமையைக் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மால்கம் ஆதிசேஷய்யா அறிக்கையின்படி மாணவர்கள் கற்கும் திறனுக்கேற்ப, கற்பிக்கும் வழிமுறையை ஆசிரியர்கள் கடைபிடிப்பதற்கான முயற்சிகள், அதன்படி பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 11-05*

வருகிற 2000-2001-வது ஆண்டிலே 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புகளுக்கும் இந்த பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பது வரவேற்பிற்குரிய ஒன்று. இப்படி பல்வேறு புதிய சிந்தனைகளோடு இந்த அறிக்கை வைக்கப்பட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தொடக்கக் கல்வித் திட்டம் என்பது மிக சிறப்பிற்குரிய ஒன்று. அப்படி, தொடக்கக் கல்விப்பள்ளிகளைத் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பல பள்ளிகள் தொடங்கப்பட்டிருந்தாலும், இதிலே பல சட்டப் பிரச்சினைகள் நடைமுறையிலே ஏற்பட்டு, 70 குழந்தைகள் இல்லை என்று சொன்னால், அந்தத் தொடக்கக் கல்விக் கூடங்கள் மூடப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. அப்படி இருக்குமானால், அதைப் பரிசீலித்து, அதைக் கண்டிப்பாக திரும்பவும் தொடங்கச் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். 30 அல்லது 35 குழந்தைகள் மட்டுமே இருக்கிற காரணத்தினால் அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை என்ற காரணத்தினாலே மூடப்படுவதாக ஒரு தகவல் இருக்கிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு தவறான கருத்து பரவிவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். சில பள்ளிக்கூடங்களில் 7 பிள்ளைகள் ஒரு ஆசிரியர். 12 பிள்ளைகள், தவறி 2 ஆசிரியர். 17 பிள்ளைகள் 2 ஆசிரியர் என்று 10, 12 பள்ளிக்கூடங்கள். அந்தப் பள்ளிகளில் ஆசிரியர்கள் கவனக் குறைவு காரணமாகவோ அல்லது அந்த ஊர் மக்கள் வேறு பள்ளிகளிலே தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கிற பழக்கம் காரணமாகவோ எண்ணிக்கை குறைவாக இருக்கிற பள்ளிகளைப் பற்றிய விவரம் எனக்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே கிடைத்தது. அந்தப் பள்ளிக்கூடங்களிலேகூட 5, 6 மாணவர்கள் மட்டும் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களை அடுத்த ஆண்டு நடத்த மாட்டோம் என்று ஊராருக்குத் தெரிவித்துவிடுங்கள். 10, 12





பிள்ளைகள் இருக்குமானால், அந்தப் பள்ளிக்கூடத்தில், அதிக அளவு மாணவர்களைச் சேர்த்து, குறைந்தது 20 மாணவர்களாவது சேரும்படி ஊக்கப்படுத்த முயற்சி செய்யுங்கள். அடுத்த ஆண்டு அப்படிச் சேர்க்காவிட்டால், அடுத்த ஆண்டு ஆசிரியர்களை மாற்றிவிட்டு, பிள்ளைகளை பக்கத்துப் பள்ளிக்கூடங்களிலே சேர்க்க ஏற்பாடு செய்யுங்கள் என்று நான் வாய்மொழியாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறேன். பள்ளிக்கூடங்களை மூடுவது அரசினுடைய நோக்கம் அல்ல. ஆசிரியர் ஒருவருக்குத் தருகிற சம்பளத்தை வைத்து, ஆசிரியர் ஒருவருக்கு 10 பிள்ளைகள் என்ற கணக்கு என்றால், ஒரு மாணவருக்கு 2,600 ரூபாய் ஓர் ஆண்டுக்குச் செலவாகிறது. இலவசக் கல்வியிலே ஒரு பிள்ளை பள்ளிக்கூடம் வந்தான் என்றால், 10 பேருக்கு ஓர் ஆசிரியர் போட்டோம் என்றால் ஒரு மாணவனுக்கு 2,000 ரூபாய் செலவாகிறது. இன்னும்கூட நான் சராசரி கணக்கில் 20 பேரை வைத்துக் கணக்குப் போட்ட போதே, 2,400 ரூபாய் செலவாகிறது. ஆகவே அவ்வளவு செலவிட்டு, ஓர் ஆசிரியரை ஓர் ஊரிலே ஏதோ பூதப் மாப்பிள்ளையை உட்கார வைப்பது போல உட்கார வைக்கிற வேலை சரியல்ல. இந்தப் பணமும் மக்கள் தருகிற வரிப்பணம்தான். அந்த வரிப்பணத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு நாங்கள் தொடர்ந்து முயற்சிப்போம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆசிரியர்கள் விகிதாச்சாரத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல, 1:20 என்ற அடிப்படையிலே ஆசிரியர்கள் நியமனம் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல, சென்ற ஆண்டு தமிழகத்தில் கிட்டத்தட்ட 35 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருப்பது பாராட்டிற்குரிய ஒன்று. இது பெரிய மகத்தான சாதனை. மேலும் இன்னும் அதிகமாக பணியிடங்கள் காலியாகும் என்று சொல்கிற வகையிலே மேலும் 25 ஆயிரம் இடங்கள் வரையிலே நிரப்பட வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறோம். ஆகவே, அந்த இடங்களையும் நிரப்புவதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புற பள்ளிகளைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக எல்லா தரப்பிலிருந்தும் சிறப்புக் கவனம் செலுத்தப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக ஆசிரியர்கள், அதே போல பெற்றோர்கள் அங்கேயிருக்கிற அந்தக் கிராமத்தினுடைய நிர்வாகம், சிற்றூராட்சி நிர்வாகம், அவற்றைச் சிறப்பான முறையிலே கண்காணித்து அந்தத் தொடக்கப் பள்ளி

[திரு. வை. சிவபுண்ணியம்] [1999 மார்ச் 31

சிறப்பாகச் செயல்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதிலேகூட அதிகாரங்கள் பற்றி பிரச்சினைகள் வந்திருக்கின்றன என்றாலும்கூட, என்னுடைய கருத்தாக நான் சொல்வது உள்ளாட்சி மன்றங்கள் அங்கே இருக்கிற அந்த சிற்றூராட்சியிலே, ஊராட்சியிலே இருக்கக்கூடிய அந்தப் பள்ளிக்கூடங்களை கண்காணிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தலாம். அவை எப்படி செயல்படுகின்றன என்பதைப்பற்றி கண்காணிப்பதற்குரிய ஒரு அதிகாரத்தை வழங்கலாம். மற்ற அதிகாரங்கள்கூட கல்வித் துறையிலே எப்போதும்போல செயல்படுவதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. அதிலே குறிப்பாக மழலையர் பள்ளி பற்றி சென்ற பல தடவைகளில் நம்முடைய அமைச்சரவர்கள் சிறப்பாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதிலே நமக்கு மொழி வெறியோ மற்ற பிரச்சினைகளோ கிடையாது. ஆங்கிலத்தை நாம் பாடமாகப் போதிப்பது பற்றி பிரச்சினையும் இல்லை. ஆனால் ஆங்கிலப் பாடத்தோடு சேர்த்து மற்ற மூன்று பாடங்களிலே ஏதாவது இரண்டு பாடங்களைக் கட்டாயமாக தமிழ் மொழியிலே பயிற்றுவிக்கவேண்டுமென்று கூறி இருக்கிறார்கள். அதிலே எங்களுடைய கருத்து என்பது இரண்டு பாடங்கள் மட்டும் என்று இருக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறோம். எல்லா பாடங்களையுமே தாய்மொழியிலே பயிற்றுவிக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. ஏனென்றால் அதிலே பெரிய வித்தியாசங்களோ, பிரச்சினைகளோ வந்துவிடாது. விஞ்ஞானப் பாடமானாலும், கணிதப் பாடமானாலும், தமிழ் மொழியிலே பயிற்றுவிப்பதிலே பிரச்சினை இல்லை. ஆகவே அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் நம்முடைய விஞ்ஞானி அப்துல் கலாம்.....

(முற்பகல் 11-10

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில விளக்கங்களை இடையிடையே சொல்வதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தக் கருத்துகளிலே அதிக மாறுபாடு கிடையாது. தமிழிலேதான் தாய்மொழியிலேதான் குழந்தைகளுக்கு அறிவூட்டவேண்டும், கல்வி வழங்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. குறிப்பாக, 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு எக்காரணத்தை முன்னிட்டும் வேற்று மொழி தேவையில்லை என்பது கொள்கை. ஆனால், 5 வயதிற்கு உட்பட்ட

V2'',31'N99 N99,68·2 221799



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

குழந்தைகளுக்குக் கல்வி வழங்குகின்ற திட்டம் மத்திய அரசிலேயும், மாநில அரசிலேயும் கிடையாது. 5 வயது முதல் 14 வயது வரையிலும்தான் கல்வி வழங்க வேண்டும். அதற்கு முன்னாலே கல்வி வழங்குகின்ற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. கட்டாயக் கல்வித் திட்டம் என்பதேகூட 5 வயது 1 மாதத்திலேதான் தொடங்கும். அதற்கு முன்னாலே கிடையாது. இன்னும் சொல்லப்போனால் குழந்தைகளுக்கு 5 வயதிற்கு முன்னாலே கல்வி வழங்குவது என்பதேகூட உண்மையான கல்வி ஆகாது என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. குழந்தைகள் இயல்பான அறிவு வளர்ச்சி பெறுவதற்கு நாம் வழங்குகிற கல்வி இடையூறாக இருக்குமென்ற கருத்துக்கூட இருக்கிறது. செயற்கை முறை போல அதைக் கருதுகிறார்கள். எது எப்படியிருந்தாலும் அந்தக் குழந்தைகளுக்கான கல்வியை வழங்குவதற்கு அரசு பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. தாங்களாக வழங்க சிலபேர் முன்வந்து, பெற்றோர்கள் தாங்களாக பிள்ளைகளை அந்தப் பள்ளிகளுக்கு அனுப்புகிறபோது, பெற்றோர்கள் விரும்பிச் செய்கிற ஒரு காரியமாகக் கருதப்படுகிறது அது. ஆகவே, அவர்கள் தமிழிலே நடத்த வேண்டுமென்று நாம் சொல்கிறபோது, ஆங்கிலத்தை நீக்கிவிட்டால் பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்பமாட்டார்கள், தாங்கள் நடத்துகிற பள்ளிகளை நடத்த முடியாது என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவேதான் இந்த ஆண்டு இரண்டு பாடங்களையாவது தமிழிலே நடத்தினால்தான் அரசு ஒப்புதல் தரும். அதுகூட recognition அல்ல. இப்போது தருவது approval மட்டும்தான். அடுத்த ஆண்டு 3 பாடங்களையும் தமிழிலே நடத்துகின்றபோது அரசாங்கம் அவர்களுக்கு முழு அளவிற்கு ஒப்புதல் தரும். ஆனால் அப்போதும்கூட, அவர்களுக்கு எந்த நிதி உதவியும் வழங்குவதற்கு அரசால் இயலாது என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மெல்ல மெல்ல—எப்போதும் கருத்து வேறுபாடு இருக்கின்ற இடத்தில் மெல்ல மெல்ல—மாற்றுவதற்கு நாம் முயற்சிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் போட்டிருக்கின்ற சட்டத்தில் ஏதாவது இரண்டு பாடங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். உதாரணமாக, திருநெல்வேலியில் ஒரு மாணவன் படித்துவிட்டு சென்னையிலே வந்து சேரவேண்டுமானால், இங்கே வேறு இரண்டு பாடங்கள் தமிழில் இருந்தால் என்ன செய்வது என்கின்ற குழப்பம் நிலவுகிற காரணத்தால் ஒரே மாதிரி அதாவது Nursery பள்ளியில் இரண்டு பாடங்கள், என்னென்ன பாடங்கள்

தமிழில் இருக்க வேண்டுமென்று முடிவு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாடங்களே தேவையில்லாத படிப்பு அது. பாடங்கள் நடத்துவதேகூட மழலையர் பள்ளிகளிலே முறையல்ல. அது kinder garten போல, விளையாட்டு முறைப் படிப்பிற்குத்தான் ஏற்றது. ஏதோ இங்கேயுள்ள பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு அறிவு ஊட்டுவதாக நம்பி பிள்ளைகளை அனுப்புகிற காரணத்தால் அங்கே சில ஆசிரியர்கள் அவரவர்களுக்குத் தெரிந்த அளவிற்குத் தெரிந்த முறையில் நடத்துகிறார்கள். There is no systematic approach; இன்னதுதான் முறை என்று ஒன்றுமில்லை. ஆகவே, நாம் அதை ஒன்றும் கட்டாயப்படுத்த முடியாது. வரையறை செய்ய முடியாது. ஓரளவு தமிழிலே நடத்த ஊக்கப்படுத்த முடியும். அந்தக் கடமையைத்தான் நாம் செய்கிறோம்.

இரண்டாவது, அவர்கள் பள்ளிக்கூடத்திலே வந்து சேர்கிறபோது என்ன பாடம் படித்திருக்க வேண்டுமென்றெல்லாம் ஒன்றும் இலக்கணம் இல்லை. இரண்டு வருடம் பள்ளிக்கூடம் போன பிள்ளை மூன்றாவது வருடம் படிப்பிற்கு வருகிறார்கள் என்றுதான் கருத வேண்டுமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அந்தந்தப் பள்ளிக்கூடத்திலே இருக்கிற முறைப்படி வேண்டுமானால், approval பெறாத பள்ளிகளில் படித்த குழந்தைகளுக்கு வேண்டுமானால் தேர்வு வைத்து, அவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் இணையம் (Internet) ஏற்படுத்தியபோது Internet-க்குப் பொருத்தமாக நம்முடைய தமிழ் எழுத்துக்களே இருக்கின்றன என்று சொல்வதே பெருமைக்குரிய ஒன்று. அப்படி எல்லாமே தெரிந்துகொள்கிறபோது நாம் இந்தப் பாடமுறையிலேயும் இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்ற கருத்திலேதான் சொன்னேன். அமைச்சரவர்கள் சொல்லியிருக்கின்ற நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளலாம். பின்னாலே செய்வதற்குரிய முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

தமிழ்ச் சான்றோர்கள் இப்போது உண்ணாவிரதம் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேசித் தீர்வு காணுவதற்குரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.





அதேபோல, கல்வித் துறையில் பல்வேறு பிரச்சினைகள்—8 கோரிக்கைகள் — இப்போது 8 அமைப்புகள் சார்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படியிருக்கிற சில பிரச்சினைகளையெல்லாம், அவர்களை அழைத்துப் பேசி தீர்வு காணுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு, இயக்குநர் நியமிக்கப்படுகிறபோது, I.A.S. அதிகாரிகளை நியமிக்கும் முறைகளை மாற்ற வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். காரணம், எல்லாத் துறைகளிலேயும் பதவி வழியாக உயர்வு பெற்று வருகிற பொறுப்பாளர்கள் இருக்கிறபோது கல்லூரிக் கல்வி இயக்ககத்திற்கு மட்டும் ஒரு I.A.S. அதிகாரியை நியமிப்பது என்பது பொருத்தமாக இருக்காது. அதிலே, வருகிற கல்லூரி முதல்வர்களினுடைய பணி மூப்பின் அடிப்படையிலே அந்த மாதிரியான பதவிகளை வழங்க வேண்டும். I.A.S. அதிகாரிகள் செயலாளர்களாக அரசுத் துறைக்குப் பொறுப்பாளர்களாக இருக்கிறபோது, இந்த இயக்குநர் பதவியை இப்படிப்பட்ட முறையிலே கையாள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கைத்தொழில் ஆசிரியர், ஓவிய ஆசிரியர்களினுடைய பணியிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தேர்வு வினாத்தாள் வழங்குவதிலே, சென்னை நகரிலே ஒரு பிரச்சினை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கிராமப்புறங்களிலே தேர்வு வினாத்தாள்கள் எல்லா பள்ளிகளுக்கும் கொண்டு சென்று வழங்கப்படுகிறது. ஆனால், சென்னை நகரிலே, இரண்டு மையங்களைக் குறிப்பிட்டு அங்கே சென்று அந்தத் தேர்வு மையப் பொறுப்பாளர்கள் வாங்கிச் செல்ல வேண்டிய அவசியம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலே பொதுவாக பல்வேறு இடையூறுகள், காலதாமதம் இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமானால். கிராமப்புறங்களிலே வழங்குவதைப் போலவே வாகன ஏற்பாடுகளைச் செய்து அந்த வினாத்தாள்களை வாங்கிச் செல்பவர்களுக்கு கொடுக்கக்கூடிய பயணப்படியைக்கூட அந்த வாகனத்திற்குரிய ஏற்பாடாக மாற்றி, சம்பந்தப்பட்ட அந்தப் பள்ளிகளுக்குக் கொண்டு சென்று கொடுப்பதற்கான முயற்சிகள் செய்யப்பட்டால் காலவிரையம் குறைவதுடன், மேலும் பாதுகாப்பாக அந்த வினாத்தாள்கள் செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கும் என்ற காரணத்தாலே, நம்முடைய

[திரு. வை. சிவபுண்ணியம்] [1999 மார்ச் 31

சென்னை மாநகரிலே, அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தொகுதி விஷயம்பற்றிச் சொல்ல வேண்டும். இடையில் நிறைய குறுக்கீடுகள் ஏற்பட்டன. ஆகவே, தயவு செய்து கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும்.

தனியார் கல்லூரிகளைத் தொடங்குவதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. எங்களுடைய திருவாரூர் மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டம். விவசாயத் தொழிலைச் சார்ந்திருக்கிற மாவட்டம். அங்கே கல்லூரிகள் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. ஆனால் அதற்குரிய கட்டணம் 20 இலட்ச ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அது அதிகமாக இருப்பதாகக் கருதுகிறார்கள். சாதாரண விவசாய மாவட்டமான பகுதிகளிலே கல்லூரி தொடங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்கிறபோது அந்தக் கட்டணத் தொகையைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நமது அரசு சார்பிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தப் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டுவிட்டது. அதற்காக மகிழ்ச்சியையும் நன்றியையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மன்னார்குடி தொகுதியிலே இருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குரிய கட்டடத்தைப்பற்றி நான் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். புதிய இடத்திலே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே 12 வகுப்பறைகள் உள்ள கட்டடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு அதே நிலையில் இருக்கிறது. வாடகைக் கட்டடத்திலே செயல்படுகிற காரணத்தினாலே, இந்த ஆண்டு நிதிநிலையிலே அதற்குத் திட்டமிட்டு அந்த நிதியை ஒதுக்கித் தர வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மகாதேவப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பள்ளி மிகச் சிறப்பாகச் செயல்படுகிற முற்றிலும் கிராமப் பகுதியைச் சேர்ந்த பள்ளியாகும். ஆகவே, இந்த ஆண்டுத் திட்டத்திலே அதை இணைத்து மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1999 மார்ச் 31] [திரு. வை. சிவபுண்ணியம்]

அதேபோல நடுநிலைப்பள்ளிகள் தொடங்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொடக்கப் பள்ளிகள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையும் வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை, ஓசூர் வட்டாரப் பகுதிகளில் தெலுங்கு தொடக்கப் பள்ளிகளில் 175 காலியிடங்கள் இருப்பதாகவும், நடுநிலைப்பள்ளிகளிலே 12 காலியிடங்கள் இருப்பதாகவும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் இராஜரெட்டி அவர்கள் கூறுகிறார்கள். அவற்றையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு கோரிக்கைகளை, பிரச்சினைகளை அவையின் முன் வைத்து இந்தச் சட்டமன்றத்திலே விவாதத்தாலும் கல்வித் துறையின் மூலமாக மிகச் சிறப்பாக பல்வேறு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. கணினியை 1,200 பள்ளிகளுக்கு வழங்குவதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிக்கையிலேயே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதிலே நிதி ஒதுக்குகிறபோது, அந்தப் பட்டியலில் கொடுக்கப்பட்டு இருப்பதிலே, இந்த ஆண்டு 1999-2000 ஆவது ஆண்டுக்கு 100 கணினிகளுக்குரிய தொகை மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி கணினிகள் வழங்கப்படுவது பற்றி இதிலே குறிப்பிடப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கத்தில் எண்ணிப்பார்க்கிறபோது, கணினிப் பொறிகளை வாங்கித்தந்து, அவை மூலமாக அந்தப் பள்ளிக்கூடங்களில் பயிற்சி வழங்க வேண்டுமென்று முதலில் கருதப்பட்டது. பின்னர், விரிவாக, ஏராளமான பள்ளிக் கூடங்களில் இந்தக் கணினிப் பயிற்சி, மாணவர்களிலே யார் விரும்புகிறார்களோ அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமானால் நாமே கணினிப் பொறியை வாங்கித் தந்து பயிற்சி வழங்க முடியாது என்பதால் பெரிய நிறுவனங்கள் ஒப்பந்தம் மூலமாகப் பரவலாக ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக்கொண்டு, பயிற்சி வழங்கலாம் என்ற வகையில் எந்தப் பெரிய நிறுவனங்கள் முன்வந்தாலும் அவர்களிடத்திலே ஒப்பந்த அடிப்படையில் 3 ஆண்டுகளுக்கு, 2 ஆண்டுகளுக்கு என்று கணினிப் பொறியோடு சேர்ந்து பயிற்சி வழங்குவதற்கு இடம் வழங்குவது என்ற முறையில் ஓர் ஒப்பந்தம் செய்யலாம் என்று கருதி அரசு திட்டமிடப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அந்த ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். ஆகவேதான் முதலில் 100 மேல்நிலைப்பள்ளி என்று கருதப்பட்டது. இப்போது 1,200 பள்ளிக்கூடங்களுக்கு முயற்சிக்கப்படுகிறது.

*முற்பகல் 11-20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேலும் பல கோரிக்கைகளை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அவ்வப்போது கொடுத்திருக்கிறேன். அவற்றையும் பரிசீலித்து உதவிட வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். அன்பு வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் பத்மா.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்குரிய கல்வி மானியத்தின்மீது பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஒருசில கருத்துக்களை நான் சார்ந்துள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும், எனது தொகுதி மக்கள் சார்பிலும் எடுத்துக்கூற விழைகின்றேன்.

முதன்முதலாக எனது நன்றியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சரிடம் நன்னிலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எனது தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயைக் கொடுக்கலாம் என்று எனக்கு அறிவுரை கூறினார்கள். அத்துடன் அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாகவே எங்களது பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திய பெருமை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையே சாரும். 10 நாட்களுக்கு முன்புதான் அரசு ஆணை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் இரண்டு இலட்சத்தைக் கொடுக்கலாம் என்று வந்துள்ளது. ஆனால், எங்களது பள்ளியில் மூன்று வகுப்புகளும் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றியை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசு கொடுத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் மொத்தச் செலவுத் தொகை ரூபாய் 4,144 கோடியாகும். ஆனால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 550 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுத்துள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், நகர்ப்புறத்திலுள்ள பள்ளிகளுக்குத்தான் செலவு அதிகமாகச் செய்கின்றார்கள். இந்த முறை கிராமப்புறத்திலுள்ள பள்ளிகளுக்கு அதிகமாகச் செலவு செய்ய வேண்டும் என்று





கேட்டுக்கொள்கிறேன். இப்போது கொடுக்கப்படுகிற பணம் அத்தனையும் சம்பளத்திற்கே போய்விடுகிறது. மீதியுள்ள பணத்தை அந்தப் பள்ளிகளினுடைய maintenance-க்கோ, பள்ளி அபிவிருத்திக்கோ செலவு செய்வதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, பள்ளியை விரிவுபடுத்து வதற்காக அத்தகைய செலவுகளை அதிகமாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே இளைஞர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காக, இனி ஒவ்வோர் ஆண்டும் உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளும், அவை முடிந்த பிறகு மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளும் சிறப்பாக நிகழ்த்துவதற்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே, எனது தொகுதியில்— நன்னிலம் தொகுதியில்-அது திருவாரூர் மாவட்டத்தில் வருகின்றது. அங்குள்ள ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, Board High School-ஆக இருந்து உயர்நிலைப் பள்ளியாகி, மேல்நிலைப் பள்ளியாகி உள்ளது. இது தஞ்சை மாவட்டத்திலேயே மிகவும் பெயர் பெற்ற பள்ளியாகும். இந்தப் பள்ளிக் கூடத்திற்கு 5 ஏக்கர் விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த விளையாட்டு மைதானத்தில், கடந்த ஆண்டு என்னுடைய சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 1 இலட்ச ரூபாய் கொடுத்து, வயலாக இருந்தப் பகுதியை இப்போது விளையாட்டு மைதானமாக ஆக்கியிருக்கிறேன். மீதியுள்ள 4 ஏக்கர் நிலத்திற்கும் அரசு மானியமாக வழங்கி, அந்த விளையாட்டுத் திடலை ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி நான் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகியபோது அந்த விளையாட்டு மைதானத்தைச் சீர் செய்ய 25 இலட்சம் ரூபாயிலேயிருந்து 40 இலட்சம் ரூபாய் வரை ஆகும் என்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இதை special-ஆக ஏதாவது ஒரு திட்டத்தைத் தீட்டி அந்த வகையில் திருவாரூர் மாவட்டத்திற்கு என்று ஏற்படுத்தக்கூடிய விளையாட்டு மைதானத்தை - நன்னிலம் பள்ளிக் கூடத்திற்குக் கொண்டு வரும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கர்மவீரர் காமராஜர் அவர்கள் காலத்திலே 1:30 என்ற விகிதாச்சாரத்தில் பள்ளிக் கூடங்களிலே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், தற்போது எனது தொகுதியில் உள்ள பள்ளிகளிலே 100-க்கு மேலாக பிள்ளைகள் படிக்கின்றார்கள். எனவே, தகுதி படைத்த ஆசிரியர்களையும், ஒரு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் என்ற முறையில் போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

தனியார் பள்ளிகளுக்கும், அதாவது Aided schools, என்று சொல்கின்ற பள்ளிகளுக்கும் அரசு ஆசிரியர்களைப் பணியில் நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் ஓர் ஊரில் அரசு பள்ளிக்கூடம் ஒன்று இருந்தால், தனியார் பள்ளிக்கூடங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றுக்கும் அரசு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி வருவது வரவேற்கத்தக்கது. இருந்தாலும், கிராமப்புற பள்ளிகளுக்கு, குறிப்பாக, நன்னிலத்தைச் சுற்றியிருக்கின்ற மூன்று பள்ளிக் கூடங்களுக்கு கண்டிப்பாகக் கணினியை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கும் திறமையான பள்ளியாசிரியர்களை நியமிக்க வேண்டும். சென்ற முறை நான் பேசும்பொழுது கேட்டுக் கொண்டேன். Special-ஆக Maths, Physics, Chemistry - 3 வகுப்புகளுக்கும் தனியாக ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு remuneration-ஆக evening அதாவது பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை Additional Classes பள்ளிக்கூடத்திலேயெல்லாம் நடத்துகிறார்கள். அதேபோன்று, ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளிலேயும் 4-லேயிருந்து 6 வரை பள்ளியில் Special Classes - நடத்தி பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வேண்டிய தொகையைப் பள்ளித் தலைமையாசிரியருக்கோ அல்லது எடுத்து நடத்துகின்ற ஆசிரியருக்கோ கொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.

*முற்பகல் 11-25*

நமது அரசு "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" என்று சொல்கின்ற காரணத்தினால் தமிழாசிரியர்களை, கண்டிப்பாகத் தபால் மூலம் படித்த தமிழாசிரியர்களுக்கு ஒரு வருஷமாவது training கொடுத்து அதற்குப் பிறகு B.Ed. Entrance Examination-க்கு அனுப்பி, அதற்குப் பிறகு பள்ளித் தமிழ் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். எனது தொகுதியில் தமிழாசிரியர்கள், அஞ்சலிலே படித்து வந்தவர்களெல்லாம் புலவர் படித்த - முன்பு புலவர் என்று இருந்தது, இப்பொழுது B.A. என்று இருக்கின்றது—ஆசிரியர்களிடம் சென்று, விளக்கம் கேட்கின்ற நிலையை நான் அறிகின்றேன். எனவே திறமை மிகுந்த தமிழாசிரியர்களைப் போடும்படி நான் கேட்டுக் கொள்கின்றேன்.





எனது தொகுதியைச் சுற்றியுள்ள 2, 3 பள்ளிக்கூடங்களுக்கு P.E.T. ஆசிரியர்கள் கிடையாது. எனவே, P.E.T. ஆசிரியர்களையும் உடனே போட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சரவர்களிடம் நான் நேரில் ஒரு கோரிக்கை மனு கொடுத்திருக்கின்றேன். அதில் History, English எடுத்து, படித்து முடித்த SC/ST பிரிவில் உள்ளவர்கள் வேலை இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்களும் தற்போது போராட்டங்கள் எல்லாம். நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு special-ஆக Science அல்லது Maths அல்லது Physics ஏதாவது ஒன்றில் training கொடுத்து அவர்களையும் அந்தப் பிரிவில் சேர்த்து பதவி கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மோகன் கந்தசாமி அவர்களுடைய வேண்டுகோள் ஒன்று. தமிழ்நாடு வேலை கிடைக்காத இடைநிலை ஆசிரியர்கள் சங்கம், பயிற்சி பெற்று வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்கு ஈரோடு மாவட்டத்தில் வேலையே கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சொல்கிறார்கள். 1998-இல் இடைநிலை ஆசிரியர் பதவி நிரப்புவதில் ஈரோடு மாவட்டத்தில் மோசடி நடந்துள்ளதாகவும் இதனால் அந்த மாவட்டத்தைச் சார்ந்த பல இளைஞர்களுக்கு இந்த ஆண்டு வேலை கிடைக்காத நிலையும், இனியும் தொடர்ந்து வேலை கிடைக்காத நிலையும் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இதற்கு வேண்டிய சான்றுகள் என்னிடம் இருக்கின்றது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள்—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதுபோல சட்டப்படி மோசடி அல்ல; சட்டம் இடம் தருகிற ஒரு முறையின் மூலமாக—அந்தத் தவறு, தவறு கூட அல்ல; சட்டப்படி—அந்த உரிமையை அவர்கள் பெற்று விடுகிறார்கள். வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே ஏற்கெனவே ஆசிரியர் வேலைக்குப் பதிவு செய்திருந்தவர்கள், தங்களுடைய மாவட்டத்தில் தங்களுக்குப் பணி கிடைக்க இன்னும் ஓரிரு ஆண்டுகளாகும் என்ற நிலையில் ஈரோடு மாவட்டத்திற்கு வந்து பதிவு பண்ணிக்கொள்கிறார்கள். அகில இந்தியாவிலே ஒரு மாநிலத்திற்குள், எந்த மாவட்டத்திலேயிருந்து எந்த மாவட்டத்திலே வேண்டுமானாலும் வந்து எப்பொழுது வேண்டுமானாலும் வேலை தேடுகிறவர்கள் பதிவு செய்துகொள்ள சட்டம் அனுமதிக்கிறது. அதேநிலை தருமபுரி மாவட்டத்திலேயும் ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்துகிறவர்கள்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 மார்ச் 31

தெற்கே உள்ள மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், அங்கே எண்ணிக்கை அதிகம் இருக்கிற காரணத்தால் இங்கே வந்து பதிவு செய்து கொள்கிறார்கள். பதிவு செய்துகொள்கிறபொழுது பதிவு செய்த தேதியை வைத்து வேலை கொடுக்கின்ற நிலைமை இல்லாமல், எந்த நாளிலேயிருந்து முதல் பதிவு செய்து கொண்டார்களோ அந்த நாளிலேயிருந்து வேலைக்கு அவர்கள் அழைக்கப்பட வேண்டும் என்ற முறை இருக்கிற காரணத்தால் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்று விடுகிறார்கள். அதை முழு அளவுக்குச் சட்டப்படி தடுக்க வழியில்லை என்பது—மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கலந்தாலோசித்து,—வேறு வழியில்லை என்று விடப்பட்டிருக்கிறது. அதனாலேதான் இந்த ஆண்டு எந்த மாவட்டத்திலே வேலைக்குச் சேர்ந்தாலும் அந்த மாவட்டத்திலே ஐந்தாண்டு காலம் குறைந்தது வேலை பார்க்க வேண்டும், ஏனென்றால் வேறு மாவட்டத்திலேயிருந்து வந்து வேலைக்குச் சேர்ந்து அடுத்த ஆண்டே அங்கேயிருந்து சொந்த மாவட்டத்திற்குப் போகாமல் தடுப்பதற்காக இந்த விதி போடப்பட்டு, அந்த முறையிலே வேலையிலே சேர்க்கப்படுகிறார்கள்.

*முற்பகல் 11-30*

**திரு. ப. மோகன் சுந்தசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன விதிமுறைகள் அருமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைதான். ஆனால் ஈரோடு மாவட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், போலிச் சான்றிதழ்கள் அங்கே நிறைய கொடுக்கப்பட்டு அதனால் வேலைவாய்ப்பு பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த போலிச் சான்றிதழ்களையாவது தடுத்து நிறுத்துவ்தற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான் நான் சொல்கிற கோரிக்கை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, அப்படி எந்தவொரு குறைபாடு இருக்குமானாலும் விசாரித்து நடவடிக்கை எடுத்து அந்த போலிச் சான்றிதழ் வைத்துள்ளவர்கள் உரிய முறையில் தண்டிக்கப்படுவார்கள்.

**டாக்டர் பத்மா:** பள்ளி மாணவர்களுக்கு பத்தாவது வகுப்பு வரை கண்டிப்பாகச் சீருடை கொடுக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். காரணம், இந்த முறை சீருடை கொடுப்பதில் சில முறைகேடுகள் என்னுடைய தொகுதியில் நடந்துள்ளன. எனவே சீருடை கொடுப்பதில் பத்தாவது வகுப்பு வரை கொடுக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.



1999 மார்ச் 31] [டாக்டர் பத்மா]

திருவாரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய கல்லூரிக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் அதிகமாக இட ஒதுக்கீடு தர வேண்டுமென்று சென்றமுறை தங்களிடம் நேரிலே கேட்டிருக்கிறேன். எனவே இந்த முறை எனது கல்லூரியில் இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 6. விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை

### கிராமிய விவசாய மின் இணைப்புகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கும் நேரம் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் ஓர் அறிக்கை வழங்கிட அனுமதி கோரியிருக்கிறார்கள். அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் இப்பேரவையில் மின்சாரத் துறை குறித்து ஓர் அறிக்கையை வழங்கிடுகின்றேன்.

1-4-1999 முதற்கொண்டு கிராமிய, விவசாய மின் இணைப்புகளுக்குப் பகலில் 6 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்குவதற்குப் பதிலாக 4 மணி நேரம் மட்டுமே மும்முனை மின்சாரம் வழங்கப்படும். இரவில் தற்போது உள்ளது போலவே 8 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும். மும்முனை மின்சாரம் வழங்கப்படும் நேரங்கள் பின்வருமாறு:

முதல் பகுதி: காலை 6 மணி முதல் 10 மணி வரை.

இரண்டாம் பகுதி: காலை 10 மணி முதல் மாலை 2 மணி வரை.

மூன்றாம் பகுதி: மாலை 2 மணி முதல் மாலை 6 மணி வரை.

இரவு: 10 மணி முதல் காலை 6 மணி வரை எல்லாப் பகுதிகளுக்கும் மின்சாரம் கிடைக்கும்.

மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் ஒவ்வொரு பகுதிக்கும் மும்முனை மின்சாரம் வழங்கும் நேரத்தினை அம்மண்டலத்தில் பதிவாகும்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 மார்ச் 31

பத்திரிகைகள் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடு, ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு அமலில் இருக்கும். ஜூன் மாதம் பருவமழை தொடங்கியவுடன் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, மும்முனை மின்சாரம் வழக்கம்போல் மீண்டும் வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அளிக்கப்படுகின்ற அறிக்கைக்கு clarification கிடையாது. (குறுக்கீடு) There is no point of order, உட்காருங்கள்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 17 - கல்வி—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைமீது விவாதம் தொடர்கிறது. திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நான்காவது முறையாக, தமிழகத்தினுடைய முதல்வர் பொறுப்பை ஏற்று இருக்கிற தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் 12-வது வரவு-செலவுத் திட்டத்தை இங்கே தாக்கல் செய்து, அந்தத் திட்டம் ஏழை எளிய மக்களுக்காகவும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாமானிய மக்களுக்காகவும் போடப்பட்ட வரவு செலவுத் திட்டம் என்று அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்பட்ட ஒரு நல்ல அற்புதமான வரவு செலவுத் திட்டத்திலே, 18,500 கோடி ரூபாய் ஆண்டு வருமானத்தில் கல்வி மானியத்திற்காக 4,144 கோடி ரூபாயை ஒதுக்கி, பெரும் தொகையைக் கல்விக்காகச் செலவழித்து, மக்களுடைய கல்வியறிவை வளர்ப்பதற்காக இந்த அரசு எடுத்துக்கொண்ட முயற்சியை மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். இந்த மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1999 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

கல்வி, ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், நாட்டு மக்களுடைய முன்னேற்றத்திற்காகவும் எந்த அளவுக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தத் தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும், நற்பண்புகள் வளர்ச்சிக்காகவும், பொருளாதார, சமுதாய வளர்ச்சிக்காகவும் பல நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்திலே உள்ள மக்கள் தொகை சுமார் 6 கோடி. அதிலே 2 கோடி வரை கல்வி அறிவு பெறாதவர்களாக இருக்கின்றார்கள். மேலும் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் குழந்தைகள் பள்ளியில் சேருகின்ற வயதை அடைகிறார்கள். இவர்களுக்கு முறையாகக் கட்டாயக் கல்வி கிடைக்க வேண்டும்; கல்வி அறிவு பெற்றாக வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், 300-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட சிற்றூர்களிலே தொடக்கப் பள்ளிகளை ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள்ளாக இருக்க ஏற்பாடு செய்து, சுமார் 700 சிற்றூர்களில் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான திட்டத்தைத் தீட்டியிருப்பதை இந்த நாடே போற்றுகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-35

அதேபோன்று, 1998-99 ஆம் ஆண்டில் 312 தொடக்கப் பள்ளிகள் புதியதாகத் தொடங்கியதையும், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி இருப்பதையும், 1999-2000 ஆண்டில் அனைத்துச் சிற்றூர்களிலும் தொடக்கக் கல்வியை ஏற்படுத்தவும், 150 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும் அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் மக்கள் பாராட்டுகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, பள்ளிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்காகவும், கட்டாயக் கல்வி கொடுப்பதற்காகவும், விழிப்புணர்வுக் குழு என்ற குழு ஒன்றை உருவாக்கி, அதிலே உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகப் போட்டு, அதன் மூலமாக அனைத்து சிறுவர், சிறுமியர்களைப் பள்ளிகளிலே சேர்ப்பதற்கும், அப்படிச் சேர்கிறவர்கள் இடைவிடாது எட்டாவது வகுப்பு வரை படிக்க வேண்டுமென்று உணர்த்தும் வகையிலும் இந்தக் குழு முழுமையாகச் செயல்படும் என்று அறிவித்திருப்பதை நாட்டு மக்கள் போற்றுகின்றார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ஆர். சிவானந்தம்] [1999 மார்ச் 31

அதேபோன்று, சிறுவர்களுக்குச் சீருடை வழங்குதல்; இலவசப் பாடப் புத்தகம்; இலவச bus pass; 14 வயதுவரை கட்டாயக் கல்வி போன்ற திட்டங்களால் பெரிதும் பயன் கிட்டும் என்று நாட்டு மக்கள் அந்தத் திட்டங்களையெல்லாம் பெரிதும் போற்றுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, பள்ளிக் கல்வி முடிந்து வெளியிலே வருகின்ற நேரத்திலே, சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்றவை பெறுவதற்கு மாணவர்கள் அலையாமல் இருப்பதற்காக, பள்ளிப் படிப்பு முடித்து மாணவர்கள் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெறும் சமயத்திலே இந்தச் சான்றிதழ்களையும் பெறுவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தந்த கலைஞர் அவர்களை நாட்டு மக்கள் பெரிதும் போற்றுகிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர் பயிற்சி, பள்ளிசாராக் கல்வி, வயது வந்தோர் கல்வி, அரசுத் தேர்வுகள், ஆசிரியர் தேர்வு வாரியம், பாடநூல் கழகம், விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், பொது நூலகங்கள் போன்ற அனைத்துப் பிரிவுகளாலும் தரமானக் கல்வி கிடைக்க, அவரவர்களுடைய கடமைகளைச் சிறப்பாகச் செய்து, பேராசிரியர் தலைமையில் இயங்குகின்ற கல்வித் துறைக்கே பெருமை சேர்க்கின்ற ஒரு நிலையை உருவாக்கி இருப்பதை மக்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, வாழ்வொளித் திட்டம் என்ற திட்டத்தை உருவாக்கி அதன் மூலமாக ஏழை மாணவர்களும், சிறுவர்களும் படிக்கும் பள்ளிகளிலேயே அந்தப் பகுதிகளிலே உள்ள மருத்துவப் பணியாளர்களால், மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்ற முறையை உருவாக்கியிருப்பதை கிராமப்புற மக்கள் பெரிதும் வரவேற்றுப் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, வளர்ந்துவரும் விஞ்ஞான உலகில் தமிழ் மக்களுடைய நிலையை உயர்த்துவதற்காக கணினி முறையை 11-வது, 12-வது வகுப்புகளில் கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்து, அதன் மூலமாக ஆண்டொன்றுக்கு 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் 40 மாணவர்கள் வீதம் சுமார் 48,000 மாணவர்கள் கணினி அறிவு பெற்றவர்களாக வருகின்ற நிலையை உருவாக்க உள்ளதை மக்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள். இந்தியாவில்



1999 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

உள்ள வல்லுநர்கள் எல்லாம் போற்றுகின்ற நிலையை உருவாக்கித் தந்தவர் கலைஞர் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, கணினி முறையிலே 'தமிழ்நெட் 99' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டை நடத்தி, அந்த மாநாட்டின் மூலமாக 150 வல்லுநர்கள் நல்ல சிறப்பான கணினி பாடப் பயிற்சியை உருவாக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதையும், உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொடங்கத் திட்டமிட்டிருப்பதையும் நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தொழிற் கல்வியிலே கிராமப்புற மாணவர்களுக்கு 15 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து, அது முறையாக அவர்களுக்குக் கிடைப்பதற்கான உரிய நடவடிக்கை எடுத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி, மக்கள் நலனுக்காக, பல திட்டங்களை நிறைவேற்றி, மக்களுக்காகச் செயல்படுகின்ற, மக்களால் பாராட்டப் படுகின்ற இந்த நல்ல அரசை ஒருசில கொடியவர்கள் கலைக்க வேண்டுமென்று பல சூழ்ச்சிகளைச் செய்து வருகிறார்கள். இந்த அரசைக் கலைத்தால்தான், தான் அடித்த கொள்ளை தொடர்புடைய வழக்குகளிலிருந்தும், தான் செய்த ஊழல் வழக்குகளிலிருந்தும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பதற்காக இன்று யார் யாரிடமோ பேசுவது, பழகுவது, அரசியல் சூதாடி போன்று மத்திய அரசிலே ஒருவரோடு கூட்டுச் சேர்ந்து இருந்து கொண்டு, இன்னொருவரோடு தாவுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு, இந்த அரசைக் கலைக்க வேண்டுமென்று பல சூழ்ச்சிகளைச் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பேர்பட்டவர் களுடைய அரசியல் சூதாட்டத்தால் அவர்கள் செய்திருக்கின்ற கொள்ளையும் ஊழலும் மறைந்துவிடாது; மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்; நிச்சயமாக ஊழல் பேர்வழிகளுக்கு கலைஞர் ஆட்சியிலே தண்டனை வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இதுபோன்ற நல்ல திட்டங்களை வழங்குகின்ற கலைஞருடைய ஆட்சியிலேதான் மக்கள் பெரிதும் பயனடைந்து இருக்கிறார்கள்.

எங்களுடைய மாவட்டத்திலே திருவண்ணாமலை, செய்யார் ஆகிய இடங்களிலே இருக்கின்ற கலைக் கல்லூரிகளிலே மேல்படிப்புக்கான பட்டப் படிப்புகள் தொடங்கப்படவில்லை என்பது பெரும் குறையாக இருக்கிறது. எனவே செய்யார், திருவண்ணாமலை கல்லூரிகளில் M.Sc.,

[திரு. ஆர். சிவானந்தம்] [1999 மார்ச் 31

M.A., M.Com., போன்ற பட்ட மேற்படிப்புகள் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

பணி நியமனம், பதிவு மூப்பு அடிப்படையிலே ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிறபோது பதிவு மூப்பு அடிப்படையிலே வயது வரம்பை மீறியவர்கள் சுமார் 400 பேர் வேலைவாய்ப்புக் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு தலைவருடைய அரசு தாயுள்ளம் கொண்டு, அந்த வாய்ப்பை நல்கி, பணியிலே நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பதிவு மூப்பு அடிப்படையிலே பணி நியமனம் செய்யப்படுகிற இந்த ஆசிரியர்கள் எல்லாம் ஆசிரியப்பணி நியமனம் பெற்றவுடன், அவர்களுடைய மாவட்டங்களுக்கு மாறுதல் வாங்கிச் சென்றுவிடுகிற காரணத்தால், ஆங்காங்கே பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே, அதுபோன்ற மாறுதல் உத்தரவை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகாவது தரவேண்டும். பணியிலே சேர்க்கப்படுகிறவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டாயமாக அங்கே பணியாற்ற வேண்டும் என்ற உறுதியை அரசு உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலையில் உள்ள ஜவ்வாது மலையில் ஆசிரியப் பயிற்சிக்கு நியமிக்கப்படுகிறவர்கள் மலையிலே தங்கி ஆசிரியப் பணி செய்வது கிடையாது. எனவே அங்கே பணியிலே சேர்க்கப்படுபவர்களை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணி நியமனம் செய்ய வேண்டுமென்று இந்நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால் கல்வித் துறையாலே தொடங்கப்படுகிற தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக, மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவது போன்றவற்றில் எங்களுக்கு முன்னுரிமை அளித்து அதிகப்படியான வாய்ப்பை எங்கள் மாவட்டத்திற்கு வழங்க வேண்டுமென்று இந்நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே புதிதாக தொடங்கப்பட வேண்டிய தொடக்கப் பள்ளிகள் ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் 4 இடங்கள், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திலே 5 இடங்கள், ஆரணி நகராட்சியிலே ஒரு இடம் என்று இருக்கின்றன; எனவே அவற்றைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



1999 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதில் எங்கள் தொகுதியில் அடங்கிய மேல்நகருக்கு அந்த வாய்ப்பை வழங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர் பணியில் காலியாக உள்ள இடங்கள் ஆரணி ஒன்றியத்தில் 19 இடங்களும், மேற்கு ஆரணி ஒன்றியத்தில் 43 இடங்களும், நகராட்சியிலே 26 இடங்களும் ஆகும்; இவற்றை நிரப்ப வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் 18 பள்ளிகளும், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் 16 பள்ளிகளும், நகராட்சியில் 6 பள்ளிகளும் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன; அவற்றை சீர்செய்து தரும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரணி ஊராட்சி ஒன்றியத்திலே 3 இடங்களிலும், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்திலே 18 இடங்களிலும், நகராட்சியிலே 6 இடங்களிலும் புதிதாக கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன்; அவற்றையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேவூர், உள்ளன்றம், நடுக்குப்பம், முள்ளிப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு நூலகம் அமைத்துத் தரவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஆரணி மாநகரிலே பெரிய விளையாட்டுத் திடல் ஒன்று இருக்கிறது. அதை அரசே ஏற்று விளையாட்டு அரங்கம் கட்டித்தர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி நான் ஒருசில கருத்துகளைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்று பல ஆண்டுகளுக்கு முன்பு அரசமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இன்னும் அது முழுமையாகப் பூர்த்தி அடையாத நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அதை பூர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு இருக்கிறது. அந்த வகையில் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையிலும் படிக்கக் கூடியவர்கள்

அதிகமாக இருப்பார்கள் என்றாலும்கூட, ஐந்தாம் வகுப்புக்குப் பிறகு மேல் படிப்பைத் தொடர முடியாதவர்களுடைய எண்ணிக்கை 14.52 விழுக்காடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் இது அதிகமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட, ஏழை எளிய மக்களில், இந்த விழுக்காடு 50 சதவீதத்திற்கு மேலாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுபோல ஐந்தாம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றபோது ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்களுடைய விழுக்காடு மிகமிகக் குறைந்து விடுகிறது.

*முற்பகல் 11-45*

பீகாரில், சமீபத்தில் அறிவிக்கப்பட்ட ஒரு செய்தியைப் பார்த்தேன். படிப்பை ஊக்குவிப்பதற்கு, பள்ளி செல்லக்கூடிய பிள்ளைகளுக்கு 1 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏன் தமிழ்நாட்டில் இரண்டு ரூபாய் கொடுத்து அதை முழுமையாக ஊக்குவிக்கக் கூடாது, அதுவும் குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு வரை படிக்க வைப்பதற்கு 5 ரூபாய் கொடுத்தாலும்கூட தகும், அதுவும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு இதுபோன்ற ஒரு திட்டத்தை அறிவிப்பது சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது நான் குறிப்பிட்டேன். தொடர்ச்சியாக கல்லூரி ஆசிரியர்களில் தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் பணியிடங்கள் — ஏறக்குறைய 565-க்கு மேற்பட்ட பணியிடங்கள் நீண்டநாட்களாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்று வலியுறுத்தி வந்தேன். அதனுடைய தொடர்ச்சியாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு 565 பணியிடங்களுக்கு 100 பணியிடங்கள் கொடுப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது. அந்த 100 இடங்கள் கொடுப்பது என்பது போதாது. ஏனென்றால், அப்படியே கணக்குப் போட்டால் 5 வருடங்கள், 6 வருடங்கள், 10 வருடங்கள் அல்லது 15 வருடங்கள் என்று ஆகிவிடலாம். எனவே 565 பணியிடங்கள் கொடுக்கப்பட வேண்டியதற்கு, குறைந்தது 250 பணியிடங்களையாவது உடனடியாக நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்திலே, ஒரு மிக முக்கியமான கருத்தை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த 100 பணியிடங்களை நிரப்புவதற்கு தமிழ்நாடு அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருப்பதை பத்திரிகையில் செய்தியாகப்





பார்க்கிறோம். அதிலே கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பு வரை கல்லூரிப் பேராசிரியர்களுக்கு ஒரு தகுதி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-க்கு முன்பாக M.Phil. படித்திருந்தால் அவர்கள் National Level Eligibility Test or State Level Eligibility Test or U.G.C. போன்ற தேர்வுகளை எழுத வேண்டிய அவசியம் கிடையாது. நேரடியாக அவர்கள் interview-வுக்கு வரலாம் என்று இருந்தது. ஆனால், இப்போது அறிவிக்கப்பட்டதில் அந்தக் கல்லூரி பேராசிரியர்களுக்கு, அவர்கள் படித்த M.Phil. தகுதியற்றதாக ஆக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் National Level Eligibility Test or State Level Eligibility Test போன்ற தேர்வுகள் எழுதி இருக்க வேண்டுமென்று ஒரு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நான் ஏற்கெனவே திரு. கிருஷ்ணசாமி அவர்களிடத்திலே உரையாடுகிறபோது விளக்கமாகச் சொன்னேன். அவர்கள் குறிப்பிடுவதுபோல ஒரு நிலைமை, பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு மாநில அரசுக்குத் தெரிவித்திருந்த அந்த விதிமுறைகளில்—அந்தக் குறை—ஏற்பட்டிருந்தது. அதுகுறித்து மாநில அரசு நடவடிக்கை எடுத்து, டில்லியிலே சென்று U.G.C.-க்கு உரியவர்களைக் கலந்து பேசி அந்தக் குறை இப்போது நீக்கப்பட்டிருக்கிறது. அதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அரசின் பெரும் முயற்சிக்குப் பின்னர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி விரைவுரையாளர் பணிக்கு 31-12-1993-க்கு முன்னர் M.Phil. பட்டம் பெற்றோருக்கும் மற்றும் 31-12-1993-க்கு முன்னர் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பித்தவர்களுக்கும் U.G.C., C.S.I.R., J.R.F., S.L.E.T. தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலே விலக்கு அளிப்பதாக பல்கலைக்கழக மானியக் குழு தெளிவுபடுத்தியுள்ளது என நேற்று அறிந்து, இன்று அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பிப்பதற்கான புதிய தேதியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேர்வு M.Phil. படித்தவர்கள் எழுதத் தேவையில்லை என்ற அடிப்படையில் மற்ற தேர்வுக்கு, விண்ணப்பிப்பதற்கான திருத்திய தேதிகள்; அதாவது விண்ணப்பங்கள் வழங்க கடைசி நாள் 19-4-1999; பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாள் 19-4-1999; திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் 23-5-1999. ஆகவே, இப்போது M.Phil. தேர்ச்சி பெற்றவர்கள் ஏற்கெனவே உள்ள பல்கலைக் கழக விதியின்படி இப்போது அந்தத் தேர்வு எழுதத் தேவையில்லை. மேல் தேர்வு எழுதினால் போதும்.

[பேராசிரியர் க. அன்பழகன்] [1999 மார்ச் 31

இருக்கிறது? நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாமல் செட்டியார், முதலியார், நாயுடுவையா எடுக்கப் போகிறோம்? தாழ்த்தப்பட்டவர்களில் இன்ன வகுப்பிலே படித்தவர்களை, இன்ன திறம் உள்ளவர்களை எடுத்து, அவர்களுக்கு, குழந்தைகளுக்கு பாடம் நடத்துவதற்கான ஒரு Psychological துறையைப் பற்றி ஒரு மாத கால, குறுகிய காலப் பயிற்சி கொடுத்து, அவர்களை நாங்கள் இந்த ஆசிரியர்களாக நியமிக்கிறோம் என்று சொன்னால்—அது தாழ்த்தப்பட்டவர்களுடைய இடம்; அவர்களுக்குக் கிடைப்பதற்காகச் செய்யப்படுவது—அதில் போய் இன்னாருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்பதிலே அர்த்தம் இல்லை. அதாவது ஏறத்தாழ, என் சொந்தக்காரனை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதற்கும், அதற்கும் அதிக வித்தியாசம் இல்லை.

*முற்பகல் 11-55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பற்றாக்குறை இருப்பதால், பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று அவர் கேட்கிறார்; அதைச் சொல்லாமல் சொல்கிறார்; அதுதான் அவர் கோரிக்கை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இல்லை, இல்லை, பற்றாக்குறை இருக்கிற காரணத்தால்தான் நியமிக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடைநிலைப் பயிற்சி வேறு தனியாகக் கொடுக்கிறோம். சிறப்புப் பயிற்சி; அதற்காக நிதி ஒதுக்கி, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட நலத் துறையிலே இருந்து ஓராண்டுக்கு 800 பேருக்கு — வேறு யாரும் அந்த வகுப்பிலே எடுக்கப்பட முடியாமல், அவர்களுக்கு—மட்டும் அந்தப் பயிற்சி கொடுக்கிறோம். அது வேறு. ஆனால் எல்லா B.Ed. படித்தவர்களையும் நாங்கள் Secondary Grade இடத்தில் எடுக்கிறோம் என்று சொன்னால், நாளைக்கு நீதிமன்றத்திலே கேட்கிறபோது, நீங்கள் முறை தவறாக Secondary Grade இடத்தை B.Ed. படித்தவர்களை வைத்து நிரப்புகிறீர்கள் என்று சொல்லக்கூடும். அதற்காக, நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், கல்வித் துறையினுடைய தேவைக்கும் பயன்படுகிறது; நீதிமன்றத்திற்கும் பதில் சொல்ல முடியும்; அறிவியல், கணிதம், ஆங்கிலம் இந்த மூன்று துறைகளிலே படித்த ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளை இதற்கென ஒரு சிறப்புப் பயிற்சி கொடுத்து நிரப்புகிறோம் என்று சொல்கிறோம். பள்ளிக்கூடத்திற்கு என்ன தேவை என்று பார்க்கிறோம். அந்த அடிப்படையிலே யாருக்கு அந்தச் சமூகத்திலே தகுதி இருக்கிறதோ, அவரை எடுக்கிறோம். அது ஒன்றும் குறையல்ல. இன்னும் சொல்லப்போனால், 5,000 பேர் தாழ்த்தப்பட்ட



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

தோழர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றால், இதிலே 2,000 பேருக்குக் கிடைக்கிறது என்றால், கிடைக்கட்டுமே. அதிலே மிச்சம் இருக்கிற 3,000 பேருக்கு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்பது முறையல்ல. அப்படித்தான் எடுக்க வேண்டுமென்று சொன்னால், கல்வித் துறையிலே selection என்கிற முறையே இருக்காது; எது வேண்டும் என்றே கேட்க முடியாது; யார் யார் வரிசையாக நிற்கிறார்களோ அவர்களைக் கூப்பிட்டு ஆசிரியராக இருங்கள் என்று சொல்கிற நிலைமை வரும்; அது நல்லதல்ல.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவியல் படித்தவர்களுக்கும் கொடுங்கள்; அதேசமயத்தில் கலை படித்தவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதைவிடச் சுருக்கமாகச் சொன்னால், வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுங்கள் என்று சொல்லுங்கள். எங்களால், அது முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்; நேரம் ஆகிவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே, தமிழ்நாடு அரசு பிறப்பித்த உத்தரவை மறுபரிசீலனை செய்து அனைத்து தாழ்த்தப்பட்டவர்களிலே கலை படித்தவர்கள் அல்லது அறிவியல் படித்தவர்கள் என்று பிரிவு செய்து பார்க்காமல், அறிவியல் படித்தவர்களுக்கும், கலை படித்தவர்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரு வாய்ப்புக் கொடுக்கக்கூடிய வகையிலே தமிழ்நாடு அரசு தக்க ஆணை பிறப்பித்து, அந்த 2,000 இடங்களையும் பட்டதாரி ஆசிரியர்களை வைத்து, அதாவது கலை, அறிவியல் படித்தவர்களை வைத்து நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஒரு மிக முக்கியமான கருத்தையும் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சமீபத்திலே பத்திரிகைகளிலே சில செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பல்கலைக் கழகங்களிலே — எப்படி கல்லூரிகளிலே, பள்ளிகளிலே இட ஒதுக்கீடு நிரப்பப்படுவது இல்லையோ, அதேபோல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களிலே—தாழ்த்தப் பட்டவர்களுக்கு உண்டான இட ஒதுக்கீடு, மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டான இட ஒதுக்கீடு முறையாக அமலாக்கப்படுவதில்லை.

[1999 மார்ச் 31

*முற்பகல் 11-50*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய முயற்சிக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 1993 டிசம்பருக்கு முன்பாக M.Phil. படித்தவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களில், மிக மிக பின்தங்கிய மக்களில் பட்டதாரிகள் அதிகமாக இருக்க மாட்டார்கள். எனவே, அவர்களுக்கும் இப்போது வரையிலும், 1999 வரையிலும் M.Phil. படித்தவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்கலாம் என்று ஏன் U.G.C.-க்கு வேண்டுகோள் விடுக்கக் கூடாது? அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெறுவார்களே—என்பதை அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன். மேலும், 525 இடங்களில் 225 இடங்களாவது இந்த இடத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

அதேபோல, 1996-97-ல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு தாழ்த்தப்பட்டவர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறார்கள் என்று கருதி, இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் B.Ed. பட்டதாரிகளை நியமிப்பதற்கு அரசு உத்தரவு பிறப்பித்தது. உத்தரவு பிறப்பித்து B.A., B.Sc., படித்தவர்கள் எல்லோரும் விண்ணப்பித்தார்கள். எல்லோரும் படித்து 10, 12 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருக்கிறோம். எனவே, தங்களுக்கு வாழ்வு கிடைத்தது என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், கல்வித் துறையிலேயிருந்து மீண்டும் ஒரு உத்தரவு வந்தது. அது என்னவென்றால், இடைநிலை ஆசிரியர்களுக்கு B.Ed. பட்டதாரிகளிலே அறிவியல் படித்த பட்டதாரிகளைத்தான் நியமிக்க வேண்டுமென்ற உத்தரவு வந்ததன் காரணமாக 2 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிப்பதற்குப் பதிலாக இப்போது 500 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில விளக்கங்கள் இல்லாவிட்டால் தவறான கருத்து தொடர்ந்து நிலைத்துவிடும் என்பதற்காகத்தான் நான் இடையிட்டு தெரிவிக்கிறேன். பட்டதாரிகளாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் நியமிக்கக் கூடாது என்பது ஏற்கெனவே நீதிமன்றத்தினுடைய ஆணை. இடைநிலை ஆசிரியர்கள் குழந்தைகளுக்கான மனநிலையை அறிந்து பயிற்றுவிப்பதற்கு அவர்கள் ஏதோ பயிற்சி பெறுவதாகவும், அந்தப் பயிற்சி இல்லாத B.Ed. பட்டதாரிகளை, குழந்தைகளுக்குப் பாடம் நடத்துகிற இடைநிலை



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

ஆசிரியர் பணியிடத்தில் நியமிப்பது நியாயமில்லை என்பது நீதிமன்றத்திலே ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களில், ஆதிதிராவிட சமூகத்தைச் சார்ந்தவர்களில் போதுமான அளவுக்குப் பயிற்சி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால், அவர்களுக்குரிய இடம் கிடைக்கச் செய்வதற்காக இடம் அளிக்கிறபோது, நீதிமன்றத்தில் இது தவறு என்று யாரேனும் வழக்குக்குப் போனால் வெறும் பட்டதாரி என்பதற்காக நியமிக்கவில்லை, அறிவியல், கணக்கு, ஆங்கிலம் இவற்றை இடைநிலை ஆசிரியர்களால் 6, 7, 8 வகுப்புகளில் நடத்தக்கூடிய நிலைமையில்லாத காரணத்தால், அதற்கு ஈடு செய்கிறமுறையில், இங்கே அறிவியல் பயிற்சி பெற்றவர்களை, ஆங்கிலத்திலே பயிற்சி பெற்றவர்களை அதேபோல, கணிதத்திலே பயிற்சி பெற்றவர்களை நாங்கள் நியமித்துக்கொள்கிறோம் என்று ஒரு சலுகையாக இந்த முறை கையாளப்படுகிறது.

மற்றொன்று, திரு. கிருஷ்ணசாமி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களில் யாருக்கு வேலை கொடுத்தாலும் அவர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டுமே தவிர, இன்னாருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்பதிலே எனக்கு ஒன்றும் அர்த்தம் தெரியவில்லை. எந்த வேலை தாழ்த்தப்பட்ட மக்களுடைய எண்ணிக்கை விகிதாச்சாரத்தில் அவர்களுக்குக் கிடைக்கவில்லையோ, அதைக் கிடைக்கச் செய்வதற்கும், அதேநேரத்தில், கல்வித் துறைக்குப் பயன்படுவதற்கும், நீதிமன்றத்திற்கு பதில் சொல்வதற்கும் ஏற்ற ஒரு முறையாகத்தான் அது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே ஏதோ விண்ணப்பங்கள் இல்லாத காரணத்தால் இந்த ஆசிரியர்கள் எடுக்கப்படவில்லை என்பதல்ல. விண்ணப்பங்கள் இருக்கின்றன. இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த வேறு சிலர், நாங்கள் வெறும் வரலாறு படித்தவர்கள், பொருளியல் படித்தவர்கள், எங்களுடைய உரிமையை மதிக்காமல், அறிவியல் படித்தவர்களுக்கு மட்டும் வேலை தருகிறார்கள், அது முறையல்ல என்று நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால், நீதிமன்றம் தடை விதித்து, இவர்களுக்கும் வேலையில்லை, அவர்களுக்கும் வேலையில்லை, இப்போது எங்களுக்கும் வேலையில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அதனால்தான் நான் கேட்கிறேன். இப்போது அரசு பிறப்பித்த உத்தரவு காரணமாகத்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அரசு அறிவியல், கலை என்று பிரிக்காமல், ஒட்டுமொத்தமாக 2 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்திருந்தால், அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன திரு. கிருஷ்ணசாமிக்கு கொள்கை

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1999 மார்ச் 31

குறிப்பாக, தனியார் பல்கலைக்கழகங்களில் அதைப்பற்றியே கண்டுகொள்வது இல்லை என்று தெரிகிறது. சமீபத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 71 ஆசிரியர் பணி இடங்களுக்கு விளம்பரம் தந்துள்ளது. ஆனால், இட ஒதுக்கீடு பற்றி அதில் குறிப்பிடவே இல்லை. எனவே, அதைப்பற்றி கல்வித் துறை கவனம் செலுத்தி, அரசுத் துறைகளில் மட்டுமல்லாமல் தனியார் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தனியார் பள்ளிகளிலும் இட ஒதுக்கீடை முறையாக அமலாக்க வேண்டும்.

மேலும், தமிழ்நாடு அரசு சமீபத்திலே, தனியார் கல்லூரிகளிலே சுயநிதிக் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு பற்றி ஓர் ஆணை பிறப்பித்து, அந்த ஆணைக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்து இருக்கிறது. அந்த ஆணையை சட்டமாக்கி சுயநிதிக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு முறையாக அமலாக்கப்படுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். சில பத்திரிகைகளிலே செய்தி வந்து இருக்கிறது. குறிப்பாக சென்னை பல்கலைக்கழகத்திலே துணை வேந்தர் அவர்கள் இராஜினாமா செய்ததைப் பற்றி பல்கலைக்கழகங்களில் குழு மனப்பான்மை, அரசியல் தலையீடு மற்றும் சாதிய போக்கு போன்றவை.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பல்கலைக்கழகம் தன்னாட்சி அமைப்பு; அதைப்பற்றி இங்கே பேசக்கூடாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பல்கலைக்கழகங்களில், குழு மனப்பான்மை, அரசியல் தலையீடு மற்றும் சாதிய போக்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதைப்பற்றித்தான் சொன்னேன்; அது Autonomous Body; அதைப்பற்றி இங்கே பேச முடியாது; உட்காருங்கள். அடுத்து திருமதி ஆன் டி' மான்டி.

*நண்பகல் 12-00*

***TMT. ANNE D' MONTE:** Hon. Deputy Speaker Sir, there are several matters affecting the Anglo-Indian Education which I must take up, and



1999 மார்ச் 31] [Tmt. Anne D' Monte]

which needs urgent attention of the Government. There is a need to increase the fee compensation which is totally unrealistic and stands at Rs. 50 for Standard V to X. The average expenditure incurred to-day on each student is anything between Rs. 300 to Rs. 450 per month. Our schools are going out of pocket to provide education. I appeal to the Government to review the grant to more realistic levels.

There is also need to pay compensation during the months of April and May for Standard V to Standard X to meet salary payments. Also the audit codes need to be revised to a more realistic amount. For instance, electricity is quoted at Rs. 300 per annum as against actually Rs. 42,000/- per annum. In the face of escalating cost, the present audit code bears no comparison.

There is also a need to sanction one post of clerk for the school library for every Anglo-Indian School, and one post of clerk for Higher Secondary Schools. While these matters may appear very minor, they are important enough for the survival of the Anglo-Indian education in the State.

Sir, I find that there is a systematic attempt by some Anglo-Indian School Managements to sabotage Anglo-Indian Schools which were originally founded by Anglo-Indians for the benefit of the Anglo-Indian community. In one old established Anglo-Indian School in Chennai, the management has built other schools on the same campus bringing it under Matriculation banner. Also on the same campus, another newly constructed primary school has been set up with the intention of starting another Matriculation School. I have no hesitation in mentioning the school, i.e. St. Patricks Anglo-Indian High School at Adyar which is bound to lose its identity and result in retrenchment of staff. Also, the establishment of two additional schools on the same campus of the old school has cut the playground space originally meant for the Anglo-Indian School. The same pattern of sabotaging Anglo-Indian Schools are taking place in several places so that in due course Anglo-Indian education will be diminished and result in closure of all Anglo-Indian Schools.

Sir, there are 42 Anglo-Indian Schools in the State. I firmly believe that the identity of these schools have to be maintained and developed at all costs. All additional schools set up in the campus of the Anglo-Indian Schools must not be granted recognition at all. This is a matter I feel very strongly about. The point, I wish to make here is that many of the Anglo-Indian Schools have

[Tmt. Anne D' Monte] [1999 மார்ச் 31

heads and managements who are not in tune or sympathy with the aims and aspirations of the schools. The Headmasters appointed in the Anglo-Indian Schools should strictly meet with the criteria laid down by the Tamil Nadu Government.

I go so far as to insist that Anglo-Indian Schools must employ Anglo-Indian teachers, many of whom are highly qualified and that these teachers are given a chance, given the credit applicable to the qualification and service. There is another serious matter concerning the G.O.394, dated 12-9-1997, according to which trained Graduate and Post Graduate teachers are not to be appointed for the vacancy created during middle of the year from 11-7-1995 onwards. What is the position of such teachers appointed in schools before the date of the G.O.? Due to this confusion, Anglo-Indian trained Graduates and Post Graduate teachers have been relieved from the schools after completing 2 or 3 years of service. Further, these teachers whose number are very few in the Anglo-Indian Schools are not given a chance to handle higher classes.

Another anamoly of the G.O. 394 is that Post Graduate and Graduate teachers will not be appointed even for the vacancies created during middle of the year in Anglo-Indian Schools. There are many teachers affected by this G.O. and have lost their jobs.

Another matter I would like to bring to the notice of the Government is regarding self-financing schools. These schools were earlier developed for the village children in rural areas. These schools have qualified teachers with the same qualifications as of other Government teachers and in other Government schools. But, they do not have the same benefit which the Government schools have. Initially these schools have a set of recognition they said, that they could do without any kind of Government aid. But, now the funds are developed and these schools are in dire straits.

*பிற்பகல் 12-05*

The teachers in these schools are very well qualified and have no service or pension benefits. There are about 140 schools in the rural areas and it would cost the exchequer 8 crores a year to support these schools. I request the Government to consider the plight of these teachers and order aid to these schools.



1999 மார்ச் 31] [Tmt. Anne D' Monte]

One more point. I commend the Government for the encouragement now being provided for the development of sports and games. The position of sports and games in this country cannot get any worse. Even the best of natural talent needs a helping hand. It needs guidance and support from the lowest level, which is lacking. We are lacking in amenities like play fields and lacking in development from grass root level. If England has thousands of Cricket, Hockey and Football Clubs, it also has thousands of play fields and it has an association for play fields. Last year, I made a suggestion and requested the Government to take note of this suggestion. Tamil Nadu should show the way to the rest of the country as to how to improve our sports and games. The standard of our sports and games have crash-landed and is in total decline.

Thank you sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய கல்வியை நாம் எப்படி வழங்குகின்றோமோ அதைப் பொறுத்துதான் நாளைய பாரதம், தமிழகம் அமையும். கிராமங்களில் விவசாயிகள் நாற்றங்கால்பற்றி சொல்வார்கள். எந்த அளவுக்கு விவசாயிகள் விதையைப் பக்குவமாக பாவி நல்ல முறையில் நாற்று தயாரித்து, நாற்று நடுகின்றார்களோ அதைப் பொறுத்துதான் மகசூல் அமையும் என்று சொல்வார்கள். அதைப்போல கல்வித் துறையிலே வெறும் பௌதீகம் என்று மட்டும் இல்லாமல், வருங்காலத்தைக் கற்பனையாகக் கொண்டு பொருளாதார ரீதியில் பொருளாதாரம், விவசாயம் போன்றவற்றை கல்வியில் புகுத்த வேண்டும். எளிமையாக வாழ்வது, நேர்மையாக வாழ்வது, செலவைக் குறைத்து சிக்கனமாக வாழ்வது பற்றியெல்லாம் கற்றுக் கொடுப்பதோடல்லாமல் அவற்றினுடைய சிறப்பைப் போதிக்கக்கூடிய வகையிலும் கல்வித் திட்டம் வரவேண்டும்.

சாதாரணமாக எது நல்லபடியான வாழ்க்கை, எது ஒழுக்கமான வாழ்க்கை, எது ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை என்றுகூட தெரியாத ஒரு சூழ்நிலை இன்று உலகத்தில் நிலவிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கக் கல்வியைப் பொறுத்தமட்டில், வெறும் பௌதீகத்தை மட்டும் கற்றுக்கொடுத்தால் எந்த அளவுக்கு நிலைமைகள் உருவாகும் என்பது குறித்து பலவிதமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. *30-3-1999*

[திரு. சி. வேலாயுதன்] [1999 மார்ச் 31

தினமலரில் ஹாம்பாக் என்ற நாட்டில் Internet மூலம் சூதாட்டம் நடக்கின்றது, இதன் மூலம் ஏழை எளிய மக்கள் ஏராளமான பொருட்களை துர்விநியோகம் செய்து கஷ்டப்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் விஞ்ஞானத்தினுடைய முயற்சி பக்குவமான முறையில் அமையாத காரணத்தால் அது பொருளாதாரத் தாழ்வை ஏற்படுத்துகின்றது என்றும் ஒரு செய்தி அந்தப் பத்திரிகையில் வந்திருக்கின்றது.

உலகம் முழுவதும் உள்ள ஒழுக்கக் குறைவின் காரணமாக எய்ட்ஸ் நோயின் வேதனையை உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. 27-3-1999 தினமலரில், மேற்கு வங்காளம், கல்கத்தாவில் எய்ட்ஸ் நோயினால் 26 பேர் இறந்து விட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, திருமணத்திற்கு முன்னால் எய்ட்ஸ் நோய் குறித்த பரிசோதனை செய்துகொள்ள வேண்டிய நிலை அந்த மாகாணத்தில் ஏற்படுமோ என்ற வேதனையையும் இந்தச் செய்தி குறிப்பிட்டிருக்கிறது.

சிங்கப்பூர் அரசு இது குறித்து ஒரு எச்சரிக்கையே வெளியிட்டிருக்கிறது. 'மனம் போன போக்கில் போகாதீர்கள், தன்னுடைய மனைவியைத் தவிர மற்ற எவரையும் திரும்பிப் பார்க்காதீர்கள்' என்று அரசு விளம்பரம் கொடுக்கின்ற அந்தச் செய்தியும் பத்திரிகைகளில் வந்திருக்கின்றது. நான் இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒழுக்கக் குறைவு காரணமாக உலகம் எந்த அளவுக்கு வேதனை அடைகின்றது என்பதை நாம் புரிந்துகொண்டு, நம்முடைய நாட்டில், நம்முடைய மூதாதையர்கள் இவற்றை எந்த அளவுக்குப் புரிந்துகொண்டு வாழ்ந்தார்கள் என்பதை அறிந்து அதன்படி வாழவேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகின்றேன். சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் பேசுகின்றபோது 'மனைவியைத் தவிர மற்ற அனைவரையும் தாயாக பாவிப்பது எங்களுடைய பண்பாடு' என்று பேசியிருக்கிறார்கள். கவிஞர் கண்ணதாசன் அவர்கள்கூட, இதே கருத்தை தன்னுடைய கடைசி காலத்தில் உறுதிப்படுத்தி பல புத்தகங்களை எழுதியிருக்கின்றார்கள். இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், ஒழுக்கம் என்பது எந்த அளவுக்குப் போற்றப்பட வேண்டும், ஒழுக்கம் கெட்டுவிட்டால் எந்த அளவுக்குப் பிரச்சினைகள் வருகின்றன என்பதற்காகத்தான்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் பேசுகின்ற கருத்துகளில் எனக்கு எந்தவித வேறுபாடும் கிடையாது. இன்னும் கொஞ்ச நாட்களில், நானேகூட காவி கட்டிக்கொண்டு உலகத்திற்கெல்லாம் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இருந்தாலும்கூட, அண்மையில் அழகிய விலைமகளிர் விழா டெல்லியில் நடைபெறுவதாக



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

ஒரு செய்தியைப் பத்திரிகையில் பார்த்தேன். எப்போது என்று எனக்குச் சரியாகத் தெரியாது. அது ஒழுக்கத்தை வளர்க்குமா என்று உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே ஒழுக்கக் குறைவு நாடு முழுவதும் மட்டுமல்ல; உலகம் முழுவதும் இருக்கிறது என்றுதான் வேதனைப்பட்டு நான் சொல்கிறேன். எனவே, கல்வித் தரம் மாறவேண்டும் என்பதைத்தான் அழுத்தந்திருத்தமாக நான் சொல்கிறேன். மேலை நாடுகள் எந்த அளவிற்குச் செல்கின்றன என்பதற்குச் சில புள்ளி விவரங்களை மட்டும், பெயர்களைச் சொல்லாமல் சொல்கின்றேன். ஒரு நாட்டு அதிபருடைய காதல் விவகாரம் எந்த அளவிற்குச் சென்றது, இன்னொரு நாட்டு அதிபர் தன்னுடைய வயதான காலத்தில் இன்னொரு நாட்டு அதிபருடைய மனைவியை விவாகம் செய்துகொண்டது, இப்படியெல்லாம் பத்திரிகையிலே....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களாவது விவாகம் செய்து கொண்டார்கள். வேறு சில இடங்களில் அது நடைபெறாமலே, வேறு என்னென்னவோ நடைபெறுகிறது. அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்......(சிரிப்பு)

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதைத்தான் சொல்கிறேன். ஒழுக்கக் குறைவு என்பது எல்லா இடங்களிலும் இருக்கின்றது. அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் இருக்கின்றது. எனவே, கல்வித் திட்டத்தின் மூலமாக ஒரு மாறுதலைக் கொண்டுவர வேண்டுமென்ற ஆசையின் அடிப்படையிலே பேசுகின்றேன்.

அதே போன்று, இன்னொரு செய்தி. 87 வயதான ஒரு பெண்ணை 85 வயதான ஒருவர் வற்புறுத்தித் திருமணம் செய்து கொண்டார்; பத்தாண்டுகள் தாங்கள் மகிழ்ச்சியோடு வாழ்வோம் என்றுகூட ஒரு செய்தி பத்திரிகையிலே photo-வோடு வந்திருக்கிறது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அந்த அளவிற்கு ஒழுக்கக் குறைவுகள்; எப்படி, ஒருவனுக்கு ஒருத்தியாக வாழ்வது, எப்படி பண்போடு வாழ்வது; எப்படி பாராட்டக்கூடிய வாழ்க்கை வாழ்வது என்று சொல்லக்கூடிய அந்த பாங்கு மாறிக்கொண்டு செல்கின்றது. இதை நாம் கவனத்தில்கொண்டு, வருங்காலத்தில் ஒழுக்கம் உள்ள ஒரு நல்ல நாடாக நம் நாட்டை மாற்ற வேண்டும். ஒழுக்கக் குறைவு வந்துவிட்டால், ஊழல் நடைபெற வாய்ப்பு இருக்கிறது, நேர்மை குறைய வாய்ப்பு இருக்கிறது, உண்மை குறைய வாய்ப்பு இருக்கிறது. இவற்றையெல்லாம் புரிந்துகொண்டு, ஒழுக்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order. இதிகாசங்களிலும், புராணங்களிலும் கடவுளுக்கு 20,000, 30,000 மனைவிகள் இருந்ததாகவெல்லாம் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் மக்கள் மத்தியிலே செல்கின்றன. அவையெல்லாம் ஒழுக்கத்தைக் கெடுக்கின்றன. ஆகையினால் அவற்றையெல்லாம் தடை செய்வதற்கு — இராமர், கிருஷ்ணர் ஆகியோரையெல்லாம் அவர் கடவுளாக ஏற்றுக் கொண்டவர்— வலியுறுத்துவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புராணங்கள் இவற்றை வலியுறுத்துவது, ஒழுக்கக் குறைவாக வாழ வேண்டும் என்பதற்காக அல்ல. அதாவது, இராகத்தைச் சொல்கிறார்கள். இத்தனை இராகங்கள் இருக்கின்றன. அத்தனை இராகங்களையும் அன்போடு பாடவேண்டும்; பாட பழக வேண்டும் என்று சொல்லக்கூடிய கருத்துக்களாகத்தான் அவையெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இசையின் அடிப்படையில், அதாவது, ஒரே கருத்தை ஒவ்வொருவரும், ஒவ்வொரு கற்பனையில் பேசக்கூடிய பாங்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் பேசுகின்றார்கள். உண்மையிலேயே பார்க்கப்போனால், இன்று உலக அரங்கில் இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்கள் அனைத்து நாடுகளிலும் தெருக்கூத்துக்களாகக்கூட நடத்தப்படுகின்றன என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. இந்த அளவிற்கு நம்முடைய பண்பாடு உலக அளவில் போற்றப்படுகிறது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமயணத்திலே 60,000 மனைவிமார்களோடு வாழ்ந்தான் தசரதன் என்று சொல்லப்படுகிறது. அது ஒழுக்கத்தை வலியுறுத்துவதாக மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் கருதுகிறார்களா? அதேபோல, ஐவருக்கும் தேவி, அழியாத பத்தினி என்று சொல்லி, திரௌபதியைப்பற்றி மகாபாரதம் வலியுறுத்துகிறது. அந்தக் கருத்தும் ஒழுக்கத்தை மேம்படுத்துகிற கருத்தா என்பதை மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் முதலிலேயே சொன்னேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கற்பனையில் ஒவ்வொரு கதாபாத்திரத்தை, அண்ணன் தம்பி என்று சொல்வதுபோன்று, மனைவி என்று சொல்லியிருக்கக்கூடும். அவரவர்





களுடைய கற்பனையைப் பொறுத்தமட்டில் சொல்லியிருக்கக்கூடும். ஆகவே, அந்தக் கோணத்தில் நாம் பார்த்தோமேயானால்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள், முதலிலே ஒரு விளக்கம் சொன்னார்கள். வெவ்வேறு விதமான இராகங்களைப்போல, இதெல்லாம் வெவ்வேறு விதமான இராகங்கள், வாசித்துப் பழகுவதற்கு என்று சொன்னார்கள். (சிரிப்பு) ஆகவே, பல்வேறு இராகங்கள் பிறப்பது, புராணங்களில், இதிகாசங்களில் வடிவெடுக்கும். ஆகவே, வேலாயுதன் அவர்கள், ஒழுக்கக் குறைவாக அதையெல்லாம் கருதமுடியாது. இராகத்திலே வேறுபாடு என்கிறார்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில்கூட AIDS நோயால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னை அம்பத்தூரில் AIDS நோயால், டேவிட் என்று சொல்லக்கூடிய ஒரு வாலிபர் தீக்குளித்து இறந்ததாக ஒரு செய்தி வந்திருக்கிறது.

அதேபோன்று, eve-teasing பிரச்சினைகள். (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன். எனவே, ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஜனத்தொகை. 27ஆம் தேதி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. ஐக்கிய நாட்டு சபை, நம்முடைய பாரத நாட்டினுடைய ஜனத்தொகை இன்னும் 50 ஆண்டுகளில் 153 கோடியாக மாறும் என்ற ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறது. எனவே, குடும்பக் கட்டுப்பாட்டை எந்த அளவிற்கு நாம் கடைபிடிக்க வேண்டும், நாட்டினுடைய நலன் கருதி சாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு அனைத்து மக்களும் இன்புற்று வாழ குடும்பக் கட்டுப்பாடு எந்த அளவுக்குத் தேவை என்பதை கல்வித் திட்டம் மூலமாக வலியுறுத்த வேண்டும்.

பிற்பகல் 12-15

அதேபோன்று சில கோரிக்கைகளை மட்டும் சொல்லி அமைகின்றேன். Marker 750 பேர் பணி நிரந்தரம் செய்யப்படாமல் கஷ்டப் படுகின்றார்கள். 31-12-1997 அன்று 227 பேருக்கு நிரந்தரம் செயவதாக ஆணை பிறப்பிக்கப்பட்டு அது இன்னும் அமலுக்கு வரவில்லை.

அதேபோன்று 21-12-1985 அன்று அரசாணை எண் 1447-ல் அரசு பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கக்கூடிய எழுத்தர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கக்கூடிய திட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பதாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அமலுக்கு வரவில்லை. அதேபோல,

[திரு. சி. வேலாயுதன்] [1999 மார்ச் 31

பள்ளிக்கூடங்களில் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் 130 ரூபாய்தான் வழங்கப்படுகிறது. இப்போதுள்ள விலைவாசிச் சூழ்நிலையில் எந்த அளவுக்கு அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும் என்பதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்னும் ஒருசில கோரிக்கைகள். அதுபோல, மாவட்டங்களிலுள்ள விளையாட்டு அலுவலர்களுக்கு 12 வருடங்களாக ஊதிய உயர்வு எதுவுமே அறிவிக்கப்படவில்லை. அரசு அதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்கள் 87,000 பேர் இருக்கிறார்கள். அவர்களை இடைநிலைப் பள்ளியில் - எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பேசினார்கள்— வேலை கொடுக்கக்கூடிய வகையில் அரசு சிந்திக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இரண்டு கோரிக்கைகள். என்னுடைய தொகுதியில் இரணியல் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் 100 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ளக் கட்டடம். கேரள மகாராஜா காலத்தில் கட்டப்பட்டது. இரணியல் என்று சொல்லக்கூடிய காரணத்தால் 'இ' என்று சொல்லக்கூடிய அளவில் அந்த அமைப்பில் பள்ளிக்கூடக் கட்டடம் அமைந்திருக்கிறது. அதைப் பழுது பார்ப்பதற்கு 2 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வேண்டும் என்றும், அதேபோல புதியக் கட்டடம் அத்தியாவசியமாக கட்டியாக வேண்டும் என்ற நிலையில் 18 இலட்ச ரூபாய் வேண்டும் என்றும் பொதுப் பணித் துறை (கட்டடம்) மூலமாக அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளது. அதையும் விரைவில் அனுப்பிக் கொடுத்து..... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல உறுப்பினர்கள் இப்படிப்பட்ட வேண்டுகோளை வெட்டுத் தீர்மானத்தின் மூலமாகக்கூட தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நான் இதை விளக்குவது அவசியமாக இருக்கிறது. அரசு ஓர் ஆண்டுக்கு 10 கோடி, 12 கோடி என்று கட்டடங்களுக்காக ஒதுக்கி கடந்த காலத்தில் கட்டத் தொடங்கிய கட்டடங்களே இன்னும் முடிவுபெறவில்லை. அவற்றுக்கே மேலும் நிதி தேவைப்படுகிறது. ஆகவே, புதிய கட்டடங்களுக்கு இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கப்படவில்லை. பழைய பணிகள் இன்னும் ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்படும். ஒரு பள்ளிக்கூடத்திற்கு முழு அளவிற்கு எல்லாக் கட்டடங்களையும் சேர்த்து ஒரே நேரத்தில் கட்டுவதற்கு நிதி ஒதுக்குகின்ற அந்த முறை கடந்த சில ஆண்டுகளாவே மேற்கொள்ளப்படவில்லை. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இரண்டு



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

அறை, மூன்று அறை என்றுதான் பரவலாக வழங்குகின்ற முறை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் மிகவும் அவசரமாகக் கருதுவாரேயானால் அவருடைய தொகுதி நிதியிலிருந்து அதற்கு ஒதுக்கி, அதை நிறைவேற்றுவதற்கு அரசு ஒத்துழைக்கும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஏழைக் குழந்தையினுடைய பிரச்சினையைமட்டும் சொல்லி அமைகின்றேன். பி.கே. அனிதா குமாரி என்று சொல்லக்கூடிய 24 வயதான ஒரு பெண் குழந்தை. ஊமை. கன்னியாகுமரி C.S.I. ஊமைப் பள்ளிக்கூடத்தில் S.S.L.C. முடித்து அகில இந்திய விளையாட்டுப் போட்டியில்.... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 24 வயது குழந்தை என்கிறீர்களே.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரி பெண். அவர் அகில இந்திய விளையாட்டுப் போட்டியில் 49 தங்க மெடல் வாங்கியிருக்கிறார். அதுபோல வெள்ளி 42 வாங்கியிருக்கிறார். வெண்கலம் 48 வாங்கி இருக்கிறார். ஒலிம்பிக்கிற்குகூட தேர்வு பெற்றிருக்கிறார். ஆனால் பண நிலைமை சரியில்லாததால் கவனிக்க ஆளில்லாமல், யாரும் கவனிப்பாரற்று எந்தவிதமான போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு வறுமை. வேறு யாரும் கிடையாது. தாய் மட்டும்தான் உண்டு. அந்த அளவிற்கு வறுமையில் வாடுகிறார். எனவே, விளையாட்டுத் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று இநத அளவிற்குத் தேர்ச்சி பெற்றிருக்கின்ற ஒரு பெண்மணிக்கு வாய்ப்பு கொடுத்து தமிழகத்தினுடைய விளையாட்டுத் துறைக்கு ஒரு செல்வாக்கை ஏற்படுத்தக்கூடிய வகையில் வாய்ப்புக் கொடுத்து, அரசு இதை கவனத்தில் கொண்டு அவருக்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு அமைகின்றேன். வாழிய செந்தமிழ். வாழ்க நற்றமிழர். வாழிய பாரத மணித் திருநாடு. வந்தே மாதரம். வந்தே மாதரம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

பிற்பகல் 12-20

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1999 மார்ச் 31

முதலில் ஆரம்பக் கல்வியினுடைய 8 அமைப்புகள் சேர்ந்து, நம்முடைய மாநில அரசுக்கு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு, 10 அம்ச கோரிக்கைகளைத் தந்திருக்கின்றன. அதிலே இருக்கின்ற அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற வகையிலே, அதை ஆராய்ந்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று முதலில் என்னுடைய கோரிக்கையை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

இரண்டாவது, கல்வியின்கீழ் வரக்கூடிய மழலைப் பள்ளிகள். இவை இப்போது, நம்முடைய தமிழ் கலாசாரத்திற்கேகூட ஒரு கேள்விக் குறியாக வளர்ந்து வருகிற நேரம். அந்த அளவுக்கு அது வளர்ந்து விடுவதும், ஆயிரக்கணக்கான ரூபாய் அவற்றின் மூலம் fees ஆக வாங்கக்கூடியதுமான ஒரு நிலை தொடர்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு சாத்தியம் இல்லை; இருந்தாலும்கூட, அதிலே நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனம் கொஞ்சம் வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, தொடக்கப் பள்ளி என்று வருகிறபோது, தொடக்கப் பள்ளியிலேகூட, 20 மாணவர்களை வைத்துக்கொண்டு, அந்த மாணவர்களைப் படிக்க வைப்பது என்பது முறையான ஒரு கல்வியைத் தருவதற்கும், அந்த 20 மாணவர்களையும் சரிவர படிக்க வைக்க வேண்டுமென்ற உணர்வு அந்த ஆசிரியர்களுக்கும் ஏற்படுமேயானால் தான், நம்முடைய கல்வியினுடைய தரம் வளர்வதற்கும், உயர்வதற்கும், நம்முடைய மாநிலத்தினுடைய ஆயிரக்கணக்கான ஆசிரியப் பெரு மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், நம்முடைய மாணவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும் ஏதுவாக அமையும். அந்த வகையிலே, ஓர் ஆசிரியருக்கு 20 மாணவர்கள் என்ற முறையைக் கையாளுவது உசிதமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, நம்முடைய மாநில அரசு தந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையிலே, விளையாட்டுத் துறையைப்பற்றி கொஞ்சம் கவனம் செலுத்தி, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு கவனம் செலுத்துகிற ஒரு நல்ல பாங்கினைப் பார்க்க முடியும். இதிலே நான் சொல்ல விரும்புவது எல்லாம், நடுநிலைப் பள்ளிகள் என்று சொல்கிறபோது, அவை பெருவாரியாக கிராமங்களிலேதான் இருக்கின்றன. அந்த கிராமங்களைப் பொறுத்தமட்டில், நடுநிலைப் பள்ளிகளிலே போதுமான ஆடுகளம் இல்லை என்பது ஒரு முக்கியமான பிரச்சினை. இரண்டாவது, அதற்குத் தேவையான, பயிற்சி தருவதற்கான பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத ஒரு பற்றாக்குறையும் இருக்கிறது. குறிப்பாக நான் சொல்ல விரும்புவதெல்லாம், சமீபத்திலே நம்முடைய National Games மணிப்பூரிலே நடை பெற்றபோது,



1999 மார்ச் 31] [திரு. டி. மணி]

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த Hockey Team னுடைய ஒரு முக்கியமான மாணவிதான், அதுனுடைய Captain-ஆக செயல்பட்டார்கள். அங்கே பல்வேறு செயல்பாடுகளிலே ஏற்பட்ட விளைவுகளின் காரணமாக, அவர் இரண்டாவது இடத்தைத்தான் பெற முடிந்தது.

இன்னொன்று; குழித்துறையிலே இருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளி; அந்த மேல்நிலைப் பள்ளி மாணவி, State-லே முதலிலே வந்திருக்கிறார் Singles Table Tennis-லே. ஆனால், அந்த ஆசிரியர்கள் All India basis-லே, விளையாடக்கூடிய அளவிலே, Singles-லே போட்டிருந்தால், அவர் All India அளவிலே நமக்கு ஒரு நல்ல பெயரைச் சம்பாதித்து தந்திருப்பார். எனவே, அந்த மாணவிக்கு, எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. வேலாயுதன் அவர்கள் சொன்னதுபோல, பொருளாதாரத் துறையிலே எந்தவித வசதியும் இல்லாத ஒரு குடும்பத்தைச் சார்ந்த அந்த மாணவியை, நம்முடைய பயிற்சிப் பள்ளி இருக்கிறதே, அந்தப் பயிற்சிப் பள்ளியிலே அனுமதிக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டை அரசு செய்திருக்குமேயானால், நம்முடைய மாநிலத்திற்கு நல்ல பெயரைச் சம்பாதித்து தரக்கூடிய அளவில், அந்த மாணவி, Singles-லே, Table Tennis-லே, முதலிடத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை நாம் பெற்றிருக்க முடியும் என்பதைக் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையிலே பணிபுரியும் மாவட்ட விளையாட்டு அலுவலர்களுடைய பிரச்சினை. இது நீண்டகாலமாக இருக்கிற பிரச்சினை. பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 12 ஆண்டுகளாக அவர்களுக்கு increment கொடுக்கப்படாமல், அது தடைபட்டே வந்திருக்கிறது. அதை அரசு உடனடியாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல், தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையில் பணிபுரியும் பயிற்சியாளர்கள், மாவட்ட அளவிலான உதவி இயக்குநர்கள் ஊதிய முரண்பாடுகள். அதிலே இருக்கக்கூடிய ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையில், ஏற்கெனவே 1985-வது ஆண்டு முதல் பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவில்லை. ஐம்பதுக்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் ஓய்வுபெற்றும் இதுநாள் வரையில் புதிய பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால், மாவட்டங்களிலே பயிற்சியாளர்கள் இல்லாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கைப்பந்தாட்டத்திலே Volley ball-லே,

[திரு. டி. மணி] [1999 மார்ச் 31

சிறப்பானவர்கள் என்று நாம் பெயர் பெற்றிருக்கிறோம். குறிப்பாக, Electricity, வங்கி, இதுபோன்ற பல்வேறு துறைகளிலே இப்படிப்பட்டவர்கள் படித்துவிட்டு போனது, இந்தக் கல்லூரிகள் வழியாகத்தான். நம்முடைய பள்ளிகளிலும் படித்து, கல்லூரிகளிலும் சிறப்பான தேர்வைப் பெற்றதற்குப் பின்னர், நம்முடைய மாநிலத்தில் இந்தக் கைப்பந்தாட்டம் என்பது சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது. இன்னும் ஒருபடி சொல்லப்போனால், உலகிலே Singles-லே எடுத்துக் கொண்டால், பூதப்பாண்டியைச் சேர்ந்த நம்முடைய அருமையான ஒரு விளையாட்டு வீரர் இருந்தார். அந்த வீரர், உலகிலேயே ஒரு பெயர் பெற்ற வீரராக இருந்தார். அந்த அளவுக்கு நாம் சிறப்பிலே இருந்திருக்கின்றோம். ஆனால், சமீபகாலமாக இதற்குத் தேவையான பயிற்சி தரப்படாததன் விளைவாக இந்தச் சீர்கேடுகள் வந்துள்ளன.

*பிற்பகல் 12-25*

தேசிய அளவில் மணிப்பூருக்குப் போனவர்கள், ஓரளவு அதிக இடத்தைப் பெற்றிருந்தால், அவர்களை நாம் ஊக்குவிக்கின்ற வகையில் ஏதோ கொஞ்சம் பணம் கொடுப்பதாகச் சொல்லி இருந்தோம். ஆனால், அது, இதுவரையிலே அவர்களின் கைக்கு செல்லவில்லை. எனவே, அதற்கான வழிவகையினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் விளையாட்டு விடுதிகளில் மாணவர்களின் உணவிற்காக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 20 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மத்திய அரசாங்கம் கோதுமையினுடைய விலையை அதிகப்படுத்தியிருக்கிறது. அப்படி அதிகப் படுத்தியதினுடைய விளைவு என்னவென்று சொன்னால் ஐந்து ரூபாயிலிருந்த சப்பாத்தியினுடைய விலை ஒன்பது ரூபாய் வரைக்கும் போயிற்று. அதாவது அதனுடைய அர்த்தம் என்னவென்றால் முதலில் நான்கு ரூபாயிலிருந்த கோதுமையினுடைய விலை ஏழு ரூபாயாகியது. அதனால், சப்பாத்தியினுடைய விலை ஐந்து ரூபாயிலிருந்து ஒன்பது ரூபாய் வரைக்கும் போயிற்று. எனவே, இந்த வகையிலே பார்த்தால் இப்போது கொடுக்கப்படும் இருபது ரூபாய் என்பது போதாது. எனவே, அதனை 50 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக ஒன்று. நம்முடைய மாநிலத்திலே பண்டிகைக் காலங்களிலே, திருவிழாக்களை நடத்துகின்ற மாதிரி மாநில அளவிலான பொங்கல் விளையாட்டு போட்டி., மாவட்டத்தை மையமாகக் கொண்டு மாநிலம் பூராவும் அந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. அதனை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1999 மார்ச் 31] [திரு. டி. மணி]

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓராண்டிற்கு ஒருமுறை விளையாட்டுப் போட்டியை வைத்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அதனை நாம் உருவாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். ஏற்கெனவே, இதற்கு முன்னாலே அப்படி இருமுறையோ அல்லது மூன்று முறையோ நடத்தப்பட்டு வந்திருக்கிறது. எனவே, அந்த வகையிலே அதற்கு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Markerகளுடைய பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கிறது. அவர்கள் நிரந்தப்படுத்தப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்படாமல் உள்ளது. எனவே, அதற்கும் ஒரு நல்ல முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பகுதி நேர மேற்பார்வையாளர்கள் என்று ஒரு சாரார் இருக்கின்றார்கள். அவர்கள் மிகவும் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, அவர்களை முழுநேர ஊழியர்களாக்கி உரிய சம்பளத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தொழில் ஆசிரியர்களை எடுத்துக்கொண்டாலும் அவர்களும் பகுதி நேர ஊழியர்கள்தான். எனவே, அவர்களையும் முழு நேர ஆசிரியர்களாக மாற்றிட உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகளிலே தமிழ் வழிக் கல்வி என்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். இதிலே பெற்றோர் ஆசிரியர் சங்கம், பள்ளி நலன் கருதி பொதுமக்களிடம் வசூல் செய்கின்றார்கள். மாணவர்களின் சேர்க்கையைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான ரூபாய் வசூல் செய்வதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உயர் கல்வியை எடுத்துக் கொண்டால், மாநிலத்திலே 365 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அரசு கலைக் கல்லூரிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அக்குறையைப் போக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் கல்லூரிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, தனியார் மேல்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டாலும் சரி, இவற்றிலே

[திரு. டி. மணி] [1999 மார்ச் 31

ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற முறை என்று வருகின்றபோது சில குறைகள் இருக்கின்றன. மேலும் மாணவர்கள் சேர்க்கை என்று வரும் போது மாணவர்களிடத்தில் பணம் வாங்குகின்ற ஒரு நிலை இருக்கின்றது. அதுபோல ஆசிரியர்கள் நியமனங்கள் விஷயத்திலும் குறைகள் இருக்கின்றன. நான்கூட ஒரு ஆசிரியருக்காக ஒரு தனியார் பள்ளியிலே பரிந்துரை செய்தேன். அவர்கள் நான்கு இலட்சம் ரூபாய் வரை கேட்டார்கள். நான்கு இலட்ச ரூபாயைப் பெற்றுக்கொண்டுதான் அந்தத் தனியார் பள்ளியிலே அந்த ஆசிரியருக்கு வேலையைக் கொடுத்தார்கள். இந்த நிலை நீடிக்கக்கூடாது.

நடுநிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் கல்லூரிகளுக்குப் போனாலும் இதைவிட மோசமான நிலை இருக்கின்றது. குறிப்பாக நம்முடைய அரசுத் துறை ஓரளவு பங்களிக்கின்ற குழித்துறையிலே இருக்கின்ற தேவி குமாரி கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கையின்போதுகூட ஆயிரக்கணக்கான ரூபாயை பெறுகின்ற ஒரு சாபக்கேடான நிலை இருக்கின்றது. எனவே, அவற்றையெல்லாம் போக்குவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு என்பது சரியாகப் பின்பற்றப்படாமல் இருக்கிறது. மேலும் கட்டணம் வசூலிக்கப்படுவதுகூட முறையாக இல்லை. தகுதியான மாணவர்களுக்கு இடம் அளிப்பதில்லை. இவற்றை ஒழுங்குசெய்ய டாக்டர் அனந்தகிருஷ்ணன் குழுவின் பரிந்துரையையொட்டி தமிழக அரசு இரண்டுமுறை பிறப்பித்த உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது. மாநில அரசு மேல்முறையீடு செய்யவில்லை. இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசு மேல்முறையீட்டுக்குச் சென்று அந்த உத்தரவை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பப் பாடப் பிரிவு தொடங்கப்படவேண்டுமானால் அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சிலின் அனுமதியைப் பெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், கன்னியாகுமரியில், போதுமான நில வசதி இல்லாத நிலை இருக்கின்றது. அதே சமயம் தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டும் வருகிறது. இவ்வளவு இடம் இல்லை என்று சொன்னாலும்,



1999 மார்ச் 31] [திரு. டி. மணி]

தனியார் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். எனவேதான், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் தொடங்கிய B.Tech. பாடப் பிரிவிற்கு அனுமதி மறுத்ததால், அப்பாடப் பிரிவில் சேர்க்கப்பட்ட 200-க்கு அதிகமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் நின்றுகொண்டுதான் நம்முடைய பள்ளி, கல்லூரிகளுடைய அனுமதி போன்றவை தனியார் துறைக்குப் போவதை நாம் தவிர்க்க வேண்டும்.

பிற்பகல் 12-30

நம்முடைய பொருளாதாரத் துறையிலே நமக்குப் பின்னடைவு ஏற்பட்ட காரணத்தினால் அல்லது போதுமான பணம் இந்தத் துறைக்கு இல்லாத காரணத்தால், தனியார் துறையைத்தாண்டி செல்வதற்கான பணம் இல்லாத காரணத்தால் நாம் இந்தத் தனியார் துறையை ஊக்குவிக்கின்ற நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம். ஆகவே, அந்த முறையின் காரணமாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. சேர்க்கும்போதும், பணம் கொடுக்க வேண்டியது உள்ளது. ஆசிரியராக வரவேண்டுமானாலும், பணம் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இந்த நிலையை நாம் மாற்றியமைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது கட்டடங்களைப் பொறுத்த மட்டிலே பழைய காலத்து கட்டடங்கள் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டடங்கள். 100 வருடங்களுக்கு முன்னாலே கட்டியவை. அவை இருக்குமா என்று கேட்டால் இருக்காது. அவை கொஞ்சம், கொஞ்சமாக உடைந்துபோய்க் கொண்டிருக்கின்றன. அதற்கு ஒரு பள்ளிக்கூடத்தை உதாரணத்திற்குச் சொல்ல முடியும். மார்த்தாண்டத்திலே இருக்கக்கூடிய மேல்நிலைப்பள்ளி. அதை 'ப' வடிவத்திலே கட்டியிருக்கிறார்கள். அந்த வடிவத்திலே இருக்கிற மேல்நிலைப் பள்ளியை இரண்டு மாடிக் கட்டடங்களாக ஏற்படுத்திவிட்டால் மீண்டும் 100 ஆண்டுகளுக்கு நாம் அதிலே கஷ்டப்பட வேண்டியதில்லை. எனவே, அரசுத் துறையிலே உடைந்து இருக்கின்ற பள்ளிகளுக்கு, கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தரவேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை உண்டு. அந்த வகையிலே காரியங்களைச் செய்ய வேண்டும். அந்த வகையிலே மார்த்தாண்டம் மேல்நிலைப் பள்ளி, கடையாலுமூடு மேல்நிலைப்பள்ளி, ஏழுதேசப்பற்று மேல்நிலைப்பள்ளி, இந்தப் பள்ளிகளுக்குரிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. மணி] [1999 மார்ச் 31

இன்னும் ஒரு கோரிக்கை. சிவலோகத்திலே இருக்கக்கூடிய ஆரம்பப்பள்ளி 1981-82-லே கட்டப்பட்டது. அந்தக் கட்டுமானத்திலே ஏற்பட்ட குறைவின் காரணமாக, இன்று அது உடைந்து கொண்டேயிருக்கிறது. பிள்ளைகளை அங்கே பயில அனுப்புவதற்குக்கூட பெற்றோர்கள் பயப்படுகிறார்கள். அதுபோன்ற பழைய கட்டடங்களைக் இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுபோன்று சிறுபான்மையினர் மொழி. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே இரண்டு தாலுகாக்களிலே மலையாளம் சிறுபான்மையினர் மொழியாக இருக்கிறது. ஒரே ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிதான் இருக்கிறது தேரூரிலே. அதிலே மலையாள மொழி படிக்கின்ற மாணவர்களுக்கு அதிக இடம் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுபோன்ற மலையாள ஆசிரியர்களுடைய பற்றாக்குறை அந்த மாவட்டத்திலே இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே இருக்கிறது, இவற்றைப் போக்குவதற்கும்கூட அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் வை. இராமசாமி.

***டாக்டர் வை. இராமசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு இங்கே நடைபெறுகின்ற கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வி ஒரு தனி மனிதனுடைய மேம்பாட்டிற்கும், அவன் சார்ந்திருக்கிற சமுதாயத்திற்கும், அவன் வாழ்ந்து வருகிற அந்த நாட்டிற்கும், நாட்டினுடைய உயர்விற்கும் மிகவும் அவசியமானதாகும். இந்தக் கல்வியை விரைவாகவும், பரந்த அளவிலேயும் அளிப்பதுதான் நம்முடைய அரசினுடைய குறிக்கோள் என்று இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. கல்வியினுடைய தரம் உயர, உயர மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வதோடு, சுகாதார அளவிலே பார்த்தாலும்கூட, கல்வியறிவு பெற்றவர்கள் முன்னெச்சரிக்கையாக வரக்கூடிய நோய்களைத் தடுக்கின்ற வழிகளைப் பெற்றிருக்கிறார்கள். அந்த வகையிலே, கல்வியறிவு பெற்றவர்கள் இங்கே மிகவும் விவரித்துப் பேசிய 'எய்ட்ஸ்' நோயாக இருந்தாலும், மற்ற பால்வினை நோய்களாக இருந்தாலும், தடுக்கக்கூடிய தொற்று நோய்களாக



1999 மார்ச் 31] [டாக்டர் வை. இராமசாமி]

இருந்தாலும், இவற்றையெல்லாம் தடுக்கக் கூடிய அளவிலே இந்தக் கல்வி அறிவு பயன்படுகிறது.

கல்வித் துறையிலே மழலையர் பள்ளிகள் ஆங்காங்கே புற்றீசல் போல புறப்பட்டு, நம்முடைய தமிழ் மொழி கலாச்சாரத்தையும், தமிழ் மொழி படிப்பையும், பண்பாட்டையும் குலைக்கின்ற அளவிலே இருந்ததை நம்முடைய அரசு, நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, இவற்றை எந்த அளவிற்கு ஒழுங்குபடுத்தலாம் என்று எண்ணிதான், தமிழும், ஆங்கிலமும் மொழிப் பாடங்களாக இருக்கின்றவற்றைத் தவிர்த்து மற்ற கணிதம், அறிவியல், சமூகவியல் ஆகியவற்றில் மூன்றில் இரண்டு பாடங்களாவது தமிழில் கற்பித்துத் தரக்கூடிய மழலையர் பள்ளிகளுக்குப் பதிவுக் கட்டணத்தைப் பாதிக் கட்டணம் ஆகவும், அந்த மாணவர்களுக்கு இலவசப் புத்தகம் வழங்குவதாகவும் கூறி, அதை ஊக்குவிக்கின்றார்கள். அந்த அளவிற்கு ஏற்பளிக்காத பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களை அரசு அங்கீகாரம் செய்த பள்ளிகளிலே சேர்ப்பதற்கு, அவர்களுக்குத் தேர்வு வைத்து அந்த முறையிலே சேர்க்கின்ற முறையையும் பேராசிரியர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள்.

*பிற்பகல் 12-35*

மழலையர் கல்வி முடிந்த பிறகு பள்ளிக் கல்வியை மிகவும் முக்கியமாகக் கருதி, அதிலே மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டத்தையும் இணைத்து பேராசிரியர் அவர்கள் பெருவாரியாக மக்கள் மத்தியிலே இந்தக் கல்வியை விரிவாகப் பரப்புவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு கட்டாய கல்வி அளிப்பதற்கு ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. பேராசிரியர் அவர்கள் அதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த தலைவர்கள், உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், கல்வி அறிவைப் பரப்புவதிலே தொண்டு உள்ளம் கொண்ட நிறுவனங்கள், ஊர்ப் பெரியோர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் எல்லோரும் சேர்ந்து விழிப்புணர்ச்சி உண்டு பண்ணக்கூடிய விழிப்புணர்ச்சி முகாம்களை நடத்தி அதன் மூலமாக பள்ளி வயதை அடைந்த அத்துணை சிறார்களையும் பள்ளிகளிலே சேர்ப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்று இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். அதுவும் ஒரு சிறந்த முறையாகும்.

[டாக்டர் வை. இராமசாமி] [1999 மார்ச் 31

அதனையடுத்து வாழ்வொளித் திட்டம் என்ற வகையில் ஆங்காங்குள்ள பிரதம சுகாதார நிலையத்திலே பணியாற்றுகின்ற மருத்துவரானாலும், அவரோடு சேர்ந்து பணியாற்றுகின்ற மற்ற அலுவலர்களானாலும், வாரத்திற்கு ஒரு முறை குறிப்பாக வியாழக்கிழமையன்று அங்கே அருகிலுள்ள பள்ளிகளுக்குச் சென்று பள்ளிக் குழந்தைகளைச் சோதனையிட்டு அவர்களை அரசாங்க மருத்துவமனைக்கு அழைத்து வர வேண்டு மென்றாலும் அழைத்து வந்து, அவர்களுக்கான சிகிச்சையை அளிக்க வேண்டுமென்றும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறந்த ஒரு பணியாகும். காரணம், சிறிய வயதிலே சில நோய்கள் வருகின்றபோது குழந்தைகளுடைய படிப்பு அப்போது பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், பிற்காலத்தில் அவர்களுக்கு மிகப் பெரிய கொடூரமான நோய்கள் அதாவது, ஊனப்படுத்தக்கூடிய, பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய நோய்கள் எல்லாம் வந்துவிடுகின்றன. அவற்றிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், rheumatic heart disease என்ற ஒரு வியாதி இருக்கிறது. அது இளம் பிள்ளைகளுக்கு வரும்போது, அதை கீல்வாயு என்று சொல்வார்கள். அந்த வியாதியைப் பற்றிச் சொல்கின்றபோது சொல்வார்கள் "rheumatic fever licks the joints but bites the heart" அது முட்டிலே நக்கி விட்டுப் போகிறது, ஆனாலும் இதயத்தைக் கடித்துவிடுகிறது என்ற அளவிலே அந்த rheumatic disease-ஐப் பற்றிச் சொல்வார்கள். இந்த வியாதியை இளம் வயதிலே கண்டுபிடித்து சாதாரணமான பென்சிலின் போன்ற மருந்துகளைக் கொடுத்துக், குணப்படுத்தினால், அவர்களுக்கு பிற்காலத்திலே இருதயநோய் வராமல் இருப்பதற்கு அது வழிவகை செய்யும். ஆகவே இதுபோன்ற வாழ்வொளித் திட்டத்தையும் இங்கே சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

அதுபோன்று பேராசிரியர் அவர்கள் எந்தப் பள்ளி விழாவிலே கலந்துகொண்டாலும் அங்கே பெற்றோர்-ஆசிரியர் கழகத்தைப்பற்றி மிகவும் அவசியமாக வற்புறுத்தி அவை எல்லா பள்ளிகளிலும் இருக்க வேண்டுமென்றெல்லாம் அறிவுரை கூறுவார்கள். அந்த அளவில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் என்பது ஏதோ பள்ளிக்கூட அளவிலே முடிந்து போகின்ற ஒரு இயக்கமாக, ஓர் அறிவுரையாக அமைந்துவிடாமல் கல்லூரிகளிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களை தொடங்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வேண்டும். எதற்காக என்றால் கல்லூரிகளிலே, இப்போதெல்லாம் மாணவர்களுக்கிடையேயும் அல்லது அங்கேயிருக்கின்ற ஆசிரியர்களுக்கிடையேயும் ஏற்படுகின்ற மோதல்களை, சண்டை சச்சரவுகளை எல்லாம் தீர்ப்பதற்கு பெற்றோர்-ஆசிரியர் கழகத்திலே இந்த மாணவர்களுடைய பெற்றோர்கள் உறுப்பினர்களாக இருப்பார்களேயானால், தலைவர்களாக இருப்பார்களேயானால்



1999 மார்ச் 31] [டாக்டர் வை. இராமசாமி]

பொறுப்பிலே இருப்பார்களேயானால், அவர்கள் எல்லாம் உட்கார்ந்து சுமுகமாகப் பேசி முடித்துக் கொள்வதற்கு இவை எல்லாம் ஏதுவாக இருக்குமென்ற காரணத்தினால், கல்லூரிகளிலேயும், பெற்றோர்-ஆசிரியர் கழகங்களைக் கொண்டுவர நாம் முயற்சி எடுக்க வேண்டும்.

அதுபோலவே, நாங்கள் எல்லாம் தொகுதிப் பக்கத்திற்குச் செல்வோமேயானால், ஆங்காங்குள்ள மக்கள் எங்களை அணுகி எங்கள் ஊருக்குத் தொடக்கக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு, தொடக்கப் பள்ளி வேண்டுமென்றும், அதுபோலவே தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் ஆக்க வேண்டுமென்று எங்களிடத்திலே கோரிக்கை வைக்கின்றார்கள். ஆனால் இப்போது அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளின் காரணமாக ஒவ்வொரு குக்கிராமத்திலும், 300 மக்கட் தொகை கொண்ட ஒவ்வொரு குக்கிராமத்திலும், ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள்ளே இருக்கின்ற ஊர்களுக்கு எல்லாம் இப்போது தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது. அதன்படி பார்ப்போமேயானால், இப்பொதெல்லாம் ஆரம்பிக்கின்ற இந்தத் தொடக்கப் பள்ளிகளைப்பற்றி சட்டமன்ற உறுப்பினர்களை யாரும் கலந்து கேட்பதோ பேசுவதோ இப்போது நடைபெறுவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் அறியாமலேயே சில ஊர்களுக்கெல்லாம் பள்ளிகள் கிடைத்து விடுகின்றன. ஆகவே, அங்கே சட்டமன்ற உறுப்பினருடைய முக்கியத்துவம் போய்விடுகிறது. எனவே, இந்தக் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு தொடக்கப் பள்ளியை தொடங்குவது, அல்லது தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக ஆக்குவது போன்ற காரியங்களில் சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து செய்வது நலமாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

பிற்பகல் 12-40

என்னுடைய சொந்த ஊரான நடுக்காட்டுப்பாளையம் என்ற ஊரில், 2, 3 ஆண்டுகளாக ஒரு தொடக்கப்பள்ளி வேண்டுமென்று அரசுத் துறை அலுவலர்களை அணுகிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது இதுவரை முடிந்தபாடில்லை. ஆனால் இப்போது தாராளமாக வழங்கக்கூடிய இந்த நிலையில் அது கிடைத்துவிடும் என்று நான் மிகவும் நம்பிக்கையோடு இருக்கின்றேன்.

அதைப்போலவே, பண்ருட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் அரசு I.T.I. அல்லது Polytechnic அல்லது Arts and Science கல்லூரியோ எதுவுமே

இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. ஆனால், அங்கிருந்து நான் சொன்ன இந்தத் தொழிற் பயிற்சிக் கல்லூரிகளுக்கெல்லாம் செல்ல வேண்டுமென்றால் 30 அல்லது 35 கிலோமீட்டர் தாண்டிச் செல்ல வேண்டியதிருக்கிறது. அதைப்போன்று பெண்களுக்கென்று எந்தவிதமான தொழிற்கல்விப் பள்ளிகளும் அங்கே இல்லை. பெண்களுக்கான அறிவியல் மற்றும் கலைக் கல்லூரிகள் எதுவும் அங்கே ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, பண்ருட்டி தொகுதியில் ஒரு அரசு I.T.I.-யாவது அல்லது ஒரு Polytechnic-ஆவது அல்லது ஒரு கலை அறிவியல் கல்லூரியாவது வருகின்ற நிதியாண்டிலே அமைத்துத் தர வேண்டுமென்று பேராசிரியர் அவர்களை விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான மானியம், கல்வி மானியம். சமுதாயத்தை உருவாக்குகிற ஒரு அடிப்படையான பணியைச் செய்கிற ஒரு துறையைச் குறித்து பேரவை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. 'கேடில் விழுச்செல்வம்' என்று வள்ளுவரே கூறினார். எனவே, இந்தத் துறை கேடில்லாத ஒரு துறையாக, இந்தத் துறை எடுக்கிற முடிவுகள் அனைத்தும் நன்மையளிப்பது இன்றைக்கு வாழுகிறவர்களுக்கு மட்டும் அல்ல; இன்றைக்கு கல்வி கற்பவர்களின் வாயிலாக வருங்காலத்தில் வாழையடி வாழையாக, சமுதாயம் விரும்புகிற நல்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவர்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற பொருளிலேதான் வள்ளுவப் பெருந்தகை 'கேடில் விழுச்செல்வம் கல்வி' என்று குறிப்பிட்டார்கள்.

தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன ஆனால் கல்வித் துறை என்பது, வருங்காலத்திற்குரிய நாகரிகமான, பண்புள்ள, பொறுப்புள்ள பிரஜைகளை உருவாக்குகிற அடிப்படையான ஒரு கடமையைச் செய்யக்கூடிய துறையாகும். கல்வித் துறையிலே ஆழமான அறிவும், அழுத்தமான அனுபவமும் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய தகுதி மிகுந்த, பண்பின் இருப்பிடமாகத் திகழ்கிற இனமானப் பேராசிரியர் அவர்கள் இந்தத் துறையை நிர்வகிப்பது நமக்கு மெத்தவும் மனநிறைவைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, பேராசிரியர் அவர்கள் நிர்வகிக்கிற இந்தத் துறையில் கேடுகள் பயக்கக்கூடியவர்கள் உற்சாகப்படுத்தப்படக் கூடாது. பொறுப்புணர்ந்து செயலாற்றுபவர்கள் இந்தத் துறையிலே இருக்க



வேண்டும் என்று விரும்புவது இயற்கையின்பாற்பட்டது. நம்மைப் போன்றவர்கள் எல்லாம் அதுகுறித்து விருப்பம் கொள்வது தேவையான ஒன்று என்ற வகையில், இந்த விவாதம் மிகவும் பயனுள்ள விவாதம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

*பிற்பகல் 12-45*

கல்வித் துறையிலே, முக்கியமாக, வேண்டியது ஏதோ பள்ளிக்குச் சென்றால்தான், எண்ணையும் எழுத்தையும் கற்றுக்கொள்ள முடியும் என்ற நிலை இருந்தது, ஒரு காலத்தில். ஆனால், அவை திண்ணைப் பள்ளிகளாக இருந்தன. குருகுலமாக இருந்தன. கல்வி கற்றுக்கொள்வது அறத்தின்பாற்பட்டது என்று எண்ணியவர்கள் எங்கிருந்தாலும் கல்வி கற்பதிலே ஆர்வம் காட்டுவார்கள். 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்று நமக்கு அறிவுரை கூறினாள் தமிழ்ப்பாட்டி ஔவை. எனவே, மனிதன் வாழ்வதற்கு உண்ணுவது எவ்வளவு அவசியமோ அதைப்போலவே வாழ்வதற்கான ஓதுதல், பொருட்களைத் தெரிந்து கொள்வது அருளார்ந்த அறிவைப் பெறுவது. தேவை என்ற அடிப்படையில்தான் ஔவைப்பாட்டி உண்ணுவதோடு நின்றுவிடாமல் ஒவ்வொரு நாளும் ஓதுங்கள் என்று நமக்கு அறிவுறுத்தினால். ஓதுவது என்பது எண்ணையும், எழுத்தையும் தெரிந்து கொள்வது. உண்மைதான். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். 'ஓதுவதற்கு' தெரிந்து, கொண்டவர்கள் தான் உண்மையான பார்வை உடையவர்கள், உண்மையான கேள்விஞானம் உடையவர்கள் என்ற பொருளிலே எண்ணையும் எழுத்தையும் இரண்டு கண்கள் என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய முன்னோர்கள். படிப்பது எழுதுவது, இவை தேவை என்று இருந்தாலும், மனிதனுக்குத் தேவையான ஒழுக்கத்தைத் தருகிற ஒரே சாதனமாகக் கல்வி திகழ வேண்டும். அதனால்தான் 'எதற்கும் பிச்சை எடுக்காதே' என்று அறிவுறுத்திய தமிழன் 'பிச்சை எடுத்து வாழ்வதை விட நீ செத்துவிடு' என்று நமக்கு உபதேசித்த தமிழன், 'கல்வி கற்றுக் கொள்வதற்கு மட்டும் நீ பிச்சை எடு' என்று நமக்கு உபதேசித்திருக்கிறான். 'கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்று கூறிய தமிழர்கள், 'கல்லாதொருவன் குல நலம் பேசுதல் நெல்லினுற் புகுந்த பதராகுமே' என்றுகூட அதற்கு விளக்கம் தந்தார். கற்றுக்கொண்டு குலநலம் பேசவேண்டும், நான் தமிழன் என்று மார்தட்டிக் கூறுவோம். தமிழன் எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றினான். அதேநேரத்தில் அதையே உயிராகக் கருதி வாழ்ந்தவன். இதுதான் நம்முடைய வரலாறு. எனவே, அதைப் பெற்றுக் கொள்வதற்குப் பிச்சை

எடுக்க வேண்டியிருந்தாலும் பிச்சை எடுத்து நீ கற்றுக்கொள் என்கிறார்கள். அதற்கு மாறாக கல்லாத ஒருவன், கல்வி கற்றுக்கொள்ளாத ஒருவன் குலநலம் பற்றிப் பேசுவது, தன்னுடைய இனத்தைப் பற்றிப் பேசுவது, தன்னுடைய நாட்டைப் பற்றிப் பேசுவது, அதைப் பேசியே காலத்தைக் கழிப்பது, கல்வியறிவு இல்லாது வாழ்வது, அவன் நெல்லினுற் புகுந்த பதராகக் கருதப்பட வேண்டும் என்றார்கள். பதரும் நெல்லோடுதான் பிறக்கிறது. ஆனால், அந்தப் பதரிலே அரிசிமணி இருக்காது என்ற அளவிற்கு ஒரு காற்று அடித்தால் பறந்து போகிற ஒரு பொருளாகத்தான் கல்வி கற்றுக் கொள்ளாதவன் இருப்பான் என்று நம்முடைய முன்னோர்கள் நமக்கு உணர்த்தினார்கள்.

இன்னும் சொல்லப்போனால் பாரத தேசம் முழுவதும் கல்வி கற்றுக் கொள்வதை வித்தியாதீரம் என்றார்கள். வித்தியாதீரம், என்றால் கல்வி கற்றுக்கொள்வது தர்மத்தின்பாற்பட்டது. இன்னும் சொல்லப்போனால் தர்மத்திற்குரிய பத்து அடித்தளங்களிலே இதுவும் ஒன்று. இது இல்லாமற் போனாலும் தர்மம் குறைந்துவிடும், தொய்வு ஏற்பட்டுவிடும் என்றுகூட நமக்கு உபதேசித்திருக்கின்றார்கள். பள்ளிகளுக்குச் சென்று படிக்காத ஆதிசங்கர பகவத் பாதாள் அப்படித்தான் கூறுகிறார். எனவே, இன்றைக்கும் நாம் கல்விச் சாலைகளை நடத்துகிறோம்; கல்லூரிகளை நடத்துகிறோம். ஆனால், ஒன்று மட்டும் குறை என்பதை, இதை என்னைவிட மிக அதிகமாக வற்புறுத்துகிற, பேராசிரியர் அவர்களுடைய கவனத்திற்கும் இந்த அவையினுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வருகிறேன்.

ஒழுக்கம் இல்லாத கல்வி கடிவாளம் இல்லாத குதிரை. ஒழுக்கம் இல்லாத கல்வி கற்றுக்கொள்பவனை அது இலக்கிற்கு அழைத்துச் செல்லாது, எங்கேயாவது பள்ளத்திலேதான் தள்ளிவிட்டுச் செல்லும். எனவே, இன்றைக்கு நான் பார்க்கிறேன். நான் பல்லாண்டுகளாக மாணவனாக அல்லது கல்வித் துறையிலே இருக்கக்கூடிய ஒரு தொண்டன் என்ற முறையிலே சொல்கிறேன். கல்வித் துறையிலே எனக்கும் கொஞ்சம் தொடர்பு இருக்கிறது. நான் பார்க்கிறேன், நம்முடைய செலவினங்கள் அதிகமாகிக் கொண்டு போகின்றன. நாம் செலவினங்களை அதிகமாகச் செய்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் பணம் இல்லையே என்று நாம் பரிதவித்துக் கொண்டிருக்கிறோம். இப்போது என்ன தெரியுமா? U.G.C. Scale வந்திருக்கிறது; இப்பொழுது சாதாரணமாகக் கல்லூரியிலே பணியாற்றுகிற ஒரு பேராசிரியர் கவலையின்றி இருக்க வேண்டும். இதிலே நமக்கு மாறுபாடான கருத்து இல்லை. வாழ்க்கைத் தேவைக்காக அவர் ஏங்கித் தவிக்கக் கூடாது. அது நிறைவுபடுத்தப்பட வேண்டும்.





*பிற்பகல் 12-50*

இப்பொழுது இந்த U.G.C. Scale வந்த பிறகு ஏறக்குறைய 25 ஆயிரம் ரூபாய் ஒரு பேராசிரியருக்குக் கிடைக்கிறது. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் உயர்ந்திருக்கிறது. சம்பளம் உயர உயர கல்வித் தரம் தாழ்ந்து கொண்டிருக்கிறது; பொறுப்பு தாழ்ந்து கொண்டிருக்கிறது. கல்விச் சாலைகளிலே இருக்க வேண்டிய பொறுப்புணர்வு இல்லாமல் ஆகிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம் இல்லாத கல்விச்சாலைகளை நாம் நடத்துவது சமுதாயத்திற்கு மாபெரும் பிரச்சினைகளை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறது. கல்விச் சாலைகளா அல்லது அவையெல்லாம் வேறு இடங்களா என்றெல்லாம் நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய அளவிற்கு இன்றைக்கு கல்விச் சாலைகளுடைய நிலைமை இருக்கிறது. இப்படி நான் பேசுவதனால் பொறுப்புள்ள ஆசிரியர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் பள்ளியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களாக இருந்தாலும் அல்லது கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்கள் விரும்புவது என்ன? தாம் யாருக்குக் கல்வி போதித்தார்களோ அவர்கள் நாளைக்கு வாழ்க்கையிலே வெற்றிகரமாகத் திகழ வேண்டும் என்பது தான். அதுதான் அவர்களுக்குக் கிடைக்கிற மிகப்பெரிய பயன் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இது ஆசிரியர்களுக்கு நன்றாகத் தெரியும்.

பேராசிரியர் அவர்கள் உணர்வார்கள். எவ்வளவுதான் பணத்தைக் கொட்டிக்கொடுத்தாலும் ஒரு ஆசிரியர் பெறுகிற ஆத்மீகப் பெருமகிழ்ச்சி எதிலேயிருக்கிறது என்றால் தன்னிடம் படித்த மாணவன் Collector-ஆக இருக்கிறான், S.P.யாக இருக்கிறான், மிகப் பெரிய I.A.S. Officer-ஆக இருக்கிறான், 'நான் வாழ்க்கையிலே நன்றாக இருக்கிறேன் Sir என்று அந்தப் பையன் நாளைக்கு நம்மிடத்திலே வந்து சொல்லும்போது நாம் பெறுகிற இன்பத்திற்கு ஈடு இணை இல்லை; பெறுகிற சம்பளம் அதற்கு ஈடு இணை இல்லை. நம்முடைய நோக்கம் எதுவாக இருக்க வேண்டும்? நம்மிடத்திலே படிக்கிற பிள்ளை, தான் மட்டும் நன்றாக வாழாமல், நாட்டையும் நன்றாக வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்து கொண்டிருக்கிறான்; உலகத்திற்கு அவன் செம்மை சேர்த்துக் கொண்டிருக்கிறான் என்று நாம் அறிந்தால் அதனால் நமக்கு உண்மையிலேயே பெருமகிழ்ச்சி ஏற்படும். ஆனால் இன்றைக்கு மிகுந்த வேதனையோடு நான் சொல்கிறேன். படிப்பினுடைய தரம் மிகமிகத் தாழ்ந்துவிட்டது.

ஒரு காலத்திலே கல்லூரிகளிலே நாங்களும் பேராசிரியர்களைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் அதிகமான கவனத்தை எதிலே

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1999 மார்ச் 31

செலுத்துவார்கள் என்றால், எந்தவகையிலே நாம் போதனை செய்தால் பிள்ளைகளுக்கு அதிகமான அறிவு கிடைக்கும், சுலபமாக அவர்கள் புரிந்து கொள்வார்கள், அதிகமான அறிவு பெறுவார்கள் என்று ஆய்வு செய்துகொண்டே இருப்பார்கள். பேராசிரியர்கள் தங்களுடைய அறைகளிலே உட்கார்ந்திருக்கும்போது படித்து விட்டு வருவார்கள். பலவகையிலே பல நூல்களைப் படித்துவிட்டு குறிப்பு எழுதிக்கொண்டு வகுப்பறைகளுக்கு வந்து மாணவர்களுக்குப் புதிய புதிய அறிவுகளைப் புகட்டுவார்கள். முதலிலே அவர்கள் நல்ல மாணவர்களாக இருப்பார்கள்; ஒழுக்கம் உள்ளவர்களாக இருப்பார்கள். அவர்கள் வகுப்பறைக்கு வரும்போதே ஒரு தெய்வாம்சம் பொருந்திய ஒரு சூழ்நிலை உருவாகும். நாம் அவர்கள் வரும்போதே அவர்களைக் கண்டு எழுந்து நின்று, மரியாதையாக நின்று அவர்களிடத்திலே நாம் கல்வி கற்றுக் கொள்வது என்ற நிலை இருந்தது. கல்வி கற்றுக் கொடுப்பவன் சாதாரணமானவன் அல்ல; அவன் உலகத்திற்கு அறிவைத் தருபவன்.

இன்னும் சொல்லப் போனால் சமுதாயத்திலே இருக்கக்கூடியவர்களிலே மிக உயர்ந்த நிலையிலேயிருந்து பாராட்டப்பட வேண்டியது யார் என்றால் கல்வியைக் கற்றுக்கொடுத்த ஆசான். அதனால்தான் நம்முடைய நாட்டிலே பிரம்மம் எது என்று சொன்னால் — அவன் சொன்னான், குருவே பிரம்மம்; குருவையே பிரம்மனாக வணங்கினான். நம்முடைய நாட்டிலே இன்றைக்கு குருக்கள் படுகின்ற பாட்டைப் பார்த்தால் இந்தக் கல்லூரிகளை எதற்காக உருவாக்கினோம், இந்தப் பள்ளிகளை எதற்காக உருவாக்கினோம், நன்றாக இருக்கிற பிள்ளைகள் தனித்தனியாக இருந்திருந்தால் ஒழுக்கமாக இருந்திருப்பார்களே, அவர்கள் கெட்டுப் போவதற்காகப் பணத்தைச் செலவழித்து நாம் கல்லூரிகளையும், பள்ளிகளையும் உருவாக்கியிருக்கிறோமே என்று நினைத்துப் பார்த்தால் இந்தப் பாவத்திலே நமக்கு எவ்வளவு பங்கு என்று எண்ணினால் கலங்கிப் போகிறோம். எனவே, இன்றைக்கு சமுதாயத்தில் நாம் எண்ணிப் பார்ப்பது, அதுவும் குறிப்பாக நான் ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறவில்லை, நானே ஒரு ஆசிரியனாக இருந்தவன்தான். நம்மை ஆள்கிற பேராசிரியரே எங்களுக்கு பேராசிரியராக இருந்தவர்தான். எனவே, ஒரு ஆசிரியர் கொண்டு வந்திருக்கிறார். ஒரு சாதாரண ஆசிரியன் நான் சொல்கிறேன். தயவுசெய்து பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைத் தருவதுதான் கல்வியிலே, கல்வித் துறையிலே நாம் செய்கிற மாபெரும் சேவையென்பதை ஆசிரியப்பெருமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதற்கு என்ன காரணம்? ஆசிரியர்களிடத்திலே இப்போது அரசியல் புகுந்து விட்டது என்று நான் சொல்லவில்லை. என்ன நடந்தது பல்கலைக்கழகத்திலே. சென்னைப் பல்கலைக்கழகத்திலே நடந்தது என்ன? எல்லோரும்



1999 மார்ச் 31] [திரு. ம. அப்துல் லத்தீப்]

சொல்கிறார்கள். அவர் ஏன் இராஜிநாமா செய்தார்? துணை வேந்தர் ஏன் இராஜிநாமா செய்தார்? என்னால் பொறுத்துக்கொள்ள.....

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாங்கள் மூத்த உறுப்பினர். தாங்கள் அறியாதது அல்ல. அது ஒரு தன்னாட்சி அமைப்பு. அதைப்பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது என்பது தங்களுக்குத் தெரியும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அது தன்னாட்சி அமைப்புதான். அதில் நானும் இருக்கிறேன். தன்னாட்சி அமைப்பாக இருந்தாலும், அது திசை தெரியாத ஒரு ஆட்சித் துறையாக இருக்கக்கூடாது. திசை தெரிந்த ஒரு ஆட்சித் துறையாக இருக்கவேண்டும். அதன் நன்மைக்குத் தான் சொல்கிறேன். நாம் நமக்கு என்று சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவருகிறோம். நாம் ஒழுக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்ற உணர்வோடு செயல்படுகிறோம். அதேநேரத்தில், ஒவ்வொரு துறையும் அவர்களுக்காகக் குறிப்பிடப்பட்ட எல்லையைத் தாண்டக்கூடாது. எல்லையோடு வாழ்வதுதான் வாழ்க்கையே தவிர எல்லையை மீறினால் நிச்சயம் தொல்லைகள் வரும். அதிலே சந்தேகமே இல்லை. நல்ல வினைகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். தீய வினைகள் தீய விளைவுகளை ஏற்படுத்தும். ஒவ்வொன்றுக்கும் எல்லை இருக்கிறது. குறிக்கப்பட்ட எல்லைக்குள் அவரவர்கள் தங்களுடைய கடமையைச் செய்யவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன்.

அதைத்தான் நம்முடைய பாரதிய ஜனதா கட்சியின் சகோதரர் அவர்களைக் கேட்டால் அது வந்து கர்ம வினை என்று சொல்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. இதிலே எல்லாம் சில உண்மைகள் இருக்கின்றன. அதன்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பேராசிரியர் அவர்கள் மன்னிக்கவேண்டும். இத்தகைய மானியங்களில் பேசும்போது, யாருக்குச் சொல்கிறோம்? கடைசியாகப் பார்த்தால், Technically நாம் யாரைச் சொல்கிறோம் என்றால், அவர்களுக்குத்தான் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம். அவர்கள் மூலமாகத்தான் வேண்டுகோள் விடுக்க வேண்டும். எனவேதான் இதைச் சொல்லும்போது மிகுந்த பொறுப்புணர்வோடு, தயக்கத்தோடு, மரியாதையோடு, சில உண்மைகளைப் பேராசிரியர் அவர்களுடைய தனி கவனத்திற்குக் கொண்டுவருகிறேனே தவிர, அவர்களிடத்திலே இதை நான் வேண்டுகோளாக வைக்கிறேனே தவிர, ஒரு கருத்தாக நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று சொல்லவில்லை. சிந்தித்துச் செயல்பட்டு, அதிலே பக்குவ,

பதப்படுத்தப்பட்ட ஒரு பேராசிரியர்தான் நம்முடைய பேராசிரியர். இருந்தாலும் ஓர் உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறேனே தவிர வேறல்ல.

அடுத்து, பெற்றோர்-ஆசிரியர் கழகம். இப்போது இருக்கிற நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, சில இடங்களிலே நாம் ஆசிரியர்களை நியமனம் செய்யமுடியவில்லை. பல தனியார் நிறுவனங்களில், தனியார் பள்ளிகளில், ஏன் அரசுப் பள்ளிகளிலே கூட, பெற்றோர் — ஆசிரியர் கழகத்தின் மூலமாக - ஆசிரியர்களை அரசு நியமிக்காத காரணத்தால் - மாதம் ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு கூட அல்ல, தினம் ஒன்றுக்கு, தினக்கூலியைக் கொடுப்பதைப்போல, அதாவது 25 ரூபாய், 30 ரூபாய் பெற்றுக் கொண்டு, பல ஆசிரியர்கள் இன்றையவரை பல்லாண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஆசிரியர்களை நியமிக்கும்போது, 7 ஆண்டுகளாக, 10 ஆண்டுகளாக, ஒவ்வொரு நாளும் 25 ரூபாய் 30 ரூபாய் என்று வாங்கி பணியாற்றிகொண்டிருக்கிறார்களே நிறைய ஆசிரியர்கள், அவர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெளியே போய் தேடுவதைவிட அவர்களுக்கு அனுபவம் மிகுந்திருக்கிறது, குறைந்த சம்பளத்தில் அங்கீகாரம் இல்லாத ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற அந்த ஆசிரியர்களை அங்கீகரித்து, முறையாக நியமனம் செய்யும்போது, அவர்களை நீங்கள் நியமனம் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அரசு உதவிபெறும் சிறுபான்மைப் பள்ளிகளைத் தகுதி உயர்வு செய்யும்போது மற்ற பள்ளிகளுக்கு என்ன வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றனவோ அதே வாய்ப்புகள் சிறுபான்மைப் பள்ளிகளுக்கும் தகுதி உயர்வு வழங்கும் நேரத்திலே கொடுக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேகூட திரு. மணி அவர்கள் பேசினார்கள். நம்முடைய திரு. வெங்கடசாமி அவர்கள் பேசினார்கள். அவர் பகுதி தெலுங்கு பகுதி. திரு. மணி இருக்கின்ற பகுதி மலையாள பகுதி. எங்கள் பகுதியில் கன்னடமும் உண்டு. நாங்கள் இருக்கிற பகுதி, கன்னட மாநிலத்தைச் சார்ந்த பகுதி. உருது மொழி சென்னையிலே அதிகமான மக்கள் பேசுகின்ற மொழி. வட ஆற்காட்டில் உருதுமொழி பேசுகின்றார்கள். தர்மபுரி மாவட்டத்தில் உருதுமொழி பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் பரவி இருக்கிறார்கள். அங்கே 5 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய இடத்தில் ஒரேயொரு ஆசிரியர் இருக்கக்கூடிய நிலை பல பள்ளிகளில் இருக்கிறது. சில பள்ளிகளைப் பார்த்தால், இது என்ன பள்ளிக்கூடமா அல்லது வேறு என்ன என்று நாம் நினைக்கக்கூடிய வகையில், கூரை இல்லாத பள்ளிகள், சுவர் இல்லாத பள்ளிகள், ஆசிரியர்





இல்லாத பள்ளிகள் என்ற வகையில் இருபபதால், அந்த இடத்தில் ஒழுங்கீனம் வளருவதற்குக்கூட இது காரணமாக இருக்கிறது.

அரசு இப்போது நிதிநிலை அறிக்கையின் மொத்தத் தொகையில் 22 சதவீதம் நம்முடைய கல்வித் துறைக்கு ஒதுக்கியிருக்கிறது. பெரும் பகுதி கல்வித் துறைக்கு ஒதுக்கியிருக்கிறோம். சமுதாய முதலீடு இது. It is a social investment; வேறல்ல. சமுதாய முதலீடு. இந்தச் சமுதாய முதலீட்டின் வாயிலாக, அதற்கேற்ற வகையில் சமுதாயத்திற்கு நன்மை கிடைக்கவேண்டும்; மேம்பாடு அடையவேண்டும். இல்லாவிட்டால் Investment செய்து நஷ்டம்தான் ஏற்படும். எவனாவது ஒருவன் நஷ்டம் ஏற்படும் துறையிலே முதலீடு செய்வானா? செய்யமாட்டான். நம்முடைய துறையிலே தொடர்ந்து நஷ்டம் வந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் நியமனம் இல்லாத காரணம்; சரியான கட்டடம் இல்லாத காரணம், இவையெல்லாம்கூட ஒழுங்கீனத்திற்கு ஒரு காரணமாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன். எனவே, தயவுசெய்து, அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) கொஞ்சம் இருங்கள் சார்.

பிற்பகல் 1-00

இன்னொன்று சிறுபான்மை மொழிகள். 4, 5 சிறுபான்மை மொழிகள் நம்முடைய மாநிலத்திலும் இருக்கின்றன. அதிலே எங்களைப் பொறுத்தவரையில், உருது மொழி சிறுபான்மை மொழி. நான் சொல்வது, தமிழகத்தைத் தமிழ்தான் ஆளவேண்டும். இதிலே எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஏன் என்றால் நானே தமிழன். ஆகையால் தமிழகத்தைத் தமிழ்தான் ஆளவேண்டும். தமிழ் ஆளவேண்டும்; சிறுபான்மை மொழிகள் வாழவேண்டும். அதை ஆள வையுங்கள்; மற்ற சிறுபான்மை மொழிகளை வாழ வையுங்கள் என்றுதான் நான் கேட்கிறேன்.

பல்லாண்டுகளாக ஒரு கருத்துரு இருக்கிறது. தமிழக அரசின் சார்பாக இந்தக் கருத்துரு, அதற்கான கோப்புகள் இருக்கின்றன. ஆனால், கோப்பு ஏனோ தெரியவில்லை, நின்ற இடத்திலேயே அல்லது படுத்த இடத்திலேயே படுத்துக் கொண்டிருக்கிறது. தயவுசெய்து அதை எழுப்பி உட்கார வையுங்கள், நடமாட விடுங்கள். Urdu Academy-யை நாங்கள் கேட்பதிலே என்ன தவறு இருக்கிறது? கடந்த அரசு செய்தது அது. கலைஞர் ஆட்சியிலேதான் Urdu Academy-க்கான குறிப்பே எழுதப்பட்டது. ஏன் அதை நடைமுறைப்படுத்தவில்லை? சின்ன வேலை. ஒரு சமுதாயத்தினுடைய நன்மதிப்பைப் பெறுகின்ற ஒரு நல்ல வேலை. ஆகையால், தயவுசெய்து Urdu Academy-யை ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும்; நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1999 மார்ச் 31

அரசுப் பள்ளிகளில் தொழில் சார்ந்த ஆசிரியர்கள். பல்லாண்டு காலமாக நியமிக்கப்படாமல், அந்த இடங்கள் காலியாகவே இருக்கின்றன. அதனால், மாணவர்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், பாடத் திட்டங்களும், அதற்காக ஒதுக்கப்பட்ட நேரமும் வீணாகின்றன. பாடத் திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. எனவே, அதுகுறித்தும் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு விளையாட்டு மையம் ஏற்படுத்துவோம் என்று நீங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். நான் புதிதாகக் கேட்கவில்லை. தயவுசெய்து, ஏற்படுத்தப்படாத மாவட்டங்களிலே விரைவிலே ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட நூலகங்கள். அவை ஏனோ கொஞ்சம் செயலிழந்து இருக்கின்றன. கொஞ்சம் முடமாக்கப்பட்டிருக்கின்றன. அவை, செம்மையாகப் பயன்பட, அரசு போதிய உத்தரவுகளைப் பிறப்பித்து, துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்வதற்குமுன்—ஒழுக்கம் இல்லாத கல்வி நாட்டுக்குத் தேவையில்லை; ஆசிரியர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்; அவர்கள் பொறுப்போடு நடந்துகொண்டால், இந்த நாடே அவர்களுக்குக் கடமைப்பட்டதாகிறது; எனவே, அப்படிப்பட்ட ஒரு பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்க அவர்கள் முயலவேண்டும்; அப்படி முயலுவதற்குத்தான் அவர்கள் கடமைப்பட்டவர்கள்; அந்த உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது என்று கூறி—ஆசிரியர் சமுதாயத்திற்கு நான் என்னுடைய மரியாதையைச் செலுத்தி, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான கல்வி மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது, சமுதாயத்தினுடைய வளர்ச்சி என்பது, அந்த நாட்டிலே இருக்கின்றவர்களுடைய கல்வித் தரத்தைப் பொறுத்துத்தான் அமைகிறது. சமுதாயத்திலே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை எல்லாம் போக்கக்கூடிய மாமருந்தாக இருப்பது கல்வி ஒன்றுதான். இதைத்தான் நமது சங்க இலக்கியத்திலேகூட



1999 மார்ச் 31] [திரு. லா. சந்தானம்]

"பிறப்போரன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாய்மனம் திரியும்"

என்று சொன்னார்கள்.

ஒரு தாய் என்பவளுக்கு, தான் பெறுகின்ற பிள்ளைகளிலே வேறுபாடான சிந்தனைகள் இருக்கமுடியாது என்று சொன்னாலும்கூட, அதிலே கற்றவனாக இருக்கின்ற பிள்ளையின்மீது தாயினுடைய பாசம்கூட அதிகமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்தக் கல்விக்கு நமது அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து, நமது நிதிநிலை அறிக்கையிலே ஏறத்தாழ 22 விழுக்காடு கல்விக்காக ஒதுக்கி, இந்த நாட்டினுடைய மக்கள் கல்வி அறிவைப் பெற வேண்டும் என்பதற்காக நல்ல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிற இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது கிராமப்புறங்களிலே அடித்தளமாக இருக்கிற தொடக்கக் கல்வி மிகச் சிறப்பாக இருந்தால்தான் அங்கு பயின்று வருகின்ற மாணவர்கள் மேலே வருகின்றபோது அவர்களுடைய கல்வித்தரம் சிறப்பாக இருக்கும் என்ற முறையில் தொடக்கக் கல்வியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் மிகப் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும். இன்றைக்குக்கூட அந்த ஆசிரியர்கள் உண்ணா நோன்பை மேற்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-05

ஒவ்வோர் ஆண்டும் புதிதாகப் பள்ளிகளைத் தொடங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் சில பள்ளிகள் மூடுகின்ற நிலையைப் பெற்றிருக்கின்றன என்பதைக்கூட அவர்கள் மூலமாகத்தான் நான் அறிந்துகொண்டேன். அரசு கிராமப்புறங்களிலே தொடக்கக் கல்வியை சிறப்பாக செயல்படுத்த வேண்டுமென்ற முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஒரு பள்ளியிலே 20 பிள்ளைகளைக்கூட கொண்டு வந்து சேர்க்க முடியாத ஒரு நிலை இருக்குமேயானால் அதற்கு யார் பொறுப்பு என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று அவர்களிடம் கூடச் சொன்னேன். அந்த ஆசிரியர்கள் கவனத்தோடு இருக்கவேண்டும். கடந்த காலங்களிலேயெல்லாம் பள்ளிகளிலே ஆசிரியர்களாக வேலை செய்கின்றவர்கள் மிகப் பொறுப்போடு காலையிலே எழுந்தவுடனேயே ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று பள்ளிகளுக்கு பிள்ளைகளை அழைத்து வருகின்ற ஒரு நல்ல நிலை இருந்தது. இப்போதெல்லாம் அப்படி ஒரு நிலை இல்லை. இப்போதுள்ள இந்த நிலையை மாற்றி, பள்ளி தொடங்குவதற்கு முன்னாலேயே ஆசிரியர்கள் வந்து அந்தக்

[திரு. லா. சந்தானம்] [1999 மார்ச் 31

கிராமத்தினுடைய பள்ளிகள் சீராக நடக்க வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டிருந்தால் இப்படியெல்லாம் மூடுகின்ற நிலை இருக்காது. இந்த அரசு மூடுவதற்கு விரும்பவில்லை, ஒவ்வோர் ஆண்டும் புதிதாகப் பள்ளிகளைத் திறப்பதற்குத்தான் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

அதேபோல கல்வித் துறையிலே இருக்கின்றவர்களுக்கு, நமது பெரிய மூத்தத் தலைவர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு ஒழுக்கம் என்பது மிக முக்கியமான ஒன்று.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்று வள்ளுவர்கூட குறிப்பிட்டார்கள். அப்படி அந்த ஒழுக்கத்தைப் போதிக்கின்ற நிலை பள்ளிகளிலே இருக்க வேண்டும். அதற்கு அந்த ஆசிரியர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். ஆனால், இப்போது நமது அரசு 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்கிற நிலையினை மாற்றி 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்கிற நிலையினை எடுத்திருப்பதாக கூறுகிறார்கள். ஆனால் அடிப்படையிலே 40 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் என்கிற நிலை வருகின்றபோது அந்த ஆரம்ப கட்டக் கல்வி Foundation என்று சொல்வார்களே அது சிறப்பாக இருக்காது. ஒரு கட்டடம் சிறப்பாக அமைய வேண்டும் என்று சொன்னால், அதனுடைய அடித்தளம் அந்த Foundation சிறப்பாக இருந்தால்தான் மேலே எழுப்புகின்ற கட்டடம் நல்ல விதத்தில் நிலைத்து நிற்க முடியும் என்கிற நோக்கத்தோடு அந்த அடித்தளமாக இருக்கிற ஆரம்பக் கல்வியினை 40 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியர் சொல்லித்தருவது என்பது சற்றுக் கடினமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சற்று முன்னாலேயே அதைப்பற்றிச் சொல்லிவிட்டு, நாளையதினம் முழு விளக்கம் சொல்வதாகச் சொன்னேன். 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றவொரு விகிதாச்சாரக் கணக்கு பல ஆண்டுகளுக்கு முன்னாலே ஒப்புக்கொள்ளப்பட்டதே தவிர, நடைமுறையில் அது செயல்படுத்தப்படவில்லை.

இப்போது 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பதைக் கட்டாயப்படுத்தவில்லை. முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு தொடக்கக் கல்வியில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, சில இடங்களிலே 25, சில இடங்களிலே 30, 35 என்று பல



1999 மார்ச் 31] [பேராசிரியர் க. அன்பழகன்]

விகிதாச்சாரங்களில் ஆசிரியர்-மாணவர் விகிதாச்சாரம் அமைகிறது. அதிலேயும் குறிப்பாக, 5ஆம் வகுப்புவரை இருக்கிற ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் எல்லாம் சேர்ந்து 90 மாணவர்கள் இருப்பார்களே யானால் மூன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அங்கே 4-வது ஆசிரியரும் போட முடியவில்லை. ஏனென்றால், வேறுசில பள்ளிக்கூடங்களிலே இதேமாதிரி பாதிப்பு வருகிறது. ஆகவே, 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இரண்டாவது, தொடக்கப்பள்ளியில் அந்த நடைமுறை இல்லை. ஆனால் சில பள்ளிக்கூடங்களில் 65, 70 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருக்கிறார்கள். அதையும் திருத்த வேண்டிய நிலை இப்போது இருக்கிறது. இருந்தாலும்கூட, இது கட்டாயப்படுத்தப்பட்டதல்ல. ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பது.

பிற்பகல் 1-10

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆரம்பப் பள்ளிகளிலே பெண்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மத்திய அரசு கூட இதற்காக சிறப்பு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த காலங்களிலே ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு போன்ற வகுப்புகளில் கல்வியைக் கற்றுத் தருவதற்கு பெண்களை நியமித்தால் சிறப்பாக இருக்கும் என்ற முறையில் அதற்குரிய பயிற்சியினை அந்தப் பெண்களுக்கு வழங்கினார்கள். அப்படி பயிற்சிபெற்ற அந்தப் பெண்களில் சிலபேர் வேலை வாய்ப்பினைப் பெற்று இருக்கிறார்கள். ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களாகப் பணி பெறுகின்ற வாய்ப்பினைப் பெற்று இருக்கிறார்கள். சிலபேர் அதைப் பெறாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பயிற்சியைப் பெற்று வயது வரம்பை மீறுகிற ஒரு சூழ்நிலையில் இருக்கிற காரணத்தால் அந்தப் பெண்கள், எங்களுக்கு, அரசு கருணையோடு பரிசீலித்து அரசுத் துறைகளில் வருகின்ற காலி வேலைகளில் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் நிறைய இடைநிலை ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருக்கிறோம். இதைப் பார்க்கின்ற நேரத்தில், இடைநிலை ஆசிரியர்கள், வருகின்ற காலத்தில் போதிய அளவுக்குப் பயிற்சி பெற்றவர்கள் இருப்பார்களா என்ற சந்தேகம்கூட எழுகிறது. ஒவ்வோர் ஆண்டும் நாம் 10,000, 5000 என்று நியமித்துக்கொண்டு போகிறபோது,

[திரு. லா. சந்தானம்] [1999 மார்ச் 31

இந்த மாநிலத்திலே இடைநிலை ஆசிரியர் பயிற்சியைப் பெறுகிறவர்கள் ஏறக்குறைய 4000-க்கு கீழாகத்தான் ஒவ்வோர் ஆண்டும் இருப்பார்கள். எனவே, அந்த வயது வரம்பை மீறிய 400-க்கு கீழ் உள்ள மாணவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டும். எப்படி பட்டப்படிப்பிலே, பட்டம் பெற்றவர்களுக்கு வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறதோ அதுபோல இவர்களுக்கும் வயது வரம்பு தளர்த்தப்பட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஆரம்பமே இப்போதுதான், அதற்குள் மணியடிக்கிறீர்கள்.

இப்போது அரசு நடத்துகிற பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கிறோம். அரசு மூலமாக அங்கீகாரத்தைப்பெற்று இப்போது பல பள்ளிகள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே சிறுபான்மையினர் நடத்துகிற பள்ளிகளுக்கு எல்லாம், அவர்களுக்கு ஏற்படுகிற காலியிடங்களில் ஆசிரியர்களை நிரப்புவதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. ஆனால் பெரும்பான்மையினர் நடத்துகிற அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு, ஏறத்தாழ ஏழு எட்டு ஆண்டுகளாக நமது அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள், 1991 லிருந்து அவர்களுக்கு அந்தச் சலுகை காட்டப்படவில்லை என்று சொன்னார்கள். நான் சென்ற காலங்களில் குறிப்பிடுகிறபோது, விருதுநகர், மதுரை போன்ற மாவட்டங்களில் இருக்கிறவர்கள் எல்லாம் முதல் இடத்தைப் பெறுகிறார்கள் என்று சொன்னால், அங்கு தனியார் நிறைய பள்ளிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கல்வியினுடைய தரம் நன்றாகப் பேணப்படுகிறது. எனவே, அவர்களுக்கெல்லாம் வாய்ப்பு அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு ஏதோ 4 பணியிடங்கள் காலியாக இருந்தால் 50 சதவீதம் என்ற அளவுக்கு 2 பணியிடங்களாவது நிரப்பிக்கொள்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களைப் பொறுத்த அளவில் இப்போது விரிவுரையாளர்களாக 46 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தி இருக்கிறது. ஆனால் இதிலே மிகவும் பின்தங்கியவர்கள் என்று இருக்கிறார்களே அவர்கள் இந்தக் கல்வித் துறையிலே ஏறக்குறைய பல்கலைக்கழகங்களைப் பொறுத்த அளவில் 5 சதவீத பணியிடங்களில் கூட நியமிக்கப்படவில்லை. தொடக்கக் கல்வியைப் பொறுத்த அளவிலும்கூட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 10,12 விழுக்காடுகள்தான் நிரப்பப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே இந்தப் பயிற்சிப் பெற்றவர்கள் இல்லை என்ற நிலை இருக்கிறது. அதிலே பட்டதாரி



1999 மார்ச் 31] [திரு. லா. சந்தானம்]

ஆசிரியர்கள் நிறைய இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற சலுகைபோல, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே இருக்கிற இந்தப் பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1.15

அதேபோல, பல்கலைக்கழகங்களிலே இட ஒதுக்கீடு சதவீதம் மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கும் மிகவும் குறைவாக இருக்கிறது. உதாரணமாக பிற்படுத்தப் பட்டோருக்கு 461 பேர் நிரப்பப்பட்டிருந்தால், மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு 90 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உண்மையிலே அங்கே எடுத்திருக்கின்ற நிலை மிகவும் குறைவு. 30 பேருக்குக் கூட மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்பட வில்லை என்பதை நாங்கள் அறிகிறோம். எனவே, காலியாக உள்ள அந்த இடங்களையெல்லாம் நிரப்பாமல் வைத்திருந்து அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளில்கூட. அதை நிரப்புவதற்கு அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு நீங்கள் முன்வர வேண்டும்.

வேலைவாய்ப்புகளிலே கல்வியைப் பொறுத்தளவிலே மிகவும் பின்தங்கியவர்கள்தான், மிகவும் குறைவான நிலையிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்கிற நிலையை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, அரசுக் கல்லூரிகளிலே நீங்கள் விரிவுரையாளர்களை நியமித்திருக்கிறீர்கள். ஆனால், அரசு அங்கீகாரம் பெற்றிருக்கின்ற கல்லூரிகளுக்கு, அதை நடத்துகின்றவர்களுக்கு, இந்த விரிவுரையாளர்கள் பணியிடம் என்பது இதுவரை கொடுக்கப்படவில்லை. அந்தக் கல்லூரிகளும் சிறப்பாக நடப்பதற்கு, அவர்களுக்கும் ஓரளவுக்கு நீங்கள் அந்தப் பணியிடங்களை ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்றைக்கு அரசு பள்ளிகளில் எல்லாம்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் குமாரதாஸ்.

**திரு. லா. சந்தானம்:** ஒரு நிமிடம், பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்களும் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** முக்கியமான ஒன்று.

[1999 மார்ச் 31

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களைப் பற்றிப் பேசக் கூடாது என்று துணை சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். பல்கலைக்கழகங்களைப் பற்றி ஏன் பேசக் கூடாது? பல்கலைக்கழகங்களைப் பற்றிப் பேசலாம்; எதைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம்; நீதிமன்றங்களைப் பற்றி வேண்டுமானால் பேசக் கூடாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களைப் பற்றியே பேச வேண்டாம் என்று துணைத் தலைவர் சொல்லவில்லை. குறிப்பிட்ட பல்கலைக் கழகத்தினுடைய துணை வேந்தரைப் பற்றிப் பேச வேண்டாம் என்றுதான் தெரிவித்துக்கொண்டார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, கொஞ்சம் இருங்கள், இதை பலமுறை அவையிலே சொல்லிவிட்டேன். ஒருவேளை நாளைக்கு மாற்றுத் தலைவர் பட்டியலில் டாக்டர் கிருஷ்ணசாமியைக் கூடப் போடலாம். இந்த இருக்கையில் உட்கார்ந்து துணை சபாநாயகர் தீர்ப்பு கூறிவிட்டால், அதைப் பரிசீலனை பண்ணுவதற்கோ மாற்றுவதற்கோ எனக்கு அதிகாரம் கிடையாது. நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும். டாக்டர் குமாரதாஸ் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இப்படிப்பட்ட பிரச்சினைகள் உருவாவதை நீங்கள் முன்கூட்டியே கண்டறிந்து அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு முனைப்புடன் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன். ஏனென்று சொன்னால், நீங்கள் அதைச் செயல்படுத்துவீர்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட சச்சரவுகளை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்திவிட முடியும். வெளியே பிரச்சினைகள் உருவாவதைத் தடுத்திட முடியும் என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சில அரசாணைகள் பற்றி பல்வேறு நண்பர்கள் பல்வேறு கருத்துகளை இங்கே சொன்னார்கள். அரசாணை எண் 250 சமாச்சாரம்பற்றி மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் அதற்கான விளக்கத்தைச் சொல்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அந்த ஆணையை நீங்கள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்கிற எதிர்பார்ப்பு ஆசிரியப் பெருமக்கள் மத்தியில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை





நீக்கி—அந்த அரசாணை 1964-லே போடப்பட்டது; மரியாதைக்குரிய பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதல்வராக இருந்த காலத்திலே போடப்பட்டது. அதனால், அதைக் கிடப்பிலே போடாமல், அதற்குப் புத்துயிர் கொடுத்து—பயன் ஏற்படும் வகையில் அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அரசாணை எண் 523, நாள் 29-12-1997-ல் overall strength அடிப்படையிலே பணி இடங்களில் பணியாளர்களை நியமிக்கலாம் என்ற அடிப்படையிலே நியமிக்கப் உத்தரவைப் போட்டு இருக்கிறீர்கள். அதன் அடிப்படையிலே நியமிக்கப் பட்ட பின்பு, இது தமிழுக்கு மாத்திரம்தான் பொருந்தும்; மற்ற subject-களுக்குப் பொருந்தாது என்று சொல்லி, அடுத்த ஆணை போட்டுவிட்டார்கள். எனவே, அரசு ஆணை எண் 523, நாள் 29-12-1997-ன்படி 5-ஆம் வகுப்பு வரை ஒரு தமிழாசிரியர், அதேமாதிரி Middle School-லே ஒரு தமிழாசிரியர்; Higher Secondary School-லே ஒரு தமிழாசிரியர் இது சில பள்ளிகளிலே, Strength இல்லாத பள்ளிக்கூடங்களுக்கு ஒருவேளை பொருந்தக்கூடும். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலே 2,000, 3,000 பிள்ளைகள் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களில் 30 Division, 35 Division இருக்கிற பள்ளிக்கூடங்களில் இந்த ஆசிரியர்களை வைத்து எப்படிப் பிரிவுகளை நடத்த முடியும்? எனவே தனியார் பள்ளிகளாக இருந்தாலும் சரி, அரசு பள்ளிகளாக இருந்தாலும் சரி, விகிதாச்சார அடிப்படையில் நீங்கள் வழங்கி இருக்கிற உத்தரவுப்படி தேவையான ஆசிரியர்களை வழங்குவீர்கள் என்று சொன்னால், கல்வியின் தரம் பாதிக்காது. இந்த ஆணையின் மூலம் பாதிக்கப்பட்டு இருப்பது, நான் கேள்விப்பட்ட வரைக்கும் உண்மையாக இருக்கும் என்று சொன்னால், தமிழ் படித்த தமிழாசிரியர்கள்தான் பெருவாரியாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். தமிழை ஆட்சி மொழியாக்கத் துடித்துக்கொண்டிருக்கிற நாம், தமிழைக் கற்றவர்களுக்கு இழுக்கு செய்கின்ற விதத்திலே, அவர்கள் தமிழ் கற்றதனால் வேலை கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்படுவது மிகவும் வேதனைக்குரியது. எனவே, இதிலே தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி ஆசிரியர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல, P.E.D. ஆசிரியர்கள் 250 பிள்ளைகளுக்கு ஒரு P.E.D. - Physical Education Director என்று சொல்லியிருக்கிறீர்கள். அது எப்படித் தேவையைப் பூர்த்தி செய்யும்? ஆயிரக்கணக்கான பிள்ளைகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். ஒரு நிமிடம் தருகிறேன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அரசுப் பள்ளிகளில் மிகுந்த இட நெருக்கடி இருக்கிறது. அந்தப் பள்ளிகளிலே கட்டட வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. நேற்றைக்குக்கூட ஒரு பத்திரிகையிலே மாணவர்கள் எல்லாம் தரையிலே உட்கார்ந்துகொண்டு பயின்று கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நமது கல்வித் துறையும், அமைச்சர் அவர்களும், ஓரளவிற்கு அந்தக் கட்டட வசதிகளைச் செய்து தருவதற்கு முன்வர வேண்டும்.

பள்ளிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களைத் தனியார்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்கு, மதுரையிலே ஒத்தக்கடையிலே பெண்கள் பள்ளி நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக, அரசு நிலம் ஒதுக்கியிருக்கிறது. அதிலே சில பேர் ஆக்கிரமித்துக்கொண்டு, அந்த இடத்தைவிட்டுச் செல்வதற்கு மறுக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையையெல்லாம் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகக் கல்விக்காக என்று ஒதுக்கப்பட்ட இடங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது உரையாற்றுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றி சொல்லி தமிழகத்தினுடைய வருவாய்க் கணக்கில் மொத்த செலவான 18,500 கோடி ரூபாயில் கல்விக்காக என்று 4144 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, மொத்த சதவீதத்தில் 22.40 சதவீதம் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், பள்ளிகளுடைய எண்ணிக்கை 43,739 ஆகவும், ஆசிரியர்களுடைய எண்ணிக்கை 3,16,929 ஆகவும், மாணவர்களுடைய எண்ணிக்கை 63,75,937 ஆகவும், மாணவிகளுடைய எண்ணிக்கை 59,11,278 ஆகவும், மொத்தம் 1,22,87,215 மாணவர்களைப் படிக்க வைக்கிற ஒரு திட்டத்தினை இங்கே நீங்கள் எடுத்துரைத்திருப்பதற்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கிட்டத்தட்ட தமிழகத்தினுடைய மொத்த ஜனத்தொகையில் 20 சதவீத மக்களின் எதிர்காலத்திற்காக ஒதுக்கியிருப்பதாக இதனுடைய புள்ளிவிவரக் கணக்கு நமக்குத் தெரியப்படுத்துகின்றது. அதேநேரத்தில் 1999 ஆம் ஆண்டு கணக்குப்படி





5.59 கோடி ஜனத்தொகையில் 1.80 கோடி கல்வித் துறையில் கல்வியறிவு பெறாதவர்கள் இருக்கிறார்கள் என்ற அறிவிப்பினை நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். அதுவும் வேதனைக்குரிய செய்தி, ஆதிதிராவிட சமுதாய மக்கள் மொத்த ஜனத்தொகையில் 65 சதவீதம் பேர் கல்வியறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள் என்ற செய்தியும், மலைவாழ் மக்கள் மொத்த ஜனத் தொகையில் 79 சதவீத பேர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்ற செய்தியும் மிகவும் வேதனை அளிக்கின்ற செய்தி. இவர்களுக்கென்று தனிக் கவனம் செலுத்தி அவர்கள் கல்வியறிவில் முன்னேறுவதற்குப் பல்வேறு திட்டங்களை நீங்கள் முனைப்புடன் செயல்படுத்த வேண்டுமென்று வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், எதிர்கால இந்தியாவை உருவாக்குவதற்கு ஒரு இளைய தலைமுறை இனிய தலைமுறை உருவாகிட வேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலேயும், சாதிச் சண்டைகள் சச்சரவுகள் மாறி எல்லோரும் ஒருங்கிணைந்து வாழ வேண்டும் என்கிற உயரிய எண்ணத்தின் அடிப்படையிலேயும் இந்தக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, தயவுசெய்து நீங்கள் அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

அதேநேரத்திலே இன்னொரு, வேதனையான செய்தி என்னவென்று சொன்னால், சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே இருக்கிற துணை வேந்தர், அங்கே பணியாற்றுபவர்களுக்குள் ஏற்பட்ட பல்வேறு சாதிச் சண்டைகளால் resign பண்ணி விட்டார். (குறுக்கீடு) அதற்குக் காரணம், அங்கே உள்ளே இருக்கக்கூடிய அதிகாரிகள், பேராசிரியர்கள் போன்றவர்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து...

*(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை பற்றி ஏற்கெனவே மற்றவர்கள் பேசும்போது சொல்லிவிட்டேன்.. தயவுசெய்து அதை விட்டுவிட்டு வேறு பிரச்சினைக்கு வாருங்கள். இன்னும் 8 நிமிடங்கள் தான் இருக்கின்றன. நிறைய விஷயங்கள் இருக்கின்றன; அவைபற்றிப் பேசுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணை சபாநாயகர் அவர்களைப்பற்றி பல ஆண்டுகளாகத் தெரியும். நட்பின் காரணமாக நேரத்தை நீடித்துக் கொடுக்கின்ற தன்மை படைத்தவர்கள் தாங்கள். எனவே, எனது கருத்துகளைச் சொல்கிறேன். அந்தப் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள் பண்பாளர்கள் நிறைந்துள்ள இடங்களில் இப்படிப்பட்ட வேதனைக்குரிய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுப்பதற்கு ....

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1999 மார்ச் 31

படிக்கக்கூடிய பள்ளிகளிலே 2 பேர், 3 பேர்களுக்கு மேல் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிலும் விளையாட்டிற்கு அதிக உற்சாகம் ஊட்ட வேண்டும்; விளையாட்டிலே அதிக ஆர்வம் உடையவர்களாகப் பிள்ளைகளை உருவாக்க வேண்டுமென்று அரசு நல்ல பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறபோது, இதற்கும் அதிகமாக ஆசிரியர்களை நியமிக்க நீங்கள் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு புதிய புதுமொழியை நம்முடைய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்பதை மாற்றி "நூலகம் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்கிற புதிய மொழியை உருவாக்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன. ஆனால் அந்த நூலகங்களிலே பணியாற்றுகிற அலுவலர்களுககு 150 ரூபாய்தான் சம்பளம். பகுதி நேர நூலகர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் முழு நேர நூலகர்களாக மாற்றுவதற்கு நீங்கள் முன்வர வேண்டும் என்று நான் இந்த நல்ல சந்தர்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பள்ளிகளுக்குத் தேவையான இளநிலை உதவியாளர்கள், தோட்டக் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் துப்புரவாளர்கள் போன்றவர்களை நியமிப்பதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை.

ஆசிரியர்களை நியமனம் செய்கிறபோது மாவட்ட அளவிலே மூப்பினைக் கொள்ளாமல் மாநில அளவிலே மூப்பினை வைத்து நியமனம் செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால் தென் பகுதியில் உள்ள எங்களுடைய மாவட்ட மக்கள் மிக அதிகமாகப் பாதிக்கப்படக் கூடிய ஒரு சூழ்நிலை பரவலாக இருக்கிறது. 30 வயது, 35 வயது வந்தவர்கள் வேலைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. எனவே, தமிழக அரசு இதிலே தனிக் கவனம் செலுத்தி மாநில அளவிலே மூப்பு என்பதை மாநில அளவிலே மூப்பு கொடுப்பீர்கள் என்று சொன்னால் (குறுக்கீடு) தவறாகச் சொல்லிவிட்டேன், மாவட்ட அளவிலே மூப்பு என்பதை மாநில அளவிலே மூப்பு எனக் கொடுப்பீர்கள் என்று சொன்னால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வரும். 10 ஆண்டு, 15 ஆண்டு காத்திருக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையும் ஏற்படும்.

பள்ளிகளில் ஓய்வு பெறுகின்ற ஆசிரியர் பணியிடங்களில் ஆசிரியர்களை நியமிப்பதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. ஒருவர் அரசு உதவி பெறும் பள்ளியிலோ அல்லது அரசுப் பள்ளியிலோ ஓய்வு



1999 மார்ச் 31] [டாக்டர் தே. குமாரதாஸ்]

பெறுகையில், அந்த இடத்தில் ஆசிரியர்களை உடன் நியமிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாங்கள் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியை 2001-லே அமைப்போம் என்று சொல்கிறபோது பலர் கிண்டல் செய்கிறார்கள்; வேடிக்கை செய்கிறார்கள். எங்களுக்கு அதைப் பற்றியெல்லாம் பிரச்சினை கிடையாது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கின்ற சிறு வினா என்னவென்று சொன்னால், தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தமிழகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட I.A.S. மற்றும் I.P.S. அதிகாரிகளினுடைய புள்ளி விவரத்தையும், இப்போது தெரிவு செய்யப்படுகின்ற அதிகாரிகளினுடைய புள்ளி விவரத்தையும் நீங்கள் கணக்கிலே கொண்டு பார்த்தால் நம்முடைய கல்வியின் தரம் எவ்வளவு பின்னோக்கிப் போயிருக்கிறது என்பதற்கு இதை ஓர் எடுத்துக்காட்டாக நான் சொல்கிறேன். எனவே, நம்முடைய மாநிலத்திலிருந்தும் அதிகமான I.A.S. மற்றும் I.P.S. அதிகாரிகள் உருவாகிட வேண்டும் என்கிற பெருநோக்கின் அடிப்படையிலே கல்வியினுடைய தரத்தை நீங்கள் உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இயங்கி வந்த அன்னை தெரசா பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையம், மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயக்கிட வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலே நான் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கேட்டு, அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆணை பிறப்பிக்கப்பட்டு 2 மாதம்தான் இயங்கியது. உடனே strength இல்லை என்று சொல்லி மூடிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை தெரசா பல்கலைக்கழகம் ஒரே இடத்தில் நடைபெறுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகம். கிளை அமைப்பெல்லாம் ஏற்படுத்துவதற்கு முதலில் அவர்களுக்கு இயல்பான உரிமையில்லை. இரண்டாவது, நிதியில்லை. மூன்றாவது, மாணவர்கள் சேரவில்லை. பிறகு ஏற்படுத்த வேண்டும், ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால்—அந்த இடமும் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய வட்டாரத்திற்குள் வருவது; ஏற்கெனவே நாகர்கோவிலில் அவர்கள் ஏற்படுத்திய மையம். எனவே—அதிகார எல்லையைத் தாண்டி, உரிமை இல்லாதபோது, நிதி வசதியில்லாமல், மாணவர்கள் சேராமல் மையம் நடத்துவது எப்படி?

[1999 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*பிற்பகல் 1-30*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** நான் 1.25-க்குத்தான் பேச ஆரம்பித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அறையில் இருந்து உங்களுக்கு 1-16, 1-17-க்கு அனுமதி கொடுக்கச் சொல்லி, சொல்லிவிட்டேன். அதனால் நீங்கள் 1-25 என்று சொல்லாதீர்கள். இன்னும் 2.3 நிமிடங்களில் பேசி முடியுங்கள்

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு அமைச்சர் சொன்ன செய்தியை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் வேதனையான செய்தி என்னவென்றால், நம்முடைய அரசினுடைய புள்ளி விவரப்படி கன்னியாகுமரி மாவட்டம், cent percent—100-க்கு 100 படித்தவர்கள் உள்ள மாவட்டம் என்று பெருமை பெற்றிருக்கிறது. ஆனால், அந்த மாவட்டத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரியோ.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இது வேறு பிரச்சினை; அது வேறு பிரச்சினை. ஏராளமான கல்லூரிகள் இருக்கிற இடத்தில் அரசுக் கல்லூரி நடத்துவது முறையல்ல. மற்றக் கல்லூரிகள் பாதிக்கப்படும். எங்களுக்குத் தெரிந்தே தமிழ்நாட்டில் அதிகக் கல்லூரிகள் இருக்கிற ஒரு சிறு மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம். இரண்டாவது, இப்பொழுது பல்கலைக்கழக மையம் வேண்டுமானால், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால அங்கே மையம் ஏற்படுத்த முடியும். அதை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்காக உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகம். அன்னை தெரசா பல்கலைக்கழகம் அதைப் பற்றி நான் விளக்கமாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஆண்களும் படிக்கலாம், பெண்களும் படிக்கலாம், பெண்களுக்கு மட்டும் என்று பல்கலைக்கழகப் படிப்பிலே தனித்தன்மையோடு ஏற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது. சில பாடங்கள் பெண்களுக்கே மட்டும் பயன்படக்கூடியதாக இருக்கக்கூடும்.



1999 மார்ச் 31]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பல்கலைக்கழகத்தைப் பற்றி எனக்குப் பிரச்சினை கிடையாது. ஆனால் படிப்பதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் உருவாக்கித் தரவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனவே, அதிலே நீங்கள் தனிக் கவனம் செலுத்தி, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு விரிவாக்க மையத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மற்றொரு செய்தி. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நீங்கள் வரைமுறைப்படுத்தி இருக்கிறீர்களா என்பது எனக்குத் தெரியாது. Employment Exchange-ல் B.Ed. படித்தவர்களுடைய எண்ணிக்கை ஓராண்டுக்குக் குறைந்தபட்சம் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை Register செய்வதாகச் சொல்கிறார்கள். அஞ்சல் வழித் தொடர்புக் கல்வி என்று சொல்கிறார்கள். இப்படிச் சென்றால் நம்முடைய கல்லூரியிலே படித்து வருபவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது என்பது இயலாத ஒன்று. இரண்டாவது, ஓர் ஆண்டுக்கு 25 ஆயிரம் பேர், 30 ஆயிரம் பேர் என்று அதிகமாகச் சான்றிதழ் கொடுக்கிறபோது, இவ்வளவு பேர் எப்படிப் பயில முடியும்? அதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா? ஒரே பல்கலைக்கழகத்திலிருந்து இவ்வளவு பேர் எப்படிச் சென்றிருக்கிறார்கள்? போலியான சான்றிதழ்கள் கொடுக்கப்படுகின்றனவா? அரசினுடைய ஒப்புதலைப் பெற்று வழங்கப்படுகிறதா என்ற விவரங்களை நீங்கள் தனியாகக் குழுவைப் போட்டு ஆராய வேண்டுமென்று நான் வேண்டுகோளாக உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஆசிரியர்களைப்பற்றிச் சொல்கிறபோது, பொதுவாக எல்லா உறுப்பினர்களும் பேசிவிட்டார்கள், ஒழுக்கம், ஒழுக்கம், ஒழுக்கம் என்று. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் ஒழுக்கத்தோடுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறாத காலகட்டத்தில் களத்திலே இறங்குகிறார்கள். போராட்டம் என்று வருகிறபோது பிரச்சினை உருவாகிறது. இந்த அரசாங்கத்தில் மட்டும் என்று இல்லை, பொதுவாக வந்துகொண்டு இருக்கிறது. ஆனால் இப்போது நடைமுறையில் பார்த்தால், பெருவாரியான போராட்டங்கள், ஆசிரியர்களுடைய போராட்டமாகத்தான் இருந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஒழுக்கத்தைப்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1999 மார்ச் 31

பேணவேண்டிய, காக்க வேண்டிய கடமை என்று சொன்னேன். அவர்கள் போராட்டம் செய்கிறார்கள் என்பதற்காக நான் சொல்லவில்லை. மாணவர்களுக்குச் சரியான ஒழுக்கத்தைக் கொடுக்கக்கூடிய கட்டுப்பாடு அவர்களுக்கு இருக்கிறது என்ற அடிப்படையிலேதான் நான் பேசினேனே தவிர, அவர்கள் போராட்டத்தை நடத்தக் கூடாது என்பது குறித்து நான் பேசவில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கையையும், நியாயத்தையும் வலியுறுத்துவதற்காகப் போராட்டத்தை நடத்தியிருக்கக் கூடும். இதிலே difference of opinion இருக்க வாய்ப்பில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மூத்த அரசியல்வாதி. நான் உங்களுக்கு அறிவுரை சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. வேண்டுகோளாக வைக்கின்றேன். 1999-2000 ஆண்டிலே எந்தவிதமான போராட்டமும் ஆசிரியர்கள் மத்தியில் இல்லை என்கிற சூழ்நிலை ஏற்படுகின்ற முகத்தான், எத்தனை ஆசிரியர்கள் இருக்கின்றார்களோ, எத்தனைவிதமான கோரிக்கைகள் இருக்கின்றனவோ, அத்தனையையும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் நினைத்தால் தீர்த்து வைக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அவர்களை அழைத்து உங்களுடைய குறை என்ன? என்ன வேண்டும்? ஏன் போராடுகிறீர்கள்? என்று அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து, நீங்கள் பேச்சுவார்த்தை நடத்தினாலே அது சரியாகிவிடும் என்பது என்னுடைய உணர்வு. எனவே, போராட்டக் களங்களிலே இருக்கிற சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை நீங்கள் அழைத்து உரையாற்றி, போராட்டம் இல்லாத ஆண்டாக, அவர்களுடைய ஒட்டுமொத்தக் குறைகளையும் நிவர்த்தி செய்த பெருமை கழக அரசுக்கு வரும் அளவுக்கு ஒரு குழுவைப் போட்டு, பேச்சுவார்த்தைக்கு அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று வேண்டுகோளாக நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது அதை எதிர்க்கட்சித் தலைவர் செய்ய முடியும். அதற்கான வாய்ப்பு அவருக்கு இருக்கிறது. நீங்கள் ஏன் பேராசிரியரைப் பார்த்துக் கேட்கிறீர்கள்? எதிர்க்கட்சித் தலைவர்தான் இப்போது அந்தக் குழுவிற்குத் தலைவர், அதை வெற்றிகரமாக முடிக்கச் சொல்லுங்கள்.



1999 மார்ச் 31]

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எங்கள் தலைவர் முடித்து விடுவார். அந்தக் குழு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்காகப் போடப்பட்டதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி 1.35 ஆகிறது. 1.17-க்கு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். விரைவில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சரி ஐயா, விரைவில் உரையை முடித்து விடுகிறேன். அடுத்து, தொழிற்கல்வி ஆசிரியர்களை முழு நேரப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும் என்கின்ற கோரிக்கை வெகு காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஏகப்பட்ட முரண்பாடுகள் இருக்கின்றன. நாம் வெளியே இருந்து பார்ப்பதில், சிலருக்கு 150 ரூபாய் சம்பளம் என்றும், சிலருக்கு 300 ரூபாய் சம்பளம் என்றும் கொடுக்கப்படுகிறது. எப்படி அவர்கள் குடும்பம் நடத்த முடியும்? ஒரு நேரம் டீ குடிக்க வெளியே வந்தாலே 100 ரூபாய் அவுட் ஆகிவிடுகிறது. அவர்களுக்கு மாதச் சம்பளம் 150 ரூபாய், 250 ரூபாய் என்று கொடுப்பது எப்படிச் சரியாக இருக்கும்? அதிக முரண்பாடுகள் இருக்கின்றன. நீங்கள் அவர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி ரூபாயைக் கல்வித் துறைக்காகக் கொடுத்து, செலவிடும்படி கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருடைய குறைகளையும் தீர்த்து நிறைவான ஒரு பெயர் ஏற்படுவதற்கு ஏற்றவகையில் இந்தத் தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க Marker 600 பேரை வேலையில் நியமிக்க வேண்டுமென்று சொல்லி 250 பேரைக் கல்லூரிகளில் நியமித்திருக்கிறீர்கள். 120 நபர்களுக்கு இன்னும் பணி உத்தரவு வழங்கப்பட வேண்டும். அவர்களையும் தேர்வு செய்து விட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், சம்பளமும் இல்லை, ஒன்றும் இல்லை. எனவே, அதைத் தனியாகக் கவனத்தில் கொண்டு செயல்படுத்த வேண்டுமென்றும், அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்றும் இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு சிறிய விஷயத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 மார்ச் 31

**திரு. பி.ஆர். சுந்தரம்:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**—கடைசியாகப் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது, உட்காருங்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 1-4-1999 காலை 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

106. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் எந்த ஒரு வணிகராலும் விற்பனை செய்யப்பட்ட சில பொருட்களுக்கு விற்பனை வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவற்றினை குறைப்பது மற்றும் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்தும் மற்றும் 15-07-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் II(1)/வ.வ./79/98-ஆம் எண் அறிவிக்கையில் மாறுபாடு செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 27-03-1999 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

107. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 27-3-1999-ஆம் நாளிட்ட 73 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது].

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 மார்ச் 31]

108. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் முதலாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 27-03-1999 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது].

109. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் மூன்றாவது விவர அட்டவணையில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 27-03-1999 ஆம் நாளிட்ட 75 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது].

110. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

111. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

112. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1959 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது)] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

46. மானியக் கோரிக்கை எண்.17-பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்)

47. தமிழ்நாடு மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் பற்றிய கையேடு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்).

48. மானியக் கோரிக்கை எண் 17-உயர் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000 (தமிழ், ஆங்கிலம்).

49. 25-06-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பரசிதழில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் II (1)/வ.வ./62 (I)/98 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 27-03-1999 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



**இணைப்பு-I**

[84 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

**கோரிக்கை எண் 17 - கல்வி**

**கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000**

**பள்ளிக் கல்வித் துறை**

**தொலைநோக்குக் கொள்கை**

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

என்பது வள்ளுவர் வாக்கு. கல்வி என்னும் வற்றாத செல்வம், தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்றது. பொருளாதார முன்னேற்றம் அடையாத, ஆனால், கல்வித்தரம் முன்னேறிய நாடுகளில் கூட இதைக் கண்கூடாகக் காண்கிறோம். வாழ்க்கையில் பொருளாதார வளர்ச்சியடைவதுமன்றி வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகத் துய்க்க, கல்வி கற்றவனால் இயலும். கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தக்கவாறு பயன்படுத்திச் சாதகமாக்கிக் கொள்ளவும், சந்திக்கும் நிகழ்வுகளின் நன்மை தீமைகளைப் பகுத்தறியவும், கல்வி வழி செய்கிறது. மக்களிடையே கல்வியறிவு பெருகிய நாடுகளில் மக்கள் உடல்நலன்களைப் பேணிக் காப்பதில் முன்னேறி, நோய்களைத் தடுப்பதில் முன்னெச்சரிக்கையாக இருத்தல் போன்றவற்றால் குழந்தைகள், மகளிர், வறியர் ஆகியோரிடையேயும், நோயற்ற வாழ்க்கை அமைந்திருப்பது சுடரிடும் உண்மையாகும். இத்தகைய பயன்மிக்கக் கல்வியைப் பரவலாக அனைவருக்கும் அளிப்பதே கல்வித்துறையின் நோக்கமாகும்.

2. தமிழகத்திலுள்ள 5.59 கோடி மக்களில் (1991 மக்கட் கணக்கெடுப்பு) 1.80 கோடி பேர் கல்வியறிவு பெறாதவர்கள். இவர்களுள் பெண்கள் 64 சதவிகிதத்தினர். ஆதிதிராவிடர் வகுப்பினரில் 65 சதவிகிதத்தினர் கல்வி அறிவு பெறாதவர். மலைவாழ் மக்களில் 79 சதவிகிதத்தினர் கல்வி கற்காதவர்கள். கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை விரைந்து பெருகச் செய்வது துறையின் தலையாய குறிக்கோள்.

3. அனைவருக்கும் கல்வி என்ற குறிக்கோளை எய்த, கல்வி கற்கும் வசதி பெற வேண்டியவர்களின் சூழ்நிலை தன்மையின் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. ஆண்டு தோறும் சுமார் 10

இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் பள்ளியில் சேரும் வயதை அடைகின்றனர். இதைத்தவிர பல்வேறு காரணங்களால் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிற்பவர் (இளம் வயதினர்) எண்ணிக்கை ஒரு புறம்; முதியோர் உள்ளிட்டு 180 இலட்சம் கல்வி கற்காதவர்கள் எண்ணிக்கை மற்றொரு புறம்; இவ்வகையில் அனைத்துப் பிரிவினருக்கும் அவரவர் நிலைமைக்கு ஏற்ற வழியில் கல்வி கற்பிக்கும் அமைப்பை உருவாக்கும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது.

4. தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்து விடுபட்டுள்ள சிற்றூர்களில் அடிப்படைக்கல்வி வசதி ஏற்படுத்துவதும்,

தமிழகத்தில் அமைந்துள்ள பலநிலைகளிலுள்ள பள்ளிகளின் உள்கட்டமைப்பையும், சூழ்நிலையையும் மேம்படுத்தி, பள்ளி மாணவர்களுக்கு கற்பதை விரும்பி ஏற்கும் இனிமையான பட்டறிவாக்கி, மேலும் தொடராது இடைநிற்றலை குறைப்பதும்,

பள்ளிகளில் மாணவர் பெறும் கல்வி, அவர்கள் சுயமாகச் சிந்திக்கும் அறிவை வளர்க்கும் வகையிலும், நற்பண்புகள் தழைக்கும் வாயிலாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும், ஏற்ற அடிப்படையாகவும் அமைய ஏற்ற வகையில் கற்பித்தல் அமையவும்,

ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கல்விக் கட்டமைப்பில் கல்வி பெறாமல் விடுபட்ட மக்களிடையே கல்வியறிவை வளர்ப்பதும், இத்துறையின் தொலைநோக்குக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக இருக்கும்.

இதன் அடிப்படையில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் துறைகளின் செயற்பாடும் அவற்றின் கொள்கைகளும், திட்டங்களும் அமைந்துள்ளன. இத்தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்த முக்கியப் பொறுப்பு வகிக்கும் தொடக்கக்கல்வி இயக்குநரகம், பள்ளிக்கல்வி இயக்குநரகம், பள்ளிசாராக் கல்வி இயக்குநரகம் ஆகியவையும் அவற்றுக்கு உறுதுணையாகச் செயல்படும் ஆசிரியர்கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், பாடநூல் நிறுவனம், நூலகத்துறை மற்றும் விளையாட்டுத் துறை ஆகியவையும் தத்தம்பணியில் சிறப்பாக ஈடுபட்டு, கல்வியறிவில் தமிழகத்தை உன்னத் நிலைக்கு உயர்த்திட இத்துறை முனைந்து செயல்படுத்தும்.



## 1999-2000 ஆம் ஆண்டின் சிறப்புகள்

5. தொலைநோக்குக் கொள்கைக்கு வடிவம் கொடுக்கும் வகையில் 9வது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி வழங்கவேண்டுமென்ற கொள்கையைச் செயல்படுத்த புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கவும், தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் திட்டங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. தொலைநோக்குக் கொள்கைக்கு வடிவம் அளிக்கும் வகையில் ஏற்கெனவே செயல்பட்டுவரும் திட்டங்களுடன், 1999-2000 ஆம் ஆண்டில் சில சிறப்புத் திட்டங்கள் தொடங்கப்படவுள்ளன. தமிழகத்தில் கல்வியறிவு பரவலாகவும், விரைவாகவும் மக்களைச் சென்றடையும் வகையில் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### தொடக்கக் கல்வி இயக்கம்

7. தொடக்கப் பள்ளிகளில் சிறுவர் சிறுமியர்களைச் சேர்ப்பதிலும், சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர் இடையில் நின்று விடாமல் தொடர்ந்து படிக்கவும் முனைப்பான முயற்சிகள் தேவையென அரசு முடிவெடுத்து இவ்வாண்டு, 'தொடக்கக் கல்வி இயக்கம்' என்னும் திட்டத்தை வரும் ஆண்டில் அரசு தொடங்க உள்ளது. பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க வேண்டியதன் அவசியத்தை மக்களிடையே பரப்ப விழிப்புணர்ச்சி முகாம்கள் மே மாதம் நடத்தப்படும். ஒரு இயக்க அடிப்படையில் நடத்தப்படவுள்ள இந்த முயற்சியில் அரசு அலுவலர்களுடன், தன்னார்வ நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தொண்டுள்ளம் கொண்ட மக்கள் ஈடுபடுத்தப்பட்டு, பள்ளி வயதிலுள்ள அனைத்துச் சிறுவர், சிறுமியரையும் பள்ளியில் சேர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு உறுதுணையாக, பள்ளிகள் தேவையுள்ள மீதமுள்ள சிற்றூர்கள் அனைத்திலும் புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்படும். பள்ளி செல்லும் மாணவர்களுக்கு, புத்தகங்களும் சீருடையும் தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

8. மாணவர்களிடையே கல்வியில் விருப்பம் ஏற்பட மகிழ்ச்சிகரமான கற்றல் போன்ற முறைகள் பரவலாக்கப்பட்டு, பள்ளியில் இருப்பது ஒரு இன்பகரமான அனுபவமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். கற்பிக்கும் முறைகள் திருத்தி அமைக்கப்பட்டு மாணவர்களின் ஆர்வத்தில் தடங்கல் ஏற்படாது தொடர்ந்து பயில உற்சாகம் ஊட்டும்வகையில் அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

[1999 மார்ச் 31

## அட்டவணை-2

பிறதுறைகளில், பள்ளிக் கல்வி சார்ந்த சில திட்டங்களுக்கும்
கீழ்வரும் கணக்குத் தலைப்புகளில் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

## 1999-2000 ஆம் ஆண்டிற்கான செலவுத் திட்டமதிப்பீடு

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|
| அ. வருவாய் கணக்கிற்குட்பட்டது | | | |
| மானியக் கோரிக்கை எண் 27 | 34.00 | — | 34.00 |
| சமுதாய மேம்பாடு-சமூகக்கல்வி | | | |
| மானியக் கோரிக்கை எண் 41 | | | |
| 2071 அரசு மான்யம் பெறுகின்ற கல்வி நிலையங்களில் பணியாளர்களுக்கு ஓய்வூதியம். | — | 30503.51 | 30503.51 |
| ஆ. வருவாய் கணக்கிற்கு உட்படாதது | | | |
| மானியக்கோரிக்கை எண் 55 | 3353.96 | — | 3353.96 |
| 4202 அரசு இடைநிலைக்கல்வி நிலையங்களுக்கு கட்டிடங்களுக்கான மூலதனச் செலவு | | | |
| **மொத்தம்** | **3387.96** | **30503.51** | **33891.47** |



1999 மார்ச் 31]

## 1999-2000 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப்பட்டியல்

## பள்ளிக் கல்வித் துறை

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதிச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) | 1999-2000 இல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | தொடக்கக் கல்வி | | |
| 1. | 150 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்துதல். | 130.41 | 108.68 |
| 2. | இடைநிலை ஆசிரியா பணியிடங்களை மாற்றி 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தல். | 22.56 | 18.80 |
| 3. | சிறந்த பள்ளிகளுக்கான விருது | 2.32 | 2.32 |
| | பள்ளிக் கல்வி | | |
| 4. | 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல். | 430.88 | 359.04 |
| 5. | 50 அரசு/மாநகரட்சி/நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல். | 560.04 | 466.70 |
| 6. | 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வழங்குதல். | 60.00 | 60.00 |
| 7. | 200 உயர்நிலை/மேனிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்குதல். | 50.00 | 50.00 |
| 8. | 100 இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதிலாகப் பட்டதாரி அறிவியல் கணித ஆசிரியர்களை நியமித்தல். | 21.48 | 17.90 |
| 9. | 100 அரசு மேனிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை அறிமுகம் செய்தல். | 234.76 | 228.96 |
| | பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | | |
| 10. | 10 மாவட்டங்களில் படிப்பை இடையில் விட்டவர்களுக்காகவும், பள்ளிக்கே செல்லாதவர்களுக்காகவும் 10 பள்ளிசாராக் கல்வித் திட்டங்கள். | 53.75 | 52.00 |

[1999 மார்ச் 31

9. பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியரின் நலன்காக்க, 'வாழ்வொளித் திட்டம்' செயல்படுத்தப்படும். மருத்துவத் துறை களப் பணியாளர் பள்ளிக்கு ஒவ்வொரு வாரமும் சென்று மாணவ, மாணவியரைப் பரிசோதித்துத் தேவையான நடவடிக்கை எடுக்கும் வகையில் முறைகள் வகுக்கப்படும். ஆசிரியருக்கும் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

10. 'தகவல் தொழில் நுட்ப யுகமாக' மாறிவரும் இவ்வேளையில் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களும் கணினி அறிவு கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்று அரசு கருதுகிறது. ஐந்தாண்டுகள் கணினியியல் அனைவருக்கும் அளிக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, இவ்வாண்டு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் மாணவர்களுக்கு கணினியில் 11,12 வகுப்புகளில் விருப்பப்பாடமாகக் கற்பிக்கப்படும். தேவையான கணினிகளை நிறுவி பராமரித்து, நிர்ணயிக்கப்பட்டு பாடமுறைக்கேற்ப கற்பிக்கும் பொறுப்பு தகுதிவாய்ந்த முன்அனுபவமுடைய தனியார் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும்.

11. ஆரோக்கியமான உடலே நல்லறிவு வளர ஏற்ற களம் என்ற கருத்திற்கிணங்க, பள்ளிகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். பள்ளிகளிடையே விளையாட்டுப் போட்டிகள் மாநிலம் முழுவதிலும் விரிவாக நடத்தப்படும். முளையிலே கண்டறியப்படும் திறனுடைய விளையாட்டு வீரர்களுக்கும், மாநில போட்டிகளில் வெற்றி பெறும் வீரர்களுக்கும் பயிற்சி அளிக்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

12. பள்ளிக் கல்வியின் இயல்பான நடவடிக்கைகளில் மேற்கொண்டுள்ள இந்த மாற்றங்கள் பள்ளிக் கல்வித் திறனை வளர்த்திடும் தொலைநோக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதில் விரைவான முன்னேற்றத்தை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மாநில வரவு-செலவுத் திட்டத்தில் பள்ளிக் கல்வி குறித்த நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை 17 - கல்வி என்ற தலைப்பில், 1999-2000 ஆம் ஆண்டுக்கு மொத்தம் ஒதுக்கீடு ரூ.4144.01 கோடி ஆகும். இந்த ஒதுக்கீடு நிதி நிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ள வருவாய்க் கணக்கிலான மொத்த செலவில் (ரூ.18500.32 கோடி) 22.40 விழுக்காடாகும். பள்ளிக்கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 3244.58 கோடி ஆகும். இதில் ரூ.186.27 கோடி திட்டப்பணிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்விக்கான இந்த ஒதுக்கீடு வருவாய்க் கணக்கிலான மொத்த செலவில்



1999 மார்ச் 31]

17.54 விழுக்காடு ஆகும். அனைவருக்கும் கல்வி என்னும் இவ்வரசின் சீரிய குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற வகை செய்யப்பட்டுள்ளதை இதன் மூலம் கண்கூடாக அறியலாம்.

### அட்டவணை-1

### 1999-2000 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீடு-பள்ளிக் கல்வி

| | கணக்குத் தலைப்பு | திட்டப்பணி | திட்டத்தில் சேராதது (ரூபாய் இலட்சத்தில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2059 | அரசுப்பள்ளிகள் கட்டிடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும். | - | 763.00 | 763.00 |
| 2202 | பொதுக்கல்வி | | | |
| | 01 தொடக்கக்கல்வி | 8704.23 | 166914.62 | 175618.85 |
| | 02 இடைநிலைக் கல்வி | 6616.73 | 124515.88 | 131132.61 |
| | 04 முதியோர் கல்வி | 494.82 | 43.93 | 538.75 |
| | 05 மொழி வளர்ச்சி | 1.02 | 317.56 | 318.58 |
| 80 | பொதுவானவை ஏனைய செலவு | . | 8000.00 | 8000.00 |
| | மொத்தம்-பொதுக்கல்வி | 15816.80 | 299791.99 | 315608.79 |
| 2204 | விளையாட்டுக்களும் இளைஞர் நலனும் | 919.62 | 96.55 | 1016.17 |
| 2205 | கலையும், பண்பாடும் பொது நூலகங்கள் | 40.01 | 2074.32 | 2114.33 |
| 2225 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப் பட்டோர் நலன் | 1795.91 | 20.50 | 1816.41 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | 0.01 | 6.20 | 6.21 |
| | திருப்பி வசூலிக்கப்பட்டவை | 54.16 | 3079.04 | 3133.20 |
| | பெருமொத்தம் | **18626.51** | **305831.60** | **324458.11** |

[1999 மார்ச் 31

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதிச் செலவு | 1999-2000 இல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **பொது நூலகங்கள்** | | |
| 11. | திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களுக்குக் கணினி வசதி செய்து கொடுத்தல். | 15.00 | 15.00 |
| 12. | கன்னிமரா பொது நூலகத்தில நுண்புகைப்பட பிரிவுக்கான பதவிகளை ஏற்படுத்தல். | 1.30 | 1.08 |
| 13. | ஊரகப் பகுதிகளில் புதிதாக 10 கிளை நூலகங்களை ஏற்படுத்தல். | 5.20 | 4.22 |
| | **அரசுத் தேர்வுகள்** | | |
| 14. | தலைமை அலுவலகத்திற்கும், வட்டார அலுவலகங்களுக்கும் அறைகலன்கள் வாங்குதல். | 11.50 | 11.50 |
| | **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்** | | |
| 15. | விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தல். | 40.00 | 16.00 |
| 16. | 14 வயதிற்கு உட்பட்ட மாணவ-மாணவியருக்கான பயிற்சி முகாம் நடத்துதலும், தொடர் பயிற்சி அளித்தலும். | 5.00 | 5.00 |
| 17. | மாநில விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்குரிய பயிற்சி முகாம். | 2.70 | 2.70 |
| 18. | பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கான பயிற்சி முகாம். | 2.70 | 2.70 |
| 19. | 7, கல்லூரிகளில் விளையாட்டு மேம்பாட்டு மையங்களை ஏற்படுத்தல். | 7.70 | 7.70 |
| | **ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி** | | |
| 20. | மாவட்ட ஆசிரியர் கல்வி, பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கணினிப் பயிற்சி. | 1.00 | 1.00 |
| | **மொத்தம்-திட்டப் பணிகள்** | **1658.30** | **1431.30** |



1999 மார்ச் 31]

## கொள்கை

### 1. தொடக்கக் கல்வி

1.1 கல்வி கண் போன்றது. மனிதனை மனிதனாக வாழவைப்பது கல்வி. அத்தகைய கல்வியை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்குவது அரசின் தலையாய கடமையாகும். அனைவருக்கும் கல்வி என்பதன் முதல் கட்டப் பணி அனைவருக்கும் ஆரம்பக் கல்வியை வழங்குவதுதான்.

1.2 அரசியலமைப்புச் சட்டத்தைச் செயற்படுத்திய நாளிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் அனைவருக்கும் இலவச ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக வழங்க அரசு வழிவகை செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தாலும், இந்த நோக்கம் அவ்வளவு எளிதில் கைகூடுவதாக இல்லை. அதனை நிறைவேற்றும் பணி தொடர வேண்டியுள்ளது. பள்ளி செல்லும் வயதிலிருக்கும் அனைத்துச் சிறுவர் சிறுமியர்களும் பள்ளியில் கற்பதற்கு ஆர்வம் கொள்ளுதற்கு ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்கும் எண்ணத்துடன் பள்ளிகளும், பள்ளிக்கட்டடங்களும், ஆசிரியர் பணியிடங்களும், கற்றல் - கற்பித்தல் பணிக்கு உதவும் பொருள்களும் வழங்க வகை செய்யப்பட்டு வருகின்றன. ஆறாவது இந்தியக் கல்வி ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாட்டில் 700 சிற்றூர்களில் 1 கி.மீ. தொலைவிற்குள் மாணவர்கள் சென்றடையும் வகையில் தொடக்கப் பள்ளி அமைக்கப்படவேண்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. வரும் கல்வியாண்டுக்குள் இவ்வாறான அனைத்துச் சிற்றூர்களிலும் தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்பட்டுவிடும்.

1.3 அனைவருக்கும் ஆரம்பக் கல்வி என்னும் கொள்கை மூன்று கூறுகளை உள்ளடக்கியது. அவையாவன,

(அ) பள்ளி செல்லும் வயதுடைய 6 முதல் 14 வயதுடைய குழந்தைகள் அனைவரும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும்.

(ஆ) பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகள் அனைவரும் இடையில் விட்டுவிடாமல் 8-வது வகுப்பு வரையில் தொடர்ந்து படிக்கச் செய்ய வேண்டும்.

(இ) அவ்வாறு படிக்கும் குழந்தைகளுக்கு, அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப குறைந்தபட்ச அறியும் திறன் உருவாகும் வண்ணம் தரமான கல்வி வழங்கப்படவேண்டும்.

[1999 மார்ச் 31

1.4 இம்மூன்று இலக்குகளையும் அடைய அவற்றின் இன்றைய நிலையை ஆராய்ந்து காண வேண்டும்.

(அ) முதலாவது இலக்கைப் பொறுத்தவரை ஏறக்குறைய பள்ளி செல்லும் வயதுடைய அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்பட்டுவிடுகின்றனர். தமிழ்நாட்டில் மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும் விகிதம் 95.46 விழுக்காடு ஆகும். பெண்களில் 96.28 சதவிகிதத்தினர் தொடக்கப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். ஆதிதிராவிடர் பிரிவினரில் 84.65 சதவிகிதத்தினர் பள்ளியில் சேர்க்கப் படுகின்றனர். இவ்வாறு பள்ளியில் சேர்க்கும் பணியில் திருப்திகரமான நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

(ஆ) இரண்டாவதாக, பள்ளியில் சேரும் குழந்தைகளில் எத்தனை பேர் ஐந்தாவது வரை தொடர்ந்து படிக்காமல் இடையில் நின்று விடுகிறார்கள் என்று பார்ப்போமேயானால் துறையின் புள்ளி விவரங்களின்படி இவ்வாறு இடைவிலகுவோர் 14.52 விழுக்காடு ஆகும்.

(இ) அடுத்ததாக, ஐந்தாம் வகுப்புவரை பள்ளியில் தொடர்ந்து பயிலும் மாணவர்களில் எத்தனை பேர் அறியவேண்டிய குறியீட்டுத் திறன்கள் அனைத்தும் எய்துகின்றனர் என்று மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்திற்காக எடுத்த புள்ளி விவரக் கணக்கெடுப்பின்படி பார்த்தால் 44 விழுக்காடு மாணவர்கள்தான் குறியீட்டுத் திறன் அனைத்தும் பெற்றுள்ளனர் என அறியப்படுகின்றது. அதிக ஆசிரியர் நியமனம் மூலமும், ஆசிரியர்கட்குத் தேவையான மறுபயிற்சி அளிப்பதன் மூலமும், மேற்பார்வையைச் சீர் செய்வதன் மூலமும், இது வரும் ஆண்டில் மேலும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1.5 இவற்றை எண்ணுங்கால் அரசின் நோக்கம் வெற்றிபெறத் திட்டமிட்ட முயற்சியும். கல்விக்கென செலவிடப்படும் நிதியும் மேலும் நல்ல முறையில் பயன்தரச் செய்வது அவசியமாகிறது. தொடக்கக் கல்விதான சமுதாய முன்னேற்றத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அடிப்படை. இது கட்டடத்திற்குக் கடைக்கால் போன்றது. தரமான கல்வி அனைவருக்கும் சீராகச் சென்றடைந்து குழந்தைகள் அனைவரும் பன்முக வளர்ச்சி அடையச் செய்வதன் மூலம் அவர்களின் திறன்களைப் பெருக்கி பொறுப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும்



1999 மார்ச் 31]

வகையில் தொடக்கக் கல்வி அமைய வேண்டும் என்பது அரசின் முதன்மையான கொள்கையாகும்.

1.6 இவ்வாறு தொடக்கக் கல்வி அமைய மக்கட்தொகை 300-க்கும் மேற்பட்ட அனைத்துக் குடியிருப்புகளிலிருந்தும் ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் தொடக்கப் பள்ளி அமைக்கப்படவேண்டும் என்பதும், மூன்று தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப்பள்ளி அமையும் நிலையை உருவாக்க வேண்டும் என்பதும் துறையின் இலக்காகும்.

1.7 மகளிரிடையே கல்வி பெற்றோர் விகிதம் உயர்ந்துள்ள பகுதிகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறி இருப்பதை நாம் காண்கிறோம். பெண்கள் பள்ளியில் சேராமையாலும், இடைவிலகலாலும் காணப்படும் பின்தங்கிய நிலையைச் சீரமைப்பதற்கு அரசின் கட்டாயக் கல்வித் திட்டம் பயன்படும் என்று அரசு கருதுகின்றது.

1.8 நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் பயன், சமுதாயத்தில் காணப்படும் பலவகைப்பட்ட ஏற்றதாழ்வு வேற்றுமைகளினால் அனைவரையும் ஒரே சீராகச் சென்றடையவில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. அதுபோலல்லாமல் தொடக்கக் கல்வி அனைவரையும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவரையும் சென்று அடையச் செய்வதற்கு ஏற்ற வழிமுறைகளில் அரசு தனிக்கவனம் செலுத்தும்.

1.9 முழுமையான கல்வி என்னும் குறிக்கோள் செயல்பாட்டிற்கு பயில்வோரின் கவனத்தை முழுமையாக ஈர்க்கும் வகையில் பாடங்களும், கற்பிக்கும் முறைகளும் அமைய வேண்டியது அவசியம். உற்சாகத்துடன் சிறுவர், சிறுமியர் பள்ளியில் பயிலும் வகையில் பாடத்திட்டங்களையும், கற்பிக்கும் முறைகளை அளிப்பதற்கேற்ப, ஆசிரியர்களுக்கான பயிற்சி முறைகளையும் திருத்தி அமைத்து, அதனடிப்படையில் பணியிடைப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

1.10 பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் குறைந்தபட்ச அறியும் திறன் பெறவேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்ற அவர்கள் பெற்ற கல்வியறிவின் நிலையைக் கண்டறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொடக்கக் கல்வி அளவில் நடைபெறும் வகுப்புத் தேர்வுகள் மாணவர்களைக் கல்வியில் ஊக்கப்படுத்துவதற்குத் துணையாகவே நடைபெறுமே தவிர, மேல்வகுப்புக் கல்வி பெறுவதற்குத் தடையாக அமையாது. இந்தக் கருத்துக்களின் அடிப்படையில்

பாடத்திட்டங்களில் தேவைப்படும் மாறுதல்களும், கற்பிக்கும் முறைகளில் புதிய உத்திகளும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வி

2.1 அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்ட பள்ளிக்கூடம், பொருத்தமான பாடத்திட்டம், சிறந்த கற்றல்-கற்பித்தல் முறைகள் ஆகியவற்றின் மூலம் திறன்மிக்க மாணவர்களை உருவாக்குவதே இடைநிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் நோக்கமாகும். 14-18 வயது பிரிவினரின் நுண்ணறிவுத் திறன், கல்வி ஆர்வம் ஆகியவற்றை வளர்த்து ஒளிரச் செய்வதால் சுயதொழில் ஈடுபாட்டுக்கும், உயர் கல்வி நாட்டத்துக்கும் அவர்களைத் தகுதியுடையவர்களாக உருவாக்க முடியும்.

2.2 மாணவர்கள் எதிர்கால வாழ்விற்குத் தங்களை ஆயத்தமாக்கிக் கொள்ள ஏற்ற துறையை, பாடப்பிரிவைத் தேர்ந்தெடுக்க அடிப்படையாகவும், வாயிலாகவும் அமைவது இடைநிலைக் கல்வி. தொடக்கக் கல்வியில் பெறுகின்ற மூன்று முக்கிய திறன்களாகிய படித்தல், எழுதுதல், கணக்கறிதல் ஆகியவை ஒரு மாணவனை இடைநிலைக் கல்வி பெறத் தகுதியுடையவனாக்குகின்றன. மொழிப் பாட அறிவு பெறுவது தொடர்ந்து தேவைப்படுவதான ஒன்று, முக்கியமாக அறிவியலறிவு பெற மாணவனை ஊக்குவித்திடும் முக்கிய பருவம் இடைநிலைக் கல்விப் பருவம். மிக விரைவாக வளர்ந்துவரும் அறிவியல் உலகில் ஒரு மாணவன் தன்னையும் தகுதியுடையவனாக்கிக் கொள்ள (இன்றைய சூழலில்) அறிவியல் கல்விக்கும், கணிப்பொறி கல்விக்கும் முக்கிய இடம் தரவேண்டியது அவசியம். ஒரு மாணவனிடம் மறைந்து கிடக்கின்ற அரிய ஆற்றல்களை வெளிப்படச்செய்வதற்கு வாய்ப்பான முக்கிய பருவம், இடைநிலைக் கல்விப் பருவம். செயல்முறைப் பயிற்சியுடன் இணைந்து பெறுவதால், மாணவன் தன் திறனை வளர்த்துக் கொள்ளத் துணை செய்வது அறிவியல் கல்வி.

2.3 வளர்ந்து வருகின்ற நாடுகளில் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் கையாளப்படும் கணிப்பொறி முறையால், மனித வளத் தட்டுப்பாடின்றித் திட்டமிடுதலும் செயலாக்குதலும் நடைமுறையில் உள்ளன. இன்றைய மாணவர்களின் நுண்ணறிவு ஈர்ப்பு மேம்பாட்டால் நிறையக் கற்கவேண்டும், அறிய வேண்டும், தெளிய வேண்டும் என்ற ஆர்வத்தோடு பள்ளிகளுக்கு வருவதால், அதற்கேற்றவாறு திட்டமிட்டு



மாணவர்கட்கு வாய்ப்பளிக்க கணிப்பொறிக் கல்வி வழங்கப்படவேண்டியதாகிறது. கற்றல் - கற்பித்தல், செயல்முறைகளின் இணைந்த ஒரு கருவியாகக் கணிப்பொறியையும் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகும். படிப்படியாக அனைத்துப் பள்ளிகளிலும் கணிப்பொறியை நிறுவி, கற்பித்தல், கற்றல் நெறிமுறைகளோடு இணைந்த அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ற அடித்தளத்தை இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி நிலையில் அமைத்தாகவேண்டும்.

2.4 தொழிற்கல்வி பெறுவதால் சுயவேலை வாய்ப்பு உருவாக்கிக் கொள்ளவும், மற்ற தொழில் துறை நிறுவனங்களில், எளிதில் வேலை பெறவும் மாணவர்களை இளமையிலேயே ஆயத்தப்படுத்தவேண்டும். புதிய தொழிற்கல்விப் பாடங்களைப் புகுத்தி அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் அப்பாடப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டு, உரிய தரமான பயிற்சி வழங்க வேண்டும். மேல்நிலைக் கல்வியில் 1978 முதல் தொழிற்கல்விப் பாடப்பிரிவுகள் தொடங்கப்பெற்றன. இன்னும் சுமார் ஒரு இலட்சம் மாணவர்கள் பயிலுகின்ற நிலையிலும், அதனை முறைப்படுத்தப் போதிய இடவசதியுடன் பயிற்சிக் கருவிகள் வழங்குவதும், தகுதியான ஆசிரியர்களைப் பொறுப்பேற்கச் செய்வதும் தேவையாகின்றது. தொழில்நுட்பப் பயிலக மற்றும் தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களின் திறனுக்கு இணையாக மேல்நிலைக் கல்வி தொழிற் பாடப்பிரிவு மாணவர்களும் போதிய தரம் பெற அவசியமான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். பள்ளிகளின் அடிப்படை வசதிகளைப் பெருக்குவது, முக்கியக் குறிக்கோளாக வேண்டும். பெற்றோர், ஆசிரியர் கழகங்களின் துணையோடு கட்டட வசதிகள் மற்றும் கழிப்பறை வசதிகள் முதலானவை மேலும் செய்யப்பட வேண்டும்.

2.5 பள்ளிக் கல்வியானது, உயர் கல்விக்கு ஒரு படிக்கல், இந்த அடிப்படை நோக்கில் இந்த அரசு கீழ்க்காணும் கூறுகளுக்கு முக்கிய இடம் தந்துள்ளது.

(அ) பொருத்தமான பாடத்திட்டம் மூலம், கற்றல் - கற்பித்தல் செயல்முறைகளை உயிரோட்டமுடையதாக்குதல்.

(ஆ) பள்ளிக்குத் தேவையான ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு முறையாகக் கற்பிப்பதைச் சீர்படச் செய்தல்.

[1999 மார்ச் 31

(இ) அறிவியல் அறிவு வளர்ச்சியடைய உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகட்கு ஆய்வுக்கூட வசதிகள் செய்து தருதல்.

(ஈ) தொழிற்கல்விக்கு முக்கிய இடமளித்து அதில் சேரும் மாணவர் எண்ணிக்கையை உயர்த்துதல். அக்கல்வியினால் சுய வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொள்ளும் திறன் பெறச் செய்தல்.

(உ) அடிப்படை வசதி இல்லாத பள்ளிகளுக்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்துதல்; குறிப்பாகக் கழிப்பிட வசதி செய்து தருதல்.

(ஊ) பள்ளிகளில் கல்வி கற்பித்தல் சிறப்புற நடைபெற, கண்காணிப்பு ஆய்வுமுறைகளை முடுக்கிவிடுதல்.

(எ) பெற்றோர் ஆசிரியர் கழகங்களை ஊக்கப்படுத்தி, அவர்தம் ஒத்துழைப்பால் பள்ளி சீராக இயங்கத் துணை செய்தல்.

(ஏ) மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை நடத்தி நன்கொடைகள் மூலம் போதிய தளவாடங்கள், கட்டடங்கள், ஆய்வகக் கருவிகள் பெறுதல், நூலக வசதி பெருக்கல் ஆகியவற்றிற்கு வழிசெய்தல்.

(ஐ) ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பள்ளிகளிடையே பள்ளி இணைப்புத் திட்டம் செயற்படுத்தல்.

(ஒ) மாணவர்களுக்குத் தரமான கல்வி பயிற்றுவித்திட ஆசிரியர்களை ஊக்குவித்திடும் வழிகாணல்.

(ஓ) பள்ளியில் சேர்ந்து மகளிர் கல்வி பெறுவதை ஊக்குவித்தல்.

### 3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

கல்வி பயிற்றும் முறை, ஆசிரியரை மையமாகக் கொண்ட அடிப்படையில் தொடராமல் கல்வி பெறும் குழந்தையை மையமாகக் கொண்ட நோக்கத்தில் அமையவேண்டும். வகுப்பறைகளில் புதிய கல்வி நுட்பங்களை விளக்கும் கருவிகள் பயன்படுத்தப்பட்டு மாணவரின் கற்றல் ஆர்வத்தை தூண்டும் வகையில் கற்பிக்கும் பொழுது கல்வியில் மாணவருக்கு முழு ஈடுபாடு ஏற்படும் கல்வி பயனுடையதாகும். மாணவர்கட்கு பயிற்சி வழங்க அரசு அளித்து வரும் நிதி உதவி தவிர



1999 மார்ச் 31]

உள்ளூரில் கிடைக்கும் பலவகைப் பொருட்களையும் பயன்படுத்திப் பள்ளியைக் கல்வித்திறன் வளர்க்கும் காட்சிக்கூடமாக மாற்றவேண்டும். ஆசிரியர் பயிற்சிக் கல்வி இந்நோக்கத்தை எய்துவதற்கு ஏற்ற பயிற்சியாக அமையவேண்டும் என்னும் நோக்குடன் ஆசிரியர் பயிற்சி முறை அமைக்கப்பட்டுவருகிறது.

### 4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

வயதுவந்தோர் கல்விமுறை கல்லாமையை அகற்ற வழிவகுக்கிறது. முறையான பள்ளிக் கல்வி முறை செயல்பட்டாலும் பள்ளியில் சேராதவர்கள், இடையில் நின்றவர்கள் கல்வியறிவில் பயன் முழுமை பெறாதவர்களாக இருக்கின்றனர். பொருளாதார முன்னேற்றத்தின் பயன்களைத் துய்க்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ளவும் இயலாதவாறு முறையான கல்வித் திட்டத்திலிருந்து விடுபட்டவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் செயல்படுவது பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். தமிழகத்தில் எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 67.80 விழுக்காடாகும். மீதமுள்ள அனைவருக்கும், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் போன்ற நலிந்த பிரிவினருக்கும், மகளிருக்கும் கல்வியறிவை அளிப்பது அரசின் முக்கியக் குறிக்கோளாகும்.

### 5. அரசுத் தேர்வுகள்

மாணவர்கள் அடைந்துள்ள அறிவுத்திறனை அளவிடும் பொருட்டு கல்வி ஆண்டின் இறுதியில் ஒரு தேர்வினை நடத்துதல் இன்றியமையாததாகும். தேர்வு பலகாலமாக நடைபெற்றாலும்கூட, தேர்வு நடத்தும் முறையானது அவ்வப்போது காலத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கப்படுவது அவசியமாகும். மாணவர்களின் கல்வித் திறனை அளவிடுவதற்கு வாய்ந்த முறைகளுள் தேர்வு ஒரு சிறந்த அளவு கோலாக அமைகிறது. தேர்வு, மாணாக்கர்களின் புரிந்துகொள்ளும் திறனையும், பகுத்தறிந்து ஒப்பாய்வு செய்யும் திறனையும் கணக்கிடும் ஒரு கருவியாகவும் அமைகிறது. இவற்றை அடைவதற்கான செயல்முறையை செம்மைப்படுத்துவதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

### 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

கல்வித் தகுதியும், உரிய கற்பிக்கும் திறனும் கொண்ட ஆசிரியர்களைத் தெரிவுசெய்வது அவசியமாகும். திறமையான ஆசிரியர்களை முறையாகத் தெரிவுசெய்திட ஆசிரியர் தேர்வு வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் சட்டக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர்களையும் தெரிவு செய்யும் பணியும் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது. இடைநிலை ஆசிரியர் பணி தவிர்த்துப் பிற வகை ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமே தெரிவு செய்யப்படுகின்றனர். ஆசிரியர் பணிக்குத் தரமானவர்களைத் தெரிவு செய்வதில் ஒழுங்கீனங்கள் ஏதுமின்றி, கடுமையான வகையில் தெரிவு செய்வதற்கு ஏற்றவாறு இவ்வாரியத்தின் பணிகள் அமையப்பெற்றிருக்கும்.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

அனைத்துப் பள்ளி வகுப்புகட்கும் தேவைப்படும் நல்ல தரமான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகளைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மூலம் காலத்தில் தயாரித்து மாணவர்களுக்குக் குறைந்த விலையில் வழங்குவதும், ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதும் இவ்வரசின் நோக்கமாகும்.

## 8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டு மற்றும் இளைஞர் நல வளர்ச்சியை மேம்படுத்துவது அரசின் குறிக்கோளாகும். அதற்கென்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் உருவாகியுள்ள, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை

(அ) உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையில் பரவலான அளவில் ஊக்குவித்தல்;

(ஆ) விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மாவட்டத் தலைநகர்களில் உருவாக்குதல்;

(இ) மாநிலத்தின் வட்டாரத் தலைமை இடங்கள் அனைத்திலும் தேசிய அளவில் போட்டிகளை நடத்தும் அளவிற்குத் தகுதியான விளையாட்டு மையங்கள் அமைத்தல்;

(ஈ) மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே விளையாட்டுத் திறன்கொண்டவர்களைக் கண்டறிதல்;



(உ) திறன் கொண்ட விளையாட்டு வீரர்களைப் பயிற்சி மூலம் உருவாக்குதல்;

(ஊ) பல்வேறு விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் தனித்திறன் விளையாட்டுக் கழகங்களுக்கு நிதி மற்றும் இதர உதவிகளை வழங்குதல்.

## 9. பொது நூலகங்கள்

ஏராளமான மக்களுக்குக் குறைந்த செலவில் சிறந்த நூல்களைப் படிக்கும் வாய்ப்பு அளிப்பது என்பதே பொது நூலக இயக்ககத்தின் குறிக்கோள். ஊர்ப்புறங்களிலும் நூலகச் சேவையை வளர்த்தல் மூலம், நூலகம் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற புது மொழி உருவாகும் வண்ணம் நூலகத் துறையின் தொண்டு அமைய வேண்டும் என்பது அரசின் நோக்கம். மாவட்ட, கிளை நூலகங்களின் சேவை மக்களைச் சென்று அடைய வேண்டும் என்பதும், மக்களின் ஒத்துழைப்புடன் நூலக இயக்கம் வளர வேண்டும் என்பதும் நோக்கமாகக் கொண்டு அதற்கேற்பத் திட்டமிட்டு பொது நூலக இயக்குநரகம் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் புதிய கிளை நூலகங்கள் திறக்கப்படுவதுடன், நிதி நிலைக்கேற்ப நூலகங்களில் புதிய புத்தகங்கள் இடம்பெறச் செய்யப்படுகின்றன. கிளை நூலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுவதும் முக்கியமான பணியாக மேற்கொள்ளப்படுகிறது.

## திட்டங்கள்

### 1. தொடக்கக் கல்வி

**தொடக்கக் கல்வி இயக்கம்:**

1.1 தொடக்கக் கல்வி சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. வளர்ந்து வரும் நாடுகளிடையேயும் கல்வியறிவு மிகுந்துள்ள நாடுகளில் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்தியாவில் தொடக்கக் கல்விக்கு உரிய முனைப்பு இல்லாமை கவலையளிக்கக் கூடியது என்று அமர்த்தியா சென் போன்ற வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாடு சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் தொடக்கக் கல்வி அனைவருக்கும் சென்றடையவில்லை என்ற நிலையைச் சீரமைக்க வரும் ஆண்டு தொடக்கக் கல்வி இயக்கம் என்ற சிறப்புத் திட்டத்தை மேற்கொண்டு குறிப்பிட்ட கால அட்டவணையின்படி தொடக்கப் பள்ளிகளில் அனைத்துச் சிறாரையும் குறிப்பாக நலிந்த பிரிவினரின் குழந்தைகளை முழுமையாகச் சேர்ப்பதையும், அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் பள்ளிப்படிப்பில் நின்றுவிடாமல் காப்பதையும் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது.

1.2 கற்பதற்கேற்ற இனிய சூழ்நிலையை உருவாக்கும் அதே நேரத்தில் தொடக்கக் கல்வியின் அவசியத்தை மக்களிடையே பரப்புவதற்கு விழிப்புணர்ச்சி முகாம்கள் பள்ளி தொடங்குவதற்கு முந்தைய மாதம் நடத்தப்படும். உள்ளாட்சி நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள், கல்வியில் அக்கறை கொண்ட பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நாடெங்குமுள்ள மாணவ, மாணவிகளையும் வரும் ஆண்டு முழுமையாகச் சேர்ப்பதற்கு இந்த முகாம்கள் பயன்படுத்தப்படும். பள்ளி வயதிலுள்ள அனைத்துச் சிறுவர், சிறுமியர்களை முழுமையாகக் கணக்கெடுத்து அனைவரையும் இவ்வாண்டு பள்ளியில் சேர்க்கும் இயக்கமாகச் செயல்படுத்தப்படும்.

1.3 பள்ளிகளில் மாணவர்கள் பயில்வது இனிமையான அனுபவமாக அமைய மகிழ்ச்சியுடன் கற்றல் (Joyful Learning) போன்ற முறைகள் கடைப்பிடிக்கப்படும். பாட்டுகள், விளையாட்டுகள் போன்றவற்றின் மூலம் பாடத்தைக் கற்பிக்கும் முறை கைகொள்ளப்படும். அனைத்து தொடக்கப் பள்ளிகளிலும் ஒலி நாடாக்கள் இசைக்கும் கருவிகள் வழங்கப்பட்டு, ஆசிரியர் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையின் மூலம் எளிமையான, இனிமையான பாட்டுக்கள் கொண்ட ஒலி நாடாக்கள்





விநியோகிக்கப்படும். இதே போன்று தொலைக்காட்சி நிறுவனத்துடன் இணைந்து தொடக்கக் கல்விப் பாடங்களை ஒளிபரப்பச் செய்வதுடன், ஒளி நாடாக்கள் அனைத்து மாணவருக்கும் பயனளிக்குமாறு காண்பிக்கப்படும். இத்தகைய பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பள்ளியில் சேர்ந்த மாணவியர் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து பயிலும் சூழ்நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1.4 முழுமையான தொடக்கக் கல்வி அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப 1998-99 ஆம் கல்வியாண்டில் 312 புதிய தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கியதுடன், சமத்துவபுரம் உருவான கிராமங்களிலும் அப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 200 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. வரும் கல்வி ஆண்டுக்குள் 300 க்கும் அதிகமான மக்கள் தொகையுள்ள அனைத்து குக்கிராமங்களும் ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் எளிதில் செல்லக்கூடிய வகையில் ஒரு தொடக்கப்பள்ளியை பெற்றுவிடும். இதன் தொடர்ச்சியாக, இளம் மாணவர்கள் பள்ளிக்கு எளிதில் சென்றடையும் வகையில் வரும் ஆண்டில் தேவையான தொடக்கப் பள்ளிகள் தொடங்கவும், 150 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தவும் அரசு தீர்மானித்துள்ளது.

5 தொடக்க நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் நலனுக்காக, பள்ளிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது:

அ) தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க புதிய நெறிமுறைகளை அரசு வகுத்துள்ளது. அனைத்துத் தொடக்கப்பள்ளிகளிலும் குறைந்தது இரு ஆசிரியர்கள் நியமிக்க அரசு முடிவெடுத்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டு முதல் இது செயல்படுத்தப்பட்டுவருகிறது. இதனால் 1385 ஓராசிரியர் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளனர். இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே உள்ள தொடக்கப் பள்ளிகளில் மேலும் ஓர் ஆசிரியர் நியமனம் செய்வதற்காக 1602 கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஆ) தொடக்கப்பள்ளிகளில் முழுமையாக பள்ளி வயது சிறுவர், சிறுமியரைச் சேர்த்த பின்னர், அவர்கள் இடையில் நின்று விடாமல் இருக்க அரசு, பல்வேறு நடவடிக்கைகளை

எடுத்துவருகிறது. பள்ளிகளில் தொடர்ந்து படிக்க, ஊக்க உதவியாக முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தில் பயனடைவோருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல், ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடநூல்களை இந்த அரசு வழங்கியுள்ளது. இதன் மூலம் கூடுதலாக 12.8 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் பெற்றுள்ளனர். இதற்கு அரசு கூடுதலாக ரூ.5.6 கோடி செலவிட்டுள்ளது. இவ்வாண்டும் இத்திட்டம் தொடரும். இப்புத்தகங்கள் சென்ற இரண்டு ஆண்டுகளைப்போலவே, இவ்வாண்டும் கல்வி ஆண்டுத் தொடக்கத்திலேயே வழங்கப்படும்.

இ) 3060 தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டட வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொடக்கப் பள்ளிகளில் இன்னமும் 914 பள்ளிகளில் தகுந்த கட்டட வசதிகளுடன் வகுப்பறைகள் இல்லை எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றின் நிதி ஆதாரத்தைக் கொண்டு இவற்றுக்கான கட்டட வசதிகளை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஈ) இதுவரை 541 நடுநிலைப் பள்ளிகளுக்கு கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் ரூ. 248.39 இலட்சம் செலவில் 2112 நடுநிலைப் பள்ளிகளில் பெண்களுக்கான கழிப்பிட வசதிகள் செய்துதர அரசு அனுமதி வழங்கியுள்ளது.

உ) மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் செயல்படும் மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அப்பள்ளிகளில் பயன்படுத்த தேவைப்படும் எழுதுபொருள் இனங்களை வாங்குவதற்காக 3 ஆசிரியர்கள் உள்ள பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 300/-ம், 3 ஆசிரியர்களுக்கு மேல் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 500/-ம், 1996-97 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுவருகிறது. 1998-99 ஆம் ஆண்டு முதல் நகராட்சிப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.





1.6 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், கல்வியின் தரத்தை மேம்படுத்த காலியாக இருந்த அனைத்து இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பகப் பதிவு மூப்பின் அடிப்படையில் மட்டுமே இனவாரி சுழற்சி முறை கடைப்பிடிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

## ஆசிரியர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீடு

1.7 அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்த ஆசிரியர் பணிகளுக்கான இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக இம்மாநிலத்தில் இச்சமுதாயங்களைச் சார்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக் குறை இல்லை. எனினும், இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் இச்சமுதாயங்களைச் சார்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதிய அளவு இல்லை. இக்குறைபாட்டைத் தவிர்க்க, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் 3 மாத குறுகிய காலப் பயிற்சி அளித்து, நிரப்பப்படாமல் உள்ள இந்த இட ஒதுக்கீட்டில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பணி நியமனம் செய்ய அரசு அனுமதித்துள்ளது.

1.8 மாணவர்களின் அறிவியல் ஆற்றலை வளர்க்க, பயிற்சி அளிக்க, இடைநிலைக் கல்வி ஒரு முக்கியமான நிலையாக உள்ளது. தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் முறைகளின்படி சீர்செய்யப்பட்ட பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடுநிலைப் பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்கள் இடைநிலை ஆசிரியர்களால் சிறப்பாகக் கற்பிப்பதற்கு இயலாத நிலை உள்ளது. ஆகையால் நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்த முன்னோடியாக ஆறிலிருந்து எட்டாம் வகுப்பு வரையில் பணி ஓய்வு, பணித் துறப்பு, பதவி உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைப் பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்புவதற்கு இசைந்து, அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதிய ஏற்றமுறை வழங்கி, 8 ஆம் வகுப்பிற்குக் கற்பிக்க, வரும் ஆண்டில் 100 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 31

1.9 கடந்த 3 ஆண்டுகளில் தொடக்கக் கல்விக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:

| | 1996-97 | 1997-98 | 1998--99 | மொத்தம் |
|---|---|---|---|---|
| (அ) புதிய தொடக்கப் பள்ளிகள் | 85 | 168 | 312 | 565 |
| (ஆ) நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டவை | 21 | 41 | 200 | 262 |
| (இ) வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தரப்பட்ட பள்ளிகள் | 2149 | 1257 | 3060* | 6466 |
| (ஈ) இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டவை. (*கட்டப்பட்டுவருகின்றன) | 9887 | 8852 | 3799 | 22538 |

1.10 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள், கழிவறை வசதிகள், மின் இணைப்பு வசதிகள், தளவாடச் சாமான்கள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவதற்காக சுமார் ரூ. 20 கோடி அளவிற்கு 11வது நிதிக் குழுவின் பரிந்துரைக்காகச் செயற்குறிப்புகள் அனுப்பப்படவுள்ளன.

1.11 தொடக்கப் பள்ளிகளிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கவும், பள்ளிகளின் வளர்ச்சியில் முன்னேற்றம் காணவும், ஒரு மாவட்டத்தில் 3 பள்ளிகள் வீதம் சிறந்த பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து தகுதிக் கேடயங்கள் வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி 5-9-98 அன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவின்போது 87 சிறந்த பள்ளிகளுக்குத் தகுதிக் கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**தமிழ்வழிக் கல்வி**

1.12 தமிழகத்தில் மொழிச் சிறுபான்மையினருக்கான பள்ளிகள் தவிர, பிற பள்ளிகளில் தமிழ் மொழிப் பயிற்சி அனைவருக்கும் கற்பிக்கப்பட்டு வருகிறது. மழலை வயதினர் தாய்மொழிப் பற்றையும், பண்பாட்டையும் இழக்காமல் இருக்க பாடங்களைத் தாய்மொழியான தமிழ் மொழியில் கற்பிக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். குறிப்பாக மழலையர் பயிலும் பள்ளிகளில் பிறபாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிப்பதை மாற்றியமைக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடத்திட்டங்களில் அதாவது கணிதம், அறிவியல்,



1999 மார்ச் 31]

புவியியலும் சரித்திரமும் அடங்கிய சமூகவியல் ஆகிய மூன்று பாடங்களில் இரண்டையேனும் தமிழில் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு மட்டும் ஏற்பளிப்பது (Approval) என்று அரசு முடிவெடுத்துள்ளது. தமிழ்மொழி வழியில் கற்பிக்கும் பள்ளிகளுக்குப் பதிவுக் கட்டணத்தை அரசு பாதியாகக் குறைத்துள்ளது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களை வழங்க அரசு வழி செய்யும். ஏற்பு அளிக்கப்படாத பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அரசு அங்கீகரித்துள்ள பள்ளிகளில் மேல்வகுப்பில் சேர விண்ணப்பிக்கும்போது, அப்பள்ளிகளில் தேர்வு நடத்தி, அத்தேர்வுகளில் பெறும் தகுதி அடிப்படையிலேயே உரிய வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**வாழ்வொளித் திட்டம்**

1.13 தொடக்கப் பள்ளிகளில் பயிலும் இளம் சிறார்களின் உடல் நலம்பேணிக் காப்பதும் மிக அவசியமென அரசு கருதுகிறது. சிறுவயதில் சில நோய்களினால், பள்ளிப் படிப்பில் பாதிப்பு ஏற்படுவதுடன், பிற்காலத்தில் பெரிய நோய்களுக்கு ஆளாகும் வாய்ப்பு உள்ளதென்பதை உணர்ந்து அரசு இதைத் தடுப்பதற்காகப் பள்ளிகளில் 'வாழ்வொளித் திட்டத்தை' (மருத்துவக் கண்காணிப்பு) வரும் ஆண்டு முதல் தீவிரமாகச் செயல்படுத்தும். ஒவ்வொரு கிராமத்திலும் கிராமப்புற சுகாதாரத் திட்டத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலரும் வாரத்தில் ஒரு நாள் குறிப்பாக வியாழக்கிழமைதோறும் பள்ளிகளுக்குச் சென்று மாணவ, மாணவியர்களைப் பரிசோதித்து உடல் நலம் குறித்துப் பல்வேறு சோதனைகளையும் செய்து தேவையிருப்பின் பொதுச் சுகாதார நிலையத்திற்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்வர். நோய்களின் முக்கிய அறிகுறிகளைக் கண்டறிந்து உடல்நலச் சோதனைக்கு வரும் சுகாதார அலுவலர்களுக்குத் தகவல் அளிப்பதற்காக, ஆசிரியர்களுக்குச் சிறப்பாக நோய் அறிகுறி பற்றிய பயிற்சி அளிக்கப்படும். சுகாதார வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதற்குத் தேவையான பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். வைட்டமின் ஏ சொட்டு மருந்து அளித்தல், வயிற்றுப் புழுக்களை நீக்குதல் போன்றவற்றிற்குத் தேவையான பணிகளும் நடைபெறும்.

**மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்**

1.14 (இத்திட்டம் குறித்த ஒரு விளக்கக் குறிப்பேடு தனியாக வைக்கப்பட்டுள்ளது.)

[1999 மார்ச் 31

## 2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

### 2.1 அடிப்படை வசதி செய்து தருதல்

அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, அறிவியல் ஆய்வக வசதிகள் போன்றவை ஏற்படுத்தித்தர முன்னுரிமை அளித்து இவ்வரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அனைத்துப் பள்ளிகளுக்கும் கட்டட வசதி இன்றியமையாத அடிப்படைத் தேவையாக உள்ளது. இதற்காக 1996-97 ஆம் ஆண்டில், 138 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 5.48 கோடி செலவிலும், 1997-98 ஆம் ஆண்டில் 297 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 10.02 கோடி செலவிலும் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 420 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 24.99 கோடி அரசு அனுமதித்துள்ளது. 1997-98 ஆம் ஆண்டுவரை அனுமதிக்கப்பட்ட பணிகள் அனைத்தும் மார்ச், 1998-க்குள்ளும், எஞ்சியுள்ள பணிகள் ஜூலை, 1999-க்குள்ளும் முடிக்கப்பட்டுவிடும். 1-1-1999 நிலவரப்படி அடிப்படை வசதிகள் செய்து தருதல் என்பதைப் பொறுத்தமட்டில் 2233 அரசு உயர்நிலை/ மேல்நில்லப் பள்ளிகளுக்கு. 8162 கூடுதல் வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. இதற்காக சுமார் ரூ. 200 கோடி தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வகுப்பறைக் கட்டடங்களைக் கட்டுவதற்கான நிதி ஆதாரங்களைப் பல வகைகளிலும் திரட்டுவதற்கு அரசு முயற்சித்துவருகிறது.

.2 மாணவியர் பயிலும் பள்ளிகளில் கழிவறை வசதி ஏற்படுத்துவதற்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 144 இலட்சம் செலவில் 200 பள்ளிகளில் கழிவறை வசதி செய்து தரப்பட்டுள்ளது. ரூ. 160 இலட்சம் செலவில் மேலும் 200 பள்ளிகளுக்குக் கழிவறை வசதி செய்துதர 1998-99 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1-1-1999 நிலவரப்படி 2632 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் கழிவறை வசதிகள் செய்துதர வேண்டியுள்ளது.

### பொருத்தமான பாடத் திட்டம் மூலம் கற்றல்-கற்பித்தல் செயல்முறைகளை உயிரோட்டமுடையதாக்குதல்

.3 கற்றல்-கற்பித்தல் சிறப்பாக அமைய வேண்டுமெனில் அந்தந்த வகுப்புக்குப் பொருத்தமான சிறந்த பாடத்திட்டம் மிகவும்



1999 மார்ச் 31]

இன்றியமையாதது. இதனைக் கருத்திற்கொண்டு 1 முதல் 12 முடிய உள்ள வகுப்புகளில் பின்பற்றப்படும் பாடத்திட்டத்தைச் சீரமைத்திடக் கீழ்க்கண்ட கோட்பாடுகள் ஏற்கப்பட்டுள்ளன:

அ) தமிழக அரசின் கொள்கை மற்றும் வழிகாட்டுதல்.

ஆ) 1986 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை அடிப்படை.

இ) யஷ்பால் கல்விக் குழுவின் அறிக்கையின்படி சுயசிந்தனைத் திறன் வளர்த்திட ஏதுவாகப் பள்ளிக் குழந்தைகளின் பாடச் சுமைகளைக் குறைத்தல்.

ஈ) பாடத்திட்ட வளர்ச்சி குறித்து தேசியக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் நெறிமுறை தழுவல்.

உ) முனைவர் மால்கம் ஆதிசேஷய்யாவின் அறிக்கையின்படி மாணவர் கற்கும் திறனுக்கேற்ப கற்பிக்கும் வழிமுறையை ஆசிரியர்கள் கைகொள்ளச் செய்தல்.

ஊ) அண்டை மாநிலங்களின் பாடத்திட்டம். மத்திய வாரிய பள்ளிக் கல்விப் பாடத்திட்டம் ஆகியவற்றின் பாடத்திட்டத்தோடு ஒப்பாய்வு செய்தல்.

2.4 இதனடிப்படையில் 1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடத்திட்ட வரைவினை அரசு ஏற்று அனுமதி வழங்கியுள்ளது. திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் பாடநூல்கள் முறையாகத் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென உயர்மட்ட வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. புதுப்பிக்கப்பட்ட பாடத்திட்டத்தினை யொட்டிப் புதிதாகத் தயாரிக்கப்பட்ட பாடநூல்கள் 1995-1996 ஆம் ஆண்டில் 1, 6, 11 வகுப்புகளிலும், 1996-97 ஆம் ஆண்டில் 2, 7, 9 மற்றும் 12 ஆம் வகுப்புகளிலும், 1997-98 ஆம் ஆண்டில் 3, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் புதிய பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்ட 4ஆம் வகுப்பிற்கான பாடப்புத்தகங்கள் கற்பிக்கப்பட்டன. வரும் ஆண்டில் 5ஆம் வகுப்புக்கான புதிய பாடத்திட்டப்படி தயாரித்த பாடநூல்கள் பயிற்றுவிக்கப்படும். புதிய பாடத்திட்டப்படி, பாடநூல்கள் தயாரித்து வெளியிடுவது இத்துடன் நிறைவு பெற்றுவிடும்.

2.5 தற்போதுள்ள புத்தகங்களில் உள்ள சுமையைக் கண்டறிந்து குறைப்பதற்குப் பரிந்துரை வழங்க முன்னாள் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிவஞானம் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மாணவர்கள், பெற்றோர், கல்வியாளர் ஆகியோரைக் கலந்து, உரிய பரிந்துரைகளை அளித்துள்ளது. இவற்றை ஆய்வு செய்து இப்பரிந்துரைகளை ஏற்று 1,2,3,6 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கான பாடநூல்களில் சில திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான திருத்தப்பெற்ற பாடநூல்கள் 2000-2001 ஆம் ஆண்டு மாணவர்கள் பயிலுமாறு வெளியிடப்படவுள்ளது.

### மெட்ரிகுலேசன் பள்ளி பத்தாம் வகுப்புப் புத்தகங்கள்

2.6 ஒரே மாதிரியான தரமான பாடநூல்கள் நியாயமான விலையில் கிடைக்கும் வகையில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்புப் பாடநூல்கள் அனைத்தையும் பதிப்பிப்பதை 1997-98 ஆம் ஆண்டு முதல் அரசுரிமையாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பாடநூல்களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்குகின்றது. இதனால் முன்னர் தனியார் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட பாடநூல்களின் விலைகளைக் காட்டிலும், கணிசமான அளவு குறைந்த விலையில் அந்தப் பாடப் புத்தகங்கள் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

### கல்வி வசதிகளை விரிவாக்குதல்

#### அ) உயர்நிலைப் பள்ளிகள்

2.7 பெரும்பான்மையான குடியிருப்புப் பகுதிகளிலிருந்து 5 கி.மீ தூரத்திற்குள் உயர்நிலைப் பள்ளி வசதி ஏற்படுத்தப்பட வேண்டுமென அரசு விழைகிறது. குடியிருப்புப் பகுதிகளின் தேவைக்கேற்ப 14-16 வயது நிலையில் உள்ள மாணவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்ப்பதற்கு ஏற்ற வழிவகை செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் 80 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும் 80 நடுநிலைப் பள்ளிகள் நிலை உயர்த்தப்படவுள்ளன. அரசு கொள்கையின்படி ஊரக வளர்ச்சியை முதன்மை நோக்கமாகக் கொண்டு கிராமப் புறங்களில் புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகள் திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.



#### ஆ) மேல்நிலைப் பள்ளிகள்

2.8 1998-99 ஆம் ஆண்டில் 41 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. வரும் ஆண்டில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் 50 அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### அறிவியல் கல்வி முன்னேற்றம்

2.9 அறிவியல் கல்வி முன்னேற்றத் திட்டத்தின்படி மாநிலத்திலுள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகம் அமைக்கப்பட வேண்டும். 1-1-1999 ஆம் நாள் நிலவரப்படி 1230 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வகக் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில், 1998-99 ஆம் ஆண்டுவரை நிலை உயர்த்தப்பட்ட/திறக்கப்பட்ட அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுவிட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 173 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.25.60 கோடி செலவில் ஆய்வுக்கூடங்கள் கட்ட அரசு அனுமதித்துள்ளது. அறிவியல் ஆய்வகக் கட்டடங்களைப் பொறுத்தமட்டில், 1998-99 ஆம் ஆண்டு வரை நிலை உயர்த்தப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 40 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ.100 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வகக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டிலும், இதேபோன்று 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு, ரூ. 60 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன.

### கணினிக் கல்வி

2.10 மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினிப் பயிற்சியும் அறிவும் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது அரசின் கொள்கையாகும். கணினியியலில் திறமை பெற்றவர்களை உருவாக்கும் நோக்கத்தோடு அனைத்து 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் 11, 12 வகுப்புகளில் கணினியியல் விருப்பப் பாடமாக அறிமுகப்படுத்தப்படும். இதனால் ஒவ்வொரு பள்ளியிலும் 40 மாணவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 48,000 மாணவர்கள் ஆண்டுதோறும் மென்பொருள் துறையில் வேலை பெறும் வாய்ப்பிற்குத் தகுதியுடையவர்களாவார்கள். நிபுணர்களின் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் பாடமுறையை, கணினியியல்

கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற, பெயர் பெற்ற நிறுவனங்கள் மூலம், பள்ளிகளில் கணினிகளை நிறுவி, கற்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். தகவல் யுகமாக மாறிவரும் இவ்வேளையில், அரசின் முனைப்பான இந்த முயற்சிகள், தமிழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்புள்ள நல்ல எதிர்காலத்தை உருவாக்குமென அரசு கருதுகிறது.

**போதிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கற்றல் முறைகளைச் சீர்படச் செய்தல்**

2.11 பள்ளிகளில் கற்பித்தல் பணி பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டும் அனைத்துப் பள்ளிகளிலும் வேலை நாட்களில் கற்பித்தல் தவறாமல் நடக்கவும், பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல் மிகவும் தேவையானதாகும். இவ்வாண்டு 3684 ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அரசு, உள்ளாட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றின் ஆசிரியர் பணியிடங்களை நிர்ணயிக்க நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு நெறிமுறைகளை வகுத்துள்ளது. மேல்நிலைப் பள்ளிகளுக்கு முன்னர் இருந்ததுபோல் இரண்டு பிரிவு பாடத்திட்டத்திற்கேற்ப கூடுதல் ஆசிரியர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதே வகையில் உயர்நிலைப் பள்ளிகளிலும் கூடுதல் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 420 முதுகலை ஆசிரியர்களும், 295 பட்டதாரி ஆசிரியர்களும், 217 தமிழாசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள்.

2.12 மாணவர்களின் அறிவியல் ஆற்றலை வளர்க்க, பயிற்சி அளிக்க இடைநிலைக் கல்வி ஒரு முக்கியமான நிலையாக உள்ளது. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் முறைகளின்படி இயற்றப்பட்ட பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 6,7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் அறிவியல் மற்றும் கணக்குப் பாடங்களை இடைநிலை ஆசிரியர்கள் சிறப்பாகக் கற்பிப்பது கடினமாக உள்ளது. ஆகையால் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடுநிலைப் பிரிவுகளில் கல்வியின் தரத்தை உயர்த்த முன்னோடியாக ஆறிலிருந்து எட்டாம் வகுப்பு வரையில் பணி ஓய்வு, பணித் துறப்பு, பதவி உயர்வு ஆகியவற்றால் ஏற்படும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை அறிவியல் மற்றும் கணித பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பலாம் எனவும், அவர்களுக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதிய ஏற்றமுறை வழங்கி 8-ஆம் வகுப்பிற்குக் கற்பிக்க நியமிக்கலாமெனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.





இதன் முதற்கட்டமாக, வரும் ஆண்டில் 100 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தப்படவுள்ளன.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி 'நிலையில் தொழிற் கல்வி**

2.13 மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது. விவசாயம், மனையியல், வணிகவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல், பொதுச் சுகாதாரம் மற்றும் இதர பாடங்கள் என்ற 6 இனங்களில் 66 பாடங்கள் மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்கல்வித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 2943 மேல்நிலைப் பள்ளிகளில், 1389 பள்ளிகளில் தொழிற்கல்விப் பாடம் செயல்படுத்தப்படுகிறது. மேனிலை வகுப்புகளில் பயிலும் 6.94 இலட்சம் மாணவர்களில், 1.09 இலட்சம் மாணவர்கள், அதாவது 15.70 விழுக்காடு மாணவர்கள் தொழிற்கல்வி முறையில் பயின்று வருகின்றனர். இதில் 3,366 தொழிற்கல்விஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேவையான நிலமுடைய பள்ளிகளில் வேளாண்மை தொடர்புடைய தொழிற்கல்விப் பாடத்திட்டம் தொடங்க கருத்துரு பரிசீலனையில் உள்ளது. உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் வேளாண்மை பற்றிய பாடங்களை நடத்தவும் திட்டமிடப்பட்டுளளது.

**பள்ளி நூலக வசதி**

2.14 பள்ளி மாணவர்கள் தங்களது பொது அறிவை வளத்துக்கொள்ளவும், பாடத்திட்டம் தொடர்பான தமது அறிவுத் திறமையை மேம்படுத்திக்கொள்ளவும் பள்ளி நூலகம் மிகவும் பயன்தரக்கூடிய ஒன்று. தமிழகத்திலுள்ள அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும் நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்கு ஆகும் மொத்த செலவினத்தை அரசே ஏற்பது என்பது இயலாது. மொத்த செலவினத்தில் அரசு 50 விழுக்காடும், பொதுமக்கள் பங்குத் தொகையாக 50 விழுக்காடும் என்னும் இணை மானியத் திட்டத்தின்படி முன்வரும் பள்ளிக்கு ரூ. 50,000 மதிப்புள்ள நூலகப் புத்தகங்கள் வாங்கி வழங்கப்படும். முதற்கட்டமாக 1998-99ஆம் ஆண்டில் 200 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 50,000 வீதம் ரூ. 100 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று வரும் ஆண்டிலும் ரூ. 100 இலட்சம் மதிப்பில் நூலகப் புத்தகங்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 31

### மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகங்கள்

2.15 பள்ளிகளில் தரமான கல்வி அளிக்க வேண்டுமென்றால், மாவட்ட ஆய்வு அலுவலர்கள் செயற்பாட்டை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். இதைக் கருத்திற்கொண்டு 29 முதன்மைக் கல்வி அலுவலகங்களிலும் கணிப்பொறிகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

### பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் செயற்பாடுகளை முறைப்படுத்துதல்

2.16 1994-95 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு சங்க விதிகளின்படி பதிவு செய்யப் பெற்ற சங்கங்களாக பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் இயங்கி வருகின்றன. பள்ளியின் கல்வித் தரத்தை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைப்பதற்குப் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஒரு சிறந்த கட்டமைப்பாக விளங்குகின்றது. இந்த அமைப்பின் நோக்கமாவன:

(அ) பள்ளி வயது எய்திய எல்லாக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதற்கு வழி செய்தல்.

(ஆ) படிப்பைத் தொடராமல் பள்ளியை விட்டு இடையில் நின்றுவிடும் குழந்தைகளைப் பள்ளியில் தக்க வைப்பதற்குத் துணையாகும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

(இ) கல்வித் தரமும் - மாணவர் திறமும் வளர்வதற்குரிய கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கு உதவுதல்.

2.17 இத்தகைய பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் பள்ளி நலன் கருதி பொதுமக்களிடமிருந்து பள்ளி வளர்ச்சிப் பணிகளுக்காக நன்கொடை திரட்டும் உரிமை பெற்றவை. பொதுமக்களிடமிருந்து அசையும், அசையா சொத்துக்களை நன்கொடையாகப் பெற்று, அடிப்படைத் தேவைகளாகிய கட்டடங்களையும், சுற்றுச் சுவர்களையும் அமைத்துத் தருவதிலும், இதர வசதிகளாகிய மின்சாரம், குடிநீர், கழிப்பிடம் முதலியவற்றை ஏற்படுத்தித் தருவதிலும், ஆய்வகத்திற்காகப் பொருள்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கி வழங்குவதிலும் பெற்றோர் ஆசிரியர் கழகங்கள் முன்னின்று செயலாற்றி வருகின்றன. மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு எழுதுவோர்க்கு பயன்தருமாறு இலவசப் பயிற்சி வகுப்புகள், 1996 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோர் ஆசிரியர் கழகம் நடத்தி வருகிறது. மாணவர்களின் நலனுக்காக மாணவர் கையேடு



1999 மார்ச் 31]

ஒன்றினை வெளியிட்டு வருகிறது. புதிய பாடத்திட்டத்தின்கீழ் 1999 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்வு எழுதவிருக்கும் உயர்நிலை, மேல்நிலை இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வினா வங்கி ஏடுகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டுள்ளன.

### பள்ளிச்சீரமைப்பு மாநாடுகளை நடத்துதல்

2.18 தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி மேம்படுவதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளான விளையாடுமிடம், கட்டடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, கற்பிக்கும் கருவிகள், விளையாட்டுக் கருவிகள் முதலான தேவைகளைப் பூர்த்தி செய்ய பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்தும் திட்டம் வழி செய்கிறது. இந்த வசதிகளைப் பூர்த்தி செய்ய பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன. இத்திட்டத்தை முழு ஆர்வத்துடனும், முழு ஈடுபாட்டுடனும் வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டுமென அனைத்து கல்வித் துறை அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். 1997-98 ஆம் ஆண்டில் 6 மாவட்டங்களில் சீரமைப்பு மாநாடு நடத்தப்பட்டு ரூ. 39.68 கோடி மதிப்புள்ள சொத்துக்களும், 1998-99 ஆம் ஆண்டில் 5 மாவட்டங்களில் இம்மாநாடு நடத்தப்பட்டு ரூ. 46.57 கோடி மதிப்புள்ள சொத்துக்களும் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளன. இது வரும் ஆண்டுகளிலும் விரிவாகச் செயற்படுத்தப்படும்.

1997-98

| மாவட்டம் | அசையும் சொத்து | அசையாச் சொத்து (ரூபாய் கோடியில்) | மொத்தம் |
|---|---|---|---|
| மதுரை | 1.92 | 7.41 | 9.33 |
| நீலகிரி | 0.11 | 0.19 | 0.30 |
| கோயம்புத்தூர் | 3.58 | 13.24 | 16.82 |
| இராமநாதபுரம் | 0.96 | 8.31 | 9.27 |
| பெரம்பலூர் | 0.52 | 2.77 | 3.29 |
| புதுக்கோட்டை | 0.11 | 0.56 | 0.67 |
| மொத்தம் | 7.20 | 32.48 | 39.68 |

[1999 மார்ச் 31

1998-99

| மாவட்டம் | அசையும் சொத்து | அசையாச் சொத்து (ரூபாய் கோடியில்) | மொத்தம் |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | 1.12 | 5.16 | 6.28 |
| கரூர் | 1.35 | 2.90 | 4.25 |
| திருநெல்வேலி | 2.74 | 12.26 | 15.00 |
| கன்னியாகுமரி | 0.73 | 7.15 | 7.88 |
| தூத்துக்குடி | 1.93 | 11.23 | 13.16 |
| மொத்தம் .. | 7.87 | 38.70 | 46.57 |

**பள்ளி இணைப்புத் திட்டம்**

2.19 1976 ஆம் ஆண்டில் காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2 ஆம் நாள் பள்ளியின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் சீரிய நோக்கத்தின் பொருட்டு எல்லாக் கல்வி மாவட்டங்களிலும் பள்ளிக் கல்வி இணைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 10 முதல் 20 தொடக்கப் பள்ளிகளும், 3 அல்லது 4 நடுநிலைப் பள்ளிகளும் தாங்களே மனமுவந்து ஒன்றாக இணைந்து, கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடு, அப்பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியின் தொடர்போடு செயல்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியும் மற்றொரு பள்ளியோடு தொடர்பு கொண்டு கலந்தாலோசித்து, கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டும். பள்ளி இணைப்புத் திட்டத்தில் உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் தலைவராகவும் நடுநிலைப் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் உறுப்பினர்களாகவும் இருந்து வருவர். இதேபோன்று நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் துணைக் குழுவின் தலைவராகவும், தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியர் உறுப்பினராகவும் இருப்பர்.



1999 மார்ச் 31]

**பள்ளி இணைப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள்**

2.20 (அ) தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்தி அம்மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயில்வதற்கான ஆர்வத்தையும் திறமையையும் வளர்ப்பதே பள்ளி இணைப்புத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

(ஆ) கல்வியின் வளர்ச்சிக்கு, உரிய திட்டங்கள் தீட்டி, தகுந்த முறையில் செயற்படுத்துவது.

(இ) பள்ளிகள் தனித்து இயங்குவதைத் தவிர்த்து மற்ற பள்ளிகளோடு இணைந்து நல்ல முடிவுகளை எடுத்து, கல்வி கற்பதில் நல்ல ஊக்கத்தினை மாணவர்களிடம் ஏற்படுத்துவது.

இத்திட்டத்தின் மூலம் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள அறிவியல் ஆய்வக வசதிகளையும், நூலகம், விளையாட்டு மைதானம், ஒலி-ஒளிக் கருவிகள், சிறப்பாசிரியர்கள் பணிகளையும் அருகிலுள்ள இவ்வகையான வசதிகள் இல்லாத பள்ளி மாணவர்களும் பயன்பெறத் தக்க வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குத் தரமான கல்வி அளிக்க வழிசெய்யும் திட்டங்கள்**

2.21 8 முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியரின் கல்வியை மேம்படுத்தும் வகையில் சிறப்பு மேற்பார்வைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி வேலை நாட்களில் பள்ளி நேரம் முடிந்த பிறகு, மாலை வேலைகளில் ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்களில் சிறப்புப் பயிற்சிகள் தரப்படுகின்றன. இத்திட்டம், தற்போது 625 உயர்நிலைப் பள்ளிகளிலும், 375 மேல்நிலைப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், வீட்டில் போதுமான வசதிகள் இல்லாத இதர மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவுவதற்கென்று பல பள்ளிகளில், பகல் உணவு இடைவேளையின் போதும், மாலை நேரங்களிலும் ஆசிரியர்களால் தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டம், ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் திங்கள் முதல் பிப்ரவரி திங்கள் முடிய மேல்நிலைப் பள்ளிகளில் 8 ஆசிரியர்களாலும், உயர்நிலைப் பள்ளிகளில் 3 ஆசிரியர்களாலும், அந்தந்தப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென அரசு இவ்வாண்டு ரூ.17

இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

**பள்ளி மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு**

2.22 மேல்நிலைக் கல்வி நிலையில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினச் சமுதாயத்திற்குப் பள்ளிச் சேர்க்கையில் இட ஒதுக்கீடு முறை செயற்படுத்தப்பட்டு வருகிறது. உயர்நிலைப் பள்ளி நிலையில் இச்சமுதாய மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கை இட ஒதுக்கீடு விழுக்காட்டைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது.

**திறமை மிக்க கிராமப்புற மாணவ மாணவியர்க்கு ஊக்க பரிசுத் தொகை வழங்குதல்**

2.23 கிராமப்புறங்களில் பயிலும் படிப்புத் திறன் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் திறன்காண் தேர்வு முறையைத் தமிழக அரசு செயற்படுத்தி வருகிறது. கிராமப் பகுதியில் 8 ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்க்கு ஆண்டுதோறும் அரசுத் தேர்வு இயக்குநரால், மே திங்களில் திறமைகாண் தேர்வு நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும், திறமைமிக்க 50 மாணவர்களும், 50 மாணவியரும் ஆக 100 பேர் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒவ்வொருவருக்கும், தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு, 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் ஆண்டுதோறும் ரூ.1000 வீதம் படிப்பதற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு இதற்கென ஆண்டுக்கு ரூ. 1 கோடி செலவிடுகிறது.

**பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் முதல்நிலை பெறும் 3 மாணவர்களுக்குச் சலுகை**

2.24 மாணவர்களின் படிப்பு ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அரசு இப்புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு மேல்நிலைப் படிப்பு முடிக்கும் வரை ஆகும் செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். இதே போல் மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மூன்று மாணாக்கர்களுக்கு உயர்கல்விக்கான செலவை (மருத்துவம், பொறியியல் முதலான தொழிற்கல்விச் செலவு உட்பட அனைத்தையும்) அரசே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டம் 1996-97 ஆம் ஆண்டிலிருந்து தமிழக முதல்வர் கலைஞர் அறிவித்தவாறு



நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1997-98 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மாவட்டத்தின் முதல் மூன்று மாணவர்களுக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டு மாவட்ட அளவிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு 101 மாணவர்களுக்குக் கல்லூரிப் படிப்பிற்கும், 126 மாணவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிக்கும் படிப்புதவித் தொகையாக ரூ.18 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**சாரணர் இயக்கம்**

2.25 தமிழ்நாட்டில், 3,430 பள்ளிகளில் சாரணர் இயக்கம் நடைபெற்று வருகிறது. இதில் 74,500 சாரணர்களும், 43,889 சாரணியர்களும் சாரணர் பயிற்சி பெறுவதுடன் நாட்டின் சமூக நலப்பணிகளில் பங்கேற்றுத் தொண்டாற்றி வருகின்றனர். திறமையான 2000 சாரண, சாரணியர்களுக்கு, 1998-99 ஆம் ஆண்டு முதல் "இராஜ்ய புரஸ்கார்" விருது வழங்கப்பட்டு வருகிறது. இதற்கென, அரசு ஆண்டுதோறும் ரூ.5 இலட்சம் செலவிடுகிறது.

**மகளிர் கல்வி**

2.26 மகளிர் கல்வி கற்பதை ஊக்கப்படுத்துவதற்காக அரசு பல்வகை நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் உரிமை வாழ்வுக்கு இன்றியமையாத சம உரிமையும், சமூக நீதியும் மகளிருக்குக் கல்வி அளிப்பதன் மூலம் எய்தலாகும். மகளிருக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதால் பெண்கள் கல்வி பெறுவதில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 30-9-1998 நாள் நிலவரப்படி 75.44 இலட்சம் மொத்த பள்ளி வயது பெண் குழந்தைகளில் 58.95 இலட்சம் பெண்கள் கல்வி கற்று வருகின்றனர். பள்ளிகளில் மகளிர் சேர்க்கை 78.14 விழுக்காடாகும். பல்வேறு மகளிர் கல்வி நலத்திட்டங்களின் பயனாக பெண்களின் கல்வித் திறனிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, 1998 மார்ச் திங்களில் நடைபெற்ற கீழ்க்கண்ட பொதுத் தேர்வுகளில் பெண்களின் தேர்ச்சி விழுக்காட்டில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது :

| | தேர்வு விழுக்காடு | |
|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் |
| பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு (பத்தாம் வகுப்பு) | 61 | 69 |
| மேல்நிலை வகுப்புத் தேர்வு (+2 வகுப்பு) | 79.33 | 87.6 |

[1999 மார்ச் 31

2.27 அதிக எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மாணவர்களைச் சேர்த்துப் பயிலச் செய்யவும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனப் பெண்கள் கல்வி கற்கச் செய்யவும், பணியாற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், 6 முதல் 8, 9 மற்றும் 10 ஆம் வகுப்புக்களில் முறையே 11-14 மற்றும் 14-16 வயதுப் பிரிவுகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மாணவர்களை அதிக அளவில் பள்ளிகளில் சேர்த்து தொடர்ந்து படிக்க வைக்கும் முதல் 3 தலைமையாசிரியர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊக்கப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. அந்த ஊக்கத் தொகை விவரம்:

| | வகுப்புகள் 6 - 8 | வகுப்புகள் 9 - 10 |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.500/- | ரூ.500/- |
| இரண்டாம் பரிசு | ரூ.300/- | ரூ.300/- |
| மூன்றாம் பரிசு | ரூ.200/- | ரூ.200/- |

### ஆசிரியர் ஊதிய விகித மாற்றம்

2.28 தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களின் நீண்ட நாளைய நிலுவையிலுள்ள கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு கீழ்க்கண்டவாறு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் தனி ஊதியத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ600 வீதமும், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மாதம் ரூ.500 வீதமும் தனி ஊதியம் 1-9-1998 முதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் குழுவின் பரிந்துரையின்படி இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களின் ஊதிய விகிதம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது :

| | 6-வது ஊதியக் குழு பரிந்துரையின்படி | ஒரு நபர்க் குழு பரிந்துரையின்படி |
|---|---|---|
| இடைநிலை ஆசிரியர்கள். | ரூ.4000-6000 | ரூ.4500-7000 |
| பட்டதாரி | ரூ.5000-8000 | ரூ.5500-9000 |



1999 மார்ச் 31]

| | 6-வது ஊதியக் குழு பரிந்துரையின்படி | ஒரு நபர்க் குழு பரிந்துரையின்படி |
|---|---|---|
| ஆசிரியர்கள். | ரூ.5900-9900 | ரூ.6500-10500 |
| முதுகலை ஆசிரியர்கள் | | |
| தலைமை ஆசிரியர்கள் (தொடக்கப் பள்ளி) | ரூ.5000-8000 | ரூ.5300-8300 |
| தலைமை ஆசிரியர்கள் (நடுநிலைப் பள்ளி) | ரூ.5500-9000 | ரூ.5900-9900 |

### உடற்கல்வி

2.29 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்குப் பிற பாடங்களைப் போல் உடற்பயிற்சிக் கல்வியும் வழங்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் உடற்கல்வி போதிக்க உயர்பயிற்சியில் முதுகலைப் படிப்பில் தேர்ச்சி பெற்ற உடற்கல்வி இயக்குநர்களையே நியமிக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மொத்தமுள்ள 868 பணியிடங்களில் இதுநாள் வரை 744 நிலை-2 உடற்கல்வி இயக்குநர் பணியிடங்கள் நிலை-1 பணியிடங்களாக உயர்த்தப்பட்டுள்ளன.

2.30 பள்ளி மாணவர்களிடையே விளையாட்டிலும், போட்டி விளையாட்டுகளிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும், உரிய பருவத்தில் திறமையானவர்களைக் கண்டறியும் பொருட்டும், பல்வேறு நிலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது அவசியமாகும். இதனைக் கருத்திற்கொண்டு பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் விளையாட்டு மற்றும் போட்டிகளை மேம்படுத்த மத்திய அரசு 1-4-98 முதல் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் மூன்று நிலைகளில் இப்போட்டிகள் நடத்தப்படும்.

2.31 கடந்த 3 ஆண்டுகளில் இடைநிலை/மேல்நிலைக் கல்விக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு: [1999 மார்ச் 31

| | 1996-97 | 1997-98 | 1998-99 | மொத்தம் |
|---|---|---|---|---|
| (அ) நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டவை. | 99 | 71 | 80 | 250 |
| (ஆ) உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டவை. | 81 | 80 | 41 | 202 |
| (இ) கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்ட பள்ளிகள். | 138 | 297 | 420* | 855 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) | 5.48 | 10.02 | 24.99 | 40.49 |
| (ஈ) கழிவறை வசதி ஏற்படுத்தித் தரப்பட்ட பள்ளிகள். | - | 200 | 200 | 400 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) | - | 1.40 | 1.60 | 3.00 |
| (உ) அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் ஏற்படுத்தித் தரப்பட்ட பள்ளிகள். | 170 | 119 | 373* | 662 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்). | 3.49 | 10.00 | 25.60 | 39.09 |
| (ஊ) அறிவியல் கருவிகள் வழங்கப்பட்ட பள்ளிகள். | 250 | 714 | 240 | 1204 |
| அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்). | 1.31 | 3.37 | 1.00 | 5.68 |
| (எ) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் நிரப்பப்பட்ட ஆசிரியர் காலிப் பணியிடங்கள். | | | | |
| 1. இடைநிலை ஆசிரியர் | 2260 | 1158 | 1538 | 4956 |
| 2. பட்டதாரி ஆசிரியர் | 638 | 615 | 1234 | 2487 |
| 3. மொழி ஆசிரியர் | 104 | 204 | 102 | 410 |
| 4. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | 713 | 753 | 810 | 2276 |
| 5. உடற்கல்வி ஆசிரியர் | 648 | 682 | — | 1330 |
| 6. கலை ஆசிரியர் | 499 | 108 | — | 607 |
| மொத்தம் | 4862 | 3520 | 3684 | 12066 |

(* கட்டப்பட்டு வருகின்றன)



1999 மார்ச் 31]

## 3. ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

3.1 மாணவர்கட்குத் தரமான கல்வி வழங்குவதற்கு ஏதுவாக, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககமும், 21 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களும் இணைந்து, ஆசிரியர் பயிற்சியாளர்கட்குக் கல்வி மற்றும் கற்பித்தல் சார்ந்த அடிப்படையான பயிற்சியை அளிக்கின்றன. எஞ்சியுள்ள 8 மாவட்டங்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில் புதிய மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் நிறுவப்பட இவ்வாண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது:

| மாவட்டம் | பயிற்சி நிறுவனம் நிறுவப்படவுள்ள இடம் |
|---|---|
| 1. நாகப்பட்டினம் | குறுக்கத்தி |
| 2. விழுப்புரம் | ஜி.அரியூர் |
| 3. திருச்சிராப்பள்ளி | லால்குடி |
| 4. சேலம் | உத்தமசோழபுரம் |
| 5. திருவாரூர் | மன்னார்குடி |
| 6. தேனி | உத்தமபாளையம் |
| 7. காஞ்சிபுரம் | காளியாம்பூண்டி |
| 8. பெரம்பலூர் | கீழப்பாழூர் |

3.2 இதற்கென, 56 மூத்த விரிவுரையாளர் பணியிடங்களும், 136 விரிவுரையாளர் பணியிடங்களும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மூத்த விரிவுரையாளர் பணியிடங்களில், 25 விழுக்காடு பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமும், எஞ்சிய பணியிடங்கள் பதவி உயர்வு மூலமும் நிரப்பப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 31

3.3 இத்துறையின் நோக்கங்களை, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி என்ற மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம்.

(அ) மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் பயிலும் ஆசிரியர் பயிற்சியாளர்களின் திறன்களையும், தொழில் திறமையையும் மேம்படுத்தி ஆசிரியர் கல்விப் பணித் திட்டத்தை, ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய நிலைக்கு உயர்த்துதல்.

(ஆ) கல்வித்தர மேம்பாட்டிற்கான பாடப்புத்தகங்கள், கையேடுகள், பயிற்சியேடுகள், ஒலி,ஒளி நாடாக்கள் உள்ளடக்கிய கற்பித்தல் கருவிகள் ஆகிய கற்றல் கற்பித்தல் கருவிகளைத் தயாரித்தல்.

(இ) அடுத்த 4 ஆண்டுகளுக்குள் அனைத்து ஆசிரியர்களுக்கும் புத்தறிவுப் பயிற்சி அளித்தல்.

(ஈ) தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி வழங்கும் பல்வேறு பகுதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளுதல், அனைத்து நிலை ஆசிரியர்களிடமும் ஆய்வு நோக்கை ஊக்குவித்தல்.

(உ) நூலறிவை நடைமுறையில் தெளியும் பொருட்டு செயலாராய்ச்சியில் கண்டறிந்தவற்றைப் பரப்புதல்.

3.4 மேற்காணும் குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட நிர்வாகத் திறன்கள் உருவாக்கப்பட்டுள்ளன :

தேசிய ஆசிரியர் கல்வி அமைப்புடனும், பல்கலைக்கழகத் துறைகளுடனும் கலந்தாலோசித்து எல்லா நிலையிலும் ஆசிரியர் பயிற்சிக் கல்வியின் பாடத்திட்டத்தைச் சீர்செய்து திருத்தி அமைத்தல்;

படிப்படியான நிலைகளில் எல்லா வகுப்புகளுக்கும் பாடப் புத்தகங்களும், கையேடுகளும், பயிற்சியேடுகளும் தயாரித்தல்;

கல்வித் தொலைக்காட்சி நிலையத்தின் மூலம் பாடல்களைத் தெளிவிக்கும் ஒலி-ஒளி நாடாக்கள் தயாரித்தல்;

உடல்நலக் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, உயிர்கொல்லி நோய்க் (எய்ட்ஸ்) கல்வி, மழலையர் கல்வி ஆகியவற்றிற்கான ஆதார கற்றல் பொருட்களைத் தயாரித்தல்;

தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள், கற்பித்தல் முறை மற்றும் பொதுத் தலைப்புகளில் பணியிடைப் பயிற்சி அளித்தல்,



1999 மார்ச் 31]

பாடப்புத்தகங்கள் மற்றும் கற்றல்-கற்பித்தல் கருவிகள் ஆகியவற்றின் பயன்பாடு குறித்து ஆய்தல்;

பள்ளி மற்றும் வகுப்பறை சூழல் குறித்த செயல் முறை ஆய்வுகள் மேற்கொள்ள ஆசிரியர்களையும், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களையும் ஊக்குவித்தல்;

ஆய்வின் முடிவுகளைப் பரப்ப ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் செய்தி மலர்கள் வெளியிடுதல்;

பயிற்சி குறித்த பல்வகைத் திட்டமிடுதலுக்கு வசதியாக மாவட்டங்களில் புள்ளிவிவர மையங்கள் பராமரித்தல்.

**தொடக்கக் கல்வி ஆசியர்களுக்கான சிறப்பு புத்தறிவுப் பயிற்சி**

3.5 சிறப்புப் புத்தறிவுப் பயிற்சியின் முக்கிய நோக்கம், தேசியக் கல்விக் கொள்கையில் கூறப்பட்டவாறு குறைந்தபட்சக் கல்வித் திறன் பெறச் செய்ய அடைய வேண்டிய திறன்களை அறிமுகப்படுத்துவதாகும். 1993-94 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு விட்டன. இத்திட்டத்தின்கீழ் தொடக்கப் பள்ளி/நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கு வரும் ஆண்டில் ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடங்களில் தீவிரப் பயிற்சிகள் அளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே தேசியக் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், மனிதவள மேம்பாட்டுத் துறை அனுமதியுடன் பயிற்சியின் பயனை ஆய்வு செய்யவும் கருதப்பட்டுள்ளது. அடுத்து வழங்கும் பயிற்சிகள் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டவையின் அடிப்படையில் அமையும். தொடக்கக் கல்வியில் அனைவருக்கும் தரமான கல்வியை வழங்க குறைந்தபட்ச இலக்குகள் திட்டம் என்னும் புதிய அணுகுமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தொடக்கக் கல்வியில் கல்வித் திட்டம் புதுப்பிக்கப்பட்டு, புதிய பாடநூல்கள் தயாரிக்கப் பெற்று, 1995 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக வகுப்பு ஒன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 35,000 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறார்கள். கடந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 35,000 நான்காம் வகுப்பு ஆசிரியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். வரும் ஆண்டில் ஐந்தாம் வகுப்பிற்குப் புதிய பாடநூல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. வரும் கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பே அனைத்து ஐந்தாம் வகுப்பு ஆசிரியர்களுக்கும் பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 31

**ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கான புதிய கல்வித் திட்டம்**

3.6 1994-95 இல் தொடக்கநிலை/இடைநிலை/மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கான கலைத் திட்டமும், புதிய பாடத்திட்டமும், குறைந்தபட்ச கற்றல் மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் உள்ளடக்கிய பாடப்புத்தகங்கள் எழுதி வழங்கப்பட்டுள்ளன. ஆனால் 1990 இல் எழுதிய ஆசிரியர் கல்வி கலைத் திட்டம் இன்னும் பயன்படுத்தப்படுகிறது. இது மிகவும் பழமையானது. இக்காலத்திற்குத் தேவையான குறைந்தபட்ச கற்றல் திறன் அடங்கிய மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்க்கும் ஆசிரியர் கல்வி என்பது மிகவும் தேவையான ஒன்றாகும். இதன் அடிப்படையில் தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் தயாரித்த திறன் அடிப்படையிலான கலைத் திட்டத்தினைப் பின்பற்றி ஆசிரியர் கல்வி கலைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கென, ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் தலைமையிலான 12 பேர் கொண்ட வல்லுனர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

3.7 ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சிக்காக தயாரிக்கப்படவுள்ள புதிய பாடத்திட்டத்தில், கைத்தொழில், உடற்கல்விப் பயிற்சி, யோகாசனம், இயலாதோர்க்கு ஒருங்கிணைந்த கல்வி ஆகியவற்றையும் சேர்ப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, இடைநிலை ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும் கணினிக் கல்விப் பயிற்சித் திட்டத்தை பாடத்திட்டத்தில் சேர்க்கலாம் எனக் கருதப்பட்டுள்ளது.

3.8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த, இவ்வாண்டு 8 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அறிவியல் ஆய்வுக்கூடக் கருவிகள், நூலகப் புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள் ஆகியன ரூ. 4 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்காக ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்வாண்டு ரூ.1.10 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 7 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலிருந்தும் 72 பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டனர். வரும் ஆண்டுகளில் பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் குறித்த பாடத்திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தவுள்ளதால் இதிலும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி உள்ளது. கல்வி பற்றிய தகவல் தொடர்பு தொழில்நுட்ப மையப் பிரிவு ஒன்று ஒவ்வொரு



1999 மார்ச் 31]

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்திலும் இயங்கி வருகிறது. இதற்கென ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் போதிய பயிற்சி இல்லாததால் அப்பிரிவு சரிவரச் செயல்படுவதில்லை. எனவே மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் கல்வித் தகவல் தொடர்பு பிரிவில் பணிபுரியும் 40 கல்விப் பணியாளர்களுக்கும், அண்ணா பல்கலைக் கழகம் மூலம் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வரும் ஆண்டில் இரு வார காலத்திற்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.9 இடைநிலை ஆசிரியர் பதவிகளுக்கு கடந்த ஆண்டு ஆதிதிராவிட வகுப்பினரில் பயிற்சித் தகுதி உடையவர்கள் தேவையான அளவில் இல்லாத காரணத்தால் 17 மாவட்ட பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் 50 ஆதிதிராவிட இனத்தவர்க்கு (25 ஆண், 25 பெண்) 1997-98 ஆம் ஆண்டு தனியாகப் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. இத்திட்டம் 1998-99 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது. இதனால் ஆண்டுக்கு 850 ஆதிதிராவிடர் மாணவர் மாணவியர் பயன்பெற்றுள்ளனர். சிறுபான்மை மொழி இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கான இடங்களும் இவ்வாண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளன. தேரூர் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனத்தில் தற்போது இயங்கிவரும் மலையாள மொழி ஆசிரியர் பயிற்சிப் பிரிவில் கூடுதலாக 10 சேர்க்கை இடங்கள் (ஆண்கள் 5, பெண்கள் 5) அதிகரிக்கப்பட்டுள்ளன. கெங்கவள்ளி ஆண்களுக்கான அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலும், சின்னதாராபுரம் பெண்களுக்கான அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலும், தெலுங்கு மொழிப் பயிற்சிப் பிரிவில் கூடுதலாக தலா 40 சேர்க்கை இடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம்.**

3.10 அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட பயிற்சி பள்ளிகளில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களின் நீண்ட நாளைய வேண்டுகோளுக்கு நிவாரணமாக மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றிலுள்ள இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கான மொத்த இடங்களில் 30 விழுக்காடு, 1998-99 ஆம் ஆண்டு முதல் இவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டு அம்மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## திறந்தவெளிப் பள்ளித் திட்டம்

3.11 பத்தாம் வகுப்பு வரையில் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்து படிக்க இயலாமல் இடையில் நிறுத்தி விட்டவர்கள் தொடர்ந்து படித்து, பத்தாம் வகுப்புக் கல்வித் தகுதியைப் பெறுவதற்கு வழிகோலும் வகையில் தமிழ்நாடு திறந்தவெளிப் பள்ளித் திட்டம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் வீட்டில் இருந்து கொண்டே கல்வி கற்பதற்கு வழி செய்வதால் குறிப்பாக இல்லத்தரசிகள், சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைச் சார்ந்த பெண்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றி வரும் அடிப்படை ஊழியர்கள், பொருளாதாரக் காரணங்களினால் பள்ளிப் படிப்பைக் கைவிட்டவர்கள் போன்றவர்கள் சாதாரண மக்களும் படித்துப் பயன் பெறுவதற்கு வழிவகை செயவதே இத்திட்டத்தின் சிறப்பு. இதனால் எட்டாம் வகுப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் நேரடியாக இத்திட்டத்தில் சேர்ந்து 10-ம் வகுப்பு தேர்ச்சி பெறும் வாய்ப்பினை பெறுகின்றார்கள். கடந்த ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டத்தின்படி திறந்தவெளிப் பள்ளிக் கல்வித் திட்டத்திற்குரிய பாடத்திட்டம், தேர்ந்தெடுத்த வல்லுநர் குழுவினரால் புதுப்பிக்கப்பட்டு முள்ள 11 மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் நேரடி வாறு பாடப்புத்தகங்களும் தயாரிக்கப்பட்டுள்ளன. தமிழகமெங்கிலு பயிற்சியும் தேர்வும் நடத்தப்படவுள்ளது. திறந்த வெளிப் பள்ளியில் வழங்கப்படும் பத்தாம் வகுப்பு சான்றிதழ் அரசுத் தேர்வுத் துறை வழங்கும் இடைநிலைப் பள்ளியிறுதிச் சான்றிதழுக்கு இணையானதாக ஏற்கப்பட்டு, வேலைவாய்ப்பிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

## முனைவர் பட்டப் படிப்பு

3.12 ஆராய்ச்சியாளர், கல்வியியலில் முனைவர் பட்ட ஆய்வு செய்திட சென்னைப் பல்கலைக்கழகம் இந்நிறுவனத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது. இதன்படி உதவித் தொகை இல்லாத முழுநேர/பகுதிநேர பிஎச்.டி ஆய்வுக்கென 12 ஆராய்ச்சி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். பல வகுப்பு கற்பித்தல், பள்ளியைவிட்டு இடையில் நின்றுவிடுவோர்க்குப் பயிற்சி அளித்தல், பயிற்சித் திட்டங்களின் குறியீடு, மகளிர் கல்வி, மொழிப் பாடங்களில் வெளியிடும் திறன்களை வளர்த்தல், குறைந்தபட்ச கற்றல் திறன்களை அடையச் செய்வதில் ஏற்படும் சிக்கல்கள், அதிலும் மலை வாழ் சிறார்கள் கற்றலில் உள்ள இடர்பாடுகள் போன்ற தொடக்கக் கல்வி வழங்குவதில் உள்ள சிக்கல்களைப் பற்றிய ஆய்வுத்



தலைப்புகளையும், கல்வித் தரத்தை உயர்த்துதல் குறித்த பொருளையும் இவ்வாராய்ச்சி மாணவர்கள் ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

## கல்வித் தொலைக்காட்சி

3.13 பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்ற பாடத் தொடர்பான ஒலி-ஒளி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதே கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கமாகும்.

3.14 1998-99 ஆம் ஆண்டில் கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம் சென்னைத் தொலைக்காட்சியின் "காண்போம் கற்போம்" கல்வி ஒலிபரப்பில் இடம்பெறும் பொருட்டு, 30 நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியுள்ளது. இந்நிகழ்ச்சிகள் புதிய புத்தகங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள நான்காம் வகுப்பு மாணவர்களுக்குரியனவாகும். இதே போன்று நிகழ்ச்சிகள் தயாரிப்பை விரிவுபடுத்தி, வரும் நிதியாண்டிலும் 5 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கட்குப் பயனளிக்கும் வகையில் எல்லாப் பாடங்களிலும் ஒளி நாடா நிகழ்ச்சிகளைத் தயாரித்து சென்னைத் தொலைக் காட்சியின் "காண்போம் கற்போம்" கல்வி ஒளிபரப்பிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 5 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்கட்குப் பயனளிக்கும் வகையில் அனைத்து பாடங்களிலும் படப்பதிவு நிலையம் மூலம் ஒலி நாடா நிகழ்ச்சிகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.15 ஒலி/ஒளி நாடா நிகழ்ச்சிகள் தயாரித்தலுடன், படப்பதிவு நிலையத்தில் பல்வேறு பிரிவு ஆசிரியர்களுக்கும் பயனளிக்கும் வகையில் கீழ்காணும் பொருள்களில் பணிமனைகள்/பணியிடைப் பயிற்சிகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது :

அ. மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனக் கல்வித் தொழில் நுட்பப் பிரிவு விரிவுரையாளருக்கும், ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளருக்கும் கல்வி ஒலி/ஒளி நாடா நிகழ்ச்சிகளைப் பயன்படுத்தும் வழிமுறைகளில் மூன்று நாள் பணியிடைப் பயிற்சி;

ஆ. ஒளி நாடாக் கல்வி நிகழ்ச்சிகளை மாணவர்கட்கு வழங்குதலில் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனியாகவும், தொடக்க/நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனியாகவும் 5 நாள் பணிமனைகள்;

[1999 மார்ச் 31

இ. வானொலி நிகழ்ச்சிகளை மாணவர்கட்கு வழங்குதலில் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனியாகவும், தொடக்க/நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தனியாகவும் 5 நாள் பணிமனைகள்;

3.16 5 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ரூ. 2.5 இலட்சம் செலவில் வரும் ஆண்டில் கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையத்தில் இருந்து 20 ஒலி நாடாக்களை, ஊராட்சி ஒன்றிய மேற்பார்வையாளர்கள்/உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள்/மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவன முதல்வர்கள் ஆகியோர் மூலம் பள்ளிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வட்டாரக் கருத்தாய்வு மையங்களுக்கு ஒளி நாடா நிகழ்ச்சிகள் வழங்கப்பட உள்ளன

3.17 தேசிய கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம், மாநில கல்வித் தொழில் நுட்ப மையங்கள் மற்றும் வெளிநாட்டு கல்வி அமைப்புகள் தாயாரித்துள்ள ஒலி/ஒளி நிகழ்ச்சிகளையும் பெற்று நமது தேவைக்கேற்ப மாற்றியமைத்து, பள்ளிகளுக்கு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

4.1 கல்லாமையை இல்லாமை ஆக்கும் சீரிய குறிக்கோளைச் செயல்படுத்த தமிழ்நாட்டில் கல்வி அமைச்சர் தலைமையில் தமிழக எழுத்தறிவு முனைப்பு ஆணையம் செயல்பட்டு வருகிறது.

### அறிவொளி இயக்கம்

**முழு எழுத்தறிவு இயக்கம்**

4.2 இந்த இயக்கம் 1990-91 ஆம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சியர்களால் அந்தந்த மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் மூலம் 90.59 இலட்சம் கல்லாதவர்களில் இதுவரை 79.70 இலட்சம் பேர் கற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதற்கான நிதி மைய அரசாலும், மாநில அரசாலும் 2:1 விகிதத்தில் செலவிடப்படுகின்றது. மாநில அரசு ரூ. 13.39 கோடி செலவிட்டுள்ளது.

**தொடர்கல்வி இயக்கம்**

4.3 புதிதாக எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கற்றதை மறந்துவிடாது நிலைநிறுத்திக்கொள்ளும் திறன் வளர்க்க தொடர் கல்வித் திட்டம்



1999 மார்ச் 31]

நடைபெறுகிறது. இது மாவட்டத்தில் முழு எழுத்தறிவுத் திட்டம் முடிவடைந்த பிறகு, ஈராண்டுகளுக்குச் செயல்படுத்தப்படுகின்றது. தமிழகத்தில் அறிவொளி தொடர் கல்வித் திட்டம் 19 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளது. தற்பொழுது 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மைய அரசு ரூ.15.25 கோடியும், மாநில அரசு ரூ.6.05 கோடியும் செலவிட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் 37.8 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். எஞ்சிய 4 மாவட்டங்களில் விரைவில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**வளர்கல்வி மையங்கள்**

4.4 முழு எழுத்தறிவுத் திட்டம், தொடர் கல்வித் திட்டம் ஆகியவற்றின் தொடர்ச்சியாக வளர்கல்வித் திட்டம் தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, தேனி, சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை, வேலூர் ஆகிய 9 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது. தொடர் கல்வி இயக்கம் முடிவு பெற்ற அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். அறிவொளி மற்றும் தொடர் கல்வி இயக்கங்களின் மூலம் எழுத்தறிவு பெற்றவர்கள் தொடர்ந்து கற்றதை நிலைநிறுத்திக்கொள்ள, கிராம நூலகங்கள் மூலம் சிறு சிறு நூல்கள், வார, மாத இதழ்கள், செய்தித்தாள்கள் ஆகியவற்றைப் படித்துப் பயன்பெற உதவும் திட்டமாக இது செயல்பட்டு வருகிறது. மேலும் அரசு வளச்சித் திட்டங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுதல், தொழில் பயிற்சி அளித்தல், குழு விவாதம், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றவை இம்மையங்களின் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைவராகச் செயல்படுவார். மாவட்டத்திலுள்ள 8 முதல் 10 தொடர் கல்வி மையங்களுக்கு ஒரு முதன்மை வளர்கல்வி மையம் செயல்பட்டு வருகிறது. இதற்குப் பொறுப்பாளராக ஒரு தொடர்பாளர் இருப்பார். இம்மையங்கள் நன்கு செயல்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது இவரது பொறுப்பாகும். இத்திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கானச் செலவினத்தை மைய அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளும். பின்னர், இரண்டு ஆண்டுகளுக்கு மாநில அரசும் மத்திய அரசும் செலவினத்தை 50:50 என்ற பங்கீடு முறையில் ஏற்றுக்கொள்ளும். இதற்குப் பிறகு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய அமைப்புகளிடம் நிரந்தரமாகச் செயல்படத்தக்க வகையில் ஒப்படைக்கப்படும்.

### உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம்

4.5 உழைக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகள் தொழில் திறன் பெற்றுத் தற்சார்புடையவர்களாகத் திறமை பெற இந்த உழைப்போர் பல்நோக்குக் கல்வி நிறுவனம் உதவுகிறது. இத்தகைய நிறுவனங்கள் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மூன்று மாவட்டங்களில் மைய அரசு நிதியுதவியுடன் செயல்படுகின்றன. தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களிடம் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும், சுயவேலை வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளும் நோக்கிலும் இந்நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்கள் மூலம் குறுகிய காலப் பயிற்சிகளான சோப்பு, சோப்புத் தூள், ஷாம்பு, வாசனைப் பத்தி, பினாயில் போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கும், சுற்றுப்புறச் சுகாதாரம், சிறு குடும்ப நெறி, எய்ட்ஸ் எச்சரிக்கை போன்ற விழிப்புணர்வூட்டும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இதுவரை 118 வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலப் பயிற்சிகளான வீட்டு மின் இணைப்புப் பணி, நீர் இறைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல், தட்டச்சு, தையல் பயிற்சி, வண்ணத் திரை அச்சிடுதல், சுவரொட்டித் தயாரிப்பு, தொலைக்காட்சி/வானொலிப் பெட்டி பழுதுபார்த்தல், புகைப்படம் எடுத்தல் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இதுவரை 136 நீண்ட காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் மூலம் ஆண்டொன்றுக்கு 29,000 பேர் பயனடைந்துள்ளனர்.

### சிறப்புக் கல்வித் திட்டம்

4.6 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 6—14 வயது சிறார் தொழிலாளர் பிரிவினருக்கான சிறப்புத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி, விருதுநகர், வேலூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் 700 மையங்கள் அடங்கிய 7 திட்டங்கள் மைய அரசும், மாநில அரசும் வழங்கிய நிதியுடன் செயல்படுத்தப்பட்டு நிறைவு பெற்றுள்ளன. இதன் மூலம் 17,500 சிறார் தொழிலாளர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

4.7 தமிழகத்திலுள்ள மாவட்டங்களில் குறைந்த அளவு எழுத்தறிவுள்ள 16 திட்டப் பகுதிகளில் 6—14 வரை வயதுள்ள சிறுமியர் பயன்பெறும் வண்ணம் 16 பள்ளி சாராக் கல்வித் திட்டங்கள், திட்டப் பகுதி ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் வீதம் வரும் ஆண்டில் நடத்தப்படும். தாழ்த்தப்பட்ட பிரிவினரைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை



அளிக்கப்படும். பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு இது பயனுள்ளதாக அமையும்.

### திறந்தவெளிப் பள்ளித் திட்டம்

4.8 திறந்த வெளிப் பள்ளித் திட்டம், அனைவருக்கும் தொடக்கக் கல்வி என்ற இலக்கினை அடைய வழிவகுக்கின்றது. இத்திட்டம் டிசம்பர் 1997 முதல் செயல்பட்டு வருகிறது. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்கு 5 ஆம் வகுப்புத் தேர்ச்சிக்கான சான்று திறந்தவெளிப் பள்ளித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றது. அறிவொளி இயக்கத்தின் மூலம் புதிதாகக் கற்றவர்களுக்கு 3 ஆம் வகுப்பு தேர்ச்சிக்கான சான்று இம்மையங்கள் மூலம் வழங்கப்படுகின்றது. ஓராண்டு காலத்தை மூன்று பருவங்களாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும் தேர்வுகள் நடத்தப்படும். தேர்ச்சி பெற்றவர்கள் அடுத்த ஆண்டில் மேல் வகுப்பில் சேரத் தகுதியுடையவர்களாவர். புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களிலும் புதிதாகக் கற்றவர்களுக்கான திறந்தவெளிப் பள்ளிகள் மாவட்டத்திற்கு 20 வீதம் 40 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிப் படிப்பை இடையில் விட்டவர்களுக்குப் பயிற்சி அளிக்க கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 15 வீதம் 60 மையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்விரு திட்டங்களின் மூலம் மொத்தம் 2,700 பேர் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டம் மேலும் 3 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 40 வீதம் மொத்தம் 120 மையங்கள் தொடங்கப் படவுள்ளன.

## 5. அரசுத் தேர்வுகள்

5.1 கல்வித் துறை சார்ந்த பல தேர்வுகள் நடத்துவது, தேர்வு முடிவுகளை வெளியிட்டுச் சான்றிதழ்களை வழங்குவது ஆகிய பணிகள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் முக்கியப் பணிகளாகும். மறைபொருள் தன்மையை ஒவ்வொரு நிலையிலும் காப்பதே இத்துறையின் தலையாய கடமையாகும். இப்பணி ஆற்றுவதில் ஒவ்வோர் ஆண்டும் பெருகிவரும் தேர்வு எழுதும் மாணவர் எண்ணிக்கை ஒரு சவாலாக அமைகிறது. எனவே, பொறுப்புப் பகிர்தல் முறையைப் பின்பற்றுவதன் மூலம் இச்சவாலுக்கு ஈடுகொடுத்து தேர்வு நடத்தும் முறையில் கவனம் செலுத்த வேண்டிய திறன்பாடுகள், மந்தணத் தன்மை காத்தல்,

[1999 மார்ச் 31

குறைபாடுகளற்ற முறையில் தேர்வு முடிவினை வெளியிடுதல் ஆகிய குறிக்கோள்களை அடைய வழி செய்யப்பட்டுள்ளது.

5.2 இத்துறையில் தேர்வுக்காகப் பெறப்படும் அசல் சான்றிதழ்கள் உரிய அலுவலர்களால் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, அரசுத் தேர்வுகள் துறையின் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கட்கு இவ்வாண்டு ரூ.11.50 இலட்சம் செலவில் அறைகலன்கள் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

5.3 அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 40 வகையான அரசுச் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுள், பள்ளி இடைநிலை (எஸ்.எஸ்.எல்.சி.) மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் (+2) பெரிய அளவிலானவை. இவை மட்டுமன்றி ஆங்கிலோ இந்தியன்/ மெட்ரிகுலேசன்/ஆசிரியர் கல்விப் பட்டயத் தேர்வு/கைத்தறி, நெசவு, இசை, மரவேலை, தையல், அச்சு மற்றும் விவசாயம் போன்ற தொழில்பாடம் தொடர்பான தேர்வுகளும் இவ்வியக்ககத்தால் நடத்தப்படுகின்றன.

**பிற தேர்வுகள்**

5.4 மையத் தேர்வாணைக் குழு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற நிறுவனங்களுக்காக இவ்வியக்ககம் 30 தேர்வுகளை நடத்தி வருகிறது.

**கேட்டல், பேசுதல் திறன் தேர்வு**

5.5 மேல்நிலைக் கல்வியின் 1997 ஆம் ஆண்டு மார்ச் தேர்வு முதல் மாணவர்களின் கேட்டல், பேசுதல் திறனறிய மொழிப்பாடங்களின் பகுதியாக இதற்கான தேர்வு ஒன்று புதிதாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 20 மதிப்பெண் வழங்கிட அந்தந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாற்று எண் மதிப்பீட்டு முறை**

5.6 விடைத்தாள் மதிப்பீட்டில் மறைபொருள் தன்மையைக் காத்திடும் பொருட்டு, மேல்நிலைத் தேர்வில் இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் கணிதம் ஆகிய 6 பாடங்களுக்கு மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வந்தன. இவ்வாண்டு முதல் வணிகவியல், கணக்குப்பதிவியல், வணிகக் கணிதம், தொழில்பாடப் பிரிவில் பொறியியல் தொடர்புடைய பாடங்கள்



1999 மார்ச் 31]

ஆகியவற்றுக்கும் மாற்று எண் வழங்கி விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மெட்ரிக் தேர்வு/ ஆங்கிலோ இந்தியன் பள்ளித் தேர்வு/ஆசிரியர் பயிற்சிப் பட்டயத் தேர்வு ஆகியவற்றின் தேர்வர்கள் விடைத்தாளுக்கும் மாற்று எண் வழங்கி விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

5.7 1998 ஆம் ஆண்டு மார்ச்/ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்வுகளில் கலந்து கொண்டோர், தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| தேர்வின் பெயர் | தேர்வர்களின் எண்ணிக்கை | | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| | பதிவு செய்தவர் | தேர்ச்சி பெற்றவர் | |
| இடைநிலைக் கல்வித் தேர்வு | 6,01,644 | 3,91,003 | 65.00 |
| மேல்நிலைக் கல்வித் தேர்வு | 3,57,949 | 2,98,672 | 83.44 |
| மெட்ரிக் தேர்வு | 55,471 | 51,910 | 93.58 |
| ஆங்கிலோ இந்தியத் தேர்வு | 4,643 | 4,327 | 93.19 |

5.8 அரசுத் தேர்வுகள் முறையில் மறைபொருள் தன்மையைக் காக்கும் பொருட்டு, ஆலோசனைகள் வழங்க பள்ளிக் கல்வித் துறையின் முன்னாள் இயக்குநர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இக்குழுவின் சில பரிந்துரைகள் செயல்படுத்தப் பட்டுள்ளன. எஞ்சியுள்ள பரிந்துரைகள் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

## 6. ஆசிரியர் தேர்வு வாரியம்

6.1 பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் மேற்பார்வையில் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியின்கீழ் வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகள், சீர்மரபினர் பள்ளிகள், பிற் படுத்தப்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள் ஆகியவற்றின் பட்டதாரி ஆசிரியர்களும், மொழி ஆசிரியர்களும், பட்டமேற்படிப்பு ஆசிரியர்களும் வேலைவாய்ப்பகப் பதிவு முன்னுரிமை அடிப்படையில், நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு, அவர்களது கல்வித்

[1999 மார்ச் 31

தகுதிகளுக்கேற்பவும், நேர்காணலில் பெறும் மதிப்பெண் அடிப்படையிலும், இனச் சுழற்சி முறை அடிப்படையிலும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

6.2 தகுதிவாய்ந்த ஆசிரியர்களை அவர்களது முன் அனுபவம், வேலைக்காகப் பதிவு செய்து காத்திருந்த காலம், கூடுதல் கல்வித் தகுதிகள் அடிப்படையில் தேர்வு செய்வதற்கான மதிப்பிடும் முறை 1997-98 இல் சீரமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றனர்.

6.3 நேர்காணல் மதிப்பீடுகள், கணிப்பொறியில் பதிவு செய்யப்படுவதன் மூலம் மிகத் துல்லியமாகவும், விரைந்தும் தெரிவு செய்து முடிவுகளை அறிவிக்க ஏதுவாகிறது. இதன் பயனாக இவ்வாரியம் 1996-97 ஆம் கல்வியாண்டில் சுமார் 1700 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும், 1997-98 ஆம் கல்வியாண்டில் 1770 முதுகலை/பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. 1998-99 ஆம் ஆண்டில் 1119 முதுகலை ஆசிரியர்களும், 865 பட்டதாரி ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்திற்கு ஒதுக்கப்பட்டு நிரப்ப இயலாமையினால் தேக்கமடைந்த பணியிடங்களை நிரப்பும் வகையில் ஆசிரியர் தேர்வு வாரியம் செயல்பட்டு அவ்வினத்தினருக்காகவே 1996-97 இல் சிறப்புத் தேர்வுகள் நடத்தி, 62 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 78 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. அவ்வாறே 1997-98 ஆம் கல்வியாண்டிலும் அவ்வினத்தைச் சார்ந்த 42 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 23 பட்டதாரி ஆசிரியர்களையும் தேர்வு செய்தது. 1998-99 ஆம் கல்வியாண்டில் இவ்வினத்தைச் சார்ந்த 19 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களையும், 19 பட்டதாரி ஆசிரியர்களையும் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 7. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

7.1 தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகம், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களை அச்சிட்டு வழங்கி வருகிறது. இக்கழகம் மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்தின்படி, 1995-96 ஆம் கல்வி ஆண்டு தொடங்கி 1998-99 ஆம் கல்வியாண்டு முடிய, 5 ஆம் வகுப்புக்கான பாடநூல்கள் தவிர அனைத்து வகுப்புகளுக்குமான பாடநூல்கள் யாவற்றையும் வெளியிட்டுள்ளது. வரும் ஆண்டில் 5 ஆம் வகுப்பிற்கான புதிய



1999 மார்ச் 31]

பாடநூல்களுடன், 348 தனித்தனி பாடநூல் தலைப்புகளில், 515 இலட்சம் பாடநூல் பிரதிகளை இக்கழகம் அச்சிட்டு வழங்கும். இதற்கான மொத்தச் செலவு ரூ.47.70 கோடி ஆகும்.

7.2 நடப்புக் கல்வி ஆண்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்புப் பாடநூல்களை 11 தலைப்புகளில், 8 இலட்சம் பிரதிகள் அச்சிட்டு இக்கழகம் வெளியிட்டுள்ளது. வரும் ஆண்டிலும் இது தொடரும்.

7.3 கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, உள்ளாட்சி மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டுவரை சத்துணவு உண்ணும் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வந்தன. வரும் கல்வி ஆண்டில் இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் 55 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.27.25 கோடி மதிப்புள்ள 250 இலட்சம் பிரதிகளும், 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு சாப்பிடும் 19 இலட்சம் மாணவர்களுக்கு ரூ.10 கோடி மதிப்புள்ள 150 இலட்சம் பிரதிகளும், கல்வித் துறையில் உள்ள 63 மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் 410 உதவிக் கல்வி அலுவலர்கள் மூலம் விநியோகிக்கப்பட உள்ளன. இப்புத்தகங்கள் ஜூன் மாதத்தில் பள்ளி திறக்கப்படும்போதே வழங்கப்படுவதற்குக் கடந்த ஆண்டு போலவே இவ்வாண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலான புத்தகங்கள் விநியோகிக்கப்பட வேண்டியிருப்பினும், இப்பணி உரிய காலத்தில் முடிக்கப்படும். தேவையான சிறுபான்மையினர் மொழிப் பாடப் புத்தகங்களையும் ஆண்டுத் தொடக்கத்திலேயே வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

7.4 பள்ளிப் பாடச் சுமையைக் குறைக்க அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு பரிந்துரையின்படி பாடச் சுமை குறைக்கும் பணி தொடர்பாக ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தால் பாடநூல்கள் திருத்தப்பட்டு 1,2,3,6, மற்றும் 8 ஆம் வகுப்புகளில் சில பாடநூல்கள் மறுபதிப்பில் திருத்திய பதிப்பாக வரவிருக்கின்றன. கையிருப்பில் உள்ள பாடநூல்களுக்குத் திருத்தச் சீட்டு அச்சடித்து விநியோகம் செய்யப்படவுள்ளது. 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சில பாடநூல்களுக்கு 2000-2001 ஆம் கல்வியாண்டில் திருத்தம் செய்து வெளியிடப்படும்.

[1999 மார்ச் 31

7.5 வரும் கல்வியாண்டில் இக்கழகம் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ரூ.7.50 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் தயாரித்து வழங்கவிருக்கிறது. மற்ற மாணவர்களுக்கு சுமார் ரூ.5 கோடி மதிப்புள்ள குறிப்பேடுகள் தரமாகத் தயாரித்து நியாயமான விலையில் சில்லரை விற்பனையாளர்கள் மூலம் வெளிச்சந்தையில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

7.6 5 ஆம் வகுப்புக்கான பாடநூல்களின் மேலட்டைகள் இவ்வாண்டு "லேமினேட்" செய்து வெளியிடப்படுகின்றன. இதற்கென கூடுதலாக ரூ.13.52 இலட்சம் செலவாகும்.

7.7 மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டும் வகையில் தீண்டாமை, அநீதி, சமய நல்லிணக்கம், சாதி ஒற்றுமை பற்றிய சான்றோர் அறிவுரைகள் பல பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

8.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. இந்த ஆணையத்தின் மூலம் விளையாட்டு மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

8.2 இந்த அரசு ஒவ்வொரு மாவட்டத் தலைமையிடத்திலும் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு வழி செய்ய கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. தற்போது 18 மாவட்டத் தலைமையிடங்களில் விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. மீதமுள்ள 11 மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் படிப்படியாகக் கட்டப்படும். மேலும், பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்குத் தேவையான வசதிகள் தற்போது சென்னையில் மட்டுமே உள்ளன. இவ்வாறான வசதிகள் மற்ற வட்டாரத் தலைநகர்களில் உருவாக்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள 18 விளையாட்டரங்கங்களில் கடலூரில் மட்டும் நிலக்கரித் தூள் விரவிய தடகள ஓடுபாதை அமைக்கப்பட்டிருந்தது. முதலில் மாநகராட்சிகளில் மட்டும் செயற்கைத் தடகள ஓடுபாதை அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதற் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் ரூ.20 இலட்சம் செலவில் செயற்கைத் தடகள ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது.

8.3 தற்போது சென்னையைத் தவிர மதுரை, உதகமண்டலம், சேலம் ஆகிய மூன்று மாவட்டத் தலைநகரங்களில் உள் விளையாட்டரங்கங்கள் உள்ளன. கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி



1999 மார்ச் 31]

ஆகிய மாநகரங்களில் உள் விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, 1998-99 ஆம் நிதியாண்டில், முதலில் திருச்சிராப் பள்ளியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 50 சதவீதம் மாநில அரசின் பங்கு, மீதமுள்ள 50 சதவீதம் மத்திய அரசின் நிதியுதவியுடன் பொதுமக்கள், நிறுவனங்கள் வழங்கும் நிதியுமாக அமையும்.

8.4 விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் கருதி, திருநெல்வேலியில் ஹாக்கி சிறப்பு விளையாட்டு மையமும், கோயம்புத்தூரில் கூடைப்பந்து விளையாட்டு மையமும், சத்துவாச்சாரியில் (வேலூர்) பளு தூக்கும் பயிற்சி விளையாட்டு மையமும், சென்னையில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், டென்னிஸ் அரங்கு, ஹாக்கி அரங்கு மற்றும் நீச்சல் விளையாட்டரங்கங்களில் உடற்பயிற்சித் திறன் வளர்க்கும் மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், அந்தந்த விளையாட்டுகளில் திறமை வாய்ந்தவர்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்களை வளர்த்து வருகின்றன. கல்லூரியில் பயிலும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு முன்னோடித் திட்டமாக திருப்பத்தூர் புனித இருதயக் கல்லூரியில் 1997 ஆம் ஆண்டில் வாலிபால் விளையாட்டு மையம் அமைக்கப்பட்டது. வரும் ஆண்டில் 7 கல்லூரிகளில் ரூ.7.70 இலட்சம் செலவில் விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதன்மூலம் 112 கல்லூரி விளையாட்டு வீரர்கள் பயனடைவார்கள்.

8.5 சென்னை, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் தற்போது நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் படிப்படியாக நீச்சல் குளம் அமைக்கத் திட்டமிடப்பட்டு, முதலில் மதுரையில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் நீச்சல் குளம் கட்ட திட்டமிடப்பட்டு 1998-99 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் 50 விழுக்காடு மாநில அரசின் பங்கு, 50 விழுக்காடு பொதுமக்கள்/நிறுவனங்கள் வழங்கும் நிதியுடன் நடுவண் அரசின் நிதியுதவியும் அடங்கும்.

8.6 சென்னையில் மட்டுமே செயற்கைப் புல் மைதானம், சிந்தட்டிக் ஓடுபாதை போன்ற நவீன வசதிகள் கொண்ட விளையாட்டுத் திடல்கள் உள்ளன. மற்ற மாவட்டங்களிலும் இவ்வசதிகள் அமையும் பொருட்டு இரண்டு மாவட்டத் தலைநகரங்களில் நவீன

[1999 மார்ச் 31

விளையாட்டுத் திடல் வசதிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் நிதியாண்டில் திருச்சி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் அமைப்பதற்கு ரூ.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. மேலும் இரண்டு மாவட்டத் தலைநகரங்களில் ரூ.40 இலட்சம் செலவில் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டு, இதற்கென வரும் ஆண்டில் ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விளையாட்டு வளர்ச்சிக்கான தொலைநோக்குத் திட்டம்

8.7 தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கென 2020 ஆம் ஆண்டு வரைக்கான தொலைநோக்கு விளையாட்டு வளர்ச்சித் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அதன் அடிப்படையில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் வரையிலான விளையாட்டு வசதிகளை வளர்த்திடும் வகையில், விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்கள் முழுத்திறன் அடைந்திட ஊக்குவிக்கும் வகையிலும், தனியார் விளையாட்டுக் குழுக்களுக்கு நிதியுதவும் வகையிலும் இத்திட்டம் அமையும்.

8.8 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தேர்ந்தெடுக்கப்பட்ட 14 வயதுக்குட்பட்ட இளம் மாணவ/மாணவியர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதற்காக ரூ.5 இலட்சம் வரும் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.9 மாநில விளையாட்டில் பங்கு பெறுபவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டி அளவில் வெற்றி பெறுவதற்கு ஏதுவாகத் தொடர் பயிற்சி அளிக்கும் திட்டம் இல்லாத நிலையில் முக்கியமான விளையாட்டுகளில் பதக்கம் பெற்றோருக்குக் குறைந்தபட்சம் 21 நாட்களுக்குக் கோடைக் காலத்தில் பயிற்சி முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் மொத்தமாக 157 விளையாட்டு வீரர்கள் பயனடைவார்கள். வரும் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.2.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.10 பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றவர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெற்றி வாய்ப்புகளைப் பெறுவதற்கு ஏதுவாக சுமார் 157 விளையாட்டு வீரர்கள் பயனடையும் வகையில் முதன்மையான விளையாட்டுகளில், குறைந்தபட்சம் 21 நாட்களுக்கு ஒரு கோடைக்காலப் பயிற்சி முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதியாண்டில் ரூ.2.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



1999 மார்ச் 31]

8.11 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 3 விளையாட்டுப் பள்ளிகளையும், 4 விளையாட்டு விடுதிகளையும் நடத்தி வருகிறது. இதில் 710 மாணவ/மாணவிகள் பயற்சி பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்கென ரூ.52.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறப்பு விளையாட்டு விடுதியில் விளையாட்டுத் திறன் கொண்ட 50 மாணவர்களுக்கு 1997-98 ஆம் ஆண்டு முதல் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## இளைஞர் விழா

8.12 சென்ற ஆண்டு விருதுநகரில் நல்லிணக்கத்தை மையக் கருத்தாகக் கொண்டு மாவட்ட அளவில் இளைஞர் விழா நடத்தப்பட்டது. இவ்விளைஞர் விழாக்கள் இளைஞர்களிடையே மத நல்லிணக்கத்தையும், சாதி சமய வேற்றுமையற்ற சமுதாயத்தையும் வலியுறுத்துவதுடன், சகோதரத்துவம் வளரவும் கருத்துப் பரிமாற்றம் நிகழவும் வழி வகுக்கும் என்று அரசு கருதியது. இதன் அடிப்படையில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இளைஞர் நல விழாக்களைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் நடத்தலாம் என அரசு திட்டமிட்டது. மாநில இளைஞர் விழாவில் வெற்றி பெறுவோர் தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்கவும் வாய்ப்பு அளிக்கப்படுவர். மத நல்லிணக்க ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள இவ்வாண்டு, ரூ.20 இலட்சம் அரசு நிதி உதவியுடன், பொதுமக்கள் உதவியும் பெற்று இவ்விழா நடத்தப்படும்.

## விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கப்பரிசு

8.13 தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெறும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்குப் பணமுடிப்புகளை அரசு வழங்கி வருகிறது. இவ்வாண்டு, மணிப்பூரில் 14-2-1999 முதல் 25-2-1999 முடிய நடைபெற்ற 5-வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு வகையான விளையாட்டு வீரர்கள் பங்குபெற்றனர். இத்தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பாகவே, இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுவோர்க்குப் பண முடிப்பு அளிப்பதை முன்கூட்டியே அறிவிப்பதன் மூலம் விளையாட்டு வீரர்களை ஊக்குவித்து மேன்மேலும் பல வெற்றிகளைக் குவிப்பதற்கு வழிவகுக்கும் எனக் கருதி, இப்போட்டிகளில் பதக்கம் பெறுவோருக்குச் சிறப்பு ரொக்கப்

பரிசு வழங்குவதாக அரசு அறிவித்தது. இந்த ரொக்கப் பரிசு விவரங்களாவன:

| | பரிசு விவரம் | | |
|---|---|---|---|
| | தங்கம் | வெள்ளி (ரூபாய்) | வெண்கலம் |
| (அ) தனித்திறன் போட்டிகள் | 50,000 | 30,000 | 20,000 |
| (ஆ) குழுப் போட்டிகள் | | | |
| 1. இருநபர் குழுப் போட்டி | 75,000 | 45,000 | 30,000 |
| 2. மூன்று முதல் நான்கு நபர் குழுப் போட்டி | 1,00,000 | 60,000 | 40,000 |
| 3. ஐந்து முதல் பத்து நபர் குழுப் போட்டி | 1,50,000 | 90,000 | 60,000 |
| 4. பத்து நபர்களுக்கு மேல் உள்ள குழுப் போட்டி | 2,50,000 | 1,50,000 | 1,00,000 |

தற்போது தமிழக அணியைச் சார்ந்தவர்களுள் பதக்கம் பெற்ற 118 பேருக்கு, ரொக்கப் பரிசு அளித்துப் பாராட்ட அரசு கருதியுள்ளது. இதற்காக வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.24.15 இலட்சம் ஆகும்.

8.14 இன்றைய நிலையில் விளையாட்டுத் துறையில் பல்வேறு தனித்தனிப் பிரிவுகள் விளையாட்டுத் திறன் வளர்ச்சி நோக்குடன் தன்னுரிமையுடன் இயக்குவதுடன், மிகச்சில சமயங்களில் மட்டுமே அனைத்துப் பிரிவுகளும் ஒன்று சேருகின்றன. அவைகளில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தவிர கீழ்க்கண்ட சில முக்கியப் பிரிவுகளும் அடங்கும்:

1. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் உடற்பயிற்சி/விளையாட்டுப் பிரிவுகள்;
2. மாநில 'விளையாட்டுக் கழகங்கள்;
3. தனிப்பட்ட விளையாட்டுக் குழுக்கள்/மன்றங்கள்/ஆர்வலர்கள்/ வணிக நிறுவனங்கள்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சுமார் 40 விளையாட்டுச் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்து, இச்சங்கங்களுக்கு தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மாநில/தேசிய/பன்னாட்டு அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், விளையாட்டுக் கருவிகள் வாங்கிடவும் நிதியுதவி அளித்து வருகிறது.

8.15 மேலும், இத்துறையை மேம்படுத்த வேண்டி தொழில் அதிபர்கள், முனைவோர்கள் மற்றும் ஆர்வம் கொண்டவர்களிடமிருந்து நன்கொடையாக நிதி திரட்டி, அதற்கு ஈடாக மாநில அரசின் பங்கும் பெற்று விளையாட்டு மேம்பாட்டிற்கான நிரந்தர நிதி ஒன்றினை உருவாக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ. 100 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வருவாயிலிருந்து மேலும் ரூ.100 இலட்சம் இந்நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

## 9. பொது நூலகங்கள்

**வாசகர் வட்டம்**

9.1 ஒவ்வொரு நூலகத்திலும் வாசகர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவும், நூல்கள் நிறைவாகப் பயன்படுத்தப்படவும், நூலகங்களின் வளர்ச்சிக்குத் துணையாகவும் எல்லா நூலகத்திற்கும் வாசகர் வட்டம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாசகர் வட்டம் மூலம் நூல்கள் அறிமுகம், கவியரங்கம், இலக்கியக் கூட்டம் முதலிய பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்த ஆவன செய்யப்பட்டு வருகிறது.

9.2 24 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்காமல் இருந்த மாவட்ட நூலக ஆணைக் குழு அமைப்பினை மீள ஆரம்பிக்க முடிவெடுக்கப்பட்டு 28-8-1998 முதல் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இதேபோன்று இதர 28 மாவட்டங்களில் மாவட்ட நூலக ஆணைக் குழு ஏற்படுத்தப்பட தீவிர நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

**கன்னிமாரா பொது நூலகம்**

9.9 கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு விழா நினைவாக ரூ.179 இலட்சம் செலவில் கன்னிமாரா பொது நூலகத்திற்கு இணைப்புக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. வேலைப்பாடு மிகுந்த பழைய கட்டடத்தைப் பழுதுபார்த்து பராமரிப்பதற்கென ரூ.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் இந்நூலகத்தில் வசதிகள் செய்து தருவதற்காக ரூ. 1.00 இலட்சத்திற்குத் தளவாடச் சாமான்கள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. நூற்றாண்டு விழாவை ஒட்டி "அஞ்சல் வெளியுறை" வெளியிடப்பட்டுள்ளது. மாநில அரசு வலியுறுத்தியதின் அடிப்படையில் நினைவுத் தபால் வில்லையும் (stamp) 5-12-1998 அன்று வெளியிடப்பட்டது. கன்னிமாரா பொது நூலகத்தில் இடம்பெற்றுள்ள பல அரிய நூல்களையும், ஆவணங்களில் உள்ள தகவல்களையும் கால முதிர்ச்சியால் அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு, வரும் ஆண்டில் ரூ.1.08 இலட்சம் செலவில் நுண்படப் பிரிவு (Micro Film) ஒன்றும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

9.10 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் இயற்றப்பட்டு 50 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டதால் அச்சட்டத்தில் உள்ள பெரும்பாலான பிரிவுகளையும் விதிமுறைகளையும் இன்றைய நிலைமைக்கேற்ப திருத்தம் செய்து முறைப்படுத்தப்பட வேண்டியிருப்பதைக் கருதி, இச்சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் செய்வதற்குத் தக்க ஆய்வுரை வழங்க ஒரு குழு அமைக்கப்பட்டு அது தனது அறிக்கையை வழங்கியுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இச்சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையின் இக்கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும்.

## புள்ளிவிவரங்கள்

**பள்ளிக் கல்விப் புள்ளிவிவரம்**

1. பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்
2. பள்ளிகளின் எண்ணிக்கை
3. ஆசிரியர்களின் எண்ணிக்கை
4. ஆசிரியர்—மாணவர் விகிதாச்சாரம்



5. பள்ளிகளின் எண்ணிக்கை (நிர்வாக வகைப்படி) மாணவர்கள் சேர்க்கையும், ஆசிரியர் எண்ணிக்கையும்
6. ஆசிரியர்கள் எண்ணிக்கை—பள்ளி நிர்வாக வகைப்படி
7. பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை—வகுப்பு வகைப்படி
8. மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல்
9. தொழிற் கல்விப் பாடங்கள்
10. பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)
11. உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி)
12. மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி
13. உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (நிர்வாகம் வகைப்படி)
14. மேல்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (நிர்வாக வகைப்படி)
15. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு 1997-98
16. பெண்களின் கல்வி நிலை—புள்ளிவிவரம்
    - (அ) பெண்களின் எழுத்தறிவு நிலை
    - (ஆ) மாணவிகளின் சேர்க்கை விவரம்
    - (இ) அனைத்துப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை
    - (ஈ) பள்ளியைவிட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு)

**நூல்கள் வாங்குதல்**

9.3 நாள்தோறும் வளர்ந்து வரும் வாசகர் பெருக்கத்தின் தேவைக்கேற்ப சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் ஆண்டுதோறும் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய்க்கு வாங்கப்படுகின்றன. பொதுமக்கள் நூலகங்களை நாடிப் பயன்படுத்த இவை மிகவும் ஏதுவாக உள்ளன. இராசாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை மூலம் உதவிநிதி பெறப்பட்டு ஆண்டுதோறும் நூல்களும், தளவாடங்களும் வாங்கப்பட்டு வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் அறக்கட்டளையிலிருந்து இணை மானியம் மூலம் ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

**நூலகக் கட்டடங்கள்**

9.4 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கு வசதியாக ஆண்டுதோறும் காற்றோட்டமான நூலகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மொத்தமுள்ள 1,568 நூலகங்களில், இதுவரை 780 நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 83 நூலகக் கட்டடங்கள் ரூ. 441.11 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 33 நூலகக் கட்டடங்கள் கட்ட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**குடிமைப் பணி நாடுவோருக்கான சிறப்பு வசதி**

9.5 இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, வங்கிகள் நடத்தும் தேர்வு, இரயில்வே தேர்வாணையம், மையத் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கும் இளைய தலைமுறையினருக்கு உதவியாகப் பெரிதும் பயன்படும் முக்கியமான நூல்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, நீலகிரி, திண்டுக்கல், தஞ்சாவூர், ஈரோடு, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிமைப் பணி மையங்களில் வாங்கி வைக்கப்பட்டு, குடிமைப் பணி நாடுவோர் படிப்பதற்குச் சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஒவ்வொன்றிலும் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள 8000 சிறந்த நூல்கள் வாங்கி வைக்கப்பட்டுள்ளன.

**ஊரக நூலகங்கள்**

9.6 பொது நூலக இயக்குநரகத்தின்கீழ் தற்போது 1568 கிளை நூலகங்களும், 649 பகுதி நேர நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் 625



ஊரக நூலகங்கள் திறக்க ஏற்பளிக்கப்பட்டு அவற்றில் 506 நூலகங்கள் திறக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 119 நூலகங்களையும் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவை கிராமப்புற மக்களின் பொதுஅறிவை வளர்க்கத் துணையாகும்.

**நிதி ஆதாரத்தைப் பெருக்குதல்**

9.7 நூலக வரி மூலம் கிடைக்கும் வருவாயை நம்பியே நூலக ஆணைக்குழுக்கள் செயல்படுகின்றன. வளர்ந்து வரும் நூலகத் தேவைக்கு இவ்வருவாய் போதுமானதாக இல்லை. எனவே, பொதுமக்கள் நூலக இயக்கத்தில் ஆர்வம் கொண்டு நூலகங்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்க பொது மக்களுக்கு அன்பான வேண்டுகோள் விடுத்து அவர்கள் வழங்கும் நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு இதுவரை பெறப்பட்ட நிதி விவரம்:

| | |
|---|---|
| (அ) புரவலர் நிதி | ரூ. 98 இலட்சம் |
| (ஆ) கட்டடமும் காலிமனையும் (மதிப்பு) | ரூ. 576 இலட்சம் |
| (இ) தளவாடங்கள் மதிப்பு | ரூ. 230 இலட்சம் |

9.8 மக்கள் தொகை 5000 உள்ள ஊர்களில் நூலகம் அமைக்க வேண்டும் என்பது அரசின் குறிக்கோளாகும். நடப்பு ஆண்டில் ஊர்ப்புறங்களில் 20 கிளை நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் 10 புதிய கிளை நூலகங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மைய நூலகங்களில் கணிப்பொறியை அமைப்பதன் மூலம் வாசகர்கள் தங்களுக்கு வேண்டிய நூல்களைத் தேடி எடுக்கும் நேரத்தைக் குறைக்கவும், வாசகர் எடுத்துச் சென்றுள்ள நூல்கள் மற்றும் இருப்பில் உள்ள நூல்களின் விவரத்தை அறியவும் உதவும். அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் படிப்படியாகக் கணிப்பொறி அமைக்கக் கருதி, முதற்கட்டமாக இவ்வாண்டு சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்ட மைய நூலகங்களில் கணிப்பொறி மற்றும் "மேலிப்நெட்" வசதி ரூ.15 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் திருச்சிராப்பள்ளி சேலம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்ட மைய நூலகங்களில் கணிப்பொறி வசதி செய்து தர ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நடமாடும் நூலகச் சேவை சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் நடைபெற்று வருகிறது.

[1999 மார்ச் 31

## புள்ளி விவரங்கள்

## பள்ளிக் கல்வி 1998-1999

### (1) பள்ளி வயது சிறார்களின் எண்ணிக்கையும், சேர்க்கையும்

| வயது தொகுதி | இனம் | மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (இலட்சத்தில்) | மாணவர் சேர்க்கை (விழுக்காட்டில்) |
|---|---|---|---|---|
| 6-11 | ஆண் | 35.01 | 34.42 | 98.34 |
| | பெண் | 33.80 | 32.27 | 95.47 |
| | மொத்தம் | **68.81** | **66.69** | **96.92** |
| 11-14 | ஆண் | 18.27 | 17.63 | 96.50 |
| | பெண் | 19.19 | 16.13 | 84.10 |
| | மொத்தம் | **37.46** | **33.76** | **90.12** |
| 14-16 | ஆண் | 11.94 | 8.32 | 69.69 |
| | பெண் | 11.34 | 7.16 | 63.11 |
| | மொத்தம் | **23.28** | **15.48** | **66.48** |
| 16-18 | ஆண் | 11.35 | 3.55 | 31.28 |
| | பெண் | 11.11 | 3.39 | 30.46 |
| | மொத்தம் | **22.46** | **6.94** | **30.87** |
| 6-18 | ஆண் | 76.58 | 63.92 | 83.47 |
| | பெண் | 75.44 | 58.95 | 78.14 |
| | மொத்தம் | **152.02** | **122.87** | **80.83** |

### (2) பள்ளிகளின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 30329 | 30351 | 30471 | 30619 | 30796 | 30844 |
| நடுநிலைப் பள்ளிகள் | 5593 | 5578 | 5549 | 5503 | 5473 | 5538 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 3270 | 3340 | 3419 | 3574 | 3765 | 4208 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 2221 | 2318 | 2490 | 2734 | 2975 | 3149 |
| மொத்தம் | **41413** | **41587** | **41929** | **42430** | **43009** | **43739** |



1999 மார்ச் 31]

### (3) ஆசிரியர்களின் எண்ணிக்கை

| பள்ளிகளின் வகை | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 116396 | 114308 | 115181 | 115561 | 115651 | 115697 |
| நடுநிலைப் பள்ளிகள் | 62192 | 61779 | 64392 | 64454 | 64395 | 61719 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 42329 | 43589 | 45429 | 46536 | 46372 | 47212 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 74496 | 76034 | 78796 | 81420 | 83451 | 92301 |
| மொத்தம் | **295413** | **295710** | **303798** | **307971** | **309869** | **316929** |

### (4) ஆசிரியர்—மாணவர் விகிதாச்சாரம்

| பள்ளிகளின் வகை | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 49 | 50 | 50 | 40 | 40 | 38 |
| நடுநிலைப் பள்ளிகள் | 51 | 52 | 50 | 40 | 40 | 36 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 43 | 44 | 44 | 44 | 45 | 43 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 37 | 38 | 39 | 39 | 40 | 36 |

### (5) மாணவர்கள் சேர்க்கையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் 1998-99

மாணவர் எண்ணிக்கை இலட்சத்தில்

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | அரசு | 1542 | 2.16 | 7212 |
| | நகராட்சி/மாநகராட்சி | 1010 | 3.27 | 7351 |
| | ஊராட்சி ஒன்றியம் | 23030 | 26.09 | 69956 |
| | தனியார் | 5262 | 12.47 | 31178 |
| | மொத்தம் | **30844** | **43.99** | **115697** |

[1999 மார்ச் 31

| பள்ளிகளின் வகைகள் | நிர்வாக வகை | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நடுநிலைப் பள்ளிகள் | அரசு | 228 | 1.06 | 2226 |
| | நகராட்சி/மாநகராட்சி | 404 | 2.10 | 6208 |
| | ஊராட்சி ஒன்றியம் | 3070 | 10.83 | 24822 |
| | தனியார் | 1836 | 10.94 | 28463 |
| | **மொத்தம்** | **5538** | **24.93** | **61719** |
| **மொத்தம்-தொடக்க/நடுநிலைப் பள்ளிகள்** | | **36382** | **68.92** | **177416** |
| உயர்நிலைப் பள்ளிகள் | அரசு | 1986 | 8.80 | 26236 |
| | நகராட்சி/மாநகராட்சி | 94 | 0.64 | 1492 |
| | உதவி பெறுபவை | 626 | 3.14 | 7068 |
| | உதவி பெறாதவை | 96 | 2.34 | 1097 |
| | மொத்தம் | 2802 | 14.92 | 35893 |
| | ஆங்கிலோ இந்தியன் | 12 | 0.11 | 303 |
| | மெட்ரிக்குலேசன் | 1335 | 4.79 | 9828 |
| | மைய அரசு | 59 | 0.50 | 1188 |
| **மொத்த உயர்நிலைப் பள்ளிகள்** | | **4208** | **20.32** | **47212** |
| மேல்நிலைப் பள்ளிகள் | அரசு | 1157 | 12.72 | 38229 |
| | நகராட்சி/மாநகராட்சி | 78 | 0.83 | 3953 |
| | உதவி பெறுபவை | 884 | 11.98 | 33483 |
| | உதவி பெறாதவை | 14 | 0.92 | 1242 |
| | மொத்தம் | 2133 | 26.45 | 76907 |
| | ஆங்கிலோ இந்தியன் | 29 | 0.47 | 1235 |
| | மெட்ரிக்குலேசன் | 852 | 5.29 | 10333 |
| | மைய அரசு | 135 | 1.43 | 3826 |
| **மொத்த மேல்நிலைப் பள்ளிகள்** | | **3149** | **33.64** | **92301** |
| **பெரு மொத்தம் (அனைத்து பள்ளிகள்)** | | **43739** | **122.88** | **316929** |
| | மாணவர்கள் | **6375937** | | |
| | மாணவிகள் | **5911278** | | |
| | மொத்தம் | **12287215** | | |



1999 மார்ச் 31]

## (6) ஆசிரியர்களின் எண்ணிக்கை - பள்ளி நிர்வாக வகைப்படி - 1998-99

| வரிசை எண். | பள்ளி வகைகள் | மாநில/மைய அரசு | நகராட்சி/மாநகராட்சி | ஊராட்சி ஒன்றியம் | தனியார் (உதவி பெறுபவை) | தனியார் (உதவி பெறாதவை) | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தொடக்கப் பள்ளிகள் | 7212 | 7351 | 69956 | 30828 | 350 | 115697 |
| 2 | நடுநிலைப் பள்ளிகள் | 2226 | 6208 | 24822 | 28303 | 160 | 61719 |
| 3 | உயர்நிலைப் பள்ளிகள் | 26391 | 1492 | 0 | 7068 | 12261 | 47212 |
| 4 | மேல்நிலைப் பள்ளிகள் | 39084 | 3953 | 0 | 33483 | 15781 | 92301 |
| | மொத்தம் | **74913** | **19004** | **94778** | **99682** | **28552** | **316929** |

ஆசிரியர்கள்

| ஆண் | பெண் |
|---|---|
| 67758 | 47939 |
| 31937 | 29782 |
| 26174 | 21038 |
| 52606 | 39695 |
| 178475 | 138454 |

## (7) பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை (வகுப்பு வகைப்படி) 1998-99

| வகுப்பு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1-5 | 93445 | 82591 | 176036 |
| 6-8 | 40119 | 26278 | 66397 |
| 9-10 | 29024 | 18569 | 47593 |
| 11-12 | 15887 | 11016 | 26903 |
| 1 முதல் 12 | 178475 | 138454 | 316929 |

[1999 மார்ச் 31

## (8) மாணவர்கள் சேர்க்கைப் பட்டியல் 1998-99 (இலட்சத்தில்)

| வகுப்பு | இனம் | தொடக்கப் பள்ளிகள் | நடுநிலைப் பள்ளிகள் | உயர்நிலைப் பள்ளிகள் | மேல்நிலைப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 முதல் 5 | ஆண் | 22.71 | 8.23 | 1.80 | 1.68 | 34.42 |
| | பெண் | 21.28 | 7.83 | 1.67 | 1.49 | 32.27 |
| | மொத்தம் | **43.99** | **16.06** | **3.47** | **3.17** | **66.69** |
| 6 முதல் 8 | ஆண் | - | 4.52 | 5.45 | 7.66 | 17.63 |
| | பெண் | - | 4.34 | 5.64 | 6.15 | 16.13 |
| | மொத்தம் | - | **8.86** | **11.09** | **13.81** | **33.76** |
| 9 மற்றும் 10 | ஆண் | - | - | 2.87 | 5.45 | 8.32 |
| | பெண் | - | - | 2.89 | 4.27 | 7.16 |
| | மொத்தம் | - | - | **5.76** | **9.72** | **15.48** |
| 11 மற்றும் 12 | ஆண் | - | - | - | 3.55 | 3.55 |
| | பெண் | - | - | - | 3.39 | 3.39 |
| | மொத்தம் | - | - | - | **6.94** | **6.94** |
| 1 முதல் 12 | ஆண் | 22.71 | 12.75 | 10.12 | 18.34 | 63.92 |
| | பெண் | 21.28 | 12.17 | 10.20 | 15.30 | 58.95 |
| | மொத்தம் | **43.99** | **24.92** | **20.32** | **33.64** | **122.87** |

## (9) தொழிற்கல்விப் பாடங்கள் 1998-99

| வ. எண். | பாடப்பிரிவு | சேர்க்கை | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்கள் | மாணவிகள் | மொத்தம் |
| 1 | வேளாண்மை | 6185 | 568 | 6753 |
| 2 | மனை இயல் | 128 | 4352 | 4480 |
| 3 | வணிகவியல் மற்றும் வாணிபம் | 28926 | 26009 | 54935 |
| 4 | பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் | 20243 | 2598 | 22841 |
| 5 | சுகாதாரம் | 3481 | 16375 | 19866 |
| 6 | இதர பிரிவுகள் | 92 | 85 | 187 |
| | மொத்தம் | **59055** | **49987** | **109062** |



1999 மார்ச் 31]

## (10) பள்ளிப் படிப்பை இடைவிட்டோர் எண்ணிக்கை (விழுக்காடு)

| ஆண்டு | தொடக்கப் பள்ளிகள் | | | நடுநிலைப் பள்ளிகள் | | | உயர்நிலைப் பள்ளிகள் | | | மேல்நிலைப் பள்ளிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| 1989-90 | 18.78 | 23.64 | 21.05 | 40.87 | 50.65 | 45.43 | 66.11 | 73.85 | 69.64 | 86.11 | 87.98 | 86.44 |
| 1990-91 | 18.27 | 22.68 | 20.32 | 40.17 | 49.43 | 44.48 | 64.91 | 72.38 | 68.32 | 84.23 | 86.60 | 85.31 |
| 1991-92 | 17.71 | 21.16 | 19.31 | 37.48 | 46.50 | 41.67 | 64.45 | 71.93 | 67.94 | 83.02 | 86.07 | 84.90 |
| 1992-93 | 17.11 | 19.62 | 18.27 | 34.75 | 43.54 | 38.85 | 63.65 | 71.02 | 67.08 | 82.94 | 85.39 | 84.08 |
| 1993-94 | 16.39 | 18.35 | 17.30 | 32.16 | 41.20 | 36.85 | 62.98 | 69.85 | 66.17 | 81.89 | 84.28 | 83.00 |
| 1994-95 | 15.58 | 17.65 | 16.54 | 30.75 | 39.36 | 34.74 | 61.46 | 69.15 | 65.05 | 80.59 | 84.19 | 82.26 |
| 1995-96 | 14.88 | 16.97 | 15.85 | 28.60 | 37.11 | 32.54 | 60.14 | 68.20 | 63.87 | 79.45 | 83.65 | 81.40 |
| 1996-97 | 14.05 | 16.20 | 15.06 | 26.38 | 34.78 | 30.27 | 58.63 | 67.05 | 62.53 | 78.21 | 83.09 | 80.48 |
| 1997-98 | 13.99 | 16.18 | 15.05 | 25.94 | 34.64 | 29.99 | 57.04 | 65.74 | 61.06 | 77.54 | 82.54 | 79.86 |
| 1998-99 | 12.98 | 16.15 | 14.52 | 36.85 | 33.37 | 35.23 | 57.72 | 58.35 | 58.01 | 82.10 | 80.61 | 81.49 |

[1999 மார்ச் 31

## (11) உயர்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (நிர்வாக வகைப்படி) (1983-84 முதல் 1998-99)

| ஆண்டு | மாநிலப் பள்ளிகள் | | | | மொத்தம் | மெட்ரிக் குலேசன் பள்ளிகள் | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | உதவி பெறுவது | உதவி பெறாதது | | | | | | |
| 1983-84 | 1621 | 72 | 441 | 7 | 2141 | 93 | 18 | 99 | 210 | 2351 |
| 1984-85 | 1685 | 73 | 465 | 5 | 2229 | 144 | 14 | 89 | 247 | 2476 |
| 1985-86 | 1723 | 80 | 450 | 5 | 2258 | 212 | 13 | 86 | 311 | 2569 |
| 1986-87 | 1765 | 80 | 445 | 2 | 2292 | 289 | 11 | 96 | 396 | 2688 |
| 1987-88 | 1762 | 80 | 450 | 2 | 2294 | 406 | 13 | 106 | 525 | 2819 |
| 1988-89 | 1795 | 80 | 416 | 2 | 2293 | 515 | 13 | 101 | 629 | 2922 |
| 1989-90 | 1839 | 78 | 387 | 23 | 2327 | 606 | 12 | 89 | 707 | 3034 |
| 1990-91 | 1864 | 83 | 370 | 44 | 2361 | 684 | 13 | 93 | 790 | 3151 |
| 1991-92 | 1872 | 83 | 352 | 66 | 2373 | 684 | 13 | 93 | 790 | 3163 |
| 1992-93 | 1883 | 83 | 346 | 84 | 2396 | 709 | 13 | 85 | 807 | 3203 |
| 1993-94 | 1889 | 83 | 346 | 94 | 2412 | 759 | 13 | 86 | 858 | 3270 |
| 1994-95 | 1902 | 83 | 332 | 121 | 2438 | 806 | 13 | 83 | 902 | 3340 |
| 1995-96 | 1915 | 87 | 304 | 139 | 2445 | 885 | 12 | 75 | 974 | 3419 |
| 1996-97 | 1932 | 88 | 304 | 140 | 2464 | 1032 | 12 | 66 | 1110 | 3574 |
| 1997-98 | 1917 | 94 | 294 | 144 | 2449 | 1245 | 12 | 59 | 1316 | 3765 |
| 1998-99 | 1986 | 94 | 626 | 96 | 2802 | 1335 | 12 | 59 | 1406 | 4208 |



1999 மார்ச் 31]

## (12) மேல்நிலைப் பள்ளிகளின் வளர்ச்சி (1983-84 முதல் 1998-99)

| ஆண்டு | மாநிலப் பள்ளிகள் | | | | மொத்தம் | மெட்ரிக் குலேசன் பள்ளிகள் | ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் | மைய அரசு | மொத்தம் | பெரு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அரசு | நகராட்சி/ மாநகராட்சி | உதவி பெறுவது | உதவி பெறாதது | | | | | | |
| 983-84 | 654 | 60 | 576 | 2 | 1292 | 52 | 26 | 57 | 135 | 1427 |
| 984-85 | 66 | 60 | 584 | 1 | 1331 | 59 | 27 | 57 | 143 | 1479 |
| 985-86 | 690 | 62 | 624 | 1 | 1380 | 79 | 28 | 67 | 174 | 1554 |
| 986-87 | 755 | 62 | 651 | 1 | 1469 | 100 | 30 | 79 | 209 | 1678 |
| 987-88 | 765 | 62 | 653 | 1 | 1481 | 121 | 29 | 79 | 229 | 1710 |
| 988-89 | 769 | 62 | 676 | 19 | 1526 | 155 | 29 | 77 | 261 | 1787 |
| 989-90 | 809 | 68 | 677 | 53 | 1607 | 192 | 28 | 87 | 308 | 1915 |
| 990-91 | 848 | 68 | 674 | 70 | 1660 | 276 | 28 | 81 | 385 | 2045 |
| 991-92 | 869 | 68 | 674 | 88 | 1669 | 276 | 28 | 81 | 385 | 2084 |
| 1992-93 | 879 | 68 | 674 | 94 | 1715 | 338 | 28 | 84 | 450 | 2165 |
| 1993-94 | 891 | 68 | 674 | 98 | 1731 | 373 | 28 | 89 | 490 | 2221 |
| 1994-95 | 903 | 68 | 674 | 112 | 1757 | 440 | 28 | 93 | 561 | 2318 |
| 1995-96 | 932 | 69 | 674 | 140 | 1815 | 540 | 29 | 106 | 675 | 2490 |
| 1996-97 | 1012 | 70 | 674 | 155 | 1911 | 668 | 29 | 126 | 823 | 2734 |
| 1997-98 | 1087 | 75 | 674 | 183 | 2019 | 792 | 29 | 135 | 956 | 2975 |
| 1998-99 | 1157 | 78 | 869 | 29 | 2133 | 852 | 29 | 135 | 1016 | 3149 |

## (13) உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (1983-84 முதல் 1998-99) நிர்வாக வாரியாக (1 முதல் 10 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/ மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுவது | | | தனியார் பள்ளிகள் உதவி பெறாதது | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1983-84 | 372062 | 230676 | 602738 | 19546 | 22757 | 42303 | 138041 | 112481 | 250522 | 600 | 363 | 963 | 530249 | 366277 | 896526 |
| 1984-85 | 396375 | 259454 | 655829 | 19123 | 22781 | 41904 | 140344 | 113410 | 253763 | 607 | 434 | 1121 | 556529 | 396088 | 952617 |
| 1985-86 | 411032 | 271770 | 682802 | 22056 | 23136 | 45192 | 153907 | 126533 | 200440 | 1130 | 376 | 1506 | 588125 | 421815 | 1009940 |
| 1986-87 | 439308 | 307396 | 746704 | 22989 | 23365 | 46352 | 150876 | 127990 | 278866 | 1260 | 391 | 1651 | 614431 | 459142 | 1073573 |
| 1987-88 | 450268 | 317398 | 767606 | 23978 | 28794 | 52772 | 165332 | 153661 | 318993 | 1378 | 416 | 1794 | 640956 | 500269 | 1141225 |
| 1988-89 | 481562 | 329688 | 811250 | 26269 | 28203 | 54472 | 191676 | 170163 | 361819 | 1410 | 431 | 1841 | 700917 | 528485 | 1229402 |
| 1989-90 | 505175 | 349658 | 854833 | 24949 | 29160 | 54118 | 199741 | 188212 | 387955 | 7431 | 3712 | 11143 | 737296 | 570571 | 1308047 |
| 1990-91 | 541843 | 369505 | 911348 | 31132 | 31569 | 62701 | 170949 | 180766 | 351715 | 11117 | 5131 | 16248 | 755041 | 586971 | 1342012 |
| 1991-92 | 570948 | 402332 | 977280 | 32421 | 32423 | 64844 | 157824 | 168298 | 326122 | 22248 | 20945 | 43193 | 783441 | 623998 | 1407439 |
| 1992-93 | 601613 | 438733 | 1040346 | 34552 | 33940 | 68501 | 155939 | 165003 | 320942 | 27449 | 25248 | 52697 | 819553 | 663933 | 1482486 |
| 1993-94 | 588002 | 403111 | 1018113 | 36770 | 35884 | 72654 | 171359 | 178938 | 350297 | 29572 | 27596 | 57168 | 825703 | 672529 | 1498232 |
| 1994-95 | 609052 | 465799 | 1074851 | 39121 | 37985 | 77106 | 169295 | 176489 | 345784 | 42023 | 36941 | 78964 | 859491 | 717214 | 1576705 |
| 1995-96 | 628566 | 485186 | 1113752 | 39960 | 39033 | 78993 | 162853 | 168975 | 322828 | 46558 | 42809 | 89367 | 877937 | 737003 | 1614940 |
| 1996-97 | 642667 | 498359 | 1141026 | 40856 | 40116 | 80972 | 166506 | 174428 | 340934 | 47602 | 43953 | 91555 | 897631 | 756856 | 1654487 |
| 1997-98 | 634069 | 494382 | 1128351 | 40309 | 39788 | 80097 | 164278 | 173001 | 337279 | 46966 | 43593 | 90559 | 885622 | 750664 | 1609646 |
| 1998-99 | 427908 | 451571 | 879479 | 32544 | 31660 | 64204 | 151900 | 162313 | 314213 | 116561 | 117880 | 234441 | 728913 | 763424 | 1492337 |



## உயர்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (தொடர்ச்சி)

| ஆண்டு | மெட்ரிகுலேசன் | | | ஆங்கிலோ இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1983-84 | 22187 | 17585 | 39772 | 3934 | 8778 | 12712 | 31608 | 18041 | 49649 | 587978 | 410681 | 998659 |
| 1984-85 | 32265 | 32593 | 67858 | 3205 | 7614 | 10819 | 31968 | 18492 | 50460 | 626967 | 454787 | 1081754 |
| 1985-86 | 41860 | 33237 | 75105 | 3401 | 7923 | 11324 | 24663 | 16304 | 40927 | 658057 | 479279 | 1137366 |
| 1986-87 | 43928 | 32213 | 76141 | 3136 | 6830 | 9966 | 23728 | 14763 | 38491 | 685223 | 512948 | 1198171 |
| 1987-88 | 52308 | 38491 | 90799 | 2931 | 6617 | 9548 | 29098 | 20810 | 49908 | 725293 | 566187 | 1291480 |
| 1988-89 | 56271 | 48673 | 104944 | 3440 | 7171 | 10611 | 28443 | 20137 | 48580 | 789071 | 604466 | 1393537 |
| 1989-90 | 67058 | 60855 | 127913 | 3559 | 7333 | 10892 | 28239 | 20092 | 48331 | 836152 | 659031 | 1495183 |
| 1990-91 | 93763 | 75157 | 168920 | 3681 | 7367 | 11048 | 30153 | 23089 | 53242 | 882638 | 692584 | 1575222 |
| 1991-92 | 101501 | 77739 | 179240 | 4070 | 7837 | 11907 | 28214 | 21767 | 49981 | 917226 | 731341 | 1648567 |
| 1992-93 | 112007 | 83994 | 196001 | 4174 | 8774 | 12948 | 26150 | 19911 | 46061 | 961884 | 775612 | 1737496 |
| 1993-94 | 143512 | 114284 | 257796 | 4261 | 9203 | 13464 | 25874 | 19790 | 45664 | 999350 | 815806 | 1815156 |
| 1994-95 | 153269 | 117936 | 271205 | 4615 | 9418 | 14033 | 26225 | 19938 | 46163 | 1043600 | 864606 | 1908106 |
| 1995-96 | 184790 | 152260 | 337050 | 4297 | 9012 | 13309 | 27248 | 20890 | 48138 | 1094272 | 919165 | 2013437 |
| 1996-97 | 192446 | 159395 | 351841 | 4317 | 9057 | 11374 | 27064 | 21072 | 48136 | 1121458 | 946380 | 2067838 |
| 1997-98 | 208384 | 17724 | 386058 | 4791 | 9119 | 13910 | 27591 | 21424 | 49015 | 1126338 | 958931 | 2085869 |
| 1998-99 | 251923 | 226604 | 478527 | 3326 | 7863 | 11189 | 27550 | 22254 | 49804 | 1011712 | 1020145 | 2031857 |

# (14) மேல்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம் (1983-84 முதல் 1998-99) நிர்வாக வாரியாக (1 முதல் 12 வரை)

| ஆண்டு | அரசு | | | நகராட்சி/ மாநகராட்சி | | | தனியார் பள்ளிகள் உதவி பெறுவது | | | தனியார் பள்ளிகள் உதவி பெறாதது | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1983-84 | 454506 | 204542 | 659048 | 49573 | 42029 | 91602 | 448372 | 296857 | 745229 | 625 | 372 | 997 | 953076 | 543810 | 1496867 |
| 1984-85 | 482302 | 227533 | 709855 | 49760 | 45012 | 94772 | 457509 | 307156 | 764675 | 780 | 424 | 1204 | 990351 | 580155 | 1570507 |
| 1985-86 | 495158 | 250766 | 745924 | 64323 | 50119 | 114442 | 466350 | 326707 | 793057 | 543 | 252 | 795 | 1026374 | 627844 | 165421 |
| 1986-87 | 541189 | 274414 | 815603 | 70191 | 51583 | 121724 | 479736 | 354197 | 834933 | 763 | 352 | 1115 | 1091879 | 679543 | 1721422 |
| 1987-88 | 559551 | 297530 | 857081 | 72287 | 52150 | 124437 | 511400 | 359332 | 879732 | 518 | 221 | 739 | 1143756 | 709233 | 1852989 |
| 1988-89 | 614432 | 338611 | 953043 | 78118 | 56089 | 134207 | 516815 | 359852 | 896667 | 7194 | 3811 | 11005 | 1216559 | 778363 | 1994922 |
| 1989-90 | 634181 | 352449 | 986550 | 88181 | 64675 | 152856 | 519816 | 394560 | 914376 | 18573 | 8548 | 27121 | 1260751 | 820252 | 2081003 |
| 1990-91 | 644590 | 368621 | 103291 | 95907 | 71735 | 167638 | 522202 | 410187 | 932390 | 23339 | 13531 | 39870 | 1309038 | 863771 | 2172809 |
| 1991-92 | 682068 | 387125 | 1071163 | 97211 | 72802 | 170017 | 533999 | 422609 | 956608 | 31892 | 16308 | 48200 | 1345144 | 898844 | 2243988 |
| 1992-93 | 704381 | 439836 | 1114211 | 98024 | 73398 | 171422 | 545340 | 421815 | 967155 | 35412 | 25119 | 60531 | 1383157 | 930168 | 2343325 |
| 1993-94 | 697304 | 409168 | 1106472 | 105853 | 79430 | 185283 | 562496 | 438240 | 1000736 | 37855 | 28300 | 66155 | 1403508 | 955138 | 2358640 |
| 1994-95 | 739013 | 452328 | 1191341 | 110511 | 83025 | 193536 | 576925 | 451425 | 1028350 | 47422 | 35358 | 82770 | 1473371 | 1022436 | 2495907 |
| 1995-96 | 760813 | 473059 | 1233872 | 110721 | 83211 | 193932 | 582049 | 455814 | 1037863 | 57843 | 48732 | 101575 | 1511426 | 1055816 | 2567242 |
| 1996-97 | 785765 | 491111 | 1276846 | 114348 | 86338 | 200686 | 601115 | 472895 | 1074010 | 59738 | 45375 | 105113 | 1560936 | 1095719 | 2636655 |
| 1997-98 | 810254 | 513892 | 1324146 | 117916 | 90343 | 208259 | 619873 | 494831 | 1114704 | 61603 | 47480 | 109083 | 1609646 | 1146546 | 2756192 |
| 1998-99 | 730408 | 541697 | 1272105 | 34009 | 49029 | 83038 | 637793 | 559746 | 1197539 | 45974 | 45991 | 91965 | 1448184 | 1196463 | 2644647 |

[1999 மார்ச் 31

# மேல்நிலைப் பள்ளிகளின் சேர்க்கை விவரம்—(தொடர்ச்சி...)

| ஆண்டு | மெட்ரிக்குலேசன் | | | ஆங்கிலோ இந்தியன் | | | மைய அரசு | | | பெரு மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1983-84 | 20054 | 30302 | 50356 | 18122 | 12096 | 30218 | 43692 | 22378 | 66070 | 1034944 | 608570 | 1643520 |
| 1984-85 | 30119 | 38398 | 68517 | 18160 | 14270 | 32380 | 48028 | 25586 | 73614 | 1086608 | 658409 | 1745017 |
| 1985-86 | 39689 | 43817 | 83506 | 20024 | 14970 | 34904 | 49500 | 27441 | 76641 | 1135587 | 713772 | 1849359 |
| 1986-87 | 42433 | 48374 | 90807 | 20195 | 16255 | 36447 | 51291 | 34809 | 86110 | 1216959 | 773823 | 1990782 |
| 1987-88 | 56411 | 48460 | 104871 | 20359 | 16407 | 36766 | 53644 | 38614 | 92258 | 1274170 | 812714 | 2086884 |
| 1988-89 | 58085 | 49068 | 107153 | 20498 | 16462 | 36960 | 52291 | 35606 | 87897 | 1347433 | 879499 | 2226932 |
| 1989-90 | 63706 | 53548 | 117254 | 20505 | 16592 | 37097 | 56492 | 36423 | 93915 | 1402454 | 926815 | 2329269 |
| 1990-91 | 71575 | 60311 | 131886 | 20809 | 16710 | 37519 | 57981 | 36815 | 94796 | 1459403 | 977607 | 2437010 |
| 1991-92 | 79667 | 65744 | 145411 | 21523 | 17111 | 38634 | 53569 | 34662 | 88231 | 1499903 | 1016301 | 2516204 |
| 1992-93 | 94759 | 74860 | 169619 | 23507 | 19922 | 43429 | 54946 | 36182 | 91128 | 1556369 | 1061132 | 2617501 |
| 1993-94 | 127317 | 103369 | 230386 | 23556 | 19983 | 43539 | 58138 | 38540 | 96678 | 1612519 | 1117030 | 2729549 |
| 1994-95 | 138252 | 109025 | 247277 | 23982 | 19867 | 43849 | 58922 | 38846 | 97768 | 1694927 | 1190474 | 2885401 |
| 1995-96 | 180094 | 150591 | 330685 | 24171 | 20041 | 44212 | 65267 | 44897 | 110164 | 1780958 | 1271345 | 3052303 |
| 1996-97 | 188143 | 157693 | 345836 | 25068 | 20972 | 46040 | 68159 | 47033 | 115192 | 1842306 | 1321417 | 3163723 |
| 1997-98 | 214692 | 183244 | 397936 | 25806 | 21164 | 46970 | 70135 | 48577 | 118712 | 1920279 | 1399531 | 3319810 |
| 1998-99 | 280487 | 248291 | 528778 | 23035 | 23684 | 46719 | 82373 | 60983 | 143357 | 1834079 | 1529421 | 3363500 |

1999 மார்ச் 31]

## (கி15) உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விழுக்காடு (1997-98)

| வ. எண். | மாவட்டம் | உயர்நிலைப்பள்ளி | | | மேல்நிலைப்பள்ளி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | கன்னியாகுமரி | 56.41 | 63.43 | 60.17 | 65.39 | 80.55 | 73.78 |
| 2 | திருநெல்வேலி | 74.60 | 82.27 | 78.05 | 85.95 | 92.09 | 89.04 |
| 3 | தூத்துக்குடி | 78.33 | 86.54 | 82.39 | 89.29 | 93.76 | 91.70 |
| 4 | இராமநாதபுரம் | 60.09 | 64.18 | 61.94 | 80.38 | 90.01 | 84.67 |
| 5 | சிவகங்கை | 66.88 | 70.17 | 68.45 | 81.32 | 90.68 | 86.15 |
| 6 | விருதுநகர் | 82.45 | 88.92 | 85.27 | 92.93 | 93.56 | 93.24 |
| 7 | தேனி | 70.28 | 76.55 | 72.96 | 86.34 | 93.69 | 89.61 |
| 8 | மதுரை | 74.93 | 84.22 | 79.36 | 86.46 | 92.63 | 89.62 |
| 9 | திண்டுக்கல் | 69.79 | 76.75 | 73.11 | 81.78 | 90.74 | 86.30 |
| 10 | உதகமண்டலம் | 37.24 | 50.95 | 44.48 | 58.89 | 74.17 | 66.71 |
| 11 | கோயம்புத்தூர் | 70.53 | 76.34 | 73.51 | 86.39 | 90.72 | 88.90 |
| 12 | ஈரோடு | 67.14 | 76.83 | 71.78 | 85.02 | 91.33 | 88.23 |
| 13 | சேலம் | 61.59 | 67.48 | 64.20 | 78.39 | 86.70 | 82.37 |
| 14 | நாமக்கல் | 70.77 | 72.86 | 71.75 | 77.73 | 83.13 | 80.28 |
| 15 | தருமபுரி | 49.72 | 51.87 | 50.65 | 68.50 | 74.17 | 70.91 |
| 16 | புதுக்கோட்டை | 48.07 | 49.96 | 48.92 | 68.94 | 79.92 | 73.97 |
| 17 | கரூர் | 64.88 | 71.35 | 67.81 | 77.30 | 88.70 | 82.81 |
| 18 | பெரம்பலூர் | 50.16 | 56.01 | 52.59 | 66.45 | 80.57 | 72.19 |
| 19 | திருச்சி | 74.22 | 79.38 | 76.69 | 83.95 | 91.46 | 87.89 |
| 20 | நாகப்பட்டினம் | 60.12 | 64.65 | 62.24 | 73.82 | 80.71 | 77.25 |
| 21 | திருவாரூர் | 62.42 | 70.17 | 66.15 | 72.00 | 83.21 | 77.52 |
| 22 | தஞ்சாவூர் | 58.25 | 66.66 | 62.23 | 77.25 | 85.14 | 81.21 |
| 23 | விழுப்புரம் | 56.87 | 57.35 | 57.06 | 72.91 | 78.49 | 75.15 |
| 24 | கடலூர் | 61.87 | 69.28 | 64.91 | 80.52 | 85.08 | 82.65 |
| 25 | திருவண்ணாமலை | 46.34 | 50.03 | 47.82 | 56.96 | 64.65 | 60.11 |
| 26 | வேலூர் | 53.78 | 58.22 | 55.73 | 69.41 | 77.86 | 73.41 |
| 27 | காஞ்சிபுரம் | 55.50 | 65.67 | 60.09 | 79.14 | 86.12 | 82.65 |
| 28 | திருவள்ளூர் | 54.52 | 64.29 | 58.80 | 74.91 | 84.00 | 79.06 |
| 29 | சென்னை | 61.82 | 73.99 | 68.08 | 83.74 | 90.93 | 87.57 |





## 16 பெண்களின் கல்வி நிலை - புள்ளி விவரம்

### (அ) பெண்களின் எழுத்தறிவு 1901 முதல் 1991 வரை

| வருடம் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1901 | 1.02 | 7.64 |
| 1911 | 1.53 | 9.18 |
| 1921 | 2.43 | 10.38 |
| 1931 | 2.94 | 11.34 |
| 1941 | 6.88 | 16.19 |
| 1951 | 10.06 | 20.82 |
| 1961 | 18.17 | 31.41 |
| 1971 | 28.86 | 39.46 |
| 1981 | 34.19 | 46.76 |
| 1991 | 52.29 | 53.72 |

### 16 (ஆ) மாணவிகளின் சேர்க்கை விவரம் 1984-85 முதல் 1998-99 வரை (1 முதல் 12 வகுப்பு வரை) - அனைத்துப் பள்ளிகளும்

| ஆண்டு | பெண்கள் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1984-85 | 4599525 | 10546019 | 43.61 |
| 1985-86 | 4787287 | 10924927 | 43.82 |
| 1986-87 | 4947126 | 11275998 | 43.87 |
| 1987-88 | 5140347 | 11666494 | 44.06 |
| 1988-89 | 5279573 | 11963482 | 44.13 |
| 1989-90 | 5424771 | 12268168 | 44.21 |
| 1990-91 | 5573833 | 12558707 | 44.38 |
| 1991-92 | 5722426 | 12850511 | 44.53 |
| 1992-93 | 5873234 | 13144999 | 44.68 |
| 1993-94 | 6106581 | 13443297 | 45.42 |
| 1994-95 | 6179499 | 13738759 | 44.98 |
| 1995-96 | 6329284 | 14040374 | 45.08 |
| 1996-97 | 5735009 | 12389725 | 46.29 |
| 1997-98 | 5866249 | 12623981 | 46.46 |
| 1998-99 | 5911278 | 12287215 | 48.11 |

[1999 மார்ச் 31

## 16 (இ) அனைத்து பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியைகள் எண்ணிக்கை 1984-85 முதல் 1998-99 வரை

| ஆண்டு | ஆசிரியை | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|
| 1984-85 | 116166 | 284414 | 40.80 |
| 1985-86 | 117882 | 287869 | 40.90 |
| 1986-87 | 119598 | 290723 | 41.14 |
| 1987-88 | 121347 | 293155 | 41.39 |
| 1988-89 | 121823 | 294339 | 41.39 |
| 1989-90 | 124493 | 297918 | 41.80 |
| 1990-91 | 127841 | 300857 | 42.50 |
| 1991-92 | 129376 | 302943 | 42.71 |
| 1992-93 | 129926 | 304204 | 42.71 |
| 1993-94 | 126106 | 295413 | 42.69 |
| 1994-95 | 127352 | 295710 | 43.06 |
| 1995-96 | 132361 | 303798 | 43.57 |
| 1996-97 | 134239 | 307971 | 43.59 |
| 1997-98 | 135277 | 309869 | 43.66 |
| 1998-99 | 138454 | 316929 | 43.69 |

## 16 (ஈ) பள்ளியைவிட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு) 1984-85 முதல் 1997-98 வரை

| ஆண்டு | 1-5 | 1-8 | 1-10 | 1-12 |
|---|---|---|---|---|
| 1984-85 | 25.28 | 64.51 | 80.87 | 90.70 |
| 1985-86 | 25.20 | 62.23 | 79.71 | 90.00 |
| 1986-87 | 25.06 | 57.83 | 78.59 | 89.64 |
| 1987-88 | 24.46 | 53.14 | 77.32 | 85.84 |
| 1988-89 | 24.01 | 51.35 | 76.45 | 88.58 |



1999 மார்ச் 31]

## 16 (ஈ) பள்ளியைவிட்டு இடைநின்ற மாணவிகளின் எண்ணிக்கை (விழுக்காடு) 1984-85 முதல் 1997-98 வரை—*தொடர்ச்சி*

| ஆண்டு | 1-5 | 1-8 | 1-10 | 1-12 |
|---|---|---|---|---|
| 1989-90 | 23.64 | 50.65 | 73.85 | 87.98 |
| 1990-91 | 22.68 | 49.43 | 72.63 | 86.60 |
| 1991-92 | 21.16 | 46.50 | 71.93 | 86.07 |
| 1992-93 | 19.62 | 43.54 | 71.02 | 85.39 |
| 1993-94 | 18.35 | 41.20 | 69.85 | 84.28 |
| 1994-95 | 17.65 | 39.36 | 69.15 | 84.19 |
| 1995-96 | 16.97 | 37.11 | 68.20 | 83.65 |
| 1996-97 | 16.20 | 34.78 | 67.05 | 83.09 |
| 1997-98 | 16.18 | 34.64 | 65.74 | 82.54 |
| 1998-99 | 16.15 | 33.37 | 58.35 | 80.61 |

[1999 மார்ச் 31

## இணைப்பு-II

*(84 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 17 - கல்வி

### கொள்கை விளக்கக் குறிப்பு 1999-2000

### உயர் கல்வித் துறை

**தொடக்கவுரை**

உயர்கல்வி என்பது பள்ளிக் கல்வியிட்ட அடித்தளத்தின் மீது அமைந்து உயர்வது ஆகும். உயர்கல்வியின் பரிமாணம் மொழி, கலை, அறிவியல், தொழில் நுட்பம், பல்கலைக்கழகக் கல்வி மற்றும் ஆராய்ச்சியின் வாயிலாக பட்டயம், இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சியில் பட்டங்கள் பெறுதலை உள்ளடக்கியது. தொழில் நுட்பப் பயிலகங்கள், பொறியியற் கல்லூரிகள், கலை அறிவியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவை உயர்கல்வித் தேட்டத்தில் உறுதுணையாக உள்ளன. இந்நிறுவனங்களை உருவாக்கி அனைத்து நிலைகளிலும் திறம்படப் பணியாற்றி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உயர்கல்வியின் நோக்கமாகும்.

2. கல்வி மானியக் கோரிக்கை-17 என்ற தலைப்பின் கீழ் மொத்தச் செலவினத் தொகை ரூ. 4144.01 கோடியாகும். இதில் உயர்கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்டத் தொகை ரூ. 899.43 கோடியாகும். இத்தொகை மொத்தச் செலவினத்தில் 21.70 விழுக்காடாகும்.

3. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம், திட்ட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்கிற காலமாகவும், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம், அனைத்துத் திட்டப்பணி வசதிகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய காலமாகவும் கருதப்பட்டுள்ளது. புதிய முயற்சிகளை மேற்கொள்கையில் தற்போதுள்ள அடிப்படை வசதிகளை உரிய அளவிற்குப் பயன்படுத்திக் கொள்வதைத் தவிர்க்கக் கூடாது. இந்த நோக்கத்திற்கேற்ப, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றோம்.

4. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுக் கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 903 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் பல்கலைக் கழகக் கல்விக்கென ரூ. 30 கோடியும் கல்லூரிக் கல்விக்கென ரூ. 53.00 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. அண்ணா பல்கலைக் கழகத்தையும்



1999 மார்ச் 31]

சேர்த்து தொழில் நுட்பக் கல்விக்கென ரூ. 135.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கலையும், பண்பாடும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திற்கென ரூ. 6.12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. உயர்கல்வித் துறையைப் பொறுத்தவரையில், நம் நாட்டில் தற்போதுள்ள அடிப்படை வசதிப் பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டுள்ள போதிலும் வளர்ந்துவரும் நாடுகளுள் நம்முடைய உயர் கல்வித் திட்டம் இன்றும் சிறந்ததொன்றாக இருக்கிறது. உயர் கல்விக்கான அடிப்படை வசதிகளிலிருந்து கிடைக்கின்ற பயன்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதும், உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்கு நம்முடைய தொழில் நுட்பக் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டு முன்னேற்றம் அடைவதும் இன்றையத் தேவையாகும்.

6. தற்பொழுதுள்ள நிறுவனக் கட்டமைப்பினை (Infrastructure) கருத்தில் கொண்டு, நிலவும் பல்கலைக்கழகக் கல்வி முறை, திறந்தவெளிப் பல்கலைக்கழகக் கல்வி முறை வாயிலாக உயர்கல்வித் திட்டம் இல்லாத பகுதிகளின் தேவையை நிறைவு செய்து விரிவாக்கப் பணியை வரையறுத்து, தற்போதுள்ள அடிப்படை வசதிகளை ஒருங்கிணைத்து உரிய அளவிற்கு அவற்றைப் பயன்படுத்துவதற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது. பட்டப்படிப்பில் தொழிற்கல்விப் பாடங்கள் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கப்படும். மேலும், தொழில் துறை தொடர்பு (Industry-Linked) கொண்ட பட்ட மேற்கல்வி மற்றும் ஆராய்ச்சி ஆகியவையும் இதுபோன்று பொருத்தமாக மாற்றியமைக்கப்படும்.

7. அடுத்து வரும் ஐந்தாண்டுகளில் ஆண்டுதோறும் ஏறக்குறைய நாலரை லட்சம் மாணவர்கள் பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது வகுப்புகளை முடித்து வருவார்கள். அவர்களில் நாற்பது விழுக்காடு கலைப் (Arts) பிரிவையும், இருபது விழுக்காடு அறிவியல் (Science) பிரிவையும், இருபது விழுக்காடு வணிகப் பிரிவையும் (Commerce), ஒன்பது விழுக்காடு பொறியியல் பிரிவையும் (Engineering), 3 விழுக்காடு மருத்துவப் பிரிவையும் (Medical), 2 விழுக்காடு கால்நடை மருத்துவப் பிரிவையும் (Veterinary) இரண்டு விழுக்காடு சட்டப் பிரிவையும் (Law) தெரிவு செய்யலாம். பயன்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட பாடத் திட்டங்களைத் (Application Oriented Courses) துவக்குவதில் தமிழகம் முதல்நிலை வகிக்கிறது.

[1999 மார்ச் 31

8. கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் முறையில் தங்களுடைய கல்வியைத் தொடர இயலாமல் போகின்ற மாணவர்கள், பல்கலைக்கழகங்கள் நடத்துகின்ற அஞ்சல் வழிவாயிலான தொலைதூர கல்வியைத் தேர்ந்தெடுத்துப் பயில்கின்றனர். வேலைக்குச் சென்று கொண்டே கல்வி கற்க விரும்புகின்றவர்களுக்கும் அவர்களுக்கு வாய்ப்பாகத் தொலைதூரக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டு அவர் தம் அவா நிறைவேற்றப்படுகின்றது.

9. கல்வித் தரத்தினை உயர்த்த, அனைத்து நிலைகளிலும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதே உயர்கல்வித் துறையின் முன்னுரிமைப் பகுதியாகும். அரசு உயர்மட்டக்குழு ஒப்புதலின் பேரில் 498 கல்லூரி விரிவுரையாளர்களைத் தெரிவு செய்திட ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அரசு இசைவு அளித்தது. தமிழ்நாடு அரசுக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணியிட நியமனங்களுக்கென 26 பாடங்களுக்கு 461 நபர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவு செய்தது. அதன்படி தெரிவு செய்யப்பட்டவர்களை அரசினர் கலைக் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாக நியமித்தது. கல்லூரி/பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர் நியமனத்திற்குப் பார்வையற்றவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் தகுந்தவர் இல்லாமையினால் குறிப்பிட்ட ஆண்டில் நிறைவு செய்யப்படவில்லை எனில், அதனை அடுத்துவரும் ஆண்டுகளில் நிறைவு செய்யும் வகையில் அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

10. தமிழ்நாட்டில் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களை அவர்களின் தகுதி முன்னுரிமை, இடஒதுக்கீடு அடிப்படையில் சேர்ப்பதற்கு புதிதாக ஒற்றைச் சாளர முறை 1997-98 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் பெற்ற நல்வாய்ப்பால் மாணவர்களும், பெற்றோர்களும், பொதுமக்களும் நன்கு வரவேற்றுப் பாராட்டியுள்ளனர். இதன்படி தகுதியின் முன்னுரிமை அடிப்படையிலும் அவர்கள் படிக்க விரும்பும் கல்லூரி-பாடப்பிரிவு அடிப்படையிலும், அவர்கள் சேர்ந்து பயில விரும்பும் கல்லூரிகளில் இடம் உள்ளவரையில் சேர்ந்து கொள்ள அனுமதி வழங்கப்படுவதுடன் முதலாண்டிலேயே அவர்களுக்கான பாடப்பிரிவுகளும் ஒதுக்கி உறுதி செய்யப்படுகின்றது. சுயநிதி பொறியியற் கல்லூரிகள் இரண்டாம் ஆண்டு தொடக்கத்தில் பாடப்பிரிவு ஒதுக்கும் முறையினால், அப்படி ஒதுக்குவதை வணிகமயமாக்கியிருந்ததை இந்தப் புதிய முறை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. இதேபோன்று பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் மாணவர்களின் சேர்க்கையிலும் கடந்த ஆண்டு ஒற்றைச் சாளர முறை



1999 மார்ச் 31]

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் மாணவர்கட்கு மிகவும் பயனளித்துள்ளது.

11. அனைத்திந்தியத் தொழிற் கல்வி நிலை அடிப்படையில், நமது மாநிலம் தொழில் நுட்பக் கல்வியில் முன்னணியில் உள்ளது. அகில இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின்படி பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், நமது மாநிலம் பொறியியற் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் தேசிய அளவில் இரண்டாவது இடத்தையும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது. மேலும் மாநிலத்தின் பரப்பளவையும் மக்கள் தொகையையும் கணக்கில் கொண்டால், நமது மாநிலம் உண்மையிலேயே தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம், நம்நாட்டில் உயர்ந்த தேர்ச்சி வழங்கும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது. இங்குப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 6012 ஆகும். இதில் 1077 பேர் பெண்களாவர். நாட்டில் இப்பல்கலைக்கழகம் ஒன்றில்தான், பொறியியல் தொழில்நுட்பக் கல்வியில் அதிக எண்ணிக்கையில் மாணவியர் கல்வி கற்கின்றனர். உயிரி தொழில் நுட்பவியல், படிக வளர்ச்சி, தொலை உணர்வு தொழில்நுட்பம், சுற்றுச் சூழல், கடல் ஆய்வு, மேலாண்மை மின்னணுவியல், தொலை தகவல் தொடர்பு பொறியியல், எரிசக்தி ஆதாரங்கள் முதலான துறைகளில் இப்பல்கலைக்கழகம் முன்னோடிக் கல்வித் திட்டப் பணியை ஆற்றி வருகிறது.

12. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 'விருப்ப அடிப்படைக் கல்வித் திட்டம்', அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'படிக வளர்ச்சி', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'உயிரி தொழில் நுட்பவியல்', பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 'மேலாண்மை நிருவாகம்' ஆகியன நம்முடைய உயர்கல்விக்குச் சிறப்புச் சேர்க்கின்ற திட்டங்களாகும்.

13. ஆவணக் காப்பகத் துறை ஆராய்ச்சியாளர்களின் பயனுக்காக அச்சில் கைவசம் இல்லாத பழமையான அரிய புத்தகங்களை மறுபதிப்பு மூலம் வெளியிடும் பயனுடைய திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள தேசிய மாணவர் படை வீரர்களின் பயிற்சி சிறப்பாக நடைபெறுகிறது. டில்லியில் நடைபெற்ற குடியரசுநாள் பேரணியில் கலந்து கொண்டு, பல மாநிலத் தேசிய மாணவர் படைகளுள் இரண்டாவது இடத்தைப் பெற்று, பாராட்டப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த மாணவ வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

[1999 மார்ச் 31

## 1999-2000-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

### அட்டவணை-2

| கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| மானியக்கோரிக்கை எண் 36 | - | - | — |
| மானியக்கோரிக்கை எண் 55 | | | |
| 4202 கல்வி, போட்டிவிளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனசெலவு | | | |
| 01. பொதுக்கல்வி | | | |
| 203 பல்கலைக்கழகக் கல்வியும் ஏனைய உயர்கல்வியும் | 328.55 | — | 328.55 |
| 02 தொழில் நுட்பக்கல்வி | | | |
| 104 பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 301.61 | — | 301.61 |
| 105 பொறியியல்/தொழில் நுட்பக் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள். | 442.75 | 0.01 | 442.76 |
| நிகர மொத்தம் | 1072.91 | 0.01 | 1072.92 |
| மானியக்கோரிக்கை 61 | | | |
| 6202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாட்டிற்கான கடன்கள் | | | |
| 01 பொதுக் கல்வி | | | |
| 203 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் | 12.00 | — | 12.00 |
| 02 தொழில் நுட்பக்கல்வி | | | |
| 800 ஏனைய கடன்கள் | — | 0.01 | 0.01 |
| நிகர மொத்தம் | 12.00 | 0.01 | 12.01 |
| தொகு மொத்தம் | **1084.91** | **0.02** | **1084.93** |



1999 மார்ச் 31]

## பகுதி இரண்டு திட்டம் 1999-2000

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 1999-2000-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **கல்லூரிக் கல்வி (திட்டப் பணிகள்)** | | |
| 1. | நிலக்கோட்டை, சிவகங்கை ஆகிய இடங்களிலுள்ள அரசு மகளிர் கல்லூரிகளுக்காக 22 ஆசிரியர் பதவிகளையும், 8 ஆசிரியப் பணிசாராப் பதவிகளையும் ஏற்படுத்துதல். | 48.03 | 40.03 |
| 2. | 20 அரசுக் கல்லூரிகளின் கணினி வசதிகளை மேம்படுத்துதல். | 40.00 | 40.00 |
| 3. | கணினி இணைய வசதி செய்து கொடுத்தல். | 0.50 | 0.50 |
| 4. | இயக்ககத்திலுள்ள கணினி வசதிகளையும் பயிற்சித் திட்டத்தையும் தரம் உயர்த்துதல். | 1.50 | 1.50 |
| 5. | 4 கல்லூரிகளுக்கும் இயக்ககத்திற்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்குதல். | 5.00 | 5.00 |
| 6. | 24 அரசுக் கல்லூரிகளுக்கு ஆய்வுக்கூட சாதனங்கள் வழங்குதல். | 12.00 | 12.00 |
| 7. | 10 அரசுக் கல்லூரி மாணவர் இல்லங்களுக்குத் தேவையான சாதனங்கள் வழங்குதல். | 5.00 | 5.00 |
| 8. | ஊரகப் பகுதிகளில் கணினி அறிவியலில் புதிதாக 10 பட்டப்படிப்பு வகுப்புகளைத் தொடங்குதல். | 111.17 | 99.30 |
| 9. | 5 பட்ட மேற்படிப்பு அரசுக் கல்லூரிகளில் ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி. | 5.00 | 5.00 |
| 10. | தொழில்முறைத் தேர்ச்சி பெற்றோரின் ஒத்துழைப்புடன் கட்டுரைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிடு வதற்கு அரசுக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நிதியுதவி. | 4.00 | 4.00 |
| 11. | கிராமப் பகுதிகளிலுள்ள 10 அரசுக் கல்லூரிகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பு மாணவர்களுக்காக சிறப்புப் பயிற்றுவிப்பு வகுப்புகள் நடத்துதல். | 1.00 | 1.00 |

[1999 மார்ச் 31

14. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நிதி உதவியுடன் கலை அறிவியல் கல்லூரிகளில் பட்ட வகுப்புகளில் தொழிற்கல்வியை அறிமுகப்படுத்தியதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. மேலும் 1978-க்கு முன்னரே கல்லூரிகளுக்குத் தன்னாட்சித் தகுதியை வழங்க முற்பட்டதால், அவ்வகை தன்னாட்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் நமது மாநிலம் முன்னோடியாகத் திகழ்கிறது.

15. மகளிர் கல்விக்கென இதுவரை 120 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் நடைபெறுகின்றன. மகளிருக்கென்று தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் உள்ள கல்லூரிகளில் சேர்க்கப்படும் மொத்த மாணவர்களுள் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,82,509 மாணவியர் பயில்கின்றனர். தொழில்நுட்பக் கல்வியைப் பொறுத்தவரையில் பதினோர் மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகங்களும், இரண்டு மகளிர் பொறியியல் கல்லூரிகளும் உள்ளன. பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 10234 மாணவியர் பயின்று வருகின்றனர். பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில், ஆய்வு மற்றும் உயர்கல்வி மூலம் பெண்கள் முன்னேற்றத்திற்கான சிறப்பான பொறுப்பினை மேற்கொண்டு கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. நிகர்நிலைப் பல்கலைக் கழகம் என்னும் தகுதியுடைய அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் பெண்கள் உயர்கல்வி நிறுவனம் மகளிர் மற்றும் குழந்தைகள் காப்பு வளர்ச்சிக்கான நிறுவனமாக இயங்கி வருகிறது. தமிழ்நாடு உயர்கல்வித் துறையில், மகளிருக்குரிய பங்கையும் அவர்களுக்கு உரிய இடத்தையும் அளித்துள்ளது என்பதனை மேற்கூறிய விவரங்கள் காட்டும். சமுதாயத்தில் மகளிரின் பங்களிப்பு தகுந்த அளவில் ஏற்கப்படுவதோடு அரசுக் கொள்கைகளால் ஆதரிக்கப்படுகின்றது.

16. பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் ஊதியத்திற்கெனவும் மற்றும் இதர சில்லறைச் செலவினங்களுக்காகவும் பல்கலைக்கழகங்களுக்குத் தொகுப்பு மானியம் அரசால் வழங்கப்படுகிறது. இம்மானியத்தை மாற்றியமைப்பது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1999 மார்ச் 31]

## 1999-2000 மாநில வரவு செலவுத் திட்டத்தில் உயர்கல்வித் துறை குறித்த நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை 17 - கல்வி என்ற தலைப்பின் கீழ் உயர்கல்வித் துறைக்கான மொத்தச் செலவினத் தொகை ரூ. 899.43 கோடி ஆகும். இதில் ரூ. 37.70 கோடி திட்டப் பணிகளுக்கானதாகும். மாநில வருவாய்க் கணக்கின் பேரிலான மொத்தச் செலவான ரூ. 18500.32 கோடியில் கல்விக்கான செலவு 4.86 விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது.

### அட்டவணை-1

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணி | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | அரசுக் கல்லூரிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | - | 715.50 | 715.50 |
| 2202 | பொதுக்கல்வி | | | |
| 03 | பல்கலைக்கழகக் கல்வியும் உயர் கல்வியும் | 1112.91 | 69581.52 | 70694.43 |
| 2203 | தொழில்நுட்பக் கல்வி | 2077.03 | 13907.25 | 15984.28 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப்பணிகளும் | | | |
| 102 | தேசிய மாணவர்படை மற்றும் தேசிய பணித்திட்டம் | 372.94 | 1307.31 | 1680.25 |
| 2205 | கலையும் பண்பாடும் | | | |
| 104 | ஆவணக் காப்பகங்கள் | 26.74 | 290.48 | 317.22 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் | - | 4.81 | 4.81 |
| 2551 | மலைப்பிரதேச மேம்பாடு | 0.03 | - | 0.03 |
| 3425 | அறிவியல் பணிகளும் ஆராய்ச்சியும் | 177.23 | - | 177.23 |
| 3454 | மக்கள் தொகை கணக்கெடுப்பும் ஆய்வுப் புள்ளியியல் விவரம் | - | 26.09 | 26.09 |
| | நிகர மொத்தம் | 3766.88 | 85832.96 | 89599.84 |
| | திருப்பி வசூலிக்கப்பட்டவை | 3.22 | 339.57 | 342.79 |
| | **தொகு மொத்தம்** | **3770.10** | **86172.53** | **89942.63** |

[1999 மார்ச் 31

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 1999-2000-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 12. | சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பழைய மாணவர் சங்கத்தை வலுப்படுத்துதல். | 2.00 | 2.00 |
| 13. | கல்லூரிகளிலும் சிறப்புக் கல்வி மையங்களிலும் உயர்கல்வியை மேம்படுத்துவது தொடர்பான திட்டம் தயாரித்தல்-சென்னை, சிறப்புக் கல்வி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மானியங்கள். | 3.00 | 3.00 |
| | | 238.20 | 218.33 |
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (திட்டத்தில் சேராதது)** | | |
| 14. | பொருட்சேமிப்பு அறையில் பழைய மின்கம்பிகளை மாற்றி புதிய மின்கம்பிகளை அமைத்தல் மீண்டும் வண்ணம் பூசுதல். | 10.00 | 10.00 |
| | **தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (திட்டப் பணிகள்)** | | |
| 15. | தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலுள்ள அரிய வெளியீடுகளை மீண்டும் அச்சிடுதல். | 6.00 | 6.00 |
| 16. | நிழற்படக் கண்காட்சி நடத்துவதற்காக நிழற் படங்களைக் காட்சிக்கு வைப்பதற்கான பலகைகளை வாங்குதல். | 2.50 | 2.50 |
| | | 18.50 | 18.50 |
| | **தொழில்நுட்பக் கல்வி (திட்டப்பணிகள்)** | | |
| 17. | அரசு பொறியியற் கல்லூரிகளுக்குக் கூடுதல் கணினி வசதிகளைச் செய்து கொடுத்தல். | 70.00 | 70.00 |
| | | 70.00 | 70.00 |
| | **அண்ணா பல்கலைக்கழகம் (திட்டப் பணிகள்)** | | |
| 18. | தொல் பொருளியல் மற்றும் திட்டமிடல் பள்ளியில் கணினி உதவியுடன் கட்டடக் கலைவடிவமைப்பு உருவாக்குதல். | 10.00 | 7.00 |
| 19. | இயற்பியல் துறையில் பருப்பொருள் அறிவியல் மற்றும் மருத்துவ இயற்பியலுக்கு லேசரைப் பயன்படுத்துதல். | 6.00 | 4.00 |



1999 மார்ச் 31]

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 1999-2000-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 20. | கிராமப் பகுதிகளில் சூரிய வெப்பத்தால் இயக்கப்படும் பால் குளிர்ப் பதன ஏற்பாட்டை அமைத்தல். | 4.00 | 4.00 |
| 21. | மணிக்கற்கள் ஆராய்ச்சிக்காக கன சதுர வடிவ உலோகத் தனிம வகை படிகத்தைத் (Ziroconia Crystal) தயாரித்தலும் படிக வளர்ச்சி மையத்தில் மின்னணுவியல் பயன்பாடும். | 8.00 | 6.00 |
| 22. | அண்ணா பல்கலைக்கழகத் தலைமை நூலகப் பணியாளர்களுக்கு கணினிமயமாக்கப்பட்ட நூலக நிருவாகம் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக லேன்தொகுப்பு முறை வசதி செய்து கொடுத்தல். | 5.00 | 5.00 |
| 23. | இராமானுஜம் கணினி மையத்தில், இன்டர்நெட் சொர்வர் அமைத்தலும் நிலை 2 கட்டடப் பணியை மேற்கொள்ளுதலும். | 10.00 | 8.00 |
| 24. | தமிழ்நாட்டின் அமைப்பு ரீதியற்ற பணியாளர்களுக்கு பசை மற்றும் ரப்பர் திரவங்களை மேம்படுத்துவதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல். | 6.00 | 5.00 |
| 25. | பல்கலைக்கழக நூலகத்திற்குப் புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் வாங்குதல். | 8.00 | 8.00 |
| 26. | மின்னியல் மற்றும் மின்னணுப் பொறியியல் பள்ளியில் உள்ள கட்டுப்பாடு மற்றும் கருவிகள் ஆய்வுக் கூடத்தை நவீனமயமாக்குதல். | 5.00 | 5.00 |
| 27. | இரசாயனம் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையில் உள்ள 'பிஷ்கார்ட்' சாதனங்களை மேம்படுத்துதல். | 2.00 | 2.00 |
| 28. | தொல்பொருளியல் திட்டமிடல் பள்ளியில் படப்பிடிப்பு தள வசதியை அதிகரித்தல். | 7.00 | 5.00 |
| | | 71.00 | 59.00 |

[1999 மார்ச் 31

| வ.எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | 1999-2000-ல் செலவு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | **தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையங்கள் (திட்டப் பணிகள்)** | | |
| 29. | திருச்சிராப்பள்ளியிலுள்ள அறிவியல் கூடத்தில் வைப்பதற்கு காட்சிப் பொருள்களையும் விளக்க உரைகளையும் அளித்தல். | 10.00 | 5.00 |
| 30. | சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் தகவல் தொழில்நுட்பம் குறித்த காட்சிக் கூடம் அமைத்தல். | 30.00 | 10.00 |
| 31. | அறிவியல் நகரத்தில் அமைந்துள்ள உறுப்பு நிறுவனங்களில் நூலகத் தொகுப்பு வசதியைச் செய்து கொடுத்தல். | 20.00 | 8.00 |
| | | 60.00 | 23.00 |
| | **தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (திட்டப் பணிகள்)** | | |
| 32. | மாநில அரசின் இணை மானியமும், பல்கலைக் கழகங்களால் அனுப்பப்பட்டு, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்ட குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியமும் | 20.00 | 20.00 |
| | | 20.00 | 20.00 |
| மொத்தம் | திட்டத்தில் சேராதது | 10.00 | 10.00 |
| | திட்டப் பணிகள் | 467.70 | 398.83 |
| | பெரு மொத்தம் | 477.70 | 408.83 |

## 2. கல்லூரிக் கல்வி

கல்லூரிக் கல்வித் துறையில் 1965 முதல் உயர்கல்வி புதிய பாடப் பிரிவுகளுடன் பல வழிகளில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. தமிழகத்தில் கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. தற்போது கல்லூரிக் கல்வி இயக்ககத்தின்கீழ் 365 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் 22 கல்வியியல் கல்லூரிகளும் 15 கீழ்த்திசைக் கல்லூரிகளும், 4 உடற்கல்வி கல்லூரிகளும்



1999 மார்ச் 31]

2 நிதியுதவி பெறும் சமுதாயப் பணிப் பள்ளிகளும், ஒரு நுண்கலை சுயநிதிக் கல்லூரியும் ஆக மொத்தம் 409 கல்லூரிகள் இயங்கி வருகின்றன. 1998-99 ஆம் ஆண்டில் மேலும் 23 புதிய சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அரசு அனுமதியளித்து நடந்து வருகின்றது.

**மகளிர் கல்வி**

மொத்தமுள்ள 409 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 120 மகளிருக்குரியவை. 1998-99 ஆம் ஆண்டு முதல் மகளிர் உயர்கல்வியை கருத்தில் கொண்டு நிலக்கோட்டையிலும், சிவகங்கையிலும் அரசு மகளிர் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மகளிருக்கென்று தனியாகக் கல்லூரிகள் இல்லாத இடங்களில் அங்குள்ள கல்லூரிகளில் 30 விழுக்காட்டிற்கு மிகாமல் மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர்.

1998-99 ஆம் ஆண்டில் 67 அரசுக் கல்லூரிகளின் கட்டடப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவைகளுக்காக ரூ.5.15 கோடி வழங்கப்பட்டது. அடிப்படைத் தேவைகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மாணவிகள் மற்றும் ஆசிரியைகளுக்கான காத்திருப்பு அறை போன்றவைகளைப் படிப்படியாக அனைத்துக் கல்லூரிகளிலும் நிறைவேற்றுவதே அரசின் குறிக்கோளாகும்.

**வேலைவாய்ப்புக் கல்வி அறிமுகம்**

கணிப்பொறி அறிவியல், உயிர்வேதியியல், நுண்ணுயிரியல், உணவு மற்றும் உணவக நிர்வாகம் முதலான பாடங்களில் பி.எஸ்.சி. பட்டத்திற்கான வேலைவாய்ப்புக் கல்விப் பாடங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. பல்கலைக் கழக நிதிநல்கைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 14 தொழில்வாய்ப்புச் சார்ந்த பாடப் பிரிவுகளைத் தற்போது இம்மாநிலத்திலுள்ள 60 அரசு கலைக் கல்லூரிகளில் 1999-2000 ஆம் கல்வியாண்டு முதல் 2001-2002 ஆம் கல்வியாண்டு முடிய (மொத்தம் 272 வேலைவாய்ப்புத் தரும் பயிற்சி வகுப்புகள்) படிப்படியாக தொடங்குவதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உயர்கல்வியில் தகவல் தொழில்நுட்பத் தொடர்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழக அரசு தகவல் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. தற்போது தகவல் தொடர்பு தொழில்நுட்பப் பாடம் 37 அரசுக் கல்லூரிகளில் உள்ளது. ஏறத்தாழ 1000 மாணவர்கள் இதனைப் பயில்கின்றனர்.

தகவல் தொடர்பு நுட்ப அறிவியல் பயிற்சி பரவலாகக் கிடைக்கும் பொருட்டு எல்லா அரசுக் கல்லூரிகளிலும் படிப்படியாக இணையம் (Internet) மற்றும் மின்னஞ்சல் (E-mail) வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மாநிலக் கல்லூரியில் தகவல் இணையம்

**(Internet)** ஏற்படுத்தப்பட்டுள்ளது. 17 கல்லூரிகளில் மின்னஞ்சல் வசதி தரப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் தகவல் தொடர்பு மூலம் அறிவைப் பெருக்க மாணவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

**தொழிற்கல்வி**

மாணவர்கள் நல்ல வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தினால் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு 1994-95 ஆம் ஆண்டு முதல் தொழிற்கல்வியினை முதலாம் பட்டப்படிப்புகளில் கற்பிக்கும் பாடத் திட்டத்தினை தொடங்கியது. இதற்கான முப்பத்தாறு பாடத் திட்டங்களைப் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு தேர்ந்தெடுத்துள்ளது.

மேலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு உதவியுடன் தொழிற்கல்வி சார்ந்த பாடப் பிரிவுகளை அனைத்துக் கல்லூரிகளிலும் தொடங்குவதற்கு வேண்டிய உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. 20 அரசு கல்லூரிகளில் 1999-2000 ஆம் ஆண்டில் தொழிற்கல்வியை அறிமுகப் படுத்துவதற்கான முன்மொழிவுகள் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. கலை பாடத் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 இலட்சம் என்ற அளவிலும் அறிவியல் பாடத் திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 9 லட்சம் என்ற அளவிலும் பல்கலைக்கழக மானியக் குழு உதவி செய்யும். பாடத் திட்டங்கள் தயாரிக்கவும் உள்கட்டமைப்புகளை (Infrastructure) ஏற்படுத்தவும், கல்லூரிகள் இந்த நிதி உதவியைப் பயன்படுத்திக்கொள்ளும். மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும் உள்ளூரில் இருக்கும் தொழிற்கூடங்கள், நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும். ஏழு அரசுக் கல்லூரிகளில் தொழில் சார்ந்த பாடப் பிரிவுகளைத் தொடங்க பல்கலைக்கழக மானியக் குழு 1998-99 ஆம் ஆண்டில் அனுமதி அளித்துள்ளது. புதுக்கோட்டை, மயிலாடுதுறை, திருத்தணி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, சிவகங்கை மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் உள்ள ஏழு அரசுக் கலைக் கல்லூரிகளில் முறையே வரிநடைமுறை மற்றும் செயற்பாட்டியல் (Tax Procedure and Practice), தொல்பொருளியல் மற்றும் அருங்காட்சியகவியல் (Archaeology and Museology), விளம்பரம்-விற்பனை மேம்பாடு மற்றும் மேலாண்மை (Advertising-Sales Promotion and Sales Management), சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை (Tourism and Travel Management), பட்டுப்பூச்சி வளர்த்தல் (Sericulture), தொழில் நுண்ணுயிரியல் (Industrial Microbiology), தொடர்பியல் ஆங்கிலம் (Communicative English) ஆகிய தொழில்சார்ந்த பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.



**தன்னாட்சி அதிகாரம் வழங்குதல்**

சமுதாயத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் பயனடையும் வகையில், கல்லூரிகளுக்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பெற்று வருகிறது. பல்வேறுபட்ட துறைகளில் தகுந்த பாடத்திட்டம் வகுத்து, கல்வி வழங்கும் வகையில் தன்னாட்சித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான சிறப்புத் தகுதி ஊக்கத் தொகை திட்டம்:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினர் மூலம் வழக்கமாகப் பெறும் உதவித் தொகை அல்லாமல், கல்லூரிக் கல்வித் துறை செயல்படுத்தும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான சிறப்புத் தகுதி ஊக்கத் தொகை என்ற திட்டத்தின் கீழும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுவரையில் 2222 மாணவர்களுக்கு ஒருவருக்கு ரூபாய் 300 வீதம் மொத்தம் ரூபாய் 6,66,600/- இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், மதம் மாறிய ஆதிதிராவிடர் உள்பட, மேல்நிலைக் கல்வியில் மொத்தம் அறுபது விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்கள், இத்திட்டத்தின்கீழ் பயனடையத் தகுதியுடையவர் ஆவர். இத்திட்டத்தில் பெற்றோர்கள் வருமான அளவு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் இயக்குநரால் அளிக்கப்பட்டு, கல்லூரிக் கல்வி இயக்குநரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**தமிழ்வழி பயிலும் மாணவர்களுக்கான ஊக்க உதவித் திட்டம்**

கல்லூரிகளில் தமிழ் வாயிலாகப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.400/- வீதம் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. 1998-99ம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ் 24,000 மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 96 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**ஏழை மாணவியருக்கு இலவசக் கல்வி**

பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் திட்டத்தின்கீழ் பட்டப்படிப்பு பயிலும் மகளிருக்கு சாதி சமயம் பாராமல், பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.24000/-க்கு மிகாமல் உள்ளவர்கட்கு வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் நிதியாண்டில் ரூ.65 லட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு

செய்யப்பட்டு, 5564 மாணவிகள் பயனடைந்துள்ளனர். 1998-99 ஆம் ஆண்டிலும் ரூ65 லட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு உதவி பெறாத கல்லூரிகள்**

ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை ஆண்டுதோறும் உயர்ந்துவரும் வேகத்தால் புதிய கல்லூரிகளைத் தொடங்க இயலவில்லை. எனினும், உயர்கல்வித் தேவையை நிறைவு செய்ய, அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, சுயநிதிக் கல்லூரிகளைத் தொடங்க தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. 1984-85ம் ஆண்டு முதல் 175 கலை மற்றும் அறிவியல் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு அவற்றுள் 174 கல்லூரிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**அரசுக் கல்லூரிகளில் ஆசிரியர் நியமனம்**

அரசுக் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தேர்வு செய்யும் பணியை முன்னர் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் மேற்கொண்டிருந்தது. அரசு, ஆசிரியர் பதவியைத் தேர்வாணையத்தின் வரம்பிலிருந்து நீக்கம் செய்து ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. இதற்கேற்ப, ஆசிரியர் தேர்வு வாரியம், அரசு கல்லூரிகட்கான விரிவுரையாளர்களைத் தெரிவு செய்யும் பணியை மேற்கொண்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் ஆசிரியர் வாரியத்தின் மூலம் அரசுக் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் பதவிகளில் 461 காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் தகுதியுடையவர் இன்மையால் நிரப்பப்படாமல் இருந்த ஆதிதிராவிடப் பழங்குடி இனத்தவர் இடங்களுள் 100 காலியிடங்களில் குறிப்பாக ஆதிதிராவிடர் பழங்குடி இனத்தவர்களைத் தேர்வு செய்திட அரசு சிறப்பு ஆணை வெளியிட்டுள்ளது. மேலும் 117 பணியிடங்களுக்குப் பொதுத் தேர்வு நடத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆசிரியர் தேர்வு வாரியம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 22 அரசினர் கலைக் கல்லூரிகளுக்குத் தேவையான 45 ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதவி பெறும் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில், 1998-99 ஆம் ஆண்டில் 90 விழுக்காடு பணியிடங்களையும், 1999-2000-ம் ஆண்டில் 100 விழுக்காடு பணியிடங்களையும் நிரப்பிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசுக் கலைக் கல்லூரிகளில் டாக்டர். இராதாகிருஷ்ணன் விருதுபெறும்



ஆசிரியர்களுக்கான பரிசுத் தொகை ரூபாய் 1000/-லிருந்து ரூபாய் 2000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**நாட்டு நலப்பணித் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பயிலகங்களிலும் நாட்டு நலப்பணித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் 7:5 என்ற விகிதத்தில் மத்திய அரசாலும் மாநில அரசாலும், பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் பயிலும் 96,500 மாணவத் தொண்டர்கள் இத்திட்டத்தில் பணியாற்றி வருகின்றனர். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் 965 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டுநலப்பணித் திட்டம் கல்லூரிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் முகாம்கள் நடத்துவதற்காக, பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் 1,47,43,000-ம் பள்ளிகளுக்கு மானியத் தொகையாக ரூபாய் 70,37,000-ம் ஆகப் பெரு மொத்தத் தொகையாக ரூபாய் 2,17,80,000 விடுவிக்கப்பட்டுள்ளது.

## 3. தேசிய மாணவர் படை

இந்திய இளைஞர்களுக்கான பயிற்சி இயக்கங்களில் சிறப்புடையதான தேசிய மாணவர் படை 11.75 இலட்சம் மாணவர்களைக் கொண்டதாகும்.

சென்னையிலுள்ள தலைமை இயக்ககம் மற்றும் 5 கிளை இயக்ககங்களின்கீழ் தேசிய மாணவர் படை பயிற்சி பெற்று வருகிறது. கிளை தலைமை அலுவலகங்கள் சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ஒவ்வொன்றும் உள்ளன. இந்த இயக்ககத்தின் கீழ் 51 கிளை அலுவலகங்கள் செயலாற்றுகின்றன.

**தேசிய மாணவர் படையினரை ஊக்குவித்தல்**

(அ) தேசிய மாணவர் படைப் பயிற்சியில் சிறந்தவர்களுக்கு, உதவித் தொகையாக முதுநிலை பிரிவில் 80 மாணவர்களுக்கு ரூ.1200/- வீதமும், இளநிலை பிரிவில் 90 மாணவர்களுக்கு ரூ.600/- வீதமும் மாதந்தோறும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

(ஆ) தமிழ்நாடு பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையில் தேசிய மாணவர் படையினருக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேம்படுத்துவதற்கும் ஏற்ற கருத்துக்களை அரசுக்குத் தெரிவித்தல்; பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் பகுதி நிதி உதவி பெறும் திட்டங்களுக்கு ஈடான அரசு நல்கையினை வழங்கும் முகமையாகச் செயற்படுதல்.

(6) உயர்கல்வியைத் தமிழில் பயிற்றுவிக்கத் தேவையான பாட நூல்களைத் தயாரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு ஆலோசனை வழங்கல். அரசு வழங்கிய ரூ.64 இலட்சம் நிதியைக் கொண்டு பல்கலைக்கழகங்கள் ஒப்புக்கொண்டதற்கிணங்க இதுவரையில் 60 தமிழ்ப் பாட நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அடுத்து வரும் நிதியாண்டில் கூடுதலாகப் பாட நூல்கள் எழுதி வெளியிடும் முயற்சி தொடரும்.

## 5. பல்கலைக்கழகக் கல்வி

கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் உயர்கல்வித் துறையின் மேற்பார்வையில் செயல்படுகின்றன:-

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. அண்ணாமலை பல்கலைக்கழகம்
3. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
4. அண்ணா பல்கலைக்கழகம்
5. பாரதியார் பல்கலைக்கழகம்
6. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
7. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
8. அழகப்பா பல்கலைக்கழகம்
9. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
10. பெரியார் பல்கலைக்கழகம்
11. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

மேலே குறிப்பிடப்பெற்ற பல்கலைக்கழகங்கள் பின்வரும் மூன்று வகைகளைச் சார்ந்ததாகும்.

**இணைப்பு உரிமை வகை:-(Affiliating type)**

1. சென்னைப் பல்கலைக்கழகம்
2. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்



4. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
5. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
6. பெரியார் பல்கலைக்கழகம்

**ஒருமை வகை: (Unitary type)**

1. அண்ணாமலை பல்கலைக்கழகம்
2. அண்ணா பல்கலைக்கழகம்
3. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
4. அழகப்பா பல்கலைக்கழகம்

**நிகர்நிலை வகை: (Deemed type)**

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்.

**(i) சென்னைப் பல்கலைக்கழகம்**

சென்னைப் பல்கலைக்கழகம், 1857ஆம் ஆண்டில் சட்டப்படி நிறுவப்பட்ட பல்கலைக்கழகமாகும். 1904ஆம் ஆண்டிலும், பிறகு 1923ஆம் ஆண்டிலும் சட்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம் கூடுமானவரை இலண்டன் பல்கலைக்கழகத்தை ஒத்த அமைப்புடையதாகும்.

சென்னைப் பல்கலைக்கழகம் இப்போது கற்பித்தலும், ஆய்வும் மேற்கொள்கின்ற 78 துறைகளையும், இணைக்கப்பெற்ற 113 கலை அறிவியல் கல்லூரிகளையும், 56 பொறியியல் கல்லூரிகளையும் 8 கல்வியியல் கல்லூரிகளையும், 6 கீழைக்கலைக் கல்லூரிகளையும், 1 உடற்கல்வியியல் கல்லூரியையும் 33 ஆய்வு நிறுவனங்களையும் கொண்டுள்ளது. வேலூரில் பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையம் உள்ளது. 14 கல்லூரிகள் தன்னாட்சிக் கல்லூரிகளாகச் செயல்படுகின்றன. நான்கில் மூன்று பங்கு கல்லூரிகள் குறிப்பிட்ட பாடங்களில், மாலைநேரக் கல்லூரிகளாகவும் செயல்படுகின்றன. மொத்தத்தில் பல்வேறுபட்ட மேற்படிப்பு உட்பட 225 பாடங்கள் உள்ளன.

1998-99ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்ட கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை 1,53,302 ஆகும். இது இளங்கலை, முதுகலை, நான்காண்டுக் காலம் பொறியியல் வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையாகும். பட்ட மேற்படிப்பு எம்.ஃபில்., பி.எச்.டி. பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 2761 ஆகும்.

(இ) தேசிய மாணவர் படை இயங்குகின்ற கல்லூரி ஒவ்வொன்றிலும் இதன் சான்றிதழ் கொண்டவருக்கு இளநிலை, முதுநிலை பட்டப் படிப்பில் ஒவ்வொர் இடம் ஒதுக்கப்படுகிறது. பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலும் அவ்வாறு ஓரிடம் வழங்கப்படுகிறது.

**தேசிய மாணவர் படை அலுவலரை ஊக்குவித்தல்**

இணை தேசிய மாணவர் படை அலுவலருக்கான ஊக்கத் தொகை வீதங்கள் 1999-2000 ஆண்டு முதல் மாற்றியமைக்கப்படவுள்ளது. 800 இணை தேசிய மாணவர் படை அலுவலர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 300 வீதம் பயணப்படியும், 80 இணை தேசிய மாணவர் படை அலுவலர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 1,000 வீதம் சீருடைப்படியும், 800 இணை தேசிய மாணவர் படை அலுவலர்களுக்கு ஆண்டிற்கு எழுதுபொருள் படியும் 1999-2000 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

**தேசிய மாணவர் படையின் குடியரசு நாள் சாதனை (1999)**

1999 ஜனவரியில தமிழக தேசிய மாணவர் படை இயக்கத்தைச் சார்ந்த 108 மாணவர்கள், 3 அலுவலர்கள் மற்றும் 12 பயிற்சி அலுவலர்கள் ஆகியோர் குடியரசு நாள் முகாமிற்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதமர் அணிவகுப்பில், நாட்டின் பதினைந்து தேசிய மாணவர் படை இயக்ககங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் திறமையாகவும், மெய்சிலிர்க்க வைக்கும் முறையிலும் போட்டியிட்டுத் தமிழக தேசிய மாணவர் படை குழு தேசிய அளவில் இரண்டாவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. ஊக்கம் மிகுந்த நமது மாணவப் படையினர் பல்வேறு போட்டிகளில் 10 கேடயங்களையும், 17 பதக்கங்களையும் (தங்கம், வெள்ளி, வெண்கலம்) வென்றுள்ளனர். நமது தேசிய மாணவர் படையின் சாதனையினை இந்திய நாட்டுப் பிரதமரும், இராணுவத் தலைமைத் தளபதியும் போற்றிப் பாராட்டுரை வழங்கியுள்ளனர்.

ஆற்றலும், துணிவும் கொண்ட நமது தேசிய மாணவப் படையினரின் சாதனைகளைப் பாராட்டி 1999 பிப்ரவரி 2 ஆம் நாள் சென்னை தலைமைச் செயலகத்தில் அவர்களுக்குப் பாராட்டும், பரிசளிப்பும் நடந்தேறியது. வெற்றி வாகை சூடிவந்த தேசிய மாணவப் படையினரைப் பாராட்டி மாண்புமிகு கல்வி அமைச்சர் ரூ.2.2 இலட்சத்தை பணப் பரிசாக வழங்கினார்.





## 4. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம்

மாநில அளவிலான உயர்கல்வித் திட்டங்களின் ஒருங்கிணைப்பிற்கும், மேம்பாட்டிற்கும், மாநிலத் திட்டங்களையும், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் திட்டங்களையும் ஒருங்கிணைப்பதற்கு உதவும் வகையில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்டு 1992ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

மாநில உயர்கல்வி மன்றம் சிறப்பாகச் செயல்படும் வகையில் 1996ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் திருத்தியமைக்கபட்டது. மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் கல்வியின் தரத்தை தேவைக்கேற்ப மேம்படுத்துவதற்கு இம்மன்றம் ஆலோசனை வழங்குகிறது.

உயர்கல்வித் தொடர்பான நிகழ்வுகளின் மீதான கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் அரசுக்குத் தெரிவிக்க மன்றத்திற்கு உதவும் முறையில் மாநிலத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட துணைவேந்தர் ஆலோசனைக் குழு ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**மன்றத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு**

(1) பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைகளுக்கு இணங்க உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை நிர்ணயித்து அவற்றின் செயல்பாடுகளைச் சீர்செய்தல்.

(2) உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒத்துழைப்பினையும் ஒருங்கிணைப்பினையும் மேம்படுத்தி, அவை தொழில் நிறுவனங்களுடன் தொடர்புடையனவாகச் செயற்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகளைக் கண்டறிதல்.

(3) அரசு விதிமுறைகளுக்கிணங்க புதிய உயர்கல்வி நிறுவனங்களைத் தோற்றுவிப்பதற்கான நெறிமுறைகளை வகுத்துரைத்தல்.

(4) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் மூலமாக, பல்கலைக்கழக மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்; தரமுள்ள பாட நூல்கள் வெளியிடுவதற்கு வழிசெய்தல்.

(5) புதிய பல்கலைக்கழகங்களைத் தோற்றுவிப்பதற்கும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்கலைக்கழக விதிமுறைகளை

[1999 மார்ச் 31

மேலும் இப்பல்கலைக்கழகத்தில் 77 பாடக் கல்விக் குழுக்களும், ஓர் ஆய்வுக் குழுவும் செயல்படுகின்றன. இக்குழுக்கள் பாடத் திட்டம், பாடத் திட்டங்களின் விதிமுறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றன. சேப்பாக்கம், மெரினா, கிண்டி, தரமணி ஆகிய இடங்களில் உள்ள சென்னைப் பல்கலைக்கழக வளாகங்களில் 78 ஆய்வுத் துறைகள் உள்ளன.

## சென்னைப் பல்கலைக்கழகம்

### பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1997-1998)

| பட்டப்படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 13693 | எம்.ஏ. | 914 |
| பி.எஸ்.சி. | 22900 | எம்.பி.ஏ. | 2602 |
| பி.பி.ஏ. | 2052 | எம்.எஸ்.சி. | 945 |
| பி.காம். | 12221 | எம்.காம். | 142 |
| பி.எட். | 932 | எம்.எட். | 28 |
| பி.பி.எம். | 1018 | எம்.சி.ஏ. | 1970 |
| பி.ச. | 17505 | எம்.ஃபில். | 636 |
| பி.ச.எஸ். | 752 | பி.எச்.டி. | 252 |
| பி.எஸ்.சி.(ஓட்டல் நிர்வாகம்) | 82 | | |
| பி.ச.எம். | 23 | | |

### (ii) அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

உயர்கல்வியினையும், ஆராய்ச்சியினையும் ஊக்குவிக்கும் வகையில் உடனுறைப் பல்கலைக்கழகம் உருவாக்கவேண்டும் என்ற செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் சீரிய நோக்கத்தினால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1929 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 52 பல்வேறு கல்வித் துறைகளுடன் பணியாற்றி வருகிறது. முறைசார் துறைகளில், ஆங்கிலத் துறையில் முதுகலை அமெரிக்கக் கல்வியறிவு, வணிகவியல் துறையில் முதுகலை வணிகக் கல்வியறிவு, நிதிபற்றிய கல்வியறிவு போன்ற புதிய பாடங்களும் வேலை வாய்ப்புப் பட்டய வகுப்புகள் பலவும் தொடங்கப்பட்டுள்ளன.

உயர்கல்வியில் ஆராய்ச்சி முக்கிய பங்கு வகிக்கிறது. பல்கலைக் கழகத்தில் ஏறக்குறைய அனைத்துத் துறைகளிலும், வட்டார, தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் பல்வேறு ஆராய்ச்சிப்



1999 மார்ச் 31]

பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில ஆராய்ச்சித் திட்டங்கள் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் கூட்டு முயற்சியுடன் நடைபெற்று வருகின்றன.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் பலருக்கு உலகச் சுகாதார நிறுவனம், பொதுநல அரசுக்குழாம், டானிடா பன்னாட்டு சுழற்சங்கம் ஆகிய அமைப்புகளிலிருந்து ஆராய்ச்சி உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. தொலைதூரக் கல்வி இயக்ககம், உயர்கல்வியில் விரிவாக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை 1.20 இலட்சம் ஆகும். 24 துறைகளில் புதிதாகச் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 16 புதிய பாடத் திட்டங்களுடன் 97 பாடத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கடல்வாழ் உயிரியல் உயர் ஆய்வு மையம், பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் 'கோஸிஸ்ட்' (cosist - Committee On Strengthening of Infrastructure in the Science and Technology) திட்டத்தின்கீழ் ஆராய்ச்சியினை மேம்படுத்தவும், நாடுகளிடையே அளவிலான விஞ்ஞான மேம்பாட்டிற்கு இணையாகத் தரம் உயர்த்தவும் சிறப்பு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

### பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1998-1999)

| | |
|---|---|
| எம்.ஏ. | 183 |
| எம்.எஸ்.சி. | 336 |
| பி.எட். | 1,118 |
| எம்.எட் | 4 |
| எம்.ஃபில். | 103 |
| பி.எச்.டி | 29 |

### (iii) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 1966 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிப் பொறுப்பில் ஒரு பகுதிக்கு உரியதாக அமைக்கப்பட்டது. தொடக்கம் முதல் இப்பல்கலைக்கழகம் தரம்வாய்ந்த திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றதாகவும், கல்விச் சீரமைப்பு மற்றும் சமுதாய உணர்வு நடவடிக்கைகளில் ஆராய்ச்சிகள் நடத்துவதிலும், பங்குபெறும் பாங்கிலும் மிகவேகமாக முன்னேறியுள்ளது. இப்பல்கலைக்கழகம், உயர்கல்விக் கோட்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தரம்வாய்ந்த நிறுவனமாக வளர்ச்சியடைந்து வருகிறது. மதுரை, விருதுநகர், திண்டுக்கல், சிவகங்கை, தேனி மற்றும் ராமநாதபுரம்

[1999 மார்ச் 31

மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்ட இணைப்பு மற்றும் பயிற்றுவிக்கும் பல்கலைக்கழகமாக இது விளங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் 315 ஆசிரியர்கள் பணி ஆற்றுவதுடன் ஏற்பளித்து இணைப்பு வழங்கப்பட்ட 89 கல்லூரிகளும், 5 மாலை நேரக் கல்லூரிகளும், 10 சிறப்புப் பள்ளிகளும், 73 துறைகளும், 7 தகவல் மையங்களும் உள்ளன. இதன் மூலம் 1.6 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர்.

எட்டாவது திட்டக் காலத்தில் சுற்றுச்சூழல் தொலையுணர்வுத் துறையும், (Environmental Remote Sensing) வரைகலைத் துறையும் (Cartography) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவை இப்பல்கலைக் கழகத்தின் சிறப்பு வாய்ந்த பிரிவுகளாகும்.

இப்பல்கலைக்கழகம், கடந்த பத்தாண்டுகளில் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த தரம்மிக்க ஆய்வுகளை மேற்கொள்ள ஏதுவாக, போதுமான அளவில் நல்ல உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ளது. தற்போது இயங்கிவரும் அறிவியல் பள்ளிகளின் ஆய்வு நடவடிக்கைகள் பி.எச்.டி. திட்டத்தோடு நின்றுவிடுவதில்லை. கடந்த சில ஆண்டுகளாக, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட ஆய்வுத் திட்டங்களுக்கென அறிவியல் ஆய்வுப் புலங்கள் ஒப்பந்த மானியம் பெற்றுள்ளன. தற்போது பல்கலைக்கழகங்களுக்கிடையிலும், நிறுவனங்களுக்கிடையிலுமான சர்வதேச ஆய்வுத் திட்டங்கள் பலவற்றில், விஞ்ஞானிகளின் தீவிர ஒத்துழைப்புடன் ஆய்வுப் பணி நடைபெற்று வருகின்றது.

அதேபோல, ஆய்வுத் திட்டங்கள் பல, கலை மற்றும் மானுடவியல் பள்ளிகளிலும் நடந்தேறி வருகின்றன. தற்போது 9 தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் நிதியுதவி பெறப்பட்ட 80 ஆய்வுத் திட்டங்கள் நடத்தப்பெற்று அவைகளில் சில திட்டங்கள் வெற்றிகரமாக முடிக்கப் பெறும் நிலையை எய்தியுள்ளது.

1987 ஆம் ஆண்டு மத்திய அரசின் உயிரியல் தொழில் துறை, இப்பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பிரிவினை ஓர் உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமாக அங்கீகரித்துள்ளது. இன்று இத்திருநாட்டிலுள்ள ஐந்து உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையங்களில் இது முக்கியமானதாகத் திகழ்கிறது. உயிரியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கானப் பயிற்சி மற்றும் முன்னோடித் திட்டங்களான, மரபியல் நுட்பம், மரபியல் சார்ந்த பூச்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றில், இத்துறையின் சாதனை குறிப்பிடத்தக்கது.



1999 மார்ச் 31]

மத்திய அரசினால் ஏற்பளிக்கப்பட்ட பிறிதொரு உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையமான நுண்ணுயிரியல் நுட்பத் துறை, இயற்கை உரமான நீலப்பச்சைப்பாசி என்னும் உயிரி உரம் தயாரிப்பது பற்றி ஆய்வு செய்து, அந்தப் பணியில் வெற்றி பெற்றுள்ளது. இத்துறை விவசாயிகளுக்கு இந்த உரத்தை எவ்வகையில் பயன்படுத்துவது என்பது குறித்த கருத்தரங்குகளை நடத்தி, பயிற்சியும் அளித்துப் பயனும் கண்டுள்ளது.

பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பு, கல்வித் தரத்தை மேம்படுத்துதல், உணவகம், மதிப்பீட்டு முறை, சுற்றுச் சூழல் கல்வி, செய்தி மற்றும் நூலக முறை, முதியோர் மற்றும் தொலைத் தொடர்புக் கல்வி, வேலைவாய்ப்புடன் கூடிய அதி நவீன தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்துதல், மனித உரிமை, பெண் கல்வி மற்றும் மேலாண்மைக் கல்வி ஆகியவை இப்பல்கலைக் கழகத்தின் துறைகளுள் சிறப்புத் தகுதி பெற்றுள்ளன.

### பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1997-1998)

| பட்டப்படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 13 | எம்.ஏ. | 2,453 |
| பி.எஸ்.சி. | 702 | எம்.பி.ஏ. | 348 |
| பி.பி.ஏ. | 406 | எம்.எஸ்.சி | 641 |
| பி.ச. | 2,654 | எம்.காம். | 429 |
| பி.எல்.ஐ.எஸ். | 44 | எம்.எட். | 235 |
| பி.எல். | 135 | எம்.சி.ஏ. | 838 |
| பி.ஜி.எல். | 23 | எம்.எல். ஐ. எஸ் | 6 |
| பி.எட். | 775 | எம்.எச்.எம். | 5 |
| | | எம்.பி.எட். | 3 |
| | | எம்.எப். | 13 |
| | | எம்.ஃபில். | 1975 |
| | | பி.எச்.டி. | 135 |

### (iv) பாரதியார் பல்கலைக்கழகம்

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் பெயரில் 1982ஆம் ஆண்டு இப்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பாரதி பாடியுள்ளவாறு "பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்" என்னும் குறிக்கோள் கொண்டதாக இப்பல்கலைக்கழகம் விளங்குகிறது.

[1999 மார்ச் 31

இப்பல்கலைக்கழகம் அறிவியல், தொழில்நுட்பம், சமூகம் மற்றும் பொருளாதாரம், மனித வளம் மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் படைப்புத் திறன் போன்றவற்றையும், நமது நாட்டின் சமத்துவம் மற்றும் மதச்சார்பின்மை போன்ற கூறுகளைத் தேசிய வளர்ச்சியை மேம்படுத்தும் வகையிலும் பணியாற்றி வருகிறது.

இப்பல்கலைக்கழகம் பல்வேறு வகையான கல்வித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறிப்பாகத் தற்கால பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை, கருத்தரங்குகள், மாநாடுகள், பணிமனைகள் வாயிலாக உருவாக்குகின்றது.

பொதுவாக இந்திய நாட்டிற்கும், குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் தேவையான மனித ஆற்றலை வளர்த்தெடுத்து ஈடுகட்டும் வகையில் பட்டமேற்படிப்பு, எம்.ஃபில். மற்றும் பி.எச்டி. திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. வரும் ஐந்தாண்டுகளில் பல்கலைக்கழகம் மேற்கொள்ளவிருக்கும் கல்வி மற்றும் ஆய்வுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:—

(அ) பாடத் துறைகளின் தரத்தையும் அறிவு ஆற்றலையும் மேம்படுத்துதல்,

(ஆ) அடிப்படை உள்கட்டமைப்பைப் பெருக்குதல்,

(இ) நவீன முறையில் கற்பித்தலை மேம்படுத்துதல்.

இப்பல்கலைக்கழகம் கணிதவியல் துறை, புள்ளியியல் துறை போன்ற இருபது துறைகளைக் கொண்டுள்ளது.

**குறுகிய காலத் திட்டங்கள்:**

சமூகத்தின் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மனித வள மேம்பாட்டிற்கான சில செயல் திட்டங்களை உருவாக்குவது பல்கலைக்கழகத்தின் குறுகிய காலத் திட்டமாகும். அதனைச் செயல்படுத்துவதற்கு உயிர்த் திரள் சக்தி (Biomass Energy), மரபியல் ஆய்வு (Genetic Research), மென்படலங்கள் (Thin Films), அதிவேகக் கடத்தி (Super-conductors), மருந்து வகை வேதியியல் (Pharmaceutical Chemistry), வனப் பொருள் வேதியியல் (Forest Products Chemistry), அனங்கக உயிர் வேதியியல் (Bio-Inorganic Chemistry), செல் மரபியல் (Cyto Genetics), திசு வளர்ப்பு (Tissue culture), தொழில் துறைப் பொருளாதாரம் (Industrial Economics), பொது நிதியியல் பொருளாதாரம் (Public Economics), மக்கட்



1999 மார்ச் 31]

தொகையியல் (Population studies), பாய்ம இயற்பியல் (Fluid Dynamics), வானியல் அலைகள் (Atmostheric Waves), அறிவியல் தமிழ் (Scientific Tamil), புள்ளியியல் (Statistics), தரக்கட்டுப்பாடு (Quality Control), கல்வி நுட்பவியல் (Education Technology), செயற்கை கணினி அறிவுத் திறன் (Artificial Inteligence and Expert Systems), மென் பொருள் நுட்பவியல் (Software Technology), கணினி துணை கொண்டு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தல் (Computer Aided Design and Manufacturing) போன்ற புதிய பாடத் துறைகளை உருவாக்கிட இப்பல்கலைக்கழகம் கருதியுள்ளது.

**பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1998-1999)**

| பட்டப்படிப்பு | | பட்டமேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 2008 | எம்.ஏ. | 340 |
| பி.எஸ்சி. | 1494 | எம்.பி.ஏ. | 805 |
| பி.காம். | 2258 | எம்.எஸ்சி. | 479 |
| பி.எட். | 3936 | எம்.காம். | 109 |
| பி.பி.எம். | 845 | எம்.எட். | 125 |
| பி.ச. | 3086 | எம்.சி.ஏ. | 493 |
| பி.ஜி.எல். | 72 | எம்.ச. | 237 |
| பி.ஏ.எல். | 70 | எம்.எப்.சி. | 33 |
| பி.எல். | 135 | எம்.எப்.டி. | 19 |
| பி.பி.எட். | 98 | எம்.பி.எட். | 21 |
| பி.லிட். | 46 | எம்.பி.எல். | 144 |
| | | பி.எச்.டி. | 79 |

**(v) பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயர் கொண்ட இப்பல்கலைக்கழகம் 1982ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத் துறைகளும், சிறப்புத் தகுதி பெற்ற உயர் ஆய்வுப் பள்ளிகளும், இப்பல்கலைக்கழகத்தோடு இணைவு பெற்ற கல்லூரிகளும் கல்வி கற்பித்தலோடு ஆய்வுப் பணிகளையும் விரிவாக்கப் பணிகளையும் மேற்கொண்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தோடு 67 கல்லூரிகளும், பல்கலைக்கழக ஒப்புறுதி பெற்ற 10 கல்வி நிறுவனங்களும் (தன்னாட்சித் தகுதி பெற்ற ஏழு கல்லூரிகளும் இவற்றுள் அடங்கும்) இணைந்துள்ளன. இவற்றுள் 8 பொறியியற் கல்லூரிகளும் இரு கல்வியியல் கல்லூரிகளும்

தொடர்ந்து நடத்தி வருகிறது. மேலும் அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆதரவோடு பொறியியல் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

**பல்கலைக்கழகம் பொறுப்பேற்று நடத்தும் தேர்வுகள்**

(1) கல்லூரி ஆசிரியராவதற்கு தகுதிபெறத் தேசிய அளவில் நடத்தப்பெறும் தகுதிகாண் தேர்வுகளைப் போன்று மாநில அளவிலான கல்வித்தேர்வினை நடத்தும் பொறுப்பை மாநில அரசும், பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவும், இப்பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்துள்ளன.

(2) தமிழக அரசின் சார்பில் கல்லூரி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வினையும் இப்பல்கலைக்கழகம் திறம்பட நடத்தி வருகிறது.

**பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1997-1998)**

| பட்டப்படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 1686 | எம்.ஏ. | 453 |
| பி.எஸ்.சி. | 3474 | எம்.பி.ஏ. | 175 |
| பி.பி.ஏ. | 296 | எம்.எஸ்.சி. | 706 |
| பி.காம். | 1560 | எம்.காம். | 141 |
| பி.எட். | 234 | எம்.எட். | 88 |
| பி.எல். | 52 | எம்.சி.ஏ. | 1061 |
| பி.ஈ. | 627 | எம்.எல்.ஐ. | 13 |
| பி.லிட். | 142 | எம்.பி.எட். | 46 |
| | | எம்.ஆர்.டெக். | 6 |

**(vi) அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்**

மகாகவி பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின்போது அறிவித்தவாறு, 1984 இல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம் கொடைக்கானலில் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் கல்லூரிகளை இணைக்கும் முறையை மேற்கொள்ளாத ஒருமை அமைப்புடையது.





**முனைப்புக் களங்கள்**

சுயதொழில் முனைவோர் பயிலியல் (Enterpreneurship), சுற்றுச் சூழல் பொருளியல் (Environmental Economics), மகளிரது படைப்புக்கலை (Womens Writing), பெண்ணிய இலக்கிய ஆய்வு (Feminist Literary Research), மக்கள் தொகைக் கல்வி (Population studies), சிறப்புக்கல்வி (Special Education), வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நல்கல் (Guidance and Counselling), கல்வியல் நிர்வாகம் (Education Management), பயணவியல் (Tourism), விடுதலைப்போரில் மகளிர் பங்கு (Women in Freedom Movement), குடும்ப நலம் மற்றும் வளம் (Health and Family Welfare), சத்துணவியல் (Nutrition), மகளிரது சட்டப்பூர்வ உரிமைநிலை (Legal Status for Women), மகளிர் முன்னேற்றம் (Women and Development), மக்கள் தொடர்புச் சாதனவியல் (Mass Communication), படைப்பிலக்கியம் (Creative Writing), இதழியல் (Journalism), நாட்டுப்புறவியல் (Folklore), மொழி பெயர்ப்பியல் (Translation), மென்பொருள் மேம்பாடு மற்றும் பயிலியல் ஆய்வு (Software Development & Operation Research) ஆகியவை இப்பல்கலைக் கழகத்தின் முனைப்புக்களங்களாகும்.

**குறிப்பிடத்தக்க செயல்பாடுகள்**

முனைவர் பட்ட ஆய்வுப் படிப்பு/இளநிலை ஆய்வுப்படிப்பு/முதுகலைப் பட்டவகுப்பு/இளங்கலைப் பட்ட வகுப்பு என்று அனைத்து நிலைப் பாடத்திட்டங்களும் ஆய்வு மற்றும் விரிவாக்கப் பணிகளும் மகளிரியலை முதன்மைப்படுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மகளிரியலை மையப்படுத்தி செயற்படும் ஒரே பல்கலைக்கழகம் இதுவாகும். மரபு சார்ந்த அறிவுத் துறைகளில் மகளிர் பங்கேற்பு பற்றி பரிசீலிக்கப்படாத நிலையினை மாற்றி, அத்துறைகளின் கோட்பாடுகளைப் பரிசீலித்து, மகளிர் நோக்கினை உருவாக்கி பயனுறும் விதத்தில் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இளநிலை மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகள் (M.Phil and Ph. D) பகுதி நேர ஆய்வு/ முழு நேர ஆய்வு (Part-time/Full time) பல்கலைக் கழக நிதிநல்கைகுழு நிதிநல்கை ஆய்வு (Junior Fellowship) (ஒரு கண்பார்வையற்ற ஆய்வாளர் உள்பட 9 பேர்) கோடை தொடர் வகுப்புகள் (Summer Classes) மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இன்றுவரை, இப்பல்கலைக் கழகத்தின் மூலம் 74 முனைவர் பட்டங்களும், 365 இளநிலை ஆய்வுப் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. பெண் சிசுக் கொலை, தலைச்சுமையாக விறகு தூக்கிகள், கல் உடைப்போர், பாடநூல்களில் பாலியல் வேறுபாடு, மகளிர் பொருளாதாரம், விழுமிய கல்வி போன்ற தலைப்புகளில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றுள்ளன.

[1999 மார்ச் 31

52 அறிவியல் கல்லூரிகளும் அடங்கும். இக்கல்லூரிகளில் பட்ட மேற்படிப் பினை 84000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும், திருவெறும்பூரிலுள்ள பாரத மிகுமின் நிறுவனத்தோடு ஒருங்கிணைந்த பாரதிதாசன் மேலாண்மைப் பள்ளி அந்நிறுவன வளாகத்தில் அமைந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் 22 துறைகள், பள்ளிகள், மற்றும் மையங்களில் 108 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளும் பட்ட மேற்படிப்புக் கல்வி வழங்கும் சிறப்பைப் பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் முதுகலை, முதுஅறிவியல், முது தொழில்நுட்பவியல் பயிலும் மாணவர்களும், ஆய்வியல் நிறைஞர், முனைவர்-பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் ஆராய்ச்சி மாணவர்களுமாக மொத்தம் அறுநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயிலுகின்றனர்.

மிகக் குறுகிய காலகட்டத்திற்குள் கல்வியில் பல்வேறு புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள சிறப்பு இப்பல்கலைக்கழகத்திற்கு உரியது.

அவற்றுள் சில பின்வருமாறு:-

1. பிற நிறுவனங்கள் பின்பற்றத் தக்கதாகத் திகழ்கின்ற தனித்துவம் வாய்ந்த பள்ளிகளான பாரதிதாசன் எரியாற்றல் பள்ளியும், பாரதிதாசன் மேலாண்மை நிறுவனமும், கல்வியளித்தல், நிர்வாகம், நிதி ஆகிய அனைத்திலும் தன்னாட்சி பெற்று விளங்குகின்றன.

2. இப்பல்கலைக்கழகத் துறைகளால் வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டங்கள் வாயிலாக வழங்கப்படும் கல்வி, தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். சிந்தனையைத் தூண்டுவதாகவும் விளங்குகிறது. இதனால் அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தினை நாடி வருகின்றனர். தமிழ், இயற்பியல், வேதியியல், உயிர் அறிவியல் ஆகிய துறைகளுக்குப் பாடத் திட்டத்தை வகுப்பதிலும், கல்வி முறையைப் புகுத்துவதிலும் தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளது.

3. இப்பல்கலைக்கழகத்தின் உயிர் அறிவியல் பள்ளி, தனிச்சிறப்புமிக்க ஒருங்கிணைந்த ஐந்தாண்டு முதுஉயிர் அறிவியல் கல்வியை வழங்குகிறது. இக்கல்வியில் முதன்மூன்றாண்டுகள் பல்துறைசார் கல்விக்கான அடிப்படையாகவும், இறுதி இரு ஆண்டுகள் விலங்கறிவியல், பயிர் அறிவியல், உயிர் நுட்பவியல், நுண்ணுயிரியல் ஆகியவற்றில் சிறப்பறிவு பெறுவதற்கான கல்வியாகவும் வழங்கப்படுகிறது.



1999 மார்ச் 31]

4. இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி வல்ல ஆசிரியர்கள், தேசிய அளவிலான குழுக்களும் அமைப்புகளும் வழங்குகின்ற பல்வேறு ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

5. இந்திய அரசின் உயிர்நுட்பவியல் துறையினர் வழங்கிய ரூ.2.5 கோடிக்கும் மேற்பட்ட நிதியுதவியைக் கொண்டு தேசியக் கடல்சார் நீலநிற நுண்ணுயிர் ஆய்வு வசதி மையம் ஒன்று (National Facility for Marine Cyanobacterial Research Centre) இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இத்துறையில் இது ஒரு முன்னோடி நிறுவனமாகத் திகழ்கிறது. இப்பல்கலைக்கழகத்தில் உள்ள "நிரலற்ற விசையியக்கவியல் மையம்" இந்திய அரசின் அறிவியல்-தொழில் நுட்பத் துறையின் உதவியோடு உருவாக்கப்பட்டுள்ளது.

6. அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் உதவியோடு இப்பல்கலைக்கழகத்தின் சேய்மையுணர்வு மையம், முது தொழில் நுட்பவியல் கல்வியை அளித்து வருகிறது.

7. ஆசிரியர்கள் வகுப்பறைப் பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக வகுப்பறைகளில் நிகழ்த்தப்படும் விரிவுரைகளை ஒளிநாடாக்களில் பதிவு செய்து, ஆசிரியரை ஆற்றுப்படுத்தும் தொலைக்காட்சி முறைக்கல்வி வசதி, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது.

8. பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்கள் வழக்கமாக வகுப்பறையில் கற்கும் கல்வியோடு, வேலை வாய்ப்புடன் கூடிய ஏதேனும் ஒரு சான்றிதழ் பட்டயப் படிப்பையும் ஒரே சமயத்தில் (இரண்டு வகை கல்வியையும்) பெறுவதற்குரிய சிறப்பு வாய்ப்பினை இப்பல்கலைக்கழகம் மாணவர்கட்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.

9. தரமான கல்வியை அளிக்கும் சிறந்த குறிக்கோளோடு செயல்பட்டு வருகின்ற இப்பல்கலைக்கழகத்தின் தொலைக்கல்வி மையம் வழக்கமான பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்புக் கல்வியோடு கணிணிப் பயன்பாட்டிலும், வணிக மேலாண்மையிலும் முதுநிலைக் கல்வியை வழங்கி வருகிறது. கல்லூரிகளில் வழக்கமாகப் பின்பற்றப்படும் அதே பாடத்திட்டங்களும் அகமதிப்பீட்டு முறை உள்ளிட்ட தேர்வு முறைகளும் தொடர்கல்வி மையத்தில் வழங்கப்படும் இக்கல்விக்கும் பின்பற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

10. இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் கல்விக்கழகம் கல்லூரி, கல்லூரி, ஆசிரியர்களை ஆற்றுப்படுத்தும் பயிற்சியையும் புத்தொளிப் பயிற்சியையும்

## பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1997-98)

| | | | |
|---|---|---|---|
| பி.டி.டி.எம். | 8 | எம்.ஏ. | 15 |
| பி.சி.எஸ். | 17 | எம்.எட். | 28 |
| பி.சி.ஏ. | 24 | எம்.பி.எல். | 15 |
| பி.பி.எம். | 21 | பி.எச்.டி. | 13 |
| பி.பி.ஏ. | 15 | | |

### (vii) அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் பல்துறை வித்தகரும், கொடைவள்ளலுமான டாக்டர் ஆர்.எம். அழகப்பச் செட்டியார் அவர்களால் உருவாக்கப்பட்டது. தமிழக அரசின் சிறப்புச் சட்ட விதியின் மூலம் 1985 இல் தொடங்கப்பட்ட இப்பல்கலைக் கழகம், ஆராய்ச்சி மேம்பாடு, உயர்கல்விப் பயிற்சி போன்ற பல துறைகளில் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

இப்பல்கலைக்கழகம் பதின்மூன்று பாடத்துறைகளைக் கற்பித்தலுடன் ஆராய்ச்சியையும் மேற்கொண்டுள்ளது. தரமான கல்வி, திறமான ஆராய்ச்சி இவ்விரண்டிலும் சிறப்பான கவனம் செலுத்தப் பெறுகிறது. இயற்பியல் (Physics), தொழிலக வேதியியல் (Industrial Chemistry) கணிதவியல் (Mathematics). கணினி இயல் (Computer Science), நிறுமச் செயலரியல் (Corporate Secretaryship), தமிழியல், மகளிரியல், கல்வியியல், உடற்கல்வியியல், விளையாட்டில் இயன் மருத்துவவியல் (Sports Physio-therapy), படிகவியல் (Crystal Growth), ஆழ்கடலியல் மற்றும் கடற்கரையியல் (Oceanography and Coastal Area Studies) போன்ற துறைகளில் கற்பித்தலும் ஆய்வும் இடம் பெற்றுள்ளன. மேற்குறித்த துறைகளில் சமூகத் தேவையைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உடற்கல்வியியல் துறையில் முதுகலை இயன் மருத்துவவியல் (Master of Sports Physiotherapy) வகுப்பு புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது. பகுதி நேரப் பயிற்சி வழியாகவும் அப்பட்டம் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இயன் மருத்துவம் பயின்ற அறிஞர்களுக்கு மிகுந்த தேவை இருப்பது கருதத்தக்கது. ஆழ்கடலியல் மற்றும் கடற்கரை இயலில் முதுகலை அறிவியல் பட்ட வகுப்பு (M.Sc. Oceanography and Coastal area Studies) 1998-99 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப் பெற்று இருபத்தைந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான





கடற்கடையோரப் பகுதிகள் தொண்டியில் உள்ளன. ஆழ்கடலில், மாணவர்களின் கல்விக்கும் ஆய்விற்கும் அப்பகுதி சிறந்த பயிற்சிக் களமாக உள்ளது.

## பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1998-1999)

| பட்டப் படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.எட். | 158 | எம்.பி.எம். | 25 |
| எம்.டி. | 10 | எம்.பி.எட். | 111 |
| எம்.டபிள்யு.எஸ். | 6 | எம்.பி.ஏ. | 24 |
| எம்.எஸ்சி. | 97 | எம்.எட். | 7 |
| எம்.சி.ஏ. | 41 | எம்.ஐ.பி.சி. | 27 |
| எம்.சி.எஸ். | 32 | எம்.பில். | 85 |
| எம்.காம். | 18 | பி.எச்.டி. | 12 |

### (viii) மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 1990-ஆம் ஆண்டு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பட்டது. இவ்விளம் பல்கலைக்கழகம், பல புது வழிகள் கண்டு உயர்கல்வி அரங்கத்தில் ஒரு முத்திரை பதித்துள்ளது.

பல்கலைக்கழகத்திலுள்ள பன்னிரெண்டு துறைகளும் முதுநிலைப் பட்டப்படிப்பு கல்வியினைத் தெரிவு சார்ந்த தேர்ச்சி முறைத் திட்டத்தின் கீழ், 1996-97 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கியுள்ளன. விரும்பிய பாடத்தில் பயிற்சி பெறுதல் என்னும் இத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் பாடத்தை ஒவ்வொரு பருவத்திற்குத் தேர்ந்தெடுத்துப் பயில வாய்ப்பளிக்கப்படுகிறது.

இப்பல்கலைக்கழகம் கற்பித்தலுக்கும், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளவும் சிறந்த வாய்ப்புகளைப் பல்வேறு புலன்களில் (துறைகளில்) இருக்கும் கருப்பகுதியிலிருந்து பெற்றிருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் சுற்றுப்புறச்சூழல் அறிவியல் மையம், தென்னிந்தியாவிலேயே, அக்கல்வி வழங்கும் முக்கியமான மையமாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த மையம் கழிவுச் சுழற்சி, தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சுத்தன்மை, கழிவுநீர் மற்றும் பயனற்ற வெற்று நிலப்பகுதியின் உயிரினங்கள், ஆகிய பாடங்களை மூலப்பகுதியாகக் கொண்டு கற்பிக்கிறது. சமூகவியல் துறை, குழந்தைத் தொழிலாளர் மற்றும்

பெண்களின் நிலை போன்ற பாடங்களைச் சிறப்பு முன்னுரிமை அளித்துக் கற்பித்து வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் கடற்புறப் பகுதிகளைப் பற்றிய கல்வியளிக்கும் பயிற்றகம், கடற்பகுதிகளை நிருவாகம் செய்யும் கல்வியையும் கடல் உயிர் உற்பத்தி விளைவுகளையும், கடல்வாழ் உயிரின நுட்பவியல் கல்வியையும் சிறப்பு முன்னுரிமைப் பகுதிகளாகக் கொண்டுள்ளது. விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அவர்கள் தேர்வெழுதிய விடைத்தாளின் நகலினை வழங்குவதில் இப்பல்கலைக்கழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

### பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1998-1999)

| பட்டப் படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 2132 | எம்.ஏ. | 541 |
| பி.எஸ்.சி. | 4118 | எம்.பி.ஏ. | 40 |
| பி.பி.ஏ. | 47 | எம்.எஸ்.சி. | 755 |
| பி.காம். | 1203 | எம்.காம். | 220 |
| பி.எட். | 1195 | எம்.எட். | 106 |
| பி.ச. | 815 | எம்.சி.ஏ. | 159 |
| பி.லிட். | 58 | எம்.பில். | 43 |
| | | எம்.ச. | 7 |
| | | எம்.பி.எட். | 37 |

### (ix) பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், பகுத்தறிவுப் பகலவன் பெரியார் அவர்களது பெயரில் இப்பல்கலைக்கழகம் 17-9-97 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்திற்கு முதல் துணை வேந்தரும் மற்றும் பதிவாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்பல்கலைக் கழகத்தில் ஒரு துறைக்கு இரு விரிவுரையாளர் ஒரு ரீடர் மற்றும் ஒரு பேராசிரியர் என்ற முறையில் 12 துறைகள் தொடங்குவதற்கும் 22 ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தவாறு இப்பல்கலைக்கழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 10 கோடி வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதுடன் அந்த 10 கோடியில், 7000 சதுர மீட்டர் அளவு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.3.15 கோடி முதற்கட்டமாக வழங்கியுள்ளது.



சேலம் அரசு பொறியியல் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில், 58.83.0 ஹெக்டேர் நிலம் இப்பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது.

### (x) அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்.

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் 1988-ல் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்ற தகுதியை அடைந்தது.

இந்நிறுவனத்தில் மனையியல், அறிவியல், மனிதவியல், கல்வியியல் மற்றும் பொறியியல் ஆகிய 5 துறைகள் தனித்தனி முதல்வரின்கீழ் செயல்பட்டுவருகின்றன. 1989-90 முதல் இளநிலைப் பட்டப்பிரிவில் இரண்டு முக்கியப் பாடங்களும் இரண்டு துணைப்பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இங்கு ஒரு கல்வியாண்டு இரண்டு பருவமாக பகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் 100 நாட்கள் கொண்டதாக இயங்கி வருகின்றது. இரு பருவமுறைத் திட்டத்தில் மாணவர்களின் முறையான வருகை மிக அவசியமானதாகும். மாணவர்களின் தேர்வு பளுவினைக் குறைக்கும் வண்ணம் பாடத் தேர்வுகள் அனைத்தும் அந்தந்தப் பருவ காலத்திலேயே நடத்தப்பட்டு வருகின்றன.

### முதுகலை எம்.எஸ்சி (மனையியல்)

முதுகலை நிலையில் முதுகலை மனை அறிவியல், எம்.பில். மற்றும் பி.எச்.டி.. நிலையில் குடும்ப நிர்வாகம், உணவு அறிவியல் மற்றும் ஊட்டச்சத்து, மனித மேம்பாடு, மனை அறிவியல் விரிவாக்கப் பிரிவுகள் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புத் துறைகளாகும். நுகர்வோர் கல்வி, கிராமப்புற குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பழங்குடியினர், ஊட்டச்சத்து, மருத்துவத் தாவரங்கள் பற்றிய படிப்பு ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் முனைப்புக் களங்களாகும்

### பட்டம் பெற்றவர் எண்ணிக்கை (1997-1998)

| பட்டப் படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|
| பி.ஏ. | 109 | எம்.ஏ. | 4 |
| பி.எஸ்.சி. | 334 | எம்.எஸ்.சி. | 152 |
| பி.காம். | 56 | எம்.பில். | 29 |
| பி.எட். | 199 | எம்.எட். | 5 |
| | | எம்.சி.ஏ. | 27 |
| | | எம்.பி.ஏ. | 25 |
| | | பி.எச்.டி. | 10 |

[1999 மார்ச் 31

### பல்கலைக்கழகங்களில் பெருந்தலைவர்களின் பெயர்களில் உருவாக்கப்பட்ட அறக் கட்டளைகள்

உயர் கல்வித் துறையின் ஆளுகையின் கீழ்வரும் 10 பல்கலைக் கழகங்களிலும், ஒவ்வொன்றுக்கும் ரூ.25 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.525 இலட்சம் மூலதனத்தில் பெருந்தலைவர்களின் பெயர்களில் 21 அறக் கட்டளைகளை அரசு உருவாக்கியுள்ளது. அதிலிருந்து வரும் வட்டித் தொகையில், அந்தந்தப் பல்கலைக்கழகங்களிலும் இணைப்புக் கல்லூரிகளிலும் பயிலும் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கான நெறிமுறைகளை அரசு வெளியிட்டுள்ளது. அந்தந்தப் பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்படும் பாடத் துறைகளில் பயிலும் மாணவர்களுள் அந்தந்த வகுப்பில் முதல் தகுதி (மதிப்பெண்) பெற்றுள்ள மாணவருக்கு (மாணவி உட்பட) மேலும் கல்வியில் கருத்தூன்றிப் பயில இந்த உதவித் தொகை வழங்கப்படும். ஒவ்வொரு வகுப்பிலும் மேல் வகுப்பிற்கு வந்தவருள் முதல் நிலை பெறுபவருக்கே இந்த உதவித் தொகை அளிக்கப்படும். பெற்றோரின் வருமான வரம்பு, வேறு உதவித் தொகை பெறுதல், இனவாரி (இட ஒதுக்கீடு) உரிமை முதலான எதுவும் இந்த உதவித் தொகை பெறத் தடையாகாது. ஒருமுறை உதவித் தொகை பெற்றவர் அடுத்த ஆண்டிலும் முதல் தகுதியை நிலைநாட்டினால்தான் அந்த வாய்ப்பைப் பெறலாம். கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு ரூபாய் 3000/-க்கு மிகாமலும் தொழில் நுட்பக்கல்வி பயிலும் மாணவர்கள் வருடம் ஒன்றுக்கு ரூபாய் 5000/-க்கு மிகாமலும் உதவித் தொகை பெறுவர். மொத்தத்தில் இத்திட்டத்தால் 1500 மாணவர்கள் பயனடைவர்.

## 6. தொழில்நுட்பக் கல்வி

மனிதவள மேம்பாட்டுத் திட்டத்துறையின் கீழ் இயங்கி வரும் ஒரு பகுதியான தொழில்நுட்பக் கல்வியானது, மாணவர்களின் திறமையை வளர்ப்பதிலும், தேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் முக்கியமான பங்களிக்கிறது. இந்நிலையினை நன்குணர்ந்த தமிழக அரசு, தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்துள்ளது. 1957 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மாநிலத் தொழில் நுட்பக் கல்வித்துறை பட்டயப்படிப்பு, பட்டய மேற்படிப்பு, ஆராய்ச்சித் துறை போன்ற பல்வேறு நிலைகளில் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டு திட்டக்காலத்தில் தமிழகத்தில் தொழில் நுட்பக்கல்வி குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்குப் புதிதாக 28 சுயநிதி



1999 மார்ச் 31]

பொறியியல் கல்லூரிகளையும், 31 சுயநிதி பல்தொழில் நுட்பப் பயிலகங்களையும் தொடங்க அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு அனுமதி அளித்தது.

ஏற்கெனவே உள்ள பொறியியல் கல்லூரிகளுடன் புதிய பொறியியற் கல்லூரிகளிலும் தொடங்கப்பட்ட புதிய பாடங்களாலும் 1998-99 ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை, சென்ற ஆண்டைவிட 7460 மாணவர் (அதாவது 36 விழுக்காடு ) கூடுதலாகியுள்ளது. இதேபோல் அனைத்துப் பல்தொழில்நுட்ப பயிலகங்களிலுமாக கூடுதலாக 10.115 மாணவர் (கூடுதல் 31 விழுக்காடு) சேர்ந்துள்ளனர்.

### ஒற்றைச் சாளர முறை

தமிழ்நாட்டிலுள்ள சுயநிதிக்கல்வி நிறுவனங்கள் பற்றி ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு அமைத்த உயர்நிலைக் குழு, தனது அறிக்கையில் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கை குறித்த பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தது. முன்னர் கடைபிடிக்கப்பட்ட நடைமுறையில் மாணவர் சேர்க்கையில் வீண் காலதாமதமும், மாணவர்களிடையில் தமக்கு எந்தப் பொறியியல் கல்லூரியில் எந்தப் பாடப்பிரிவில் இடம் கிடைக்கும் என்பது பற்றிய உறுதியற்ற நிலையும் இருந்து வந்தன. சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து பெற்றோர் மற்றும் மாணவர்களிடமிருந்து ஏராளமான புகார்களும் வந்திருந்தன. சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்வதற்குப் பெருந்தொகை நன்கொடையாகக் கோரப்பட்டதுடன், பாடபிரிவு ஒதுக்கீடு மதிப்பெண் அடிப்படையில் இல்லாமல் நன்கொடை அடிப்படையில் செய்யப்பட்டு வந்தது.

எனவே, மாணவர் சேர்க்கையின் போது நடைபெற்ற குறைகளைக் களையவும், மாணவர் பெறும் மதிப்பெண் அடிப்படையில் பாடப்பிரிவு ஒதுக்கீடு செய்வதற்கு வழிகாணவும் தமிழ்நாடு அரசு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்தி மாணவர் சேர்க்கையை எளிமைப்படுத்தியும் முறைப்படுத்தியும் சீரமைத்தது. இந்த முறையில் பொறியியற் கல்வியில் முதல் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறும் போதே அவரவர் விரும்பும் கல்லூரிகளிலும், பாடப்பிரிவிலும் இடமுள்ளவரையில் அவரவர் பெறும் மதிப்பெண், இனவாரி உரிமை முன்னுரிமைப்படி இடம் அளிக்கப்படுகிறது.

[1999 மார்ச் 31

பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்கு இம்மாநிலத்தில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர முறை, மிகவும் பயனுள்ளதாகவும், வெளிப்படையானதாகவும், சிரமமும் சிக்கலும் அற்றதாகவும் உள்ளது என்று அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளதுடன், பிற மாநிலங்களும் பின்பற்றத்தக்க சிறப்புடையதாக விளங்குகிறது.

பொறியியல் கல்லூரிகள், பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள், அவற்றில் உள்ள காலி இடங்களின் நிலை போன்ற விவரங்கள் அனைத்தும் மாணவர் சேர்க்கை அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறும்போது, அதே இடத்தில் மின்னணுத் தகவல் பலகையில் அவ்வப்போது தெரிவிக்கப்படுகிறது. ஏறத்தாழ 30 நிமிடங்களில் பெற்றோரும், மாணவர்களும், அவர்களது விருப்பத்தைத் தெரிவிக்க இது ஏதுவாகிறது. இக்கூட்டத்திற்கு முன்னதாகவே பொறியியல் கல்லூரிகளில் உள்ள பாடப்பிரிவுகள், காலி இடங்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள், சிறு கையேடுகள் வாயிலாக மாணவர்களுக்குத் தெரிவிக்கப்படுவதால், இவ்விவரங்களுடன் மாணவர்களும் பெற்றோரும் கூட்ட அரங்கிற்கு வந்து, உடனே கல்லூரியையும் பாடப்பிரிவையும் தேர்வு செய்து விடுகின்றனர். ஒருமுறை தேர்வு செய்துவிட்டால் அதுவே இறுதியானதாகும். நேர்மையும், வெளிப்படையுமான இந்த முறை பொதுமக்களால் மிகவும் வரவேற்கப்படுவதாக உள்ளது. 1998-99 ஆம் கல்வியாண்டு முதல் பொறியியற் கல்லூரி மாணவர்களின் சேர்க்கையின் போது கடைபிடிக்கப்பட்ட ஒற்றைச் சாளர முறை, பல்தொழில் நுட்ப பயிலகங்களில் மாணவர் சேர்க்கையிலும் கடைபிடிக்கப்பட்டது. இதன்படி முதல் ஆண்டிலேயே மாணவர்களுக்குப் பாடப்பிரிவுகள் ஒதுக்கப்பட்டு விடும். இந்தத் திட்டத்திற்கு மாணவர்கள் மற்றும் பெற்றோரிடத்தில் மிகுந்த வரவேற்பு இருந்து வருகிறது.

**பட்டப்படிப்பு பயிலாதோர் குடும்பத்திலிருந்து பொறியியல் கல்லூரிகளில் பி.ஈ., பி.டெக். பயிலும் மாணவர்களுக்கான நிதி உதவி**

பட்டப்படிப்பு பயிலாதோர் குடும்பத்திலிருந்து தொழில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விக்காகும் அனைத்துச் செலவுகளையும் ஆண்டுதோறும் அரசு ஏற்றுக் கொள்ளும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். அதற்கான ஆணை வெளியிடப்பட்டது. நுழைவுத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் பத்து இடங்கள் பெறும் மாணவர்களின் தொழிற்கல்விக்கான முழுச் செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. 1996-97ல் இத்திட்டத்தின்கீழ் ரூ.1,04,045/-ம் 1997-98ல் ரூ.1,44,899/-ம் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.



1999 மார்ச் 31]

**கனடா-இந்தியப் பயிலகக் கூட்டுறவுத் திட்டம்**

தமிழகத்தில் தொழில்கல்வியை நவீனமயமாக்குவதற்காக உலக வங்கித் திட்டம் தவிர, ' கனடா-இந்தியப் பயிலகக் கூட்டுறவுத் திட்டம்' என்றழைக்கப்படும் கனடா உதவித் திட்டமும் ஏற்கப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் நுட்பப் பயிலகங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்திற்கு கனடா-அனைத்துலக முன்னேற்றக்குழு நிதியுதவி செய்கிறது.

இத்திட்டம் 1993 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, முதற் கட்டம் மூன்று ஆண்டுக்காலம் என்ற அளவில் செயல்பட்டபின் முதற்கட்டம் நிறைவு பெற்று, இரண்டாவது கட்டம் தொடர்கிறது. தொழில்நுட்பப் பயிலகக் கல்வியில் நிறுவனத்திறனை வலுப்படுத்துதல், நிலையான பயிற்சி வழிமுறைகளின் வளர்ச்சி போன்றவையும் இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். நிருவாக வளர்ச்சி, முறைசாராக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, தொலைதூரக் கல்வி, மகளிர் முன்னேற்றம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு ஆகியவை இத்திட்டத்தின் ஐந்து பகுதிகளாகும்.

**சமுதாயத் தொழில் நுட்பப் பயிலகத் திட்டம்**

கிராமச் சமுதாயத்தில் பெரிய அளவில் ஒருங்கிணைப்பினை உயர்த்துவதில் ஊக்கம் காட்டுவதுடன், ஊரக வளர்ச்சிப் பணியினை மேற்கொள்ளக்கூடிய திறனுடன் தொழில் நுட்பத் திறனை ஊரகப் பகுதிகளில் மேம்படுத்துவதன் மூலம், அப்பகுதியின் முன்னேற்றத்திற்குத் தன் பங்கினை அளிக்கக்கூடியதுமான குவி மையமாகச் செயல்படுத்துவதும் ஆகிய நோக்கங்களைக் கொண்ட தொழில்நுட்பப் பயிலகம் சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகம் ஆகும். சமுதாயத் தொழில்நுட்பப் பயிலகத் திட்டத்தினை மைய அரசு உதவியுடன் தமிழ்நாட்டில் 1995-96 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடத்த அனுமதி கிடைத்தது. இத்திட்டம் நான்கு மகளிர் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்பட 34 பயிலகங்களில் செயல்பட்டு வருகிறது.

**ஆபரண செயல்முறை பாடம்**

மும்பையில் இயங்கிவரும் உலகத் தங்கக் குழுவின் ஒத்துழைப்புடன் சென்னை, டாக்டர். தர்மாம்பாள் அரசு மகளிர் தொழில் நுட்பப் பயிலகத்தில் ஆபரணச் செயல்முறையில் புதிய பாடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை, தங்கநகை செய்தல், கல்பதித்தல்,

உற்பத்தி நிருவாகம், சுத்திகரிப்பு செய்தல், மெருகேற்றுதல் மற்றும் தரக்கட்டுப்பாடு என்பது குறித்த பாடங்களாகும். வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் இப்பாட வகுப்பில் சேர மாணவர்களிடையே அதிக ஆர்வம் உள்ளது.

**வணிகவியல் தேர்வு**

வணிகவியல் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதிலுள்ள காலதாமதம் தவிர்க்கப்பட்டு, ஜூலை 1998 வரை வணிகவியல் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் அனுப்பப்பட்டுள்ளது. ஜூலை 1998 தேர்வு முடிவுகள் 'கூரியர்' சேவையில் அனுப்பப்பட்டது. இம்முறை நல்ல பயனுள்ளதாக இருந்ததால், சோதனை முறையில் 1999 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் வரை 'கூரியர்' சேவை மூலம் அனுப்ப ஆணையிடப்பட்டுள்ளது.

## 7. தொழில்நுட்பக் கல்விக்கான உலக வங்கி உதவித் திட்டம்

**திட்டத்தின் நோக்கம்**

தமிழகத்தில் உள்ள 21 அரசு பலதொழில்நுட்பப் பயிலகங்கள் 31 அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் ஆகியவற்றின் செயலாக்கத் திறனை 1991 முதல் 1998 வரையிலான காலத்தில் ரூ.103.18 கோடி செலவில் விரிவாக்கி, தரத்தை மேம்படுத்தி மற்றும் பயிற்சித் திறனைச் சீரமைத்து மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**கொள்திறன் விரிவாக்கம் (Capacity Expansion)**

வேலைவாய்ப்புக்குகந்த புதிய பட்டய வகுப்புகள் (Diploma), பட்டயமுறி வகுப்புகளைத் (Post Diploma) தொடங்குதல், தொடர்கல்வி வசதிகள் ஏற்படுத்துதல், பணியாளர்களுக்குக் குடியிருப்புகளை உருவாக்குதல், மாணவிகள் தங்கிப் படிக்க விடுதிவசதி செய்தல், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் உள்ள பல் வழிகளிலும் விரிவாக்குதல் (Multi point entry and credit system) இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**தர மேம்பாடு (Quality Improvement)**

பயிலகங்களை நவீனமாக்குதல், ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளித்தல், கல்வி கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்துதல், பாடத்திட்டத்தைச் செழுமைப்படுத்துதல், கணிப்பொறி வசதி செய்தல், தொழிற்சாலை மற்றும் பயிலக ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல், பயிலகங்களுக்குத்



தன்னாட்சி வழங்குதல், பன்முறை நுழைவு வாய்ப்பு ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செய்யப்படுகிறது.

**திறப்பாடு முன்னேற்றம் (Efficiency Improvement)**

தொழில்நுட்பக் கல்வி மாநில வாரியம் மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தைப் பலப்படுத்துதல்; மாநில செயற்பாட்டு மையங்களை தோற்றுவித்தல் ஆகியவையும் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.

**கொள்திறன் விரிவாக்கத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

தமிழகத்தில் 38 புதிய பட்டயப் பிரிவுகளும் (Diploma), 11 பட்டயமுறி பிரிவுகளும் (Post Diploma) தோற்றுவிக்கப்பட்டுள்ளன. பட்டய வகுப்புகளில் 1055 மாணவர் கூடுதல் சேர்க்கைக்கும், பட்டயமுறி வகுப்புகளில் 220 மாணவர் கூடுதல் சேர்க்கைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. திட்டத்தின் கீழ்வரும் 52 பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும் தொடர்கல்வி மையம்/அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தொடர்கல்வித் திட்டத்தின் கீழ் 8000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சமூகத்தைச் சார்ந்த பங்கேற்பாளர்கள் பயனடைந்துள்ளனர். 1215 மாணவிகள் தங்கிக் கல்வி பயில ஏதுவாக புதிய விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இது தொழில் நுட்பக் கல்வியில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தும். 63 தொழில்முறைப் பணியாளர் குடியிருப்புகளும் (Faculty houses) மற்றும் 50 ஆசிரியர் குடியிருப்புகளும் (Staff Quarters) கட்டப்பட்டுள்ளன. 36 பயிலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும், 6 கட்டடங்கள் கட்டப்பட்டும் வருகின்றன. 1998-99 ஆம் கல்வியாண்டில் ரூ.876 இலட்ச மதிப்பில் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் தொழில் நுட்பக் கல்விக் கோட்டத்தை சார்ந்த பொதுப்பணித் துறையினரால், கூடுதல் கட்டமைப்புக்கான பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட அரசு நிதியுதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிலக நிர்வாகத்தினரால் ரூ.264 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடக் கட்டுமானப் பணிகளும் 3 பெண்கள் விடுதிகளும் கட்டப்படவுள்ளன. இக்கட்டுமானப் பணிகள் யாவும் 1999 மே திங்களுக்குள் முடிவடையும்.

**தரமேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக ஆசிரியப் பணியாளர்களுக்குத் தேவையாகும் பயிற்சிகளை அறிவதற்கு ஏதுவாக தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணியாளர் மேம்பாட்டு மையம் நிறுவப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி நிலையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்டரல் இன்ஸ்டிடியூட் ஆப் பிளாஸ்டிக் என்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி, திருச்சியிலுள்ள மண்டலப் பொறியியல் கல்லூரி, கோவையிலுள்ள பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி ஆகியவைகளில் ஆசிரியர்களுக்கான உள்நாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. நிர்ணயிக்கப்பட்ட 3100 மனித மாதங்களுக்கெதிராக 2800 மனித மாதங்களுக்கான பயிற்சிகள் முடிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பயிலக ஆய்வகங்களும், புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மூலம் நவீனப்படுத்தப்பட்டும் வலுப்படுத்தப்பட்டும் வருகின்றன. அனைத்துத் திட்டப் பயிலகங்களுக்கும் நவீன கணிப்பொறி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்துப் பாடத் திட்டங்களும் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

**திறப்பாடு முன்னேற்றத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை**

தொழில் நுட்பத் தேர்வு முடிவுகளைத் தேர்வு முடிந்த ஐந்து வார காலத்திற்குள் வெளியிட ஏதுவாக தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தேர்வுப்பிரிவு, கூடுதல் கணிப்பொறிகளுடன் வலுப்படுத்தப் பட்டுள்ளது. மாநிலத் திட்ட அமலாக்க மையத்தின் அலுவலகம், திட்ட இயக்குநர், திட்ட அலுவலர்கள், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் திறன் உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்டு திறம்படச் செயல்பட்டு வருகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பல்தொழில்நுட்பப் பயிலகங்களிலுள்ள அனைத்துத் துறைகளுக்கும், தன்னாட்சி வழங்கப்பட்டுள்ளதுடன் பன்முறை நுழைவுத் துறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்துத் திட்டப் பயிலகங்களிலும் தொழிற்சாலைப் பயிலக ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்தப்பட்டு, பயிற்சி மற்றும் பணியமர்த்தும் அலுவலர் (Placement Officer) இது தொடர்பான பணிகளைக் கவனித்து வருகிறார். மாநிலத் திட்ட அமலாக்க மையத்திற்கும், இந்தியத் தொழிற்சாலை கூட்டமைப்புக்கும் (Confederation of Indian Industries) இடையே உடன்பாட்டு அறிக்கை கையொப்பம் இடப்பட்டுப் பயிலக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தொழிற் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இதுவரை 200 ஆசிரியர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் 1 மாதம் முதல் 3 மாத காலம் வரையிலான பயிற்சியினைப் பெற்றுள்ளனர். மாணவர்கள் அவர்களது 5 மற்றும் 6வது பருவ விடுமுறைக் காலங்களில் தொழிற் பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். மாணவர்கள் தங்களுடைய செயல் திட்டங்களைச் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளில்



மேற்கொள்கின்றனர். தொடர் கல்வித் திட்டத்தின்கீழ் குறுகிய மற்றும் நீண்ட கால பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பயிலகத்திற்கான அகநிதி உருவாக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

ரூ. 23.6 கோடி செலவில் 100 விழுக்காடு மாநிலத் திட்டமாக உலக வங்கி நிதி உதவியுடன் மூன்று அரசு தொழில் நுட்பப் பயிலகங்களையும், மூன்று அரசு உதவி பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களையும் 2002 ஆம் ஆண்டு வரையில் தனித்துவம் வாய்ந்த மையமாக (Centre of Excellence) நிறுவக் கருதப்பட்டுள்ளது. இதில் இரண்டு மகளிர் தொழில் நுட்பப் பயிலகங்களும் அடங்கும்.

## 8. அண்ணா பல்கலைக்கழகம்

அண்ணா பல்கலைக்கழகம் இந்த நாட்டிலேயே மிகப்பெரிய தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்து வருகிறது. இங்கு பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 6012 ஆகும். இதில் 1077 பேர் பெண்களாவர். இந்தியாவில் இதுவே மகளிர் அதிக அளவில் தொழில்நுட்பக் கல்வி பயிலும் பல்கலைக்கழகமாகும். இங்கு 33 பட்டப் படிப்பு திட்டங்கள், 47 பட்ட மேற்படிப்பு திட்டங்கள், 4 பட்ட மேற்படிப்பு பட்டய திட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களில் பல, பொதுவாக தேசிய அளவிலும் குறிப்பாகத் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்களோடும் தொடர்புடையவை.

உயிரின தொழில்நுட்பம், படிக வளர்ச்சி, தொலைநுட்பவியல், சுற்றுப்புறப் பொறியியல், நீர் ஆதாரங்கள், கடல் மேலாண்மை, மின்னணுச் செய்திப் போக்குவரத்துப் பொறியியல், உற்பத்தி மூலங்கள் ஆகிய துறைகளில் அண்ணா பல்கலைக்கழகம் பாராட்டத்தக்கப் பணிகளைச் செய்து வருகிறது. கற்பித்தலும் ஆய்வும் அதன் விரிவாக்கமும் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றவாறு நாளும் வளர்ந்து வருகிறது. தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்தி வருகிறது. அண்ணா பல்கலைக்கழகம் வளர்ச்சித் திட்டமொன்றைத் தீட்டி உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பல்வேறு அமைப்புகளிடமிருந்தும் நிதி உதவிகளைப் பெற்று உள் கட்டமைப்பு வளர்ச்சிக்கும், பல்வேறு வகை துறை வளர்ச்சிகளுக்கும் புதிய பாடப்பிரிவுகளுக்கும் பயன்படுத்தி வருகிறது. பழைய கருவிகளை மாற்றியமைப்பதற்கும், ஆய்வுக் கூடங்களைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்துவதற்குமான திட்டமொன்று நடைமுறையில் உள்ளது.

அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் பாடப்பிரிவுகள் சுரங்கப் பொறியியல், இரப்பர் தொழில்நுட்பம், மண்பாண்டத் தொழில், காலணித்

தயாரிப்பு, கட்டடப் பொறியியலும் அதன் மேலாண்மையும், உயிரினத் தொழில்நுட்பம், பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையங்கள், பெட்ரோலியப் பொருட்கள், போர் விமானங்கள், சர்க்கரைத் தொழில், நிலவியல் செய்திகள், அச்சுத் தொழில்நுட்பம், உற்பத்தி மூலங்கள் ஆகிய துறைகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப அறிவுரைகளையும், தேவைப்படும் வேலையாட்களின் எண்ணிக்கை முதலான விவரங்களையும் தருவதில் முன் நிற்கிறது.

தமிழக அரசின் வீட்டு வசதித் திட்டங்களோடு தொடர்புடைய நகர்ப்புற, நாட்டுப்புற வீட்டு வசதி, நகர்ப்புற நாட்டுப்புற மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் வலுவான துறையமைப்பை அண்ணா பல்கலைக் கழகம் கொண்டிருக்கிறது. அத்தகைய திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை நீர்நிலைப் பயன்பாட்டு மேம்பாட்டுத் திட்டம், நகரமைப்பில் மனித சக்தியைப் பயன்படுத்துவதற்கான புள்ளி விவரத் திட்டம், நிலத்தடி நீர் முன்னேற்றத் திட்டம், நிலவியல், வேளாண்மை, வனப் பாதுகாப்பு, மீன் வளர்ப்பு ஆகியவற்றின் முன்னேற்றத் திட்டங்கள ஆகும். மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வளங்களைப் பயன்படுத்துவதற்கான திட்ட ஆய்வும், ஏழு மாவட்ட தரிசு நில மேம்பாட்டு ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது (Study of Waste Land) அண்ணா பல்கலைக் கழகத்தில் இயங்கி வரும் இராமானுசம் கணிப்பொறி மையம் (Ramanuajam Computing Centre) பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் வேண்டிய உதவிகளைத் தந்து வருகிறது. பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளேயே தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அண்ணா ஜெம் அறிவியற் பள்ளியையும், அண்ணா பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பப் பூங்கா பொழுதுபோக்கு மையத்தையும் நடத்தி வருகிறது. ஜெர்மன் அரசாங்கம் உதவியுடன் கணிப்பொறி தொடர்பான "ஏ.யு.எப்.ஆர்.ஜி." நிறுவனம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்திந்தியத் தொழில்நுட்ப அவையால் அனுப்பப்பட்ட தேசிய ஏற்பளிப்பு மன்றத்தின் வல்லுநர் குழு அண்ணா பல்கலைக்கழகத்தினைப் பார்வையிட்டு 40 திட்டங்களில் (இளநிலை மற்றும் முதுநிலை பட்டம்) 35 திட்டங்களுக்கு, தர ஏற்பளிப்புச் சான்று அளித்துள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில்நுட்பக் கல்வி நுழைவுத் தேர்வையும் பொறியியல் கல்லூரிக்கான ஒற்றைச் சாளர முறை மாணவர் சேர்க்கையையும் இப்பல்கலைக்கழகம் சிறப்பாக நிறைவேற்றித் தருகிறது. மாநிலத்திலுள்ள பல தொழில்நுட்ப பயிலக மாணவர் சேர்க்கையையும் ஒற்றைச் சாளர முறையில் நிறைவேற்றும் பணியைத் தொழிற் கல்வி இயக்ககம் நிறைவேற்றுவதற்கும் உறுதுணையாகப் செயற்படுகிறது.



## 9. திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி

மண்டலப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 1964-65 ஆம் ஆண்டு மத்திய மாநில அரசின் கூட்டு முயற்சியால் தொடங்கப்பட்டு தற்போது இந்தியாவிலுள்ள தலைசிறந்த பொறியியல் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. 778 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கல்லூரியில் 3200 மாணவர்கள் (2500 ஆண்கள் மற்றும் 700 பெண்கள்) பயில்கின்றனர். மற்றும் 560 அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். இக்கல்லூரியில் 15 துறைகளில் 10 இளங்கலைப் பொறியியல் பட்டப்படிப்புகளும், 31 முதுகலைப் பட்டப்படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்கள் 50 விழுக்காட்டினர் தமிழ்நாடு பொறியியல் பட்டப்படிப்பு நுழைவுத் தேர்வு மூலமாகவும் எஞ்சியோர் மற்ற மாநில மண்டலப் பொறியியல் கல்லூரிகள் மூலமாகவும் தெரிவு செய்யப்படுகின்றனர். இக்கல்லூரியில் பட்டப்படிப்பில் அனைத்துத் துறைகளிலும் சிறந்த கல்விப் பயிற்சி வழங்குவதுடன் குறிப்பாக தகவல் தொழில் நுட்பவியல் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

### நிருவாகம்

இக்கல்லூரி நிறுவனங்கள் பதிவு சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டு 16 பேர் கொண்ட ஆளுநர் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. ஆளுநர் குழுவின் தலைவர், தமிழக அரசின் கல்வி அமைச்சராவார். இக்கல்லூரி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்கீழ் இணைக்கப்பட்டுத் தன்னாட்சி உடையதாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் உள்ள 17 மண்டலப் பொறியியல் கல்லூரிகளில் 14 ஆண்டுகளுக்கு மேலாக தன்னாட்சி பெற்று விளங்கும் ஒரே கல்வி நிறுவனமாக திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரி விளங்குகிறது.

### நிதி நிருவாகம்

இக்கல்லூரியின் தொடராச் செலவினமாகிய கட்டடம், தளவாடப் பொருட்கள், அறைகலன்கள் முதலியவற்றிற்கான செலவிற்கு 100 விழுக்காடு மானியமும், மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட முதுகலை பட்டப்படிப்புகளுக்கு ஆகும் செலவிற்கு 100 விழுக்காடு தொடர் மானியமும் மத்திய அரசு வழங்குகிறது. இளங்கலைப் பட்டப்படிப்புகளுக்கான செலவினங்களுக்கு மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் தொடர் மானியம் வழங்குகின்றன.

**சிறப்பு வசதிகள்**

இந்நிறுவனத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கணிப்பொறி மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இதில் ஒரே சமயத்தில் 300 மாணவர்கள் பயிற்சி பெறும் வசதி உள்ளது. இக்கணிப்பொறி மையத்திற்கெனத் தனி நூலகம் உள்ளது. இங்குள்ள தன்பயன் கணிப்பொறிகள் (Personal Computers) கணிப்பொறி மையத்திலுள்ள அலுவலர்களாலும் மாணவர்களாலும் செய்யப்பட்டவையாகும். கணிப்பொறிகளின் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் இம்மையத்திலுள்ள அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இக்கணிப்பொறி மையத்தில் இக்கல்லூரியிலுள்ள மாணவர்களுக்கு மட்டுமின்றி, திருச்சி நகரைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகள், கல்விக்கூடங்கள், கல்லூரிகளிலுள்ளவர்களும் பயன்பெறும் வகையில் பல வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேலும் பொது மற்றும் தனியார் தொழில் நிறுவனங்களுக்குப் பொறியியல் சம்பந்தமான ஆலோசனை வழங்கும் பணியும் நடைபெறுகிறது. இக்கல்லூரி டாட்டா-ஐ.பி.எம் நிறுவனத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டு, இக்கல்லூரியிலுள்ள மாணவர்கள் மட்டுமின்றி அருகிலுள்ள கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களும் பயன்பெறும் வகையில் மென்பொருள் ஆய்வகம் (Software Laboratory) ஒன்றை வெகுவிரையில் நிறுவிடவுள்ளது. இதனால் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் மேலும் பெருகும் வாய்ப்பு உள்ளது.

இந்திய, பிரிட்டிஷ் அரசுகள் உதவியளிக்கும் எரிசக்தி மையத் திட்டத்தின் கீழ், காற்றுவிசை மூலம் மின்சக்தி தயாரித்தல், சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி தயாரித்தல், மேலும் சில பொருட்களிலிருந்து மின்சக்தி தயாரித்தல் முதலிய ஆய்வுப் பணிகளுக்காக ரூ.150 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் கட்டப்படுகின்றன. இந்த ஆய்வுக் கூடங்களுக்கு ரூ.179.96 இலட்சம் செலவில் உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்கள் இக்கல்லூரியின் பல்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கும் பயன்படுகின்றன. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களின் தொழில் பயிற்சித் தேர்வுத் திறன் நன்றாக உள்ளதால், பயிலும் மாணவர்களில் 86 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் படிப்பை முடிக்கும் முன்னரே பிறமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

இக்கல்லூரி இந்தியாவிலேயே மூன்றாவது சிறந்த பொறியியல் கல்லூரியாக விளங்குகிறது. மற்றும் இந்தியாவில் உள்ள 12 சிறந்த கணிப்பொறிக் கல்வி வழங்கும் நிறுவனங்களில் இக்கல்லூரியும் ஒன்று தேசிய தர ஏற்பளிப்பு வாரியம் இக்கல்லூரியினை மார்ச் 1997 இல்



பார்வையிட்டு ஆய்வு செய்து இக்கல்லூரியில் நடத்தப்பெறும் ஒன்பது படிப்புப் பிரிவுகளுக்குத் தர ஏற்பளிப்புச் சான்று வழங்கியுள்ளது.

## 10. தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மன்றம்

நமது மாநிலத்தின் வளர்ச்சிக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் முக்கியத்துவத்தை உணர்ந்து அண்மைக்காலமாகப் பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அரசின் அறிவியல் வளர்ச்சிக்கான கொள்கையை உருவாக்கவும், அறிவியல் உணர்வை வளர்ப்பதற்கெனவும் தனி நிறுவனங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பவியல் மன்றத்தை 1984ல் அமைத்துள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் விவசாயம், சுகாதாரம், கல்வி, சக்தி, மக்கள், குடியேற்றம் போன்ற துறைகளில் அறிவியல் தொழில்நுட்பத் திட்டங்களை உருவாக்கித் தரும் பொறுப்பினை இம்மன்றம் ஏற்றுள்ளது. இந்த மன்றம் மத்திய மாநில அரசுகளின் அறிவியல் குறிக்கோளை அடைய உதவும் அமைப்பாகத் திகழ்கிறது. மற்றும் மாநில அரசின் திட்டப் பணிகளின் வளர்ச்சிக்குரிய அறிவியல் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவதற்கும் உதவுகிறது. மாநிலக் கல்வி அமைச்சர் அவர்கள் இம்மன்றத்தின் தலைவா ஆவார்.

தமிழக அரசு 1984 முதல் 1999 வரை ரூ.438.95 இலட்சங்களை, கீழ்வரும் அறிவியல் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக மானியமாக வழங்கியுள்ளது.

1. அறிவியல் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சித் திட்டங்கள்.
2. அறிவியல் தொழில்நுட்பவியல் செய்தி திரட்டும் அமைப்பு.
3. அறிவியல் தொழில்நுட்பம் பரப்புதல்.
4. இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தல்-ஆராய்ச்சிப் பயிற்சித் தொகை அளித்தல்.
5. இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தல்-பயண ஊக்கத் தொகை வழங்குதல்.
6. கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்குகள் நடத்தும் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.
7. அறிவியல் தொழில் நுட்பவியல் நூல்கள் மற்றும் தமிழில வெளியாகும் "துளிர்", "அறிக அறிவியல்" போன்ற ஏடுகளுக்கு உதவி செய்தல்.
8 குழு விவாதங்கள்.

[1999 மார்ச் 31

9. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்.
10. ஆராய்ச்சியாளர்-தொழில் நிறுவனம் கருத்துப் பரிமாற்றம்.
11. மாணவர் அறிவியல் ஆய்வுத் திட்டம்.
12. தமிழ்நாட்டு விஞ்ஞானிகளுக்குப் பரிசுத் திட்டம்.
13. கிராமங்புறங்களிலிருந்து இளம் மாணவ விஞ்ஞானிகளை உருவாக்கும் திட்டம்.
14. கிராமப்புற மக்களை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஈடுபடுத்துதல்.

இதுவரை 70 அறிவியல் தொழில்நுட்பவியல் திட்டங்களை இம் மன்றம் நிறைவேற்றியுள்ளது. மேலும் 35 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர் ஆய்வுத் திட்டத்தின்கீழ் இதுவரை மொத்தம் 320 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1998-99ஆம் ஆண்டில் 155 திட்டங்கள் மன்றத்தின் உதவியைப் பெறுகின்றன. பத்துத் துறைகளில் தலைசிறந்த ஆய்வுக் கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்த பத்து அறிவியலறிஞர்களுக்குத் தலா ரூபாய் பத்தாயிரமும் ஒரு தாமிரக் கேடயமும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களில் அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் கிராமப் பஞ்சாயத்து மக்களின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலையை உயர்த்துவதற்குப் பயன்படுகிறது. இந்தக் கிராமங்கள் நகரங்களிலிருந்து 10 அல்லது 15 கி.மீ. தூரத்திலுள்ளவையாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அந்த ஊராட்சிகளில் எடுக்கப்பட்டது.

1. மகளிரின் வேலைப் பளுவைக் குறைப்பதற்காக (சமூகப் பொது) சாண வாயுத்திட்டம் செயற்படுத்துதல்.
2. அறிவியல் தொழில்நுட்பத்தின் மூலம் மகளிர் மற்றும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பளித்தல்.
3. முதியோருக்கும் இளைஞர்களுக்கும் சுகாதாரப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்குதல்.
4. மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு முதலானவற்றில் பராமரிக்கும் பயிற்சியளித்தல்.
5. விவசாயப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக முன்னோடித் திட்டமாக ஒருமித்த மேற்பார்வைத் துறைகளை அறிவுறுத்தல்.

இத்திட்டங்களின் மூலம் மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் பொருளாதாரக் கல்வி நிலையை மேம்படுத்தலாம்.



1999 மார்ச் 31]

## 11. அறிவியல் நகரம்

சென்னை மாநகரில் தென் சென்னைப் பகுதியில் ஓர் அறிவியல் நகரத்தை ஏற்படுத்த தமிழக அரசு முனைந்திருக்கிறது. அறிவியல் தொழில் நுட்பங்களைப் பரப்பும் நோக்கத்துடன் இப்பகுதியில் அமைந்துள்ள 60-க்கும் மேற்பட்ட மத்திய மாநில அரசு நிறுவனங்களையும் தனியார் தொழில் நிறுவனங்களையும் உள்ளடக்கிய இவ்வளாகம் அறிவியல் நகரம் என அறிவிக்கப்பட்டவுள்ளது.

**இந்த அறிவியல் நகரத்தின் முக்கியக் குறிக்கோள்களாவன:**

(அ) இந்த வளாகத்தில் அமைந்துள்ள நிறுவனங்களின் துணையுடனும், வருங்காலத்தில் அமையவிருக்கும் நிறுவனங்களின் மூலமாகவும், அறிவியல் தொழில்நுட்ப அறிவாற்றல் வளர உதவுவது.

(ஆ) தொழில் தொடர்பான நுட்பங்களைத் தொழிற்சாலைகள் மற்றும் மூலதன நிறுவனங்கள் மூலமாகப் பரிமாறிக் கொள்ளுதல்.

(இ) உலக அளவில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை அறிவது மற்றும் கணக்கில் எடுத்துக் கொள்வது, நல்ல அறிவியல் பயன்பாடும், அறிவியல் வளரும் சூழ்நிலையும் அமைவதற்குத் தற்போதுள்ள நிறுவனங்களிலுள்ள கட்டமைப்பு மேம்படவும், வருங்காலத்தில் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையே நல்லிணக்கம் உருவாகவும் அறிவியல் நகரம் ஒரு நல்ல சூழ்நிலையைக் கொண்டதாக அமையும். இளங்கலை, முதுகலைப் பட்டதாரிகள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், அறிவியல், தொழில்நுட்பவியல், பொறியியல் ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வோர் இவ்வறிவியல் நிறுவனத்தால் நேரடியாகப் பயனடைவார்கள்.

## 12. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம்

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம் ஒரு தன்னாட்சி நிறுவனமாக தமிழக அரசினால், 1983ஆம் ஆண்டு நிறுவப்பட்டு கல்வி அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மக்களிடையே, குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையே அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் "நகர்ப்புற வளர்ச்சிக் கூடம்" ஒன்றை ஏற்படுத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இக்கூடம்

அமைத்திட சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை மாநகராட்சி ஆகியவை அந்தந்த வாரிய குழுமத்தின் ஒப்புதலுடன் தலா ரூ.5 இலட்சத்தை மையத்திற்குச் செலுத்த வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்த செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்திட, ஒரு வழிகாட்டுக் குழு மற்றும் தொழில் நுட்பக் குழு ஆகியவைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட "நகர்ப்புற வளர்ச்சிக் கூடம்" 1999-2000 ஆம் நிதியாண்டில் அமைத்திட அனைத்து அடிப்படைப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும் கருத்தரங்கம், பயிலரங்கம், மாணவர்களுக்கான வினா விடைப் போட்டி மற்றும் முக்கிய வானியல் நிகழ்வுகளின் போது இதுகுறித்தான முகாம்கள், சிறப்புத் தொலை நோக்கு மூலம் வானினை நோக்குதல் ஆகியவற்றை இம்மையம் சிறப்பாக நடத்தி வருகின்றது.

இத்தகைய அமைப்புகளை ஏற்படுத்தி, இதன் பயன்கள் விரிவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் கோளரங்கத்துடன் மண்டல அறிவியல் மையங்களும், வேலூரில் மாவட்ட அறிவியல் மையமும் அமைத்திடத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## 13. தமிழ்நாடு ஆவணக் காப்பகம்

அரசு ஆவணங்களை ஒருங்கிணைத்துப் பேணுவதற்குச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 1805ஆம் ஆண்டு வில்லியம் பென்டிங் துரை அவர்களால் தமிழ்நாடு ஆவணக் காப்பகம் முதல் முதலில் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் இது ஒரு முழுமையான ஆவணக் காப்பகமாக வடிவமைக்கப்பட்டு தற்போது எழும்பூரில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கட்டடத்திற்கு 1909ஆம் ஆண்டில் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. இங்குள்ள ஆவணங்கள் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை. அவை டேனிஷ், டச்சு, ஆங்கிலம், பிரெஞ்சு, பெர்சியன் மற்றும் மோடி மொழிகளில் உள்ளன. இவற்றில் மிகவும் பழமை வாய்ந்த ஆவணங்கள் 1657 ஆம் ஆண்டைச் சார்ந்த டச்சு ஆவணங்கள் ஆகும். ஆங்கிலம் தவிர ஏனைய மொழிகளில் உள்ள ஆவணங்கள், அவற்றில் புதைந்து கிடக்கும் வரலாறுகளை வெளிப்படுத்த மொழிபெயர்க்கப்பட வேண்டியது அவசியமாகும். ஆவணங்கள் அனைத்தும் அறிவியல் முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



### ஆவணக் காப்பக நூலகம்

ஆவணக் காப்பகத்தின் ஓர் ஆவண அறையில் சிறப்பு நூலகம் ஒன்று சுமார் இரண்டரை இலட்சம் அரிய நூல்களுடன் இயங்கி வருகிறது. அவற்றில் மிகப் பழமையான நூல் 1633ஆம் ஆண்டைச் சார்ந்ததாகும். இதில் உள்ள நூல்கள் பார்வைக்கு மட்டும் உரியதாகும். வல்லுநர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்நூலகம் மிகவும் பயன்படும் வகையில் உள்ளது. ரூ.97 இலட்சம் செலவில் இந்நூலகத்திற்கு அனைத்து வசதிகளுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு தனிக் கட்டடம் கட்டும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்நூலகத்தை மேம்படுத்தவும், திருத்தி அமைக்கவும் ஒரு உயர்மட்டக் குழு அரசால் அமைக்கப்பட்டு, கொள்கை வரைவு செய்யப்பட்டு வருகிறது. பழமையான நூல்கள் மறுபதிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

### ஆராய்ச்சிக் கூடம்

அனைத்து வசதிகளும், குளிர்சாதனமும் செய்யப்பட்ட ஓர் ஆராய்ச்சிக் கூடம் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் இயங்கி வருகிறது. தமிழ்நாடு ஆவணக் காப்பகம், வரலாற்று ஆய்வில் முனைவர் பட்ட ஆய்வுக்குரிய ஆராய்ச்சி மையமாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது தவிர உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும், எம்.பில. பட்டத்திற்காகவும் மற்றும் பல்வேறு பொருளில் ஆராய்ச்சி மேற்கொண்டு பயன் அடைகின்றனர்.

### ஆவண மதிப்பீடு செய்தல்

இடைநிலை ஆவணக் காப்பகத்தில் உள்ள ஆவணங்களை, அவை ஆவணக் காப்பகத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பே அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஏனெனில் அவ்வாறு செய்யாவிடில், ஆவணக் காப்பகத்தில் இடப்பற்றாக்குறை ஏற்படும். ஆவணக் காப்பகம் தோன்றிய நாள் முதல் ஆவணங்கள் இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆவணக் காப்பகத்தில் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, ஆவணங்களை மதிப்பீடு செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி அப்பணிக்கு இடைநிலை ஆவணக் காப்பகத்தில் ஒரு முறையான பணியமைப்பும், ஆவணக் காப்பகத்தில் ஒரு சிறப்புப் பணியமைப்பும் ஏற்படுத்தப்படும்.

**வெளியீட்டுப் பிரிவு**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள வெளியீட்டுப் பிரிவு தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகளை வெளியிடுகிறது. அரசு தேர்வு செய்த ஒரு தலைப்பில், அரசாணைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை தொகுத்து, நூல் வடிவில் வெளியிடப்படுகிறது. இத்தகைய தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள், நிருவாகத்தினர் கொள்கைகளை வகுக்கவும், ஆராய்ச்சியாளர்கள் தம் ஆராய்ச்சிப் பணிகளுக்கும் பெரிதும் பயன்படுகிறது. இதுவரை 11 தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஐந்து தேர்ந்தெடுத்த ஆவணத் தொகுப்புகள் அச்சிடப்படவுள்ளன. அதற்கென நவீன உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. ஆவணக் காப்பகத்தில் உள்ள அரிய ஆவணங்களிலிருந்து வெளியீடுகளைக் கொண்டுவர வெளியீட்டுப் பிரிவு திருத்தி அமைக்கப்படவேண்டும்.

**விவரச் சுவடிப் பிரிவு**

விவரச் சுவடிப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கவும், அதன் பணிகளை ஆய்வு செய்யவும் உயர்மட்டக் குழு ஒன்று இயங்கி வருகிறது. மாவட்ட விவரச் சுவடிகள் தயாரிப்பு கால அளவைக் குறைக்கவும், அவற்றின் தரத்தை உயர்த்தவும், விவரச் சுவடிப் பிரிவை முழுமையாக மாற்றி அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட ஆவணக் காப்பகங்கள்**

இந்திய வரலாற்று ஆவணங்கள் குழுவின் பரிந்துரையின் பேரில், ஒவ்வொரு மாவட்டத்திலும், அரசு அலுவலகங்களில் உள்ள முப்பதாண்டுகளுக்கு மேற்பட்ட ஆவணங்களை ஒருங்கிணைத்துப் பாதுகாக்க மாவட்ட அளவில் மாவட்ட ஆவணக் காப்பகங்களை அரசு தோற்றுவித்துள்ளது. இதுவரை ஏழு மாவட்டங்களில் மாவட்ட ஆவணக் காப்பகங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவை கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, கடலூர், தஞ்சாவூர் மற்றும் சென்னை ஆகும்.





## 14. புள்ளி விவரம்

### கல்லூரிக் கல்வித் துறை

### 1. கல்லூரிக் கல்வி விவரங்கள் 1998-99 (இனவாரியாக)

| | |
|---|---|
| அரசு கலைக் கல்லூரிகள் | 60 |
| அரசு உதவி பெறும் கலைக் கல்லூரிகள் | 133 |
| சுயநிதி (உதவி பெறாதவை) கலைக் கல்லூரிகள் | 172 |
| அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் | 7 |
| அரசு உதவிபெறும் ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள் | 14 |
| சுயநிதி ஆசிரியர் கல்வியியல் கல்லூரி | 1 |
| அரசு உதவி பெறும் கீழ்த்திசை (ஓரியண்டல்) கல்லூரிகள் | 9 |
| அரசு உதவி பெறாத கீழ்த்திசை கல்லூரிகள் | 6 |
| அரசு உதவி பெறும் உடற்பயிற்சிக் கல்லூரிகள் | 3 |
| சுயநிதி (உதவி பெறாதவை) உடற்பயிற்சிக் கல்லூரிகள் | 1 |
| அரசு உதவி பெறும் சமுதாயப் பணி பள்ளிகள் | 2 |
| சுயநிதி நுண்கலைக் கல்லூரிகள் | 1 |
| மொத்தம் | **409** |

### II. மாணவர்களின் எண்ணிக்கை

| விவரம் | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 | 1998-99 |
|---|---|---|---|---|---|
| பி.ஏ. | 90586 | 93332 | 89381 | 86364 | 88967 |
| பி.எஸ்.சி. | 126543 | 130649 | 132179 | 133586 | 141136 |
| பி.காம். | 50769 | 53623 | 54877 | 56797 | 60606 |
| முதுநிலை | 23108 | 23597 | 23327 | 32645 | 34684 |
| பிற | 13195 | 25071 | 25857 | 6907 | 24570 |
| மொத்தம் | **304201** | **326272** | **325621** | **316299** | **349963** |

[1999 மார்ச் 31

## III. அரசுக் கல்லூரிகள்/உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் ஆடவர்/மகளிர் மாணவர்களின் எண்ணிக்கை 1998-99

(இளங்கலை/முதுகலை/எம்.ஃபில்./பி.எச்.டி./பட்டயம்/இதர பிரிவுகள்)

| பாடப் பிரிவின் பெயர் | அரசு கல்லூரி | | அரசு மானியம் பெறுபவை | | சுயநிதிக் கல்லூரி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| **இளங்கலைப் பிரிவுகள்** | | | | | | |
| பி.ஏ. | 14476 | 15625 | 23604 | 28583 | 1674 | 5005 |
| பி.எஸ்சி. | 17156 | 19178 | 37474 | 37780 | 12359 | 17189 |
| பி.காம். | 5435 | 4326 | 20540 | 16479 | 4793 | 9033 |
| பிபிஏ. | 198 | 161 | 2082 | 1119 | 2174 | 2086 |
| பிபிஎம். | — | — | 798 | 1188 | 2150 | 1516 |
| பி.ஏ. | — | — | 3 | 32 | — | — |
| பி.லிட். | — | — | 261 | 1237 | — | — |
| **முதுகலைப் பிரிவுகள்** | | | | | | |
| எம்.ஏ. | 954 | 1124 | 3092 | 4012 | 37 | 134 |
| எம்எஸ்சி. | 744 | 1230 | 4149 | 5123 | 790 | 722 |
| எம்.காம். | 293 | 115 | 1813 | 1168 | 72 | 195 |
| எம்.ஏ. (கலை) | — | — | 6 | 9 | — | — |
| எம்.சி.ஏ. | 75 | 103 | 2475 | 1467 | 1503 | 1276 |
| எம்.பி.ஏ. | — | — | 320 | 369 | 821 | 508 |
| **ஆராய்ச்சிப் படிப்பு** | | | | | | |
| எம்.ஃபில் | 76 | 125 | 749 | 591 | — | 5 |
| பி.எச்.டி. | 55 | 36 | 152 | 73 | — | — |
| டிப்ளமா | 2 | 21 | 522 | 473 | 36 | 153 |
| **சான்றிதழ் படிப்பு** | | | | | | |
| பி.எட். | 602 | 530 | 463 | 1475 | 29 | 81 |
| எம்.எட். | 26 | 24 | 41 | 53 | — | — |
| இதர பிரிவுகள் | — | — | 865 | 459 | 1375 | 318 |
| **மொத்தம்** | **40092** | **42598** | **99409** | **101690** | **27813** | **38221** |



1999 மார்ச் 31]

## IV. ஆசிரியர்/ ஆசிரியரல்லாத பணியாளர் எண்ணிக்கை அரசு/நிதியுதவி/சுயநிதிக் கல்லூரிகள் 1998-99

| கல்லூரிவகை | கல்லூரிகள் எண்ணிக்கை | ஆசிரியர் பணி | | | ஆசிரியரல்லாத பணி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| அரசுக் கல்லூரிகள் | 67 | 2803 | 1716 | 4519 | 1765 | 407 | 2172 |
| அரசு மானியம் பெறும் கல்லூரி | 161 | 7303 | 4039 | 11342 | 4123 | 1123 | 5246 |
| சுயநிதி கல்லூரி | 181 | 2175 | 2708 | 4883 | 1473 | 988 | 2461 |
| **மொத்தம்** | **409** | **12281** | **8463** | **20744** | **7361** | **2518** | **9879** |

## V. பல்கலைக்கழகத்தில் இணைப்புப்பெற்ற கல்லூரிகள் 1998-99

| வ.எண். | பல்கலைக்கழகத்தின் பெயர் | கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | சென்னை பல்கலைக்கழகம் | 122 |
| 02. | மதுரை காமராசர் பல்கலைக்கழகம் | 78 |
| 03. | பாரதியார் பல்கலைக்கழகம் | 65 |
| 04. | பாரதிதாசன் பல்கலைக்கழகம் | 59 |
| 05. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் | 54 |
| 06. | பெரியார் பல்கலைக்கழகம் | 31 |
| | **மொத்தம்** | **409** |

[1999 மார்ச் 31

## VI. கல்லூரி புள்ளி விவரம்

| கல்லூரியின் பெயர் | 1998-99 | | | |
|---|---|---|---|---|
| | அரசு | மானியம் பெறுபவை | மானியம் பெறாதவை | மொத்தம் |
| கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 60 | 133 | 172 | 365 |
| இதர கல்லூரிகள் | | | | |
| 01. உடற்கல்வி | - | 3 | 1 | 4 |
| 02. ஓரியண்டல் | - | 9 | 6 | 15 |
| 03. சமுதாயப் பணிப்பள்ளி | - | 2 | - | 2 |
| 04. கல்வியியல் கல்வி | 7 | 14 | 1 | 22 |
| 05. நுண்கலை | - | - | 1 | 1 |
| மொத்தம் | **67** | **161** | **181** | **409** |

## VII. 1995-96 முதல் 1998-99 வரையிலான கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை

| வ.எண் | வருடம் | பெண் | ஆண் | மொத்தம் | விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| 1. | 1995-96 | 6468 | 11393 | 17681 | 36.21 |
| 2. | 1996-97 | 7005 | 11622 | 18627 | 37.62 |
| 3. | 1997-98 | 7741 | 12392 | 20133 | 38.44 |
| 4. | 1998-99 | 8463 | 12281 | 20744 | 40.79 |



1999 மார்ச் 31]

## VIII. தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் மாணவிகள் எண்ணிக்கை

| வரிசை எண். | வருடம் | மொத்தம் | மாணவிகள் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | 1994-95 | 30421 | 138417 | 45.50 |
| 2. | 1995-96 | 326272 | 149342 | 45.77 |
| 3. | 1996-97 | 325621 | 162100 | 49.78 |
| 4. | 1997-98 | 331900 | 171578 | 51.69 |
| 5. | 1998-99 | 349963 | 182509 | 52.15 |

## தொழில்நுட்பக் கல்வி

## IX. மாநிலத்திலுள்ள தொழில்நுட்ப பயிலகங்கள் எண்ணிக்கை

| வருடம் | அரசு | அரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1997-98 | 21 | 35 | 112 | 168 |
| 1998-99 | 21 | 35 | 143 | 199 |

## X. மாநிலத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை

| வருடம் | அரசு | அரசு மாணியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1997-98 | 7* | 3 | 76 | 86 |
| 1998-99 | 7* | 3 | 104 | 114 |

(* திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி உள்ளடக்கியது)

## XI. மாவட்ட வாரியாக மாநிலத்திலுள்ள மகளிர் பொறியியல் கல்லூரிகள் 1998-99

| வ. எண். | மாவட்டம் | அரசு | ஆரசு மானியம் | சுயநிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | திருவள்ளூர் | - | - | 1 | 1 |
| 2. | தஞ்சாவூர் | - | - | 1 | 1 |
| | மொத்தம் | - | - | 2 | 2 |

[1999 மார்ச் 31

## XII. மாணவர்களின் எண்ணிக்கை 1998-99

### பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்

| வ. எண். | கல்லூரிகள்/ பயிலகங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் |
| I. | பொறியியல் கல்லூரிகள் | | | |
| 1. | அரசு மற்றும் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் | 1829 | 633 | 2462 |
| 2. | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 15054 | 5357 | 20411 |
| | மொத்தம் | **16883** | **5990** | **22873** |
| II. | பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | | | |
| 1. | அரசு பல்தொழில்நுட்ப பயிலகங்கள் | 2408 | 1174 | 3582 |
| 2. | அரசு உதவிபெறும் பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் | 5149 | 1382 | 6531 |
| 3. | சுயநிதி பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் | 17555 | 1678 | 19233 |
| | மொத்தம் | **25112** | **4234** | **29346** |

221799

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.